19.12.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண மன்றக்கூட்ட தீர்மானங்கள்

வ.வ.அ.வ.செ.ப.ம.ந.க.எண்.பிசி / 406 / 2025

ஆணையர் அவர்களின் 24.10.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1153/2025 **பொருள் எண்.01**

பெருநகர சென்னை மாநகராட்சி - வடக்கு வட்டார அலுவலகம் - இயந்திர பொறியியல் துறை - வடசென்னை வாகன பணிமனை - பருவமழைக்காக வாடகை முறையில் மண்டலம் 1 முதல் 5 வரை வழங்கப்பட்டுள்ள (37 nos. of 80-100 HP Dewatering Pumps & 139 nos. of Tractor driven Dewatering Pumps) மொத்தம் 176 நீர் வெளியேற்றும் பம்புகளுக்கு தேவைப்படுகின்ற டீசல் திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண். 180/78 நாள். 26.02.1978 ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிபொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன. சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, வடக்கு வட்டாரமாக மண்டலம்-1 முதல் 5 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

வடக்கு வட்டாரம், வட சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-1 முதல் 5 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், பொக்லைன்கள், புல்டோசர் , கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டரகள் போன்ற பல்வேறு வகைப்பட்ட வாகனங்கள் 235 எண்ணிக்கையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜெனரேட்டர் ஆகியவற்றிக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் மற்றும் மின்மோட்டர்கள் இயக்க ஜெனரேட்டர்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

மேலும் கடந்த 06.10.2025 அன்று ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கான ஆய்வு கூட்டத்தில், தற்பொழுது ஒப்பந்த முறையில் வழங்கப்பட்டுள்ள தண்ணீர் இரைப்பதற்கான ராட்சத மோட்டார்களுக்கும் மற்றும் டிராக்டர் பம்பு ஆகியவற்றை இயக்க தேவைப்படும் எரிபொருளை துறை மூலமாக

வழங்கவேண்டி உள்ளதால், அதற்கு தேவைப்படும் எரிபொருளை தோராயமாக கணக்கிட்டு, அதனை கொள்முதல் செய்ய உரிய நிர்வாக அனுமதி ஆணையினை பெற வலியுறுத்தப்பட்டது.

இவை தவிர, தற்போது எதிர்வரும் பருவமழையினால் ஏற்படும் வெள்ள நீர் தேக்கங்களை அகற்றுவதற்கு தேவைப்படும் நீர் வெளியேற்றும் பம்புகள் மூலம் *(Dewatering Pumps 37 nos. of 80-100 HP Dewatering Pumps & 139 nos. of Tractor driven Dewatering Pumps)* சுரங்கப்பாதைகள்/மின்தடைகள், காலியிடங்கள், தெருக்களில் தேங்கும் மழைநீர் தேக்கங்களை உடனடியாக வெளியேற்றுவதற்காக, வாடகை முறையில் இயந்திரப் பொறியியல் துறை தலைமையகம் மூலம் தற்போது மண்டலம் 1 மற்றும் 5 வரையுள்ள முக்கிய நீர் தேங்கக்கூடிய பகுதிகளில் இயக்க மொத்தம் 176 *Dewatering Pumps (37 nos. of 80-100 HP Dewatering Pumps & 139 nos. of Tractor driven Dewatering Pumps)* நீர் வெளியேற்றும் பம்புகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் விபரங்கள் பின்வருமாறு :

SI. NO	ZONE	Total number of 80-100 HP Dewatering Pumps allotted	Total number of Tractor Driven Dewatering Pumps allotted
1	1	2	17
2	2	11	23
3	3	4	35
4	4	13	41
5	5	7	23
		37	139
		Total Dewatering Pumps = 176	

அரசு ஆணையினை அமல்படுத்திட மன்றத்தீர்மான எண்:486/01 நாள்.*18.09.2001*-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் மன்றத்தின் அனுமதி பெற்று டீசல், மற்றும் பெட்ரோல் கொள்முதலை மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடமிருந்து மொத்த கொள்முதல் விலைக்கு *(Bulk Consumer Price)* கொள்முதல் செய்யபட்டு வருகிறது.

மன்ற தீர்மான எண். 168/2025, நாள். 27.02.2025ன்படி, மண்டலம் 1, 2 மற்றும் 5 லாரி நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் இதர துறை பயன்பாட்டிற்கும் ஏப்ரல் 2025 முதல் நவம்பர் 2025 வரை 08 மாத காலத்திற்கு *1080 KL* கொள்முதல் செய்ய ரூ. 9,97,54,200/-க்கு நிர்வாக அனுமதி 27.02.2025 அன்று பெறப்பட்டு டீசல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி தற்போது வரை 840 *KL* டீசல் கொள்முதல் செய்யப்பட்டு, ரூ.7.09 கோடி வரை, நிர்வாக அனுமதியில் பயன்படுத்தப்பட்டு, மீதம் ரூ.2.87 கோடி பின்வரும் மாதங்களுக்கு (டிசம்பர், 2025 முதல் மார்ச் 2026) டீசல் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதியில் மீதம் உள்ளது.

மேலும், வடகிழக்கு பருவ மழையினை எதிர்கொள்ள இயந்திரப் பொறியியல் (தலைமையகம்) மூலம் வாடகை முறையில் வழங்கப்பட்ட நீர் வெளியேற்றும் பம்புகளுக்கு *(37 nos. of 80-100 HP Dewatering Pumps & 139 nos. of Tractor driven Dewatering Pumps)*

டீசல் வழங்குவது பெருநகர சென்னை மாநகராட்சி , வடக்கு வட்டாரத்தின் பொறுப்பாகும். மேலும் மேற்குறிப்பிட்டுள்ள, நிர்வாக அனுமதியில் தற்போது வாடகை முறையில் வழங்கப்பட்ட நீர் வெளியேற்றும் பம்புகளின் டீசல் தேவைகள் கணக்கிடப்படவில்லை. எனவே, தற்போது உள்ள மேற்குறிப்பிட்ட (37 *nos. of 80-100 HP Dewatering Pumps & 139 nos. of Tractor driven Dewatering Pumps)* நீர் வெளியேற்றும் பம்புகளுக்கும் தேவையான டீசல் கொள்முதல் செய்ய இந்த கோப்பு சமர்பிக்கப்படுகிறது.

எனவே, வட சென்னை வாகன பணிமனையில் டீசல் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்திய அரசு நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு டீசல் எரிபொருள் வழங்குவதற்கு தற்போதைய விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இவ்வலுவலக 10.10.2025 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளியின் விபரங்கள் பின்வருமாறு:

பொருள் விவரம்	நிறுவனம்	*1 KL* க்கான தொகை *(10/10/2025* நிலவரப்படி*)* ரூபாய்
டீசல்	திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் வழங்கியுள்ள விற்பனை விலை *(Bulk Consumer Price)*	ரூ*- 92.36/- per Ltr* (அனைத்து வரிகள் உட்பட

மேற்கண்ட அட்டவணையின்படி விலைப்புள்ளியான *M/s. IOCL* நிறுவனத்தாரின் நேரடி கொள்முதல் விலையான *(Bulk consumer price)* / மொத்த விற்பனை விலை ஒரு லிட்டருக்கு ரூ.92.36 ஐ அடிப்படையாக கொண்டு ஒரு (80-*100 HP)* நீர் வெளியேற்றும் பம்பிற்கு நாளொன்றிற்கு தோராயமாக தேவைப்படும் டீசல் அளவு 7.5 லிட்டர் என்ற வீதத்தில் 30 நாட்களுக்கு, 08 மணிநேரத்தை பணிநேரமாக கருதி மற்றும் ஒரு *(Tractor Driven Dewatering Pump)* டிராக்டர் மூலம் இயங்கப்படும் நீர் வெளியேற்றும் பம்பிற்கு நாளொன்றிற்கு தோராயமாக தேவைப்படும் டீசல் அளவு 4 லிட்டர் என்ற வீதத்தில் 30 நாட்களுக்கு, 08 மணிநேரத்தை பணிநேரமாக கருதி டீசல் எரிபொருள் கொள்முதல் செய்வதற்காக கணக்கிடப்பட்ட மதிப்பீடு மொத்தம் ரூ.*1,84,75,694/-* என்று கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

DIESEL REQUIREMENT STATEMENT FOR 100 HP PUMPS OF NORTH REGION

ZONE	TOTAL NO. OF PUMPS ALLOTED	DIESEL PER HOUR	DIESEL FOR 8 HOURS	TOTAL LITRES OF DIESEL PER DAY	TOTAL LITRES OF DIESEL FOR 30 DAYS	REMARKS
I	2	7.5	60	120	3600	
II	11	7.5	60	660	19800	
III	4	7.5	60	240	7200	
IV	13	7.5	60	780	23400	
V	7	7.5	60	420	12600	
TOTAL	37			2220	66600	

DIESEL REQUIREMENT STATEMENT FOR TRACTOR PUMPS OF NORTH REGION						
ZONE	TOTAL NO. OF PUMPS ALLOTED	DIESEL PER HOUR	DIESEL FOR 8 HOURS	TOTAL LITRES OF DIESEL PER DAY	TOTAL LITRES OF DIESEL FOR 30 DAYS	REMARKS
I	17	4	32	544	16320	
II	23	4	32	736	22080	
III	35	4	32	1120	33600	
IV	41	4	32	1312	39360	
V	23	4	32	736	22080	
TOTAL	139			4448	133440	

Total No. of 80-100 Hp Pumps	Total Diesel requirement for 30 days	Rate per Litre	Total Amount	Remarks
37	66,600	Rs.92.36/-	Rs. 61,51,176/-	
139	1,33,440	Rs.92.36/-	Rs.1,23,24,518/-	
Total	2,00,040		Rs.1,84,75,694/-	

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும் எனவும், திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் நிபந்தனை தெரிவித்துள்ளார்கள். இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி டீசல் வழங்கி வருவதால், கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, பருவமழையினால் ஏற்படும் நீர் தேக்கங்களை அகற்றுவதற்கு தேவைப்படும் நீர் வெளியேற்றும் பம்புகள் மண்டலம் 1 முதல் 5 வரை பகுதிகளின் பயன்பாட்டிற்கென வழங்கப்பட்டுள்ள 176 எண்ணிக்கையிலான நீர் வெளியேற்றும் பம்புகளுக்கு தேவைப்படும் டீசல் கொள்முதல் செய்ய மொத்தம் ரூ.1,84,75,694/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்) தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இந்த செலவினத்தில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலையில் மத்திய அரசு ஆயில் நிறுவனமான திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கும் *(Bulk Consumer Price)* கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மத்திய அரசு நிறுவனமான திருவாளர் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திற்கு பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் இதற்கான செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை வட்டார அலுவலகம் (வடக்கு) பிரிவு குறியீட்டு எண் 40-41-04 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-20-03-06 (எரிபொருள் உபயோகம்) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட கணக்கு தலைப்பின் கீழ் 2025-2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1) வடக்கு வட்டாரத்திற்கு உட்பட்ட மண்டலங்கள் 1 முதல் 5 வரை இயந்திர பொறியியல் துறை மூலம் வாடகை முறையில் வழங்கப்பட்ட 176 எண்ணிக்கையிலான நீர் வெளியேற்றும் பம்புகளுக்கு (37 nos. of 80-100 HP Dewatering Pumps & 139 nos. of Tractor driven Dewatering Pumps) தேவைப்படும் 200040 லிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ.1,84,75,694/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
2) வட சென்னை வாகன பணிமனையில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு மேற்படி தேவைக்கான எரிபொருளை அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களின் ஆணை பெற்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
3) இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால், அந்நிறுவனத்திற்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
4) இந்திய அரசு நிறுவனங்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது RTGS மூலமாக அளிக்கவும்,
5) இதற்கான செலவினத்தை 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட வட சென்னை வாகன பணிமனையின் கணக்கு எண்:230-20-03-06- எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,
6) பதிவு நோக்கத்திற்கு இந்த முன்மொழிவினை மன்றத்தில் சமர்பிக்கவும்

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

வ.அ.(தெ).இ.பொ.து.நு.க.எண். S1/ 300/2025

ஆணையர் அவர்களின் 05.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1154/2025 **பொருள் எண்.02**

பெருநகர சென்னை மாநகராட்சி - தெற்கு வட்டார இயந்திர பொறியியல் துறை - பருவமழைக்காக வாடகை முறையில் மண்டலம் 11 முதல் 15 வரை வழங்கப்பட்டுள்ள (68 nos. of 80-100 HP Dewatering Pumps & 177 nos. of Tractor driven Dewatering Pumps) மொத்தம் 245 நீர் வெளியேற்றும் பம்புகளுக்கு தேவைப்படுகின்ற டீசல் கொள்முதல் செய்தல் - கொள்முதல் செய்யும் சமயத்தில் குறைவான விலைக்கேற்ப திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

இயந்திர பொறியியல் துறையில் தென்சென்னை வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம்-*11* முதல் *15* வரை உள்ள பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் துப்புரவு பணி அல்லாத இதர பணிகளுக்காகவும் பல்வேறு வகையான கனரக / இலகுரக, டிப்பர் லாரிகள், தண்ணீர் லாரிகள், லோடர்கள், எஸ்கவேட்டர்கள், உபகரணங்கள், சிறப்பு உபகரணங்கள், மற்றும் இதர வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் (டீசல்), தெற்கு வட்டாரத்தில் மண்டலம் *13* லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் கொள்முதல் செய்யப்படும் டீசல் மண்டலம் *11* முதல் *15* வரை பணிபுரியும் அதிகாரிகளுக்கான ஆய்வு வாகனங்கள், கொசு மருந்து புகை பரப்பும் இயந்திரங்கள், அலுவலக மற்றும் மருத்துவமனை பயன்பாட்டிற்காக பராமரிக்கப்படும் ஜெனரேட்டர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பம்புகள் ஆகியவற்றிற்கு தேவையான டீசல் மண்டலம் *13*-ல் அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் (டீசல்) வழங்கும் நிலையம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இவை தவிர, தற்போது எதிர்நோக்கப்படும் வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் நீர் தேக்கங்களை அகற்றுவதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம் *11* முதல் *15* வரையுள்ள மழை நீர் தேங்கக்கூடிய தாழ்வான பகுதிகளில், பெருமழையின் போது மழைநீர் தேக்கங்களை உடனுக்குடன் அகற்றிட மொத்தம் *245 Dewatering Pumps (68 nos. of 80-100 HP Dewatering Pumps & 177 nos. of Tractor driven Dewatering Pumps)* நீர் வெளியேற்றும் பம்புகள் பொருத்தப்பட்டுள்ளன. பொருத்தப்பட்ட நீர் வெளியேற்றும் பம்புகளின் விபரங்கள் பின்வருமாறு :

SI. NO	ZONE	Total number of 80-100 HP Dewatering Pumps allotted	Total number of Tractor Driven Dewatering Pumps allotted
1	XI	11	26
2	XII	15	20
3	XIII	20	52
4	XIV	8	49
5	XV	14	30
		68	177
		Total Dewatering Pumps = 245	

டீசல் கொள்முதல் செய்ய, 2001 - 2002 ஆம் ஆண்டிற்கு மன்றத் தீர்மான எண்:92/2000 நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102, நாள்.07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டுள்ளது.

அரசு ஆணையினை அமல்படுத்திட மன்றத் தீர்மான எண்:486/01, நாள்.18.09.2001ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் மன்றத்தின் அனுமதி பெற்று டீசல் மற்றும் பெட்ரோல் கொள்முதலை மத்திய அரசு ஆயில் நிறுவனங்களிடம் இருந்து மொத்த கொள்முதல் விலைக்கு (Bulk Consumer Price) கொள்முதல் செய்யப்பட்டு வரப்பட்டது. இந்நிலையில் கடந்த 2022 ஆம் ஆண்டு மத்திய அரசு ஆயில் நிறுவனங்கள் மொத்த கொள்முதல் விலையை (Bulk Consumer Price) சில்லறை விற்பனை விலையை (Retail Price) விட அதிகப்படுத்தியதால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்க மத்திய அரசு ஆயில் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு டீசல், மற்றும் பெட்ரோல் கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.121, நாள்.30.05.2022-ன்படி மன்றத்தின் பின்னேற்பு அனுமதியில் மத்திய அரசு ஆயில் நிறுவனத்தார் நிர்ணயிக்கும் எரிபொருள் மொத்த கொள்முதல் விலை(Bulk Consumer Price), சில்லறை விற்பனை விலையைக் (Retail Price) காட்டிலும் அதிகமாக இருக்கும் வரை மத்திய அரசு ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.564/2024, நாள்.31.12.2024-ன்படி., மண்டலம் 11 முதல் 15 வரை உள்ள லாரி நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் இதர துறை பயன்பாட்டிற்கும் ஜனவரி 2025 முதல் டிசம்பர் 2025 வரை 12 மாத காலத்திற்கு 1051 KL கொள்முதல் செய்ய ரூ.9,66,70,980/- க்கு நிர்வாக அனுமதி 31/12/2024 அன்று பெறப்பட்டு டீசல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி தற்போது வரை 864 KL டீசல் கொள்முதல் செய்யப்பட்டு, ரூ.7.95 கோடி வரை, நிர்வாக அனுமதியில் பயன்படுத்தப்பட்டு, மீதம் ரூ.1.72 கோடி பின்வரும் மாதங்களுக்கு (2025 நவம்பர், 2025 டிசம்பர்) டீசல் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதியில் மீதம் உள்ளது.

இயந்திரப் பொறியியல் துறை (தலைமையகம்) மூலம் வழங்கப்பட்ட ஒன்பது பணி ஆணைகளின்படி, வாடகை முறையில் வழங்கப்பட்ட நீர் வெளியேற்றும் பம்புகளுக்கு (68 nos.

of 80-100 HP Dewatering Pumps & 177 nos. of Tractor driven Dewatering Pumps) டீசல் வழங்குவது பெருநகர சென்னை மாநகராட்சி இயந்திரப் பொறியியல் துறை தெற்கு வட்டாரத்தின் பொறுப்பாகும். மேலும் மேற்குறிப்பட்டுள்ள, நிர்வாக அனுமதியில் தற்போது வாடகை முறையில் வழங்கப்பட்ட நீர் வெளியேற்றும் பம்புகளின் டீசல் தேவைகள் கணக்கிடப்படவில்லை. எனவே, தற்போது உள்ள மேற்குறிப்பிட்ட *(68 nos. of 80-100 HP Dewatering Pumps & 177 nos. of Tractor driven Dewatering Pumps)* நீர் வெளியேற்றும் *68* எண்ணிக்கை பம்புகளுக்கும் மற்றும் *177* எண்ணிக்கை டிராக்டர் மூலம் இயக்கப்படும் பம்புகளுக்கும் தேவையான டீசல் கொள்முதல் செய்வது அவசியமாகிறது.

மண்டலம் *13* லாரி நிலையத்தில் டீசல் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்திய அரசு நிறுவனமான திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு டீசல் எரிபொருள் வழங்குவதற்கு தற்போதைய விலை விகிதத்தை தெரிவிக்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்நிறுவனங்கள் அளித்த விலைப்புள்ளியின் விபரங்கள் பின்வருமாறு:

பொருள் விவரம்	நிறுவனம்	*1 KL* க்கான தொகை *(06/10/2025* நிலவரப்படி)ரூபாய்
டீசல்	திருவாளர், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் வழங்கியுள்ள விற்பனை விலை *(Bulk Consumer Price)*	ரூ*-92* விற்பனை (அனைத்து வரிகள் உட்பட) = *Rs. 92/- (per Ltr)*
	தற்போது மத்திய அரசு ஆயில் நிறுவனம் நிர்ணயித்துள்ள சில்லறை விற்பனை விலை *(Retail Price)*	ரூ.*92.400* விற்பனை (அனைத்து வரிகள் உட்பட)= *Rs. 92.40/- (per Ltr)*

மேற்கண்ட அட்டவணையின்படி குறைந்த விலைப்புள்ளியான *M/s. BPCL* நிறுவனத்தாரின் நேரடி கொள்முதல் விலையான *(Bulk consumer price) /* மொத்த விற்பனை விலை ஒரு லிட்டருக்கு ரூ.*92* ஐ அடிப்படையாக கொண்டு ஒரு *(80-100 HP)* நீர் வெளியேற்றும் பம்பிற்கு நாளொன்றிற்கு தோராயமாக தேவைப்படும் டீசல் அளவு *7.5* லிட்டர் என்ற வீதத்தில் ஒரு மண்டலத்திற்கு, *30* நாட்களுக்கு, *12* மணிநேரத்தை பணிநேரமாக கருதி மற்றும் ஒரு *(Tractor Driven Dewatering Pump)* டிராக்டர் மூலம் இயக்கப்படும் நீர் வெளியேற்றும் பம்பிற்கு நாளொன்றிற்கு தோராயமாக தேவைப்படும் டீசல் அளவு *4* லிட்டர் என்ற வீதத்தில் ஒரு மண்டலத்திற்கு, *30* நாட்களுக்கு, *10* மணி நேரத்தை பணிநேரமாக கருதி டீசல் எரிபொருள் கொள்முதல் செய்வதற்காக கணக்கிடப்பட்ட மதிப்பீடு மொத்தம் *11* முதல் *15* வரை உள்ள மண்டலங்களுக்கு ரூ.*3,64,32,000/-* என்று கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

Table – I

Appx. Quantity of diesel required for operation of hired 100 HP Dewatering Pumps							
Sl.no	Zone	Total number of 100 hp Pumps allotted (A)	Appx. Quantity of diesel required.(Tentative)				Total Amount @ Rs.92 per litre
			No of days (B)	No of Hours per day (C)	Diesel required per Hour per Pump (D)	Total Quantity of Diesel required (Lts) (E) (E = A*B*C*D)	
1	Zone 11	11	30	12	7.5	29700.0	Rs.27,32,400/-
2	Zone 12	15	30	12	7.5	40500.0	Rs.37,26,000/-
3	Zone 13	20	30	12	7.5	54000.0	Rs.49,68,000/-
4	Zone 14	8	30	12	7.5	21600.0	Rs.19,87,200/-
5	Zone 15	14	30	12	7.5	37800.0	Rs.34,77,600/-
Total		68	150			183600 (approx. 184 KL)	ரூ.1,68,91,200/-

Appx. Quantity of diesel required for operation of hired Tractor Driven Dewatering Pumps							
Sl.no	Zone	Total number of Tractor Driven Dewatering Pumps allotted (A)	Appx. Quantity of diesel required.(Tentative)				Total Amount @ Rs.92 per litre
			No of days (B)	No of Hours per day (C)	Diesel required per Hour per Pump (D)	Total Quantity of Diesel required (Lts)(E) (E = A*B*C*D)	
1	Zone 11	26	30	10	4	31200	Rs.28,70,400/-
2	Zone 12	20	30	10	4	24000	Rs.22,08,000/-
3	Zone 13	52	30	10	4	62400	Rs.57,40,800/-
4	Zone 14	49	30	10	4	58800	Rs.54,09,600/-
5	Zone 15	30	30	10	4	36000	Rs.33,12,000/-
Total		177	150			212400 (approx. 212 KL)	ரூ.1,95,40,800/-

Table – II

Total estimation amount for diesel procurement for 68 nos. of 80-100 HP dewatering pumps is Rs.1,68,91,200/-	Total estimation amount for diesel procurement for 177 nos. of Tractor driven dewatering pumps is Rs.1,95,40,800/-
Total estimation value for diesel procurement for 68+177 = 245 nos. of dewatering Pumps as above is Rs.3,64,32,000/- Total (184 KL + 212 KL = 396 KL) required	

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும் எனவும், திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் நிபந்தனை தெரிவித்துள்ளார்கள். இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி டீசல் வழங்கி வருவதால், கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள விலைப்புள்ளியை ஏற்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, வடகிழக்கு பருவமழையின் போது ஏற்படும் நீர் தேக்கங்களை அகற்றுவதற்கு மண்டலம்-11 முதல் 15 வரையிலான பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள 245 எண்ணிக்கையிலான (68 *nos. of 80-100 HP Dewatering Pumps & 177 nos. of Tractor driven Dewatering Pumps)* நீர் வெளியேற்றும் பம்புகளுக்கு தேவைப்படும் டீசல் (184 *KL + 212 KL = 396 KL)* கொள்முதல் செய்ய மொத்தம் ரூ.3,64,32,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து

நான்கு இலட்சத்து முப்பத்தி இரண்டு ஆயிரம் மட்டும்) தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள இந்த செலவினத்தில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்யும் நாளில் அமலில் உள்ள மொத்த கொள்முதல் விலை சில்லறை விற்பனையை காட்டிலும் குறைவாக இருக்கும் வரை மத்திய அரசு ஆயில் நிறுவனமான திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனத்திடமிருந்து நேரடியாக மொத்த கொள்முதல் விலைக்கும் *(Bulk Consumer Price)* மற்றும் மொத்த கொள்முதல் விலை,சில்லறை விலையினை காட்டிலும் அதிகமாகும் போது திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் பரிந்துரைக்கும் அங்கீகரிக்கப்பட்ட முகவரிடமிருந்து சில்லறை விற்பனை விலைகும் *(Retail Price)* கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மத்திய அரசு நிறுவனமான திருவாளர்.பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் அவர்கள் பரிந்துரைக்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துக்கு பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் இதற்கான செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை வட்டார அலுவலகம் *(தெற்கு)* பிரிவு குறியீட்டு எண் *40-41-05* மற்றும் கணக்கு குறியீட்டு எண்: *230-20-03-06 (*எரிபொருள் உபயோகம்*)* என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட கணக்கு தலைப்பின் கீழ் *2025-2026* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. வடகிழக்கு பருவமழையின் போது தாழ்வான பகுதிகளில் தேங்கக்கூடிய மழைநீரை உடனுக்குடன் அகற்றிட, தெற்கு வட்டாரத்திற்கு உட்பட்ட மண்டலங்கள்-11, 12, 13, 14, 15ல் வாடகை முறையில் வழங்கப்பட்ட 245 எண்ணிக்கை நீர் வெளியேற்றும் பம்புகளுக்கு (68 nos. of 80-100 HP Dewatering Pumps & 177 nos. of Tractor driven Dewatering Pumps) பம்புகளுக்கு தோராயமாக தேவைப்படும் 396 KL டீசல் (அட்டவணை I & II ல் கணக்கிடப்பட்டுள்ளப்டி) கொள்முதல் செய்ய மொத்தம் ரூ.3,64,32,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து முப்பத்தி இரண்டு ஆயிரம் மட்டும்) மிகாமல் அவ்வப்போது ஏற்படும் டீசல் தேவையின் அடிப்படையில் மட்டும் கொள்முதல் செய்வதற்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. வடகிழக்கு பருவமழையின் போது பெய்கின்ற மழைநீர் அளவின் அடிப்படையிலும், மற்றும் மழைநீர் தேங்குகின்ற பகுதிகளின் அடிப்படையிலும், தேவைப்படுகின்ற டீசல் எரிபொருள் மொத்தம் 396KL ஐ மற்றும் ரூ.3,64,32,000/- க்கு மிகாமல் கொள்முதல் செய்யும்போது அமலில்

உள்ள மொத்த கொள்முதல் விலை சில்லறை விற்பனையை காட்டிலும் குறைவாக இருக்கும் வரை மத்திய அரசின் ஆயில் நிறுவனமான திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனத்திடமிருந்து (M/S.BPCL) நேரடியாக மொத்த கொள்முதல் விற்பனை விலைக்கும் (Bulk Consumer Price) மற்றும் மொத்த கொள்முதல் விலை சில்லறை விலையினை காட்டிலும் அதிகமாகும் போது திருவாளர் பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் நிறுவனம் பரிந்துரைக்கும் முகவரிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கும் (Retail Price) கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

3. மத்திய அரசு நிறுவனமான திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் கோரிய படி மேலே குறிப்பிட்டுள்ளவாறு அவ்வப்போது ஏற்படும் தேவையின் அடிப்படையில் டீசல் கொள்முதல் செய்ய தேவைப்படும் தொகையினை முன்பணமாக வழங்கிடவும்,

4. மண்டலம்-13 லாரி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கும் நிலையத்தில் அவ்வப்பொழுது நீர் வெளியேற்றும் பம்புகளுக்கு தேவைப்படுகின்ற டீசல் எரிபொருளை மொத்த தொகையான ரூ.3,64,32,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து முப்பத்தி இரண்டு ஆயிரம் மட்டும்)க்கு மிகாமல் மேற்பார்வை பொறியாளர்(தெற்கு) அவர்களின் ஆணை பெற்று, திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

5. மேற்கண்ட செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை வட்டார அலுவலகம் (தெற்கு) பிரிவு குறியீட்டு எண்.40-41-05 மற்றும் கணக்கு குறியீட்டு எண்:230-20-03-06 (எரிபொருள் உபயோகம்) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட கணக்கு தலைப்பின் கீழ் 2025-2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளவும்,

6. திருவாளர். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு பிணை வைப்பு தொகை, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.11.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.184/2025, நாள்.20.11.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) அனுமதி அளித்து, மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

இ.பொ.து.நி.க.எண்.எம்1/1175/2025

ஆணையர் அவர்களின் 27.08.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1155/2025 **பொருள் எண்.03**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி - வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை தூய்மைபடுத்தும் பணிக்கென கொள்முதல் செய்யப்பட்ட 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி வாகனம் - 2 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தம் அடிப்படையில் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - இவ்வொப்பத்தில் விலைப்புள்ளி அளித்த தகுதியான ஒப்பந்ததாரர் திருவாளர்கள், Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,) நிறுவனத்தின் மூலம் 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்களுக்கு (Ride on Sweeper) 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் ஒப்புதல் அனுமதி ஆகியவற்றை எதிர் நோக்கி பணி ஆணை வழங்கி பணி மேற்கொண்டதற்கு திருத்திய பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, உட்புற சாலைகள், பிரதான சாலைகள் மற்றும் பேருந்து வழித்தடங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள், பேருந்து முனையங்கள் மற்றும் இரயில் நிலையங்களின் வளாகத்திற்கு வெளியே உள்ள பகுதிகள் போன்ற பொதுமக்கள் கூடும் பிற இடங்களின் தூய்மை பணிகளை பராமரித்து வருகிறது. இவற்றினை சாலையின் மத்திய தடுப்பு பணியில் ஈடுபடுத்தும் போது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொது மக்களுக்கு இடையூறாக அமைகிறது. இதனை தவிர்க்கவும் உட்புற சாலைகளில் சேகரமாகும் தூசி மற்றும் மண் துகள்களை துரிதமாக அகற்றிட வழக்கமான முறையில் பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்வதை தவிர்த்து இவ்வகை பணிகளை மேற்கொள்வதற்கான பிரத்யேகமாக தயாரிக்கப்படும் உபகரணங்களான சிறிய வகை இயந்திர பெருக்கி வாகனங்கள் *(Ride on Sweeper)* கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, மின்னணு ஒப்பம் கோரப்பட்டு, தகுதியான ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Roots Multiclean Ltd.,* நிறுவனத்தாருக்கு 24.04.2025 நாளிட்ட பணி ஆணை வழங்கப்பட்டு வடக்கு வட்டாரத்தில் உள்ள உட்புற சாலைகள் மற்றும் பேருந்து வழித்தட சாலைகளில் தூய்மை பணி மேற்கொள்ள 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்கள் *(Ride on Sweeper)* கொள்முதல் செய்யப்பட்டன. இவ்வுபகரணங்கள் பிரத்யேகமான பணிக்கென தயாரிக்கப்படுவதால் இவ்வகை உபகரணம் சிறப்பு வகையைச் சார்ந்தவை மற்றும் இவ்வுபகரணங்களின் உதிரி பாகங்கள் பிரத்யேகமாக

தயாரிக்கப்படுகின்றன. மேலும், இவ்வுபகரணங்களின் உதிரி பாகங்கள் சந்தையில் கொள்முதல் செய்ய இயலாது.

இவ்வுபகரணங்களை சரியான கால இடைவேளையில் இயக்கிய மணி நேரத்திற்கேற்ப தேவையான உதிரி பாகங்களை மாற்றி பராமரிக்கப்பட வேண்டும். இதனால் உபகரணங்களின் பயன்பாடு முழுமையடைவதோடு இவ்வுபகரணங்களின் ஆயுட்காலம் நீடித்திருக்கும். இவ்வகை உபகரணங்கள் சிறப்பு தொழில்நுட்பம் வாய்ந்ததால் இவற்றினை இயக்கி பராமரிக்க மாநகராட்சியில் போதிய பணியாட்கள் இல்லாத காரணத்தினால் இப்பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்வது அவசியமாகிறது.

மேலும், இவ்வகை உபகரணங்கள் சிறப்பு பயன்பாட்டிற்காக தயாரிக்கப்படுவதால் உயரிய தொழில்நுட்பம் வாய்ந்ததால் இவ்வுபகரணங்களை உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் மட்டுமே பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வுபகரணங்கள் தூய்மை பணிகளை மேற்கொள்ள ஆண்டு முழுவதும் இயக்கப்பட வேண்டிய காரணத்தினால் இவ்வுபகரணங்களை உபகரண உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலம் மின்னணு ஒப்பம் கோரி இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை (எரிபொருள் தவிர்த்து) மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதன்படி, வடக்கு வட்டாரத்தில் இயக்கப்பட்டு வரும் 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி *(Ride on Sweeper)* உபகரணங்களுக்கு 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராய மதிப்பீடு ரூ.2,48,23,800/- *(Inclu. GST @ 18%)* (ரூபாய். இரண்டு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகும் என கணக்கிடப்பட்டது.

இதன் அடிப்படையில், நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் தீர்மான எண்.110/2025, 19.06.2025 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒப்பத்திறப்பு நாள் 04.07.2025 என தெரிவித்து 26.06.2025 நாளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலரில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மின்னணு ஒப்பம் 14.07.2025 அன்று திறக்கப்பட்டது. ஒப்பத்தில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் முறையே திருவாளர்கள். *Das Service Centre* மற்றும் திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* ஆகிய நிறுவனத்தார்கள் ஒப்ப முன்வைப்புத் தொகையினை மின்னணு மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர். இதில் திருவாளர்கள். *Das Service Centre* நிறுவனத்தார், இவ்வொப்பத்திற்கு தேவையான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காததால், இந்நிறுவனத்தாரின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தாரின் ஒப்ப ஆவணங்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றதால், அவர்களது தொழில்நுட்ப ஒப்பம் ஏற்கப்பட்டு, நிதி ஒப்பம் 23.07.2025 அன்று திறக்கப்பட்டது.

10 எண்ணிக்கையில் சிறிய வகை இயந்திர பெருக்கி *(Ride on Sweeper)* உபகரணங்களுக்கு 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள திருவாளர்கள்.*Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளி விவரம் பின்வருமாறு:

Operation of 10 nos. of diesel operated ride on sweeping vehicle (North Region) along with Comprehensive Maintenance for a period of two years as per tender condition.

Operation Cost: A [300 shift + Additional 60 shift]					(+) or (-) with estimate amount
Year	Estimate Cost (Including GST 18%)		Quoted by M/s. Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Including GST 18%)		
	Per Vehicle Per Shift	Total Operation cost for 10 Vehicles for 360 shifts	Per Vehicle Per Shift	Total Operation cost for 10 Vehicles for 360 shifts	
1	Rs. 1475/-	Rs. 53,10,000/-	Rs. 1,474.26/-	Rs. 53,07,336/-	0.05% Less
2	Rs. 1548/-	Rs. 55,72,800/-	Rs. 1,474.26/-	Rs. 53,07,336/-	4.76% Less
Sub Total - I		Rs. 1,08,82,800/-		Rs.1,06,14,672/-	2.46% Less

Maintenance Cost: B					(+) or (-) with estimate amount
Year	Estimate Cost (Including GST 18%)		Quoted by M/s. Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Including GST 18%)		
	Per Vehicle Per Day	Total Amount for 10 Vehicles for 300 days	Per Vehicle Per Day	Total Amount for 10 Vehicles for 300 days	
1	Rs.2,192/-	Rs. 65,76,000/-	Rs. 2,653.67/-	Rs. 79,61,010/-	21.06% Excess
2	Rs.2,455/-	Rs. 73,65,000/-	Rs. 2,653.67/-	Rs. 79,61,010/-	8.09% Excess
Sub Total - II		Rs. 1.39,41,000/-		Rs. 1,59,22,020/-	14.21% Excess
Overall Total (A + B)		**Rs.2,48,23,800/-**		**Rs.2,65,36,692/-**	**6.90% Excess**

மேற்கண்ட அட்டவணையின்படி, திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.2,65,36,692/- என விலைப்புள்ளி வழங்கியுள்ளார். இந்நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளியானது தோராய மதிப்பீட்டினை விட 6.90% அதிகமாக இருப்பதால், இந்நிறுவனத்தாரை 23.07.2025 நாளிட்ட கடித வாயிலாக மின்னணு ஒப்ப தளம் மூலம் விலை குறைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் மின்னணு ஒப்பம் வாயிலாக மேலும் விலை குறைப்பு செய்து வழங்கியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

1st Negotiation

Operation of 10 nos. of diesel operated ride on sweeping vehicle (North Region) along with Comprehensive Maintenance for a period of two years as per tender condition.						
Operation Cost: A [300 shift + Additional 60 shift]						(+) or (-) with estimate amount
Quoted by M/s. Pay and Clean Shahub Industrial Service Private Limited.,						
Year	Before 1st Negotiation		Negotiated Amount Per Vehicle Per Shift	After 1st Negotiation		
	Per Vehicle Per Shift	Total Operation cost for 10 Vehicles for 360 shift (Including GST 18%)		Per Vehicle Per Shift	Total Operation cost for 10 Vehicles for 360 shift (Including GST 18%)	
1	Rs. 1,474.26/-	Rs. 53,07,336	Rs.11.06	Rs.1,463.20	Rs. 52,67,520	0.80% Less
2	Rs. 1,474.26/-	Rs. 53,07,336	Rs.11.06	Rs.1,463.20	Rs. 52,67,520	5.48% Less
Sub Total - I		Rs.1,06,14,672	Rs.22.12		Rs.1,05,35,040	3.20% Less
Maintenance Cost: B						(+) or (-) with estimate amount
Year	Before 1st Negotiation		Excess Amount Per Vehicle Per Day	After 1st Negotiation		
	Per Vehicle Per Day	Total Amount for 10 Vehicles for 300 days (Including GST 18%)		Per Vehicle Per Day	Total Amount for 10 Vehicles for 300 days (Including GST 18%)	
1	Rs. 2,653.67/-	Rs. 79,61,010	Rs.0.15	Rs. 2,653.82	Rs. 79,61,460	21.07% Excess
2	Rs. 2,653.67/-	Rs. 79,61,010	Rs.0.15	Rs. 2,653.82	Rs. 79,61,460	8.10% Excess
Sub Total - II		Rs. 1,59,22,020	Rs.0.30		Rs.1,59,22,920	14.22% Excess
Overall Total (A + B + C)		Rs.2,65,36,692	Rs.22.42		Rs.2,64,57,960	6.58% Excess

மேற்கண்ட அட்டவணையின்படி திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி *(Ride on Sweeper)* உபகரணங்களுக்கு 2 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு ரூ.2,64,57,960/- என விலைப்புள்ளி வழங்கியுள்ளார். இந்நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளியானது ஒப்ப மதிப்பீட்டு தொகை ரூ.2,48,23,800/-ஐ விட 6.58% அதிகமாகும். எனவே, இந்நிறுவனத்தாரை 25.07.2025 நாளிட்ட மின்னணு ஒப்ப வாயிலாக மேலும் விலை குறைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் மின்னணு ஒப்பம் வாயிலாக மேலும் விலை குறைப்பு செய்து வழங்கியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

2nd Negotiation

Operation of 10 nos. of diesel operated ride on sweeping vehicle (North Region) along with Comprehensive Maintenance for a period of two years as per tender condition.						
Operation Cost: A [300 shift + Additional 60 shift]						(+) or (-) with estimate amount
Quoted by M/s. Pay and Clean Shahub Industrial Service Private Limited.,						
Year	Before 2nd Negotiation		Negotiated Amount Per Vehicle Per Shift	After 2nd Negotiation		
	Per Vehicle Per Shift	Total Operation cost for 10 Vehicles for 360 shifts (Including GST 18%)		Per Vehicle Per Shift	Total Operation cost for 10 Vehicles for 360 shifts (Including GST 18%)	
1	Rs. 1,463.20/-	Rs. 52,67,520	Rs.15.29	Rs. 1,447.91	Rs. 52,12,476	1.84% Less
2	Rs. 1,463.20/-	Rs. 52,67,520	Rs.15.29	Rs. 1,447.91	Rs. 52,12,476	6.47% Less
Sub Total - I		Rs.1,05,35,040	Rs.30.58		Rs.1,04,24,952	4.21% Less
Maintenance Cost: B						(+) or (-) with estimate amount
Year	Before 2nd Negotiation		Excess Amount Per Vehicle Per Day	After 2nd Negotiation		
	Per Vehicle Per Day	Total Amount for 10 Vehicles for 300 days (Including GST 18%)		Per Vehicle Per Day	Total Amount for 10 Vehicles for 300 days (Including GST 18%)	
1	Rs. 2,653.82/-	Rs. 79,61,460	Rs.47.65	Rs. 2,606.17	Rs.78,18,510	18.89% Excess
2	Rs. 2,653.82/-	Rs. 79,61,460	Rs.47.65	Rs. 2,606.17	Rs.78,18,510	6.16% Excess
Sub Total - II		Rs.1,59,22,920	Rs.95.30		Rs.1,56,37,020	12.17% Excess
Overall Total (A + B + C)		Rs.2,64,57,960	Rs.125.88		Rs.2,60,61,972	4.99% Excess

மேற்கண்ட அட்டவணையின்படி, இரண்டாம் கட்ட விலைக்குறைப்பிற்கு பின் திருவாளர்கள்.*Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்களுக்கு 2 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியுடன் கூடி வழங்க அதிக விலைப்புள்ளி வழங்கியுள்ளனர். இந்நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளியானது ஒப்ப மதிப்பீட்டு தொகை ரூ.2,48,23,800/-ஐ விட 4.99% அதிகமாகும். எனவே, இந்நிறுவனத்தாரை 24.07.2025 நாளிட்ட மின்னணு ஒப்ப வாயிலாக மேலும் விலை குறைப்பு செய்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. திருவாளர்கள்.*Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் மின்னணு ஒப்பம் வாயிலாக எவ்வித விலை குறைப்பும் செய்யாமல் முன்னர் வழங்கிய விலைப்புள்ளியினையே வழங்கியுள்ளார். அதன் விவரம் பின்வருமாறு:

3rd and Final Negotiation

Operation of 10 nos. of diesel operated ride on sweeping vehicle (North Region) along with Comprehensive Maintenance for a period of two years as per tender condition.						
Operation Cost: A [300 shift + Additional 60 shift]						(+) or (-) with estimate amount
Quoted by M/s. Pay and Clean Shahub Industrial Service Private Limited.,						
Year	Before 3rd Negotiation		Negotiated Amount Per Vehicle Per Shift	After 3rd Negotiation		
	Per Vehicle Per Shift	Total Operation cost for 10 Vehicles for 300 shift (Including GST 18%)		Per Vehicle Per Shift	Total Operation cost for 10 Vehicles for 360 shift (Including GST 18%)	
1	Rs. 1,447.91/-	Rs. 52,12,476/-	Nil	Rs. 1,447.91/-	Rs. 52,12,476/-	1.84% Less
2	Rs. 1,447.91/-	Rs. 52,12,476/-	Nil	Rs. 1,447.91/-	Rs. 52,12,476/-	6.47% Less
Sub Total - I		Rs.1,04,24,952/-	Nil		Rs.1,04,24,952/-	4.21% Less
Maintenance Cost: B						(+) or (-) with estimate amount
Year	Before 3rd Negotiation		Negotiated Amount Per Vehicle Per day	After 3rd Negotiation		
	Per Vehicle Per Day	Total Amount for 10 Vehicles for 300 days (Including GST 18%)		Per Vehicle Per Day	Total Amount for 10 Vehicles for 300 days (Including GST 18%)	
1	Rs. 2,606.17/-	Rs.78,18,510/-	Nil	Rs. 2,606.17/-	Rs.78,18,510/-	18.89% Excess
2	Rs. 2,606.17/-	Rs.78,18,510/-	Nil	Rs. 2,606.17/-	Rs.78,18,510/-	6.16% Excess
Sub Total - II		Rs.1,56,37,020/-	Nil		Rs.1,56,37,020/-	12.17% Excess
Overall Total (A + B + C)		Rs.2,60,61,972/-	Nil		Rs.2,60,61,972/-	4.99% Excess

இந்நிலையில், திருவாளர்கள்.*Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் 29.07.2025 நாளிட்ட மின்னஞ்சலில் இரண்டாவது விலைகுறைப்பு கோரப்பட்டதில், விலைக்குறைப்பு செய்துள்ளதாகவும், மூன்றாவது முறையாக விலைக்குறைப்பு செய்ய இயலாத நிலையில் உள்ளதாக தெரிவித்து கீழே குறிப்பிட்டுள்ள காரணங்களை தெரிவித்துள்ளனர்.

திருவாளர்கள்.*Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் தெரிவித்துள்ள விலைப்புள்ளியில் ஓட்டுநர் ஊதியம், சர்வீஸ் என்ஜினியர் ஊதியம், *GPS* கருவி நிறுவுதல், உதிரி பாகங்கள் மற்றும் நுகர் பொருள் விலை, எரிபொருள் மற்றும் உயவு எண்ணெய் விலை, அலுவலக வாடகை, தங்கும் செலவு, சீருடை செலவு மற்றும் வருங்காலத்தில் வரக்கூடிய விலையேற்றம் ஆகியவற்றை கருத்தில் கொண்டே கணக்கிடப்பட்டது என தெரிவித்துள்ளார்கள்.

இந்த விலைப்புள்ளியினை மேலும் குறைத்து வழங்கும் பட்சத்தில், தரத்திலும் சேவையிலும் தொய்வு ஏற்படும் என்பதால் வழங்கியுள்ள விலைப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்குமாறு கோரியுள்ளார்.

எனவே, திருவாளர்கள்.*Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் ஒப்ப மதிப்பீட்டு தொகை ரூ.2,48,23,800/-ஐ விட (+) 4.99% அதிகமாக இறுதி விலைப்புள்ளி அளித்துள்ளதால் திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தார் வழங்கியுள்ள மொத்த தொகை ரூ.2,60,61,972/-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, மேற்கண்ட பணிக்கு (+) 4.99% அதிகமாக அளித்துள்ளதால் திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தாருக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள நிலைக்குழு (சுகாதாரம்)வின் திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் ஒப்புதல் அனுமதி பெறப்படல் வேண்டும்.

மேலும், பணியின் அவசர அவசியம் கருதி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் பணி மேற்கொள்ள ஒப்புதல் அனுமதி ஆகியவற்றை எதிர் நோக்கி, ஆணையர் அவர்களின், 16.08.2025 நாளிட்ட ஆணை பெற்று திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தாருக்கு பணி ஆணை வழங்கி வடக்கு வட்டாரத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ள 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி *(Ride on Sweeper)* உபகரணங்களுக்கு 2 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, திருவாளர்கள். *Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* நிறுவனத்தாருக்கு 20.08.2025 நாளிட்ட பணி ஆணை வழங்கி வடக்கு வட்டாரத்தை சேர்ந்த 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்களுக்கு ரூ.2,60,61,972/- *(Inclu.GST @ 18%)* (ரூபாய். இரண்டு கோடியே அறுபது இலட்சத்து அறுபத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி இரண்டு மட்டும்) செலவீனத்தில் 2 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள துவங்கப்பட்டது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை கணக்கு குறியீட்டு எண் *40-41-10 / 230-800-300* என்னும் தலைப்பின் கீழ் அந்தந்த நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. வடக்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை தூய்மைபடுத்தும் பணிக்கென கொள்முதல் செய்யப்பட்ட 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி வாகனங்கள்

2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள கோரப்பட்ட ஒப்பத்தில் திருவாளர்கள். Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,) நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளி மதிப்பீட்டு தொகையான (நிர்வாக அனுமதி பெறப்பட்ட) ரூ.2,48,23,800/-யை விட 4.99% கூடுதலாக ரூ.2,60,61,972 (Inclu.GST @ 18%) (ரூபாய். இரண்டு கோடியே அறுபது இலட்சத்து அறுபத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி இரண்டு மட்டும்) என வழங்கியுள்ளதை பணியின் அவசர அவசியம் கருதி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் திருத்திய பின்னேற்பு நிர்வாக அனுமதி மற்றும் பணி மேற்கொள்ள ஒப்புதல் அனுமதி ஆகியவற்றை எதிர் நோக்கி ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கி பணி மேற்கொண்டதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் திருத்திய பின்னேற்பு நிர்வாக அனுமதி மற்றும் ஒப்புதல் அனுமதி வேண்டியும்,

2. மேற்கண்ட பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நிலைக்குழு (சுகாதாரம்)வின் திருத்திய பின்னேற்பு நிர்வாக அனுமதி மற்றும் ஒப்புதல் அனுமதி ஆகியவற்றை எதிர் நோக்கி திருவாளர்கள். Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,) நிறுவனத்தார் மூலம் வடக்கு வட்டாரத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ள 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி (Ride on Sweeper) உபகரணங்களுக்கு 2 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிகளை கீழ்கண்ட கட்டண விவரங்களின் அடிப்படையில் மேற்கொள்ள பணி ஆணை வழங்கி பணி மேற்கொண்டு வருவதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

Operation Cost:

Sl. No	Description	1st Year (Inclu. GST@18%)	2nd year (Inclu. GST@18%) Rs.
1.	Operation Cost per vehicle per shift	Rs.1,447.91	Rs.1,447.91
Total Operation cost for 10 Vehicles for 360 shift (Including GST 18%)		Rs.52,12,476	Rs.52,12,476
Overall Operation Cost for 10 Vehicles for Two Years (A)		Rs.1,04,24,952/-	

COMPREHENSIVE MAINTENANCE COST:

Sl. No	Description	1st Year (Inclu. GST@18%)	2nd year (Inclu. GST@18%) Rs.
1.	Comprehensive Maintenance Cost per vehicle Per Day	Rs.2,606.17	Rs.2,606.17
Total Comprehensive Maintenance Cost for 10 Vehicles for 300 days (Including GST 18%)		Rs.78,18,510	Rs.78,18,510
Overall Comprehensive Maintenance Cost for 10 Vehicles for Two Years (B)		Rs.1,56,37,020/-	
Overall Operation & Comprehensive Maintenance Cost for 10 Vehicles for Two Years (A + B) (Including GST 18%)		Rs.2,60,61,972/-	

3. **திருவாளர்கள்.** Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s.Roots Multiclean Ltd.,) **நிறுவனத்தாரிடமிருந்து மொத்த ஒப்பத் தொகையில்** 2% **தொகை ரூ.**5,21,239/- say 5,21,500/- **பாதுகாப்புத் தொகையாக பெற்றுக் கொண்டு இந்நிறுவனத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும்,**
4. 2 **வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை தலைமையக ஆய்வு வாகன பணிமனை கணக்கு குறியீட்டு எண்** 40-41-10/230-800-300 – **என்னும் தலைப்பின் கீழ் அந்தந்த நிதி ஆண்டில் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,**

மேற்கண்ட 1 **முதல்** 4 **வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் இனம்-**1 **மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.**

"20.11.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.**180/2025, **நாள்.**20.11.2025**-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பின்னேற்பு அனுமதி அளித்து இனம்-**1 **மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."**

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

இ.பொ.து.ந.க.எண்.எம்1/1186/2025

ஆணையர் அவர்களின் 27.08.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1156/2025 **பொருள் எண்.04**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி - மத்திய வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் மற்றும் மத்திய தடுப்புகளில் சேகரமாகும் மண் துகள்கள் மற்றும் தூசி ஆகியவற்றை தூய்மைபடுத்தும் பணிக்கென கொள்முதல் செய்யப்பட்ட 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி வாகனம் – 2 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தம் அடிப்படையில் இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள நிலைக்குழு (சுகாதாரம்)வின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - இவ்வொப்பத்தில் விலைப்புள்ளி அளித்த தகுதியான ஒப்பந்ததாரர் திருவாளர்கள். Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,) நிறுவனத்தின் மூலம் 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்களுக்கு (Ride on Sweeper) 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள பணியின் அவசரம் அவசியம் கருதி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் ஒப்புதல் அனுமதி ஆகியவற்றை எதிர் நோக்கி பணி ஆணை வழங்கி பணி மேற்கொண்டதற்கு திருத்திய பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, உட்புற சாலைகள், பிரதான சாலைகள் மற்றும் பேருந்து வழித்தடங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள், பேருந்து முனையங்கள் மற்றும் இரயில் நிலையங்களின் வளாகத்திற்கு வெளியே உள்ள பகுதிகள் போன்ற பொதுமக்கள் கூடும் பிற இடங்களின் தூய்மை பணிகளை பராமரித்து வருகிறது. இவற்றினை சாலையின் மத்திய தடுப்பு பணியில் ஈடுபடுத்தும் போது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொது மக்களுக்கு இடையூறாக அமைகிறது. இதனை தவிர்க்கவும் உட்புற சாலைகளில் சேகரமாகும் தூசி மற்றும் மண் துகள்களை துரிதமாக அகற்றிட வழக்கமான முறையில் பணியாளர்களை பணியமர்த்தி பணி மேற்கொள்வதை தவிர்த்து இவ்வகை பணிகளை மேற்கொள்வதற்கான பிரத்யேகமாக தயாரிக்கப்படும் உபகரணங்களான சிறிய வகை இயந்திர பெருக்கி வாகனங்கள் *(Ride on Sweeper)* கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, மின்னணு ஒப்பம் கோரப்பட்டு, தகுதியான ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Roots Multiclean Ltd.,* நிறுவனத்தாருக்கு 24.04.2025 நாளிட்ட பணி ஆணை வழங்கப்பட்டு மத்திய வட்டாரத்தில் உள்ள உட்புற சாலைகள் மற்றும் பேருந்து வழித்தட சாலைகளில் தூய்மை பணி மேற்கொள்ள 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி உபகரணங்கள் *(Ride on Sweeper)* கொள்முதல் செய்யப்பட்டன. இவ்வுபகரணங்கள் பிரத்யேகமான பணிக்கென தயாரிக்கப்படுவதால் இவ்வகை உபகரணம் சிறப்பு வகையைச்

சார்ந்தவை மற்றும் இவ்வுபகரணங்களின் உதிரி பாகங்கள் பிரத்யேகமாக தயாரிக்கப்படுகின்றன. மேலும், இவ்வுபகரணங்களின் உதிரி பாகங்கள் சந்தையில் கொள்முதல் செய்ய இயலாது.

இவ்வுபகரணங்களை சரியான கால இடைவேளையில் இயக்கிய மணி நேரத்திற்கேற்ப தேவையான உதிரி பாகங்களை மாற்றி பராமரிக்கப்பட வேண்டும். இதனால் உபகரணங்களின் பயன்பாடு முழுமையடைவதோடு இவ்வுபகரணங்களின் ஆயுட்காலம் நீடித்திருக்கும். இவ்வகை உபகரணங்கள் சிறப்பு தொழில்நுட்பம் வாய்ந்ததால் இவற்றினை இயக்கி பராமரிக்க மாநகராட்சியில் போதிய பணியாட்கள் இல்லாத காரணத்தினால் இப்பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்வது அவசியமாகிறது.

மேலும், இவ்வகை உபகரணங்கள் சிறப்பு பயன்பாட்டிற்காக தயாரிக்கப்படுவதால் உயரிய தொழில்நுட்பம் வாய்ந்ததால் இவ்வுபகரணங்களை உற்பத்தியாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் மட்டுமே பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வுபகரணங்கள் தூய்மை பணிகளை மேற்கொள்ள ஆண்டு முழுவதும் இயக்கப்பட வேண்டிய காரணத்தினால் இவ்வுபகரணங்களை உபகரண உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலம் மின்னணு ஒப்பம் கோரி இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியினை (எரிபொருள் தவிர்த்து) மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதன்படி, மத்திய வட்டாரத்தில் இயக்கப்பட்டு வரும் 10 எண்ணிக்கையிலான சிறிய வகை இயந்திர பெருக்கி *(Ride on Sweeper)* உபகரணங்களுக்கு 2 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராய மதிப்பீடு ரூ.2,48,23,800/- *(Inclu. GST @ 18%)* (ரூபாய். இரண்டு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகும் என கணக்கிடப்பட்டது.

இதன் அடிப்படையில் நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் தீர்மான எண்.111/2025, நாள்.19.06.2025 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒப்பத்திறப்பு நாள் 04.07.2025 என தெரிவித்து 26.06.2025 நாளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலரில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மின்னணு ஒப்பம் 04.07.2025 அன்று திறக்கப்பட்டது. ஒப்பத்தில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் முறையே திருவாளர்கள்.*Das Service Centre* மற்றும் திருவாளர்கள்.*Pay and Clean Shahub Industrial Service Private Limited., (Authorised dealer of OEM M/s. Roots Multiclean Ltd.,)* ஆகிய நிறுவனத்தார்கள் ஒப்ப முன்வைப்புத் தொகையினை மின்னணு மூலம் செலுத்தி ஒப்பத்தில் கலந்து கொண்டனர். இதில் திருவாளர்கள். *Das Service Centre* நிறுவனத்தார், இவ்வொப்பத்திற்கு தேவையான ஆவணங்களை உரிய முறையில் சமர்ப்பிக்காததால், இந்நிறுவனத்தாரின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

> "15.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.113/2025, நாள்.15.12.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.நக.எண்.D1/LA/SD/WDCN10/00793/2025

ஆணையர் அவர்களின் 08.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1190/2025 **பொருள் எண்.38**

தானப்பத்திரம்

மண்டலம்-10, கோட்டம்-127ல்The Executive Engineer & ADO - Special Project Division - II - Tamil Nadu Housing Board, Shopping Complex, 2nd Floor, Right Wing, Thirumangalam, Chennai - 600101 அவர்கள் S.No.379 Part, 380 Part, 381/1, 381/2, 382, 383, 384, 385, 386 & 387 of Nerkundram Village, Maduravoyal Talukல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

இம்மனைப்பிரிவுக்கான திட்ட அனுமதி ஒப்புதல் உறுப்பினர் – செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களால் CMDA/PP/LAYOUT-1/0339/2024, நாள்:07.10.2025ன்படி வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை G.O.Ms.No.181. வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் ஏற்கனவே சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் சாலை மற்றும் இதர பயன்பாட்டிற்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொண்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(அ) The Executive Engineer & ADO - Special Project Division - II - Tamil Nadu Housing Board, Shopping Complex, 2nd Floor, Right Wing, Thirumangalam, Chennai -600101 என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 41385.00சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கான 6130.00சதுர மீட்டர் நிலம், திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான 3797.00 சதுர மீட்டர் நிலம் பொது பயன்பாட்டிற்காக TANGEDCOவிற்கு 178.50 சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 178.50சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சார் பதிவாளர், South Joint - I அலுவலகத்தில் (பத்திர பதிவு எண்.5599/2025, நாள்: 28.07.2025) பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department, dated:16.07.2022ன்படி சாலை மற்றும் தெருவிளக்குகள் அபிவிருத்தியாளரே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்கிறார்கள்.

(இ) The Executive Engineer & ADO - Special Project Division - II - Tamil Nadu Housing Board, Shopping Complex, 2nd Floor, Right Wing, Thirumangalam, Chennai -600101 அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, S.No.379 Part, 380 Part, 381/1, 381/2, 382, 383, 384, 385, 386 & 387 of Nerkundram Village, Maduravoyal Taluk, Division-127, Zone-10**ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான** 6130.00**சதுர மீட்டர் நிலம், திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான** 3797.00**சதுர மீட்டர் நிலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கான** 178.50**சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை** The Executive Engineer & ADO - Special Project Division - II - Tamil Nadu Housing Board, Shopping Complex, 2nd Floor,Right Wing,Thirumangalam,Chennai- 600101 **அவர்களிடமிருந்து சார்பதிவாளர் கொன்னூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் (பதிவு எண்.** 5599/2025, **நாள்:**28.07.2025) **மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறப்பட்ட நிலத்திற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

> “15.12.2025 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.**114/2025,**நாள்.**15.12.2025**ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”

******

நதுநக.எண.A5/PPA/WDCN10/06984/2025

ஆணையர் அவர்களின் 22.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண: 1191/2025 **பொருள் எண.39**

தானப்பத்திரம்

மண்டலம்-10, கோட்டம்-134ல் (1) Mr.P.Sunil, M/s.Jain Properties GPA for Mrs.G.Darani Devi (2) Mr.P.Sunil அவர்கள் Old Door No.13/1A, 13/B, New Door No.27, 28/1, 29/1 &2, Arya Gowda Road & Ramakrishnapuram Second Street, West Mambalam, Chennai 600033 comprised in T.S.No.34/1, 34/2, 34/3, 34/4, 34/5 & 35/1, Block No.42 of Kodambakkam Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN10/06984/2025, நாள்:02.10.2025ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் விண்ணப்பித்துள்ளார்கள். விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்தப் பரப்பளவு 513.50ச.மீ. நிலத்திற்கு அணுகு சாலையான Arya Gowda Road & Ramakrishnapuram Second Street 15.00மீ அகலமும் மற்றும் 9.00மீ அகலமும் கொண்டது. சென்னை பெருநகர முழுமை வளர்ச்சி திட்டம் //ன்படி 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 17.15ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர்கள் (1) Mr.P.Sunil, M/s. Jain Properties GPA for Mrs.G.Darani Devi (2) Mr.P. Sunil அவர்களிடமிருந்து Old Door No.13/1A, 13/B, New Door No.27, 28/1, 29/1 & 2, Arya Gowda Road & Ramakrishnapuram Second Street, West Mambalam, Chennai- 600033 comprised in T.S.No.34/1, 34/2, 34/3, 34/4, 34/5 & 35/1, Block No.42 of Kodambakkam Village, Division - 134, Zone - 10ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 17.15ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "15.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண.115/2025, நாள்.15.12.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

இ.பொ.து.ந.க.எண்.எம்1/0617/2025

ஆணையர் அவர்களின் 28.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1192/2025 **பொருள் எண்.40**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சாலையோர மரங்களை பராமரித்தல், கிளைகளை வெட்டுதல், பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் சாலைகளில் விழும் மரங்களை துண்டாக்கி அகற்றுதல் - பொதுமக்களிடம் மரங்கள் சம்மந்தமான புகார் அதிகமாக உள்ள மண்டலம் – 6, 8, 9,10 மற்றும் 13ற்கு கூடுதலாக நவீன கருவிகளான ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளை நீக்கும் இயந்திரம் (Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) 5 எண்ணிக்கையில் கொள்முதலுடன் சேர்த்து 5 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது - ஒப்பம் கோரப்பட்டது - இவ்வொப்பத்தில் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் நிதி ஒப்பத்தில் தோராய மதிப்பீட்டினை காட்டிலும் 3.01% அதிகமாக விலைப்புள்ளி வழங்கியுள்ளனர் - நான்கு முறை விலைக்குறைப்பு கோரியும் தோராய மதிப்பீட்டிற்கு குறைவாக விலைக்குறைப்பு வழங்கவில்லை – (i) இவ்வொப்பத்தினை ரத்து செய்யவும் - (ii) இக்கொள்முதலுக்கு மாற்றாக 5 எண்ணிக்கையில் Hydraulic Ariel Lift (9 மீ.உயரம்) பொருத்தப்பட்ட சிறிய வகை வாகனங்கள் பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் பின்னேற்பு அனுமதியினை எதிர் நோக்கி ஒப்பம் கோரும் பணி மட்டும் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது - மாண்புமிகு மேயர் அவர்களால் பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சாலையோர மரங்களின் பராமரிப்பு பணிகளான கிளைகளை வெட்டுதல் மற்றும் பருவ நிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் சாலைகளில் விழும் மரங்களை துண்டாக்கி அகற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. இப்பணிகளை மேற்கொள்ள ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரம் *(Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) 15* எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்டு மண்டலத்திற்கு ஒன்று வீதம் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2019 முதல் 2024 வரை பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டு அறைக்கு மரங்கள் விழுவதாலும் மற்றும் மரங்கள் வளர்ந்து பொது மக்களுக்கு இடையூறாக உள்ளதாகவும் தொடர்பாக பெறப்பட்ட பொதுமக்களின் புகார்கள் கணக்கிடப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ளது. அதன்படி, மண்டலம் -6, 8, 9, 10 மற்றும் 13 ஆகிய மண்டலங்களில் அதிக அளவில் பொதுமக்களிடமிருந்து புகார் பெறப்பட்டு சரி செய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும் இந்த புகார்களை சரி செய்வதற்கு காலதாமதம் ஏற்படுவதால் இம்மண்டலங்களுக்கு கூடுதலாக ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளை நீக்கும் இயந்திரம் *(Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine)* மண்டலத்திற்கு ஒன்று வீதம் 5 எண்ணிக்கையில் கொள்முதல் செய்து வழங்கினால் இப்புகார்களை விரைவில்

சரிசெய்யலாம் என்று கருதப்படுகிறது. இது சம்மந்தமாக 26.03.2025 அன்று நடைபெற்ற துறை சார்ந்த ஆய்வு கூட்டத்தில் மேல் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

எனவே, முந்தைய ஆண்டு (2024 ஆம் ஆண்டு) கொள்முதல் செய்யப்பட்ட விலையின் அடிப்படையிலேயே கூடுதலாக 5 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரங்களை *(Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine)* 5 வருடத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி ரூ.4,43,21,500/- (ரூபாய் நான்கு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து இருபத்தோராயிரத்து ஐந்நூறு மட்டும்) *(GST 18%* உட்பட) தோராய மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய மன்றத் தீர்மான எண்.495/2025, நாள்:30.04.2025ன்படி மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட விலையின் அடிப்படையில் ஒப்பம் கோரப்பட்டு *06.06.2025* அன்று ஒப்பம் திறக்கப்பட்டது. இவ்வொப்பத்தில் ஒரே ஒரு ஒப்பந்ததாரர் திருவாளர்கள். *Thamirabarani Agri Imp* நிறுவனத்தார் மட்டுமே கலந்து கொண்டு தொழில்நுட்ப தகுதி பெற்றனர்.

இந்நிலையில், 18.06.2025 அன்று நிதி ஒப்பம் திறக்கப்பட்டதில் திருவாளர்கள். *Thamirabarani Agri Imp* நிறுவனத்தார் வழங்கியுள்ள விலைப்புள்ளி ரூ.4,64,05,836.40/- ஆனது தோராய மதிப்பீடு ரூ.4,43,21,500/- காட்டிலும் 4.70% அதிகமாகும். மேலும் திருவாளர்கள். *Thamirabarani Agri Imp* நிறுவனத்தாரை *19.06.2025, 23.06.2025, 24.06.2025* மற்றும் 30.06.2025 நாளிட்ட கடிதங்களின் வாயிலாக நான்கு முறை விலைக்குறைப்பு வழங்குமாறு கோரப்பட்டதில் விலைக்குறைப்பு செய்து தங்களது இறுதி விலைப்புள்ளியினை கீழ்கண்டவாறு வழங்கியுள்ளனர்.

Comparative Statement After 4th Negotiation

Sub: Purchase Of 5 nos. Of Hydraulically Operated Self-Propelled Tree Pruning Machine with 5 Years Operation Comprehensive maintenance as per tender condition.

Sl No	Description of work	Qty. (No's)	Estimate Rate		Quoted by M/s. Thamirabarani Agri Imp				Remarks
					Before 4th Negotiation		After 4th Negotiation		
			Total Amount per unit (Rs.) (IncluGST)	Total Amount for 5 nos. (Rs.)	Total Amount per unit (Rs.) (Inclu GST)	Total Amount for 5 nos. (Rs.)	Total Amount per unit (Rs.) (IncluGST)	Total Amount for 5 nos. (Rs.)	
I	Supply	(A)	(B)	5B	(B)	5B	(B)	5B	
1	Cost of Tree Pruning Machines equipment as per tender specification, inclusive of GST and all Taxes, Transit Insurance and transportation.	5	28,37,000	1,41,85,000	29,78,862.80	1,48,94,314	29,75,322.80	1,48,76,614	4.88 % Excess
Sub Total (I)				1,41,85,000		1,48,94,314		1,48,76,614	
Sl No	Description of work	Days (1shift = min 8 hrs)	Total Amount per unit (Rs.)	Total Amount for 5 nos. (Rs.)	Total Amount per unit (Rs.)	Total Amount for 5 nos. (Rs)	Total Amount per unit (Rs.)	Total Amount for 5 nos. (Rs.)	Remarks
II	Operation	(A)	(B)	C=5*300*B	(B)	C=5*300*B	(B)	C=5*300*B	
2.1	Operation Cost per shift (8 Hour) for 1st year	300 days	2,693	40,39,500	2,777.72	41,66,580.00	2,770.64	41,55,960	2.88 % Excess
2.2	Operation Cost per shift (8 Hour) for 2nd year	300 days	2,829	42,43,500	2,916.96	43,75,440.00	2,909.88	43,64,820	2.86 % Excess
2.3	Operation Cost per shift (8 Hour) for 3rd year	300 days	2,969	44,53,500	3,064.46	45,96,690.00	3,057.38	45,86,070	2.98 % Excess
2.4	Operation Cost per shift (8 Hour) for 4th year	300 days	3,120	46,80,000	3,217.86	48,26,790.00	3,209.60	48,14,400	2.87 % Excess

2.5	Operation Cost per shift (8 Hour) for 5th year	300 days	3,275	49,12,500	3,378.34	50,67,510	3,370.08	50,55,120	2.90 % Excess
Sub Total (II)				2,23,29,000		2,30,33,010		2,29,76,370	2.90 % Excess
Sl. No.	Description of work	Days	Total Amount per unit (Rs.)	Total Amount for 5 nos. (Rs.)	Total Amount per unit (Rs.)	Total Amount for 5 nos. (Rs.)	Total Amount per unit (Rs.)	Total Amount for 5 nos. (Rs.)	Remarks
III	Comprehensive Maintenance	(A)	(B)	C=5*300*B	(B)	C=5*300*B	(B)	C=5*300*B	
3.1	Maintenance Cost per day for 1st year	300 days	720.00	10,80,000.00	719.80	10,79,700	719.80	10,79,700.00	0.03 % Less
3.2	Maintenance Cost per day for 2nd year	300 days	897.00	13,45,500.00	896.80	13,45,200	896.80	13,45,200.00	0.02 % Less
3.3	Maintenance Cost per day for 3rd year	300 days	1,033.00	15,49,500.00	1,032.50	15,48,750	1,032.50	15,48,750.00	0.05 % Less
3.4	Maintenance Cost per day for 4th year	300 days	1,186.00	17,79,000.00	1,184.72	17,77,080	1,184.72	17,77,080.00	0.11 % Less
3.5	Maintenance Cost per day for 5th year	300 days	1,369.00	20,53,500.00	1,368.80	20,53,200	1,368.80	20,53,200.00	0.01 % Less
Sub Total (III)				78,07,500		78,03,930		78,03,930	0.05% Less
Over All Total				4,43,21,500		4,57,31,254		4,56,56,914	3.01 % Excess

மேற்கண்டுள்ளவாறு, திருவாளர்கள். *Thamirabarani Agri Imp* நிறுவனத்தார் வழங்கியுள்ள இறுதி விலைப்புள்ளியான ரூ.4,56,56,914/- ஆனது தோராய மதிப்பீடான ரூ.4,43,21,500/-ஐ விட 3.01% அதிகமாகும். மேலும், கடந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட விலையினை விடவும் அதிகமாகவே உள்ளது. இந்நிலையில் 22.07.2025 நாளிட்ட அறிவிப்பில், 25.07.2025க்குள் மேலும் விலைக்குறைப்பு செய்து வழங்குமாறும் தவறும் பட்சத்தில் ஒப்பத்தினை இரத்து செய்ய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டது. திருவாளர்கள். *Thamirabarani Agri Imp* நிறுவனத்தாரின் 24.07.2025 நாளிட்ட கடிதத்தில் ஏற்கனவே வழங்கியுள்ள விலைப்புள்ளியே இறுதியானது எனவும், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, தற்பொழுது புதியதாக கொள்முதல் செய்ய உள்ள 5 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரங்களை *(Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) 5* வருடத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி ரூ.4,43,21,500/- தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய கோரப்பட்டுள்ள மின்னணு ஒப்பத்தினை மேற்குறிப்பிட்ட தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு ரத்து செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், மண்டலத்திற்கு ஒரு இயந்திரம் வீதம் 15 எண்ணிக்கையிலான ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரக்கிளை நீக்கும் இயந்திரங்கள் *(Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine)* கொள்முதல் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வரப்படுவதால் இவ்வகை இயந்திரங்களுக்கு மாற்றாக 5 எண்ணிக்கையில் *Hydraulic Ariel Lift (9* மீ.உயரம்) பொருத்தப்பட்ட சிறிய வகை வாகனங்கள் கொள்முதல் செய்து பயன்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பணியின் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பம் கோரும் பணியினை மட்டும் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் 04.11.2025 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது.

மேலும், இந்த வாகனங்களுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை சம்மந்தப்பட்ட வட்டார இயந்திர பொறியியல் துறை மூலமே மேற்கொள்ளவும் மற்றும் மரக்கிளைகளை வெட்டும் பணியினை பூங்காத்துறை பணியாளர்களை வாகனத்தில் பணியமர்த்தி பணி மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, இவ்வகை வாகனத்தின் தோராய விலை ஒரு வாகனத்திற்கு ரூ.22,00,000/- (GST 18% உட்பட) வீதம் 5 எண்ணிக்கையில் *Hydraulic Ariel Lift (9* மீ.உயரம்) பொருத்தப்பட்ட சிறிய வகை வாகனங்கள் ரூ.1,10,00,000/- (GST 18% உட்பட) தோராய மதிப்பீட்டில் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் பின்னேற்பு அனுமதி பெறப்படல் வேண்டும்.

எனவே,

1. பொதுமக்களிடம் மரங்கள் சம்மந்தமான புகார் அதிகமாக உள்ள மண்டலம் – 6, 8, 9, 10 மற்றும் 13ற்கு கூடுதலாக நவீன கருவிகளான ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளை நீக்கும் இயந்திரம் (Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) 5 எண்ணிக்கையில் ரூ.1,41,85,000/- மதிப்பீட்டில் கொள்முதலுடன் சேர்த்து 5 வருட காலத்திற்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.3,01,36,500/- ஆக மொத்தம் ரூ.4,43,21,500/- தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய கோரப்பட்டுள்ள மின்னணு ஒப்பத்தில் திருவாளர்கள். Thamirabarani Agri Imp நிறுவனத்தார் மட்டும் கலந்து கொண்டு தோராய மதிப்பீட்டை காட்டிலும் 3.01% அதிகமாக ரூ.4,56,56,914/- என இறுதி விலைப்புள்ளி அளித்துள்ளதால் இவ்வொப்பத்தினை ரத்து செய்ய ஆணை வேண்டியும்,
2. இனம் (1) ஏற்பின் ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளை நீக்கும் இயந்திரத்திற்கு (Hydraulic Operated Self-Propelled Tree Pruning Machine) மாற்றாக 5 எண்ணிக்கையில் Hydraulic Ariel Lift (9 மீ.உயரம்) பொருத்தப்பட்ட சிறிய வகை வாகனங்கள் ஒரு வாகனத்தின் விலை ரூ.22,00,000/- (GST 18% உட்பட) வீதம் 5 எண்ணிக்கையில் ரூ.1,10,00,000/- (GST 18% உட்பட) தோராய மதிப்பீட்டில் மாண்புமிகு மேயர் அவர்களின் பின்னேற்பு நிர்வாக அனுமதியினை எதிர்நோக்கி மின்னணு ஒப்பம் கோரும் பணி மட்டும் மேற்கொண்டதற்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

3. இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண் 40-41-01 / 410-50-01-00 லாரிகள் என்னும் தலைப்பின் கீழ் 2025-26 ஆம் நிதி ஆண்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/5779/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1193/2025 **பொருள் எண்.41**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத் துறை - பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு Stainless Steel Tiffin Box மற்றும் Insulated Thermal Carrying Bag கொள்முதல் செய்யும் பணிக்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 14.08.2025 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பிறகு மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட ஆறு முக்கிய நலத்திட்ட அறிவிப்புகளில் ஒன்றான தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் ஆகும்.

மேற்கண்ட திட்டத்திற்கு முன்னணி உணவளிப்பு நிறுவனத்திற்கு *(Catering Agency)* தேர்வு செய்வதற்கு ஒப்பங்கள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கவிருப்பதால் இப்பணியுடன் *Stainless Steel Tiffin Box* மற்றும் *Insulated Thermal Carrying Bag* கொள்முதல் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

இதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் 29,455 தூய்மைப் பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு இரண்டு எண்ணிக்கை வீதம் மொத்தம் 58,910 எண்ணிக்கை *Stainless Steel Tiffin Box* மற்றும் *Insulated Thermal Carrying Bag* கொள்முதல் செய்வதற்கு கீழ்கண்டவாறு விலை விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருள் விவரம்	எண்ணிக்கை	ஒன்றிற்கான விலை *(GST* நீங்கலாக) (ரூ.)	*GST @18%* (ரூ,)	ஒன்றிற்கான விலை *(GST* உட்பட) (ரூ,)	மொத்த விலை *(GST* உட்பட) *'*(ரூ,)
stainless steel tiffin box மற்றும் Insulated Thermal carrying bag including printing	58,910	485	87.30	572.30	3,37,14,193.00

பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு *Stainless Steel Tiffin Box* மற்றும் *Insulated Thermal Carrying Bag* கொள்முதல் செய்யும் பணிக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) ஒப்புதலை எதிர்நோக்கி குறுகிய கால ஒப்பங்கள் கோருவதற்கு ஆணையர் அவர்களின் 24.09.2025 நாளிட்ட அனுமதி பெறப்பட்டது.

அரசாணை *(4ப)* எண்.*51*, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.10.2025ல் பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு நிர்வாக அனுமதியும் மற்றும் *Stainless Steel Tiffin Box* மற்றும் *Insulated Thermal Carrying Bag*

கொள்முதல் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து கொள்முதல் செய்வதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இப்பணியின் விவரம் கீழ்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

1	பணியின் விவரம்	:	பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு *Stainless Steel Tiffin Box* மற்றும் *Insulated Thermal Carrying Bag* கொள்முதல் செய்யும் பணி.
2	மதிப்பீட்டு தொகை	:	ரூ.3,37,14,193/-
3	எந்தெந்த செய்தித்தாள்களில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	:	பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், *25.09.2025* மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர், *25.09.2025* *New Indian Express* (ஆங்கிலம்), நாள். *25.09.2025* தினமணி (தமிழ்), நாள்.*25.09.2025*
4	ஒப்பந்தப்புள்ளிஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	:	*07.10.2025* நேரம் மாலை *3.00* மணி
5	ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்ட நாள்	:	*07.10.2025* நேரம் மாலை *3.00* மணி
6	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	:	ஐந்து ஒப்பங்கள்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு, மின்னணு ஒப்பம் *(e-tender)* மூலமாக தொழில்நுட்ப ஆவணங்கள் *(Technical Bid) 07.10.2025* அன்று திறக்கப்பட்டதில் ஐந்து ஒப்பங்கள் பெறப்பட்டது இதன் விவரம் வருமாறு.

1. திருவாளர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ்
2. திருவாளர்கள் ஸ்ரீ சுதர்சன் அசோசியட்
3. எம். கவிதா,
4. 'திருவாளர்கள் ஆனந்தா சிவில் கான்ட்ரக்டர்ஸ் & டேவலப்பர்ஸ்
5. திருவாளர்கள் பியோனிஸ்பிளக்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திருவாளர்கள் ஆனந்தா சிவில் கான்ட்ரக்டர்ஸ் & டெவலப்பர்ஸ் மற்றும் எம். கவிதா, ஆகிய இரண்டு நிறுவனங்களின் ஒப்பங்கள் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதிபெறவில்லை.

மேலும், திருவாளர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ், திருவாளர்கள் ஸ்ரீ சுதர்சன் அசோசியேட் மற்றும் திருவாளர்கள் பியோனிஸ்பிளக்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட்

லிமிடெட் ஆகிய மூன்று நிறுவனங்களின் ஒப்பங்கள் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதிபெற்று நிதி ஆவணத் திறப்பிற்கு *(Financial Bid)* அனுமதிக்கப்பட்டது.

மேலும், ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ள திருவாளர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ், திருவாளர்கள் ஸ்ரீ சுதர்சன் அசோசியட் மற்றும் திருவாளர்கள் பியோனிஸ்பிளக்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் *(Financial Bid) 16.10.2025* அன்று திறக்கப்பட்டதில், மூன்று நிறுவனங்களும் அளித்துள்ள ஒப்பத்தொகை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்.

வ. எண்	பொருள் விவரம்	எண்ணிக்கை	அலுவலக விலை		ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ்		பியோனிஸ்பிளக்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்		ஸ்ரீ சுதர்சன் அசோசியட்	
			விலை (ரூ.)	மொத்த தொகை (ரூ.)	விலை (ரூ.)	மொத்த தொகை (ரூ.)	விலை (ரூ.)	மொத்த தொகை (ரூ.)	விலை (ரூ.)	மொத்த தொகை (ரூ.)
			(வரிகள் உட்பட)							
1	Supply of Stainless steel tiffin box with insulated thermal carrying bag	58,910	572.30	3,37,14,193.00	631.30	3,71,89,883.00	636.96	3,75,23,549.24	649.00	3,82,32,590.00
அலுவலக விலைக்கு ஒப்பிடுகையில் விலை விகிதம்					(+) 10.31% அதிகம்		(+) 11.30% அதிகம்		(+) 13.40% அதிகம்	

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்ப தொகை ஒன்றிற்கான விலை ரூ.631.30பை (வரிகள் உட்பட) ரூ.3,71,89,883.00பை ஆகும். இத்தொகை அலுவலக மதிப்பீட்டு தொகையான ரூ.*3,37,14,193/-* யை விட *(+) 10.31%* அதிகம் ஆகும்.

எனவே, *Stainless Tiffin Box* ஒப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரக்குறிப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களின்படி, தடிமன் 26 *Guage* இருந்து 24 *Guage* ஆக மாற்றப்பட்டது, மேலும் இதன் எடை 500 கிராமில் இருந்து 525 கிராமாக உயர்த்தப்பட்டது. பொருள் தடிமன் மற்றும் ஒட்டுமொத்த எடை அதிகரிப்பு, பொருள் செலவு அதிகரிப்பு மற்றும் போக்குவரத்து செலவுகள் காரணமாக உற்பத்தி செலவு ஒன்றிற்கான விலை ரூ. 40.50 ஆக உயரும். மேலும், *Stainless Steel Tiffin Box* மற்றும் *Insulated Thermal Carrying Bag* ஒவ்வொன்றிற்கும் 120 மாதிரிகளுக்கு சோதனை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மாதிரி சோதனைக் கட்டணங்கள் ஒப்பந்ததாரரிடமிருந்து பட்டி தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில், *18.10.2025*, *24.10.2025* மற்றும் 25.10.2025 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மூன்றாம் கட்ட இறுதி விலையின் விவரம் கீழ்வருமாறு

வ.எண்	பொருள் விவரம்	எண்ணிக்கை	*26 Guage* அலுவலக விலை		திருத்தப்பட்ட விவரக்குறிப்பின்படி *24 Guage* அலுவலக விலை		ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ்			
			விலை (ரூ.)	மொத்த தொகை (ரூ.)	விலை (ரூ.)	மொத்த தொகை (ரூ.)	ஒப்ப விலை (ரூ.)	மொத்த தொகை (ரூ.)	மூன்றாம் மற்றும் இறுதி விலை குறைப்பு விலை (ரூ.)	மொத்த தொகை (ரூ.)
			(வரிகள் உட்பட)							
1	Supply of Stainless steel tiffin box with insulated thermal carrying bag	58,910	572.30	3,37,14,193.00	620.09	3,65,29,501.90	631.30	3,71,89,883.00	610.06	3,59,38,634.60
26 Guage அலுவலக விலை ஒப்பிடுகையில் விலை விகிதம்							(+) 10.31% அதிகம்		(+) 6.60% அதிகம்	
திருத்தப்பட்ட விவரக்குறிப்பின்படி 24 *Guage* அலுவலக விலை							(+) 1.81% அதிகம்		(-) 1.62% குறைவு	

மேலே குறிப்பிட்டுள்ளவாறு, *29.10.2025* அன்று ஒப்ப ஆய்வு குழு *(Tender Scrutiny Committee)* கூர்ந்தாய்வு செய்து பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு *Stainless Steel Tiffin Box* மற்றும் *Insulated Thermal Carrying Bag* கொள்முதல் செய்யும் பணிக்கு மூன்றாம் விலைக்குறைப்பிற்கு பிறகு பெறப்பட்ட தொகையான ஒன்றிற்கான விலை ரூ.610.06பை ஆகும் மொத்த ஒப்ப தொகை ரூ*3,59,38,635/-* (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து ஆறு நூற்று முப்பத்தி ஐந்து மட்டும்) இத்தொகையினை திருத்தப்பட்ட விவரக்குறிப்பின்படி 24 *Guage* அலுவலக விலையான ஒன்றிற்கான விலை ரூ.620.09பை மொத்த அலுவலக விலை ரூ.3,65,29,501.90பை ஒப்பிடுகையில் (-) 1.62% குறைவாகும். எனவே, இவ்ஒப்பத்தை ஏற்று திருவாளர்கள்.ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

கீழ்க்கண்ட இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) பின்னேற்பு அனுமதி பெறுவதற்கு ஆணையர் அவர்களின் 31.10.2025 நாளிட்ட அனுமதி பெறப்பட்டது.

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு *Stainless Steel*

Tiffin Box மற்றும் *Insulated Thermal Carrying Bag* கொள்முதல் செய்யும் பணிக்கு ஒப்ப விவரக்குறிப்புகளின்படி ஏற்கனவே *SS Tiffin Box 26 Guage* என குறிப்பிடப்பட்டு அதற்கான தொகை ஒன்றிற்கு ரூ.572.30 வீதம் மொத்த தொகை ரூ.3,37,14,193/-க்கு ஒப்பம் கோரப்பட்ட நிலையில் தற்போது *SS Tiffin Box 24 Guage* என மாற்றப்பட்டுள்ளதால் இதன்படி ஒன்றிற்கு ரூ.620.09 வீதம் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.3,65,29,.502/-க்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் பின்னேற்பு நிர்வாக அனுமதி பெறுவதற்கும்,

2. பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு *Stainless Steel Tiffin Box* மற்றும் *Insulated Thermal Carrying Bag* கொள்முதல் செய்யும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்துள்ள ஒன்றிற்கான விலை ரூ.610.06 வீதம் மொத்த ஒப்பத்தொகை ரூ*3,59,38,635/*-க்கான (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து ஆறு நூற்று முப்பத்தி ஐந்து மட்டும்) ஒப்ப விலையினை ஏற்று நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்குவதற்கும்,

இதன்படி, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு *Stainless Steel Tiffin Box* மற்றும் *Insulated Thermal Carrying Bag* கொள்முதல் செய்வதற்கு திருவாளர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு 31.10.2025 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு Stainless Steel Tiffin Box மற்றும் Insulated Thermal Carrying Bag கொள்முதல் செய்யும் பணிக்கு ஒப்ப விவரக்குறிப்புகளின்படி ஏற்கனவே SS Tiffin Box 26 Guage என குறிப்பிடப்பட்டு அதற்கான தொகை ஒன்றிற்கு ரூ.572.30 வீதம் மொத்த தொகை ரூ.3,37,14,193/-க்கு ஒப்பம் கோரப்பட்ட நிலையில் தற்போது SS Tiffin Box 24 Guage என மாற்றப்பட்டுள்ளதால் இதன்படி ஒன்றிற்கு ரூ.620.09வீதம் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,65,29,502/-க்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவு வழங்குவதற்கான திட்டத்திற்கு Stainless Steel Tiffin Box மற்றும் Insulated Thermal Carrying Bag கொள்முதல் செய்யும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான

திருவாளர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்துள்ள ஒன்றிக்கான விலை ரூ. 610.06 வீதம் மொத்த ஒப்பத்தொகை ரூ3,59,38,635/-க்கான (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து ஒன்பது இலட்சத்து முப்பத்தி எட்டாயிரத்து ஆறு நூற்று முப்பத்தி ஐந்து மட்டும்) ஒப்ப விலையினை ஏற்று பணி ஆணை வழங்கியதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும்,

3. மேற்கண்ட பணியினை திடக்கழிவு மேலாண்மை துறை கணக்கு தலைப்பு எண். 250-20-11-01 (Food Supply Programme (Conservancy Workers))ல் செலவினங்களை மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் இனம்1 மட்டும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.189/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பின்னேற்பு அனுமதி அளித்து இனம்-1 மட்டும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

திகமே.து.நக.எண்.அ7/6647/2025

ஆணையர் அவர்களின் 21.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1194/2025 **பொருள் எண்.42**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக் கழிவு மேலாண்மைத் துறை - மண்டலம்-2, வார்டு-18, எம்.ஜி.ஆர் தெரு, மணலியில் உள்ள 10 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய எரிஉலை நிலையத்தினை நிரந்தரமாக மூடுவதற்கும் மற்றும் பழுதுபார்க்கும் பணிக்காக வழங்கப்பட்ட ஒப்பந்த கடிதத்தினை (LOA) ரத்து செய்யவும் மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மைத் துறை மூலம், ஈர கழிவுகளுக்காக சிறிய அளவிலான நுண்ணுயிர் பதனிடும் மையம் *(MCC)*, பயோகேஸ் நிலையங்கள், பயோ-*CNG* ஆலைகள், தோட்டக் கழிவுகள் செயலாக்கம் செய்யும் நிலையங்கள் மற்றும் உலர்ந்த கழிவுகளை செயலாக்கம் செய்ய எரிஉலை நிலையங்களை அமைத்துள்ளது.

மண்டலம்-2, வார்டு- 18, எம்.ஜி.ஆர் தெரு, மணலியில் அமைக்கப்பட்டுள்ள 10 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய எரிஉலை நிலையம், 2019ஆம் ஆண்டு முதல் *HDFC* வங்கியின் நிறுவன சமூக பொறுப்புத் திட்ட நிதியின் *(CSR)* மூலம் நிறுவப்பட்டது. மண்டலம்-*2*-ல் வீடு வீடாகச் சென்று சேகரிக்கப்பட்ட உலர்ந்த கழிவுகள் இந்த நிலையத்தில் செயலாக்கம் செய்யப்பட்டு வந்தது. துணி, பைகள், செருப்புகள், பழைய மென்மையான பொருட்கள், சானிட்டரி நாப்கின்கள் போன்றவை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதல்படி செயலாக்கம் செய்யப்பட்டு வந்தது.

இந்த எரிஉலை ஆலையில், எரிவெப்பக் குழாய்கள் மற்றும் அடித்தட்டு பிளேட்டுகள் அவ்வப்போது பழுது ஏற்படுவதன் காரணத்தினால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது அத்தியாவசியம் ஆகிறது.

கொரோனா ஊரடங்கு காரணமாக 2020-ஆம் ஆண்டு இந்த நிலையத்திற்கு தேவையான உதிரி பொருட்கள் மற்றும் பணியாளர்கள் சரிவர கிடைக்காத காலகட்டத்தில் கூட, நிலையம் தொடர்ந்து இயங்கியது. இதனால், செயல்பாட்டு ஒப்புதலின் புதுப்பிப்பு நடைபெறவில்லை

மேலும், இந்த எரிஉலை *(CTO)* நிலையம் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது என பொதுமக்களிடமிருந்து தொடர்ச்சியான புகார்களும், சில இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு, *NGT* மேற்கண்ட செய்தியை அடிப்படையாகக் கொண்டு தானாகவே வழக்கு தொடங்கியுள்ளது. செய்தியின் தலைப்பு: ***"GCC's waste incinerator in Manali working illegally for past five years"***.

மேலும், இந்த 10 மெட்ரிக் டன் எரிஉலை நிலையத்திற்கான பழுது நிவர்த்தி பணிக்காக ஒப்பம் கோரப்பட்டு *M/s. Triad Infratech* நிறுவனத்துக்கு பணியை வழங்க ஒப்பந்தக் கடிதம் *(LOA)* அனுப்பப்பட்டது. ஆனால், நான்கு மாதங்கள் கடந்தும் இந்நிறுவனம் அவர்கள் பணியைத் தொடங்கவில்லை, எனவே, இப்பணியை கைவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது .

இச்சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, மண்டலம்-2, வார்டு-18, எம்.ஜி.ஆர் தெரு, மணலியில் அமைக்கப்பட்டுள்ள 10 மெ.டன் கொள்ளளவுடைய எரிஉலை நிலையத்தை நிரந்தரமாக மூடவும் மற்றும் இவ்எரிஉலையின் பாகங்கள் இயந்திர பொறியியல் துறை மூலம் ஏலம் விடலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு காரணமாக மணலியில் உள்ள 10 மெட்ரிக் டன் எரிஉலை நிலையத்தை நிரந்தரமாக மூடவும்,
2. பழுது நிவர்த்திக்காக வழங்கப்பட்ட LOA (ஒப்பந்தக் கடிதம்) – (M/s.Triad Infratech) – ரத்து செய்யவும்,
3. இந்நிலையத்திற்காக ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களை இயந்திர துறையின் மூலம் ஏலம் விடவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.193/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து, மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.11.ந.க.எண்.இ3/602195/2025

ஆணையர் அவர்களின் 25.09.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1195/2025 **பொருள் எண்.43**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 11, கோட்டம் - 153 ல் பல்வேறு தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு 2024–25 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 11, பகுதி-34, கோட்டம் - 153 ல் பல்வேறு தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிகளுக்காக தொழில்நுட்ப அனுமதி பெற்று கீழ்கண்டவாறு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது

வ. எண்	மண்டலம்	மதிப்பீட்டு எண்.	பணியின் பெயர் (ம) பணியின் விவரம்	மதிப்பீட்டுத் தொகை (இலட்சம்)
1.	11	NL/2025-26/4552	பெருநகர சென்னை மாநகராட்சி ம – 11, ப – 34, கோ-153 ல் பாளையக்கார தெருவில் 600 X 750mm அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி.	ரூ.17.99
2.	11	NL/2025-26 / 5380	பெருநகர சென்னை மாநகராட்சி ம – 11, ப 34, கோ-153 ல் விக்னேஷ்வரா நகர் கட்டபொம்மன் தெருவில் 600 X 750 mm அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி.	ரூ.34.28
3.	11	NL/2025-26 / 12106	பெருநகர சென்னை மாநகராட்சி ம – 11, ப – 34, கோ-153 ல் பாலமுருகன் நகர் முதல் தெருவில் 600 X 750 mm அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி.	ரூ.30.70
4.	11	NL/2025-26 / 12107	பெருநகர சென்னை மாநகராட்சி ம – 11, ப – 34, கோ-153 ல் பாலமுருகன் நகர் ஆறுமுகம் தெருவில் 600 X 750 mm அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி.	ரூ.28.59
5.	11	NL/2025-26 / 12108	பெருநகர சென்னை மாநகராட்சி ம – 11, ப – 34, கோ-153 ல் பாலமுருகன் நகர் இரண்டாவது தெருவில்600 X 750 mm அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி.	ரூ.39.77
6.	11	NL/2025-26 / 12109	பெருநகர சென்னை மாநகராட்சி ம – 11, ப – 34, கோ-153 ல் பாலமுருகன் நகர் ரங்கநாதன் தெருவில்600 X 750 mm அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி.	ரூ.26.39

7.	11	NL/2025-26 / 12110	பெருநகர சென்னை மாநகராட்சி ம – *11*, ப – *34*, கோ-*153* ல் மீனாட்சி நகர் முதல் தெருவில் *600 X 750 mm* அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி.	ரூ-12.54
8.	11	NL/2025-26/ 12111	பெருநகர சென்னை மாநகராட்சி ம – *11*, ப – *34*, கோ-*153* ல் மீனாட்சி நகர் இரண்டாவது தெருவில் *600 X 750 mm* அளவுள்ள மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி.	ரூ.25.93
9.	11	NL/2025-26/ 12112	பெருநகர சென்னை மாநகராட்சி ம – *11*, ப – *34*, கோ-*153* ல் மீனாட்சி நகர் நான்காவது தெருவில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி.	ரூ.22.00
			மொத்தம்	ரூ.238.19

எனவே, மண்டலம் – *11*, பகுதி-*34*, கோட்டம் - *153* ல் பல்வேறு தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிகளுக்காக மூலதன கணக்கு தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிலைக்குழு(பணிகள்)வின் நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.623/2025, நாள். 12.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

க.து.ந.க.எண்.பி1/2666/2025

ஆணையர் அவர்களின் 08.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1196/2025 **பொருள் எண்.44**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 03, வார்டு - 26, அலெக்ஸ் நகர் "சி" காலனியில் பல்நோக்கு கட்டடம் அமைத்தல், கிருஷ்ணா நகர் விரிவில் (மாமன்ற உறுப்பினர் அலுவலகம் பின்புறம்) பெண்கள் உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணி மற்றும் தெலுங்கு காலனியில் அங்கன்வாடி மையம் அமைத்தல் மற்றும் வார்டு - 30, தணிகாசலம் நகர் "F" பிளாக் 6வது தெருவில் புதிய அங்கன்வாடி மையம் அமைத்தல், மயான பூமி சாலையில் 16வது நாள் காரிய கூடம் அமைத்தல் மற்றும் பி.ஆர்.எச். சாலை (விநாயகபுரம் பேருந்து நிலையம் அருகில்) அங்கன்வாடி மையம் (Centre No: 33603150320) அமைத்தல் பணிகளுக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

1	பணியின் பெயர்	1. மண்டலம் - 03, வார்டு - 26, அலெக்ஸ் நகர் "சி" காலனியில் பல்நோக்கு கட்டடம் அமைத்தல் பணி. 2. மண்டலம் - 03, வார்டு - 26, கிருஷ்ணா நகர் விரிவில் (மாமன்ற உறுப்பினர் அலுவலகம் பின்புறம்) பெண்கள் உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணி. 3. மண்டலம் - 03, வார்டு - 26, தெலுங்கு காலனியில் அங்கன்வாடி மையம் அமைத்தல் பணி. 4. மண்டலம் - 03, வார்டு - 30, தணிகாசலம் நகர் "F" பிளாக் 6வது தெருவில் புதிய அங்கன்வாடி மையம் அமைத்தல் பணி. 5. மண்டலம் - 03, வார்டு - 30, மயான பூமி சாலையில் 16வது நாள் காரிய கூடம் அமைத்தல் பணி. 6. மண்டலம் - 03, வார்டு - 30, பி.ஆர்.எச். சாலை (விநாயகபுரம் பேருந்து நிலையம் அருகில்) அங்கன்வாடி மையம் (Centre No : 33603150320) அமைத்தல் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 24.09.2025. 2. மன்ற தீர்மானம் எண் : 1081/2025, நாள் : 30.10.2025.

3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 03.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2025-2026 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	**மதிப்பீட்டின் தொகை**	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 2,03,71,031.70
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 36,66,785.71
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 2,03,710.32
	(ஈ) தரக்கட்டப்பாடு 1%	ரூ. 2,03,710.32
	(உ) மேலான மேற்பார்வை 10%	ரூ. 20,37,103.17
	(ஊ)சிறு மேற்பார்வை 2.50%	ரூ. 5,09,275.79
	(எ) மின்சார கட்டணம்	ரூ. 60,000.00
	(ஏ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 2,48,382.99
	மொத்தம் (Rounded Off)	ரூ. 2,73,00,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 30.10.2025. 2. தினகரன் 31.10.2025. 3. டெக்கன் க்ரானிக்கல் 31.09.2025.
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	17.11.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Miscellaneous (412 - 403 - 000) Anganwadi (412 - 400 - 406) Health Department Buildings (412-400-301)
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 18.11.2025 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2025-2026*** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	***2025-2026***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Raj Developers	2,03,71,031.00	2,25,30,360.29	(+) 10.60% அதிகம்
2	V Karuthiruman	2,03,71,031.00	2,16,54,405.95	(+) 6.30% அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர், *V Karuthiruman*., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	*L1* ஒப்பந்ததாரர் *2025-2026*ஆம் ஆண்டு *SOR*-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற்கட்ட விலை குறைப்பு நாள் . *22.11.2025*	ரூ. *2,14,50,695.64 (+) 5.30 %* அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள். *24.11.2025*	ரூ. *2,13,83,471.24 (+) 4.97 %* அதிகம்
3	மூன்றாம் கட்ட விலை குறைப்பு நாள். *25.11.2025*	ரூ. *2,12,85,690.29 (+) 4.49 %* அதிகம்

இதன்படி, மண்டலம் - *03*, வார்டு - *26*, அலெக்ஸ் நகர் "சி " காலனியில் பல்நோக்கு கட்டடம் அமைத்தல், கிருஷ்ணா நகர் விரிவில் *(*மாமன்ற உறுப்பினர் அலுவலகம் பின்புறம்*)* பெண்கள் உடற்பயிற்சி கூடம் அமைக்கும் பணி மற்றும் தெலுங்கு காலனியில் அங்கன்வாடி மையம் அமைத்தல் மற்றும் வார்டு - *30*, தணிகாசலம் நகர் *"F"* பிளாக் *6*வது தெருவில் புதிய அங்கன்வாடி மையம் அமைத்தல், மயான பூமி சாலையில் *16*வது நாள் காரிய கூடம் அமைத்தல் மற்றும் பி.ஆர்.எச். சாலை *(*விநாயகபுரம் பேருந்து நிலையம் அருகில்*)* அங்கன்வாடி மையம் *(Centre No : 33603150320)* அமைத்தல் பணிகளுக்காக *2025-2026*ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட *(+) 4.49 %* அதிகம், ஒப்பத் தொகை ரூ.*2,12,85,690.29* மற்றும் *18%* சரக்கு மற்றும் சேவை வரி ரூ.*38,31,424.25*ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.*2,51,17,115.00*- க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு *2025-2026*ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை *(*ரூபாய்*)* ***(A)***	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் *(+) 4.49 %* சேர்த்து *(*ரூபாய்*)* *(B)*
1	*(*அ*)* கட்டுமான பணி செலவு	ரூ.2,03,71,031.70	ரூ. 2,12,85,690.29
2	*(*ஆ*)* சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 36,66,785.71	ரூ. 38,31,424.25
3	*(*இ*)* த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 2,03,710.32	ரூ. 2,03,710.32
4	*(*ஈ*)* தரக்கட்டப்பாடு 1%	ரூ. 2,03,710.32	ரூ. 2,03,710.32
5	*(*உ*)* மேலான மேற்பார்வை 10%	ரூ. 20,37,103.17	ரூ. 20,37,103.17

6	(ஊ)சிறு மேற்பார்வை 2.50%	ரூ. 5,09,275.79	ரூ. 5,09,275.79
7	(எ) மின்சார கட்டணம்	ரூ. 60,000.00	ரூ. 60,000.00
8	(ஏ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 2,48,382.99	ரூ. 2,48,382.99
	மொத்தம் (Rounded Off)	ரூ.2,73,00,000.00	ரூ. 2,83,79,297.00
		கூடுதல் தொகை (B- A)	ரூ. 10,79,297.00

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.49%, 2025-26 ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத் தொகை ரூ.2,83,79,297.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.2,83,79,297.00க்கு நிலைக்குழு (பணிகள்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2025-2026ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.49% அதிகம், ஒப்பத் தொகை ரூ.2,12,85,690.29 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.38,31,424.25ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,51,17,115.00-க்கு (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பத்தோரு இலட்சத்து பதினேழாயிரத்து நூற்று பதினைந்து மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். V Karuthiruman., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்:Miscellaneous (412-403-000), Anganwadi (412-400-406) மற்றும் Health Department Buildings (412 - 400-301) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட இனம் 1 மற்றும் 3 ஆகிய இனங்களுக்கு மட்டும் நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.628/2025, நாள். 12.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

பொ.து.நு.க.எண்.ஈ3/29305/2025

ஆணையாளர் அவர்களின் 23.10.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1197/2025 **பொருள் எண்.45**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலரின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.

அரசாணை (2டி) எண்.643, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள். 22.09.2025ன்படி, கீழ்காணும் அலுவலர் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
1.	திரு. மா. வேலாயுதம், துணை ஆட்சியர் (நிர்வாகம்) பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (2டி) எண்.643, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள். 22.09.2025	16.10.2025 மு.ப.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து,
மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது".

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

பொ.து.நி.க.எண்.ஈ3/30684/2025

ஆணையாளர் அவர்களின் 20.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1198/2025 **பொருள் எண்.46**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.

அரசாணை (வாலாயம்) எண்.847, நிதித்(அலுவலக நடைமுறை-2)துறை, நாள்.01.11.2025, அரசாணை (வாலாயம்) எண்.3844, நிதித் (சிறப்பு-அ) துறை, நாள்.24.10.2025, இயக்குநர், நகராட்சி நிர்வாகம் அவர்களது செயல்முறை ஆணை எண்.02/2025/C1, நாள். 28.10.2025, அரசாணை (2டி) எண்.736, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள். 25.10.2025, அரசாணை (2டி) எண்.757, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள். 31.10.2025, சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை ஆணை எண்.அ1/001/2025, நாள். 31.10.2025 மற்றும் 10.11.2025ன்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
1.	திரு.பா.வேலாயுதம், நிதி ஆலோசகர் பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (வாலாயம்) எண். 847, நிதித் (அலுவலக நடை முறை-2) துறை, நாள்.01.11.2025.	01.11.2025 மு.ப.
2.	திரு.செ.வெங்கடேஷ், மாவட்ட வருவாய் அலுவலர்/ உதவி ஆணையர் முதுநிலை, (மண்டலம்) மண்டல அலுவலகம்-10. பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (வாலாயம்) எண். 3844, பொது (சிறப்பு-அ), நாள்.24.10.2025.	31.10.2025 மு.ப.
3.	திரு.P.கிருஷ்ணமூர்த்தி, இணை இயக்குநர்/ உதவி ஆணையர் முதுநிலை, (மண்டலம்) மண்டல அலுவலகம்-8 பெருநகர சென்னை மாநகராட்சி	இயக்குநர், நகராட்சி நிர்வாகம் அவர்களது செயல்முறை ஆணை எண்.02/ 2025/ C1, நாள்.28.10.2025.	30.10.2025 மு.ப.
4.	திருமதி.ஜெ.சுமதி, துணை ஆட்சியர் (நிலம் மற்றும் உடைமை) வட்டார அலுவலகம் (மத்தியம்), பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (2டி) எண். 736, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள். 25.10.2025.	28.10.2025 பி.ப.

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	செயல்முறை ஆணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
5.	திரு.பி.என்.ரகுகுமார், துணை ஆட்சியர் (நிருவாகம்), வட்டார அலுவலகம் (தெற்கு), பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (2டி) எண். 757, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, பணிகள் அலகு, பணி-1 பிரிவு, நாள். 31.10.2025.	01.11.2025 பி.ப.
6.	திரு M.செந்தில், தனி வட்டாட்சியர், நிலம் மற்றும் உடைமைத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி	சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை ஆணை எண்.அ1/001/2025, நாள். 31.10.2025.	04.11.2025 பி.ப.
7.	திரு.கு.சரவணகுமார், தனி வட்டாட்சியர், நிலம் மற்றும் உடைமைத்துறை, வட்டார அலுவலகம் (தெற்கு), பெருநகர சென்னை மாநகராட்சி	சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களது செயல்முறை ஆணை எண்.அ1/001/2025, நாள். 10.11.2025.	11.11.2025 பி.ப.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து,
மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது".

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

மா.க.கு.நி.க.எண்.அ7/2882/2025

ஆணையர் அவர்களின் 21.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1199/2025 **பொருள் எண்.47**

பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் – 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் 01.07.2025 முதல் 252 சதவீதத்திலிருந்து 257 சதவீதமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது -இவ்வரசாணையை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

அரசாணை (நிலை) எண். 250, நிதி (படிகள்)த்துறை, நாள்: 13.11.2025 ன்படி, 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் கீழ்கண்டவாறு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது:-

நிதி (படிகள்)துறை

அரசாணை (நிலை) எண்: 250, நாள்: 13-11-2025.

(ஐப்பசி-27, திருவள்ளுவர் ஆண்டு 2056)

சுருக்கம்

படிகள் - 01-07-2025 முதல் 2016 - ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.'

பின்வருவனற்றை படிக்கவும்:-

அரசாணை (நிலை) எண்;98, நிதி (படிகள்)துறை நாள், 28-04-2025.

ஆணை

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் 2016 - ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கான அகவிலைப்படி வீதம் கீழ்கண்டவாறு அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளன:-

2016-ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம் / தர ஊதியம்	
எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	திருத்தியமைக்கப்பட்ட அக விலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு)
(1)	(2)
01.01.2025	அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் **252** சதவீதம்

2.) 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் மாநில அரசு அலுவலர்களுக்கு தற்போது கீழே குறிப்பிட்டுள்ளபடி உயர்த்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து அரசு ஆணையிடுகிறது:-

2016-ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதம் / தர ஊதியம்	
எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	திருத்தியமைக்கப்பட்ட அக விலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு)
01.07.2025	அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் **257** சதவீதம்

3) ஜூலை 2025 முதல் அக்டோபர் 2025 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும் திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டு விடப்பட வேண்டும்.

4) இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303. அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்,

5) இதற்கான பட்டியல்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள்/ சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயசந்திரன்

அரசு முதன்மைச் செயலாளர்

எனவே, இவ்வரசாணையின் அவசரம் மற்றும் அவசியம் கருதி ஆணையர் அவர்களின் 21.11.2025 நாளிட்ட அனுமதி ஆணையின்படி, மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில், 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் பெறும் அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கு இவ்வரசாணையினை நடைமுறைப்படுத்த 21.11.2025 நாளிட்ட சுற்றறிக்கை, அனைத்து வட்டார அலுவலகங்கள் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / துறைகள் மற்றும் மண்டலங்களுக்கு (1 முதல் 15 வரை) அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்.250, நிதி (படிகள்)த்துறை, நாள்.13.11.2025.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 563/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.க.கு.ந.க.எண்.அ7 / 2799 / 2025

ஆணையர் அவர்களின் 21.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1200/2025 **பொருள் எண்.48**

பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - படிகள் - அகவிலைப்படி - 01.07.2025 முதல் 55 சதவீதத்திலிருந்து 58 சதவீதமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது - மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

அரசாணை (நிலை) எண்.247, நிதித் (படிகள்) துறை, நாள்:13.11.2025 யில், மாநில அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 55 சதவீதத்திலிருந்து 58 சதவீதமாக அகவிலைப்படியை 01.07.2025 முதல் 3 சதவீதம் கூடுதல் உயர்வளித்து அரசு ஆணை வெளியிடப்பட்டது,

அரசாணையின் விவரம் கீழ் கண்டவாறு:-

நிதி (படிகள்)துறை

அரசாணை (நிலை) எண்: 247, நாள்: 13 - 11 -2025.

(ஐப்பசி – 27, திருவள்ளுவர் ஆண்டு 2056)

சுருக்கம்

படிகள் – அகவிலைப்படி -01-07-2025 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன

பின்வருவனற்றை படிக்கவும்:-

அரசாணை (நிலை) எண்;95, நிதி (படிகள்)துறை, நாள். 28-04-2025.

-oOo-

ஆணை:

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி, மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து ஆணை பிறபிக்கப்பட்டது:-

எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு)
(1)	(2)
01-01-2025	அடிப்படை ஊதியத்தில் 55 சதவீதம்

2) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில அரசு பணியாளர்களுக்கு 55 சதவீதத்திலிருந்து 58 சதவீதமாக அகவிலைப்படியை 01-07-2025 முதல் உயர்த்தி வழங்கப்படும் என தெரிவித்ததன் அடிப்படையில் அகவிலைப்படியினை 3 சதவீதம் கூடுதல் உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு)
(1)	(2)
01-07-2025	அடிப்படை ஊதியத்தில் 58 சதவீதம்

3) ஜூலை 2025 முதல் அக்டோபர் 2025 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்கு குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும் எனவும், அதுவே, 50 காசுக்கு குறைவாக இருந்தால் அது விட்டு விடப்படவேண்டும்.

4) மேலே, அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், சில்லரைச்செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேர பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

5) இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் ஊராட்சிச் செயலாளர்கள்/ எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும்.

6) இச்செலவு சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303. அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

7) மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட திருத்திய அகவிலைப்படி நிலுவைப்பட்டியல் சமர்பிப்பது தொடர்பாக சம்பளம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிட இயக்குநர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8) இதற்கான பட்டியல்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள்/ சம்பள கணக்கு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.உதயசந்திரன்

அரசு முதன்மைச் செயலாளர்

2) இந்த அகவிலைப்படி உயர்வினால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு (தோராயமாக) ரூ. 2.50 கோடி வீதம் (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) ஜூலை 2025 முதல் அக்டோபர் 2025 வரை, நான்கு மாதங்களுக்கு 10 கோடியும், நடப்பு நிதியாண்டில் (2025-2026) நவம்பர் 2025 முதல் மார்ச் 2026 வரை 5 மாதங்களுக்கு, (5 x 2.50)=12.50 கோடி (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் 22.50 கோடி கூடுதல் செலவு ஏற்படும் என கருதப்படுகிறது.

3) திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படியை வழங்கும் நிகழ்வில் ஏற்படும் செலவினத்தை கீழ்கண்ட வரவு-செலவுத் திட்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

210-10-01-01	சம்பளம்	அலுவலர்
210-10-01-02	சம்பளம்	பணியாளர்
210-10-02-01	சம்பளம்	ஓட்டுநர்
210-10-02-02	சம்பளம்	சுத்தப்படுத்துபவர்
210-10-02-03	சம்பளம்	பொறியியல் பணி
210-10-02-04	சம்பளம்	தூய்மைப்பணி
210-10-02-05	சம்பளம்	சுகாதாரப் பணி
210-10-02-06	சம்பளம்	மழலையர் பள்ளி பணியாளர்கள்

4) எனவே, இவ்வரசாணையின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த அனைத்து வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் (1 முதல் 15 வரை) 18.11.2025 நாளிட்ட சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

5) தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை (நிலை) எண்.247, நிதி (படிகள்)த்துறை, நாள்.13.11.2025.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.564/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

பொ.து.நு.க.எண்.பி15 / 031085 / 2025

ஆணையர் அவர்களின் 03.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1201/2025 **பொருள் எண்.49**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை, ஓய்வூதியப்பிரிவு - ஓய்வூதியம் - ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 01.07.2025 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 55 விழுக்காட்டிலிருந்து 58 விழுக்காடாகவும் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது - பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

அரசாணை எண்.251, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.13.11.2025-ன்படி மாநில அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு *01.07.2025* ஆம் நாள் முதல் அகவிலைப்படி ஏற்கனவே வழங்கப்பட்ட *55* விழுக்காட்டிலிருந்து *58* விழுக்காடாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள கூடுதல் அகவிலைப்படியினை *01.07.2025* முதற்கொண்டு வழங்கப்படவேண்டும் எனவும், உயர்த்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை அது *50* காசும், அதற்கு மேலும் இருக்குமாயின், அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே *50* காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் எனவும் மேற்படி அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் அக்டோபர் - *2025* நிலவரப்படி *8555* ஓய்வூதியர்கள், *7757* குடும்ப ஓய்வூதியர்கள் என மொத்தம் *16312* பேர் உள்ளனர். இவ்வரசாணையை இவர்களுக்கு நடைமுறைப்படுத்தி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வழங்க, தோராயமாக ஒரு மாதத்திற்கு ரூ.*71* இலட்சம் கூடுதலாக செலவாகும். நடப்பு நிதியாண்டிற்கு *(2025-2026) 6.44* கோடி கூடுதலாக செலவாகும்.

எனவே, அரசாணை எண்.251, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.13.11.2025-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி *55* விழுக்காட்டிலிருந்து *58* விழுக்காடாக *01.07.2025*ஆம் நாள் முதல் உயர்த்தி வழங்கவும், *01.07.2025* முதல் *31.10.2025* வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை நவம்பர் *2025* மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்க நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு நவம்பர் *2025* மாத ஓய்வூதியதுடன் வழங்கப்பட்டமைக்கு ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்பொழுது நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.559/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”

******

ம.அ.4.வ.து.ந.க.எண்.ஆர்4/1558/2025

ஆணையர் அவர்களின் 29.10.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1202/2025 **பொருள் எண்.50**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 4, வார்டு எண் - 40, வ.ஊ.சி. சாலை மற்றும் வார்டு எண் - 43, சொக்கலிங்கம் காலனி தண்டையார்பேட்டை - நவீன முறையில் புதிதாக கட்டப்பட்ட மீன் அங்காடிக்கு வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, 4வது மண்டலம், பகுதி-10, வார்டு எண்.40 வ.ஊ.சி. சாலை மற்றும் 43 சொக்கலிங்கம் காலனி, தண்டையார்பேட்டை, சென்னை-81ல் டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜே.எபினேசர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் பெருநகர சென்னை மாநகராட்சி பொது உபயோகத்திற்கு சாலை என வகைப்படுத்தப்பட்ட வார்டு-40, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 1040 ச.மீ கொண்ட நிலத்தில் மொத்தம் 11255 ச.அடி. கொண்ட கட்டிடத்தினை நவீன மீன் அங்காடி நடத்த கட்டிடம் கட்டித்தர சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி வ.ஊ.சி.சாலை ரூ.113.00 இலட்சம் மதிப்பிலும் மற்றும் வார்டு-43, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 253 ச.மீ கொண்ட நிலத்தில் 2722 ச.அடி.கொண்ட இடம் R.S.No.3618/Block 54, சொக்கலிங்கம் காலனி, ரூ.90.00 இலட்சத்தில் மீன் அங்காடிகள் கட்டப்பட்டுள்ளது.

மேலும் மின்னணு ஒப்பம் மூலம் நவீன மீன் அங்காடி 4வது மண்டலம், பகுதி-10, வார்டு எண்-40, வ.ஊ.சி.சாலை மற்றும் வார்டு எண்-43, சொக்கலிங்கம் காலனி, தண்டையார்பேட்டை, சென்னை-81ல் கட்டி முடிக்கப்பட்டு அதனை மாத வாடகை அல்லது குத்தகைக்கு விட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி மீன் அங்காடியின் கட்டுமான விவரங்கள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது.

வார்டு-40, வ.ஊ.சி சாலை, சென்னை-81	
கடைகளின் எண்ணிக்கை	57+8=65
கடையின் பரப்பளவு (சதுரடியில்)	10883
பெ.செ.மா. வ.ஊ.சி. சாலை, தண்டையார் பேட்டை, சென்னை-81, பகுதியில் உள்ள அங்காடிகளில் வசூலிக்கப்படும் வாடகை ரூபாய் (சதுரடிக்கு)	ரூ.20/- முதல் ரூ.30 வரை + GST
வார்டு-43, சொக்கலிங்கம் காலனி,சென்னை-81	
கடைகளின் எண்ணிக்கை	49+3=52
கடையின் மொத்த பரப்பளவு (சதுரடியில்)	2722
பெ.செ.மா. சொக்கலிங்கம் காலனி, தண்டையார் பேட்டை, சென்னை-81 சுற்றியுள்ள பகுதியில் உள்ள அங்காடிகளில் வசூலிக்கப்படும் வாடகை ரூபாய் (சதுரடிக்கு)	ரூ.20/- முதல் ரூ.30 வரை+ GST
The above abstract based on sq ft x shops further gst, 10 month rent deposit and maintenance charge should be added (as per ULB Act)	

குறிப்புரை
• 4வது மண்டல உதவி வருவாய் அலுவரால் மேற்கொள்ளப்பட்ட கள விசாரணையின்போது, பகுதி-10, சென்னை-81, சுற்று வட்டாரங்களில் வணிக கடைகளுக்கான வாடகை சதுரடிக்கு சுமார் ரூ.20/- என அறியப்பட்டுள்ளது. • மீன் அங்காடியினை வணிக வளாக கடைகளுடன் ஒப்பீடு செய்வது சரியாகாது. • மீன் வியாபாரம் செய்துவரும் வியாபாரிகள் அனைவரும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், பெண்கள், விளிம்பு நிலை வாழ் மக்கள் என்பதாலும் கணிசமான வாடகையினை சதுரடியின் அடிப்படையில் நிர்ணயம் செய்யலாம்.

மேற்படி குறிப்புரையில் தெரிவித்துள்ளவாறு, மீன் அங்காடிக்கான வாடகையினை வணிக பயன்பாட்டில் உள்ள கடைகளுடன் ஒப்பீடு செய்வது சாத்தியமாகாது. கணிசமாக மாத வாடகையினை சதுரடி ஒன்றுக்கு ரூ.10/- என நிர்ணயம் செய்யும் பட்சத்தில் மின்னணு ஒப்பம் மற்றும் ஏலத்தின் *(e-Tender cum Auction)* மூலம் அதிக விலைப்புள்ளி பெற வாய்ப்புள்ளதை கருத்தில் கொண்டு மின்னணு ஒப்பம் மற்றும் ஏலத்தின் *(e-Tender cum Auction)* மூலம் இச்செயற்குறிப்பினை முடிவெடுக்கலாம்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச்சட்டம் 1998, பிரிவு 78(3)ல்,

"The council may grant license, lease or rent out the land or buildings belonging to it for use and occupation for a period not exceeding,

(iii) twelve years, in the case of commercial shopping complexes:

Provided that no such license, lease or rent out shall be granted for a period exceeding three years at a time.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள், 2023 விதி எண்.316(6)ல்,

Building / shopping complexes or public markets	Based on the actual rental value prevailing in the locality with such variations based on location of the shop in the market. Demand, current vacancy levels, infrastructure facilities available, as may be decided by the council.

எனவே, மின்னணு ஒப்பம் மற்றும் ஏலத்தின் *(e-Tender cum Auction)* மூலம் அதிக விலைப்புள்ளி பெற வாய்ப்புள்ளதால், சென்னை-81ல் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன மீன் அங்காடிக்கான மாத வாடகையின் அடிப்படை விலையாக *(Aution Floor Price)* சதுரடி ஒன்றுக்கு ரூ.10/- என பரிந்துரைக்கப்பட்டு அவ்வாறே ஆணை வேண்டப்படுகிறது.

ஆதலால், பெருநகர சென்னை மாநகராட்சி, 4வது மண்டலம், பகுதி-10, வார்டு எண்-40, வ.ஊ.சி. சாலை மற்றும் வார்டு எண்.43 – சொக்கலிங்கம் காலனி, தண்டையார் பேட்டை, சென்னை-81. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற உறுப்பினர் *(MLA)* மேம்பாட்டு நிதியில் மொத்த 11255 சதுரடி *(அல்லது) 1040* ச.மீ பரப்பளவு மற்றும் *2722* சதுரடி *(அல்லது) 253* சதுர மீட்டர் கொண்ட கட்டிடத்தினை நவீன மீன் அங்காடி நடத்த கட்டிடம் கட்டிதர சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி வார்டு-40, வ.ஊ.சி.சாலை ரூ.113,00 இலட்சம் மதிப்பிலும் கட்டப்பட்டுள்ள 57 கடைகள் மற்றும் 8 மீன் சுத்தம் செய்யுமிடம் *(Fish cleaning area)* எண்ணிக்கையில் 65 கடைகள் மற்றும் வார்டு-43, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு

சொந்தமான இடம் *RS.No/3618, Block No.54* சொக்கலிங்கம் காலனி, ரூ.*90,00* இலட்சத்தில் மீன் அங்காடிகள் கட்டப்பட்டுள்ள *49* கடைகள் மற்றும் *3* சுத்தம் செய்யுமிடம் *(Fish cleaning area)* எண்ணிக்கையில் *52* கடைகள் நவீன மீன் அங்காடியினை, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் மற்றும் விதிகளில் வாடகையினை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டுள்ளதால், வார்டு குழு, தீர்மானம் எண்.*59*, நாள்.*15.10.2025*ல் நவீன மீன் அங்காடியினை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் மற்றும் விதிகளின்படி வாடகையினை நிர்ணயம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 548/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.10.வ.து.ந.க.எண்ஆர்3/1374862/2025

ஆணையர் அவர்களின் 20.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1203/2025 **பொருள் எண்.51**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-10 வருவாய் துறை - கோட்டம்-131, புதிய கோட்டம்-136, 80 அடி சாலையில் விருகம்பாக்கத்தில் புதியதாக கட்டப்பட்ட சமுதாய நலக்கூடத்திற்கான முன்வைப்பு தொகை குறைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பழைய கோட்டம்-131, புதிய கோட்டம்-136 பகுதி-28, 80 அடி சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் நிதியின்கீழ் சமுதாய நலக்கூடம், தரைதளம் 2450 சதுர அடி, முதல் தளம் 2750 சதுர அடி மற்றும் இரண்டாம் தளம் 2750 சதுர அடி ஆக மொத்தம் 7950 சதுரடிகள் கட்டி முடிக்கப்பட்டு மன்றத் தீர்மானத்தின்படி, இம் மண்டபத்தின் ஒரு நாள் வாடகை ரூ.10,000/-, அரை நாள் வாடகை ரூ.5000/- மற்றும் சேவை வரி (657) தனியே நிர்ணயம் செய்தும், முன் வைப்புத் தொகை ரூ.20,000/- என நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டில் விடப்பட்டுள்ளது.

தலைவர், நிலைக்குழு கணக்கு மற்றும் தணிக்கை அவர்களின் 16.02.2024 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட முகவரியில் அமைந்துள்ள பெருகநகர சென்னை மாநகராட்சி, சமுதாய நலக்கூடத்தின் ஒரு நாள் வாடகை 10,000/- அரை நாள் வாடகை 5000 மற்றும் முன் வைப்பு தொகை 20,000/- என அதிகமாக உள்ளது. இங்கு வசிப்பவர்கள் குடிசை வாழ் மக்கள் ஆகையால் பெரும்பாலான பொதுமக்கள் நிகழ்ச்சி நடத்த இயலவில்லை என்றும், 13.02.2024 அன்று ஏரியா சபை கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் பெரும்பாலான பொதுமக்கள் வாடகை மற்றும் முன் வைப்பு தொகை அதிகம் என்று கருத்து தெரிவித்தனர். ஆகவே வாடகை மற்றும் முன் வைப்பு தொகையினை குறைத்து பொது மக்கள் பயன்பாட்டில் விட வேண்டும்.

மேற்கண்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடத்தில் ஒரு நாள் வாடகை ரூ.3000/- எனவும், அரைநாள் வாடகை ரூ.1500/- எனவும் மற்றும் முன்வைப்பு தொகை ரூ.3000/- எனவும் குறைத்து நிர்ணயம் செய்து மன்றத்தின் ஆணை பெற பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.'

இவ்வினம் சம்மந்தமாக மாநகர வருவாய் அலுவலர் அவர்களது 20.03.2025 நாளிட்ட குறிப்புரையில், மேற்படி மண்டபத்தின் வாடகை பொது சீராய்வு (GRS) செய்வதற்கு முன் ஒரு சதுரஅடிக்கு அடிப்படை தெரு கட்டணம் ரூ.4.10 பைசா வீதம் கணக்கிடப்பட்டு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் பொது சீராய்வுக்கு பிறகு புதியதாக கட்டப்பட்ட சமுதாய நலக்கூடங்களின் வாடகை தொகை உயர்த்தப்பட்ட அடிப்படை தெரு கட்டணம் (BSR) விதிகளின்படி கணக்கிடப்பட்டு வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்கப்பட்டு வருவதால் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட சமுதாய நலக்கூடங்களின் வாடகையினை குறைக்க இயலாத சூழ்நிலை உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இச்சமுதாய நலக்கூடத்தின் வாடகை பழைய அடிப்படை தெரு கட்டண விதிகளின்படி நிர்ணயம் செய்யப்பட்டது, இருப்பினும் முன்வைப்பு தொகையை குறைக்க மண்டல வார்டு குழு மூலம் தீர்மானம் நிறைவேற்றி மன்றத்தின் ஒப்புதல் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இவ்வினம் சம்பந்தமாக 10வது மண்டல வார்டு குழு கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10, 136, விஜயராகபுரம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய குடியிருப்பு பகுதி, 80 அடி சாலையில் கட்டப்பட்டுள்ள சமூக நலக்கூடம் அப்பகுதியில் வாழும் ஏழை மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு தற்பொழுது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்த சமூக நலக்கூடத்தில் தற்பொழுது ஒரு நாள் வாடகை, GST உள்பட ரூ.11,800-ம் மண்டப முன் வைப்புத் தொகை ரூ. 20,000-ம் வசூலிக்கப்படுகிறது. அதாவது ரூ.31800-ஐ பணம் கட்டினால் தான் அந்த மண்டபத்தை பயன்படுத்தக் கூடிய நிலை அப்பகுதியில் வாழும் மக்களுக்கு தற்பொழுது உள்ளது. (ரூ.10,000 வாடகை ரூ.20,000/- முன்பண தொகை ரூ.1800/- GST) இதனால் அப்பகுதியில் வாழும் ஏழை மக்கள் அவர்கள் குடியிருப்பு பகுதியின் அருகில் சமூக நலக்கூடம் இருந்தும் வாடகை மற்றும் முன்வைப்பு தொகை அதிகமாக இருப்பதால் மண்டபத்தை பயன்படுத்த முடியாமல் சிரமப்படுகின்றனர்.

எனவே, அப்பகுதியில் வாழும் மக்கள் நலன் கருதி மனிதாபிமான அடிப்படையில் முன் வைப்பு தொகை ரூ.5000 ஆகவும் மற்றும் வாடகையை குறைத்தும் அப்பகுதியில் வாழும் ஏழை மக்கள் பயன்படுத்தும் வகையில் உதவிடுமாறு கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் வார்டு-136, பகுதி-28, 80 அடி சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாயநலக்கூடத்திற்கு, மண்டபத்திற்கான வாடகை தொகை மட்டுமே பொது மக்களிடம் வசூல் செய்யப்படுகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இம்மண்டபத்திற்கு தேவையான இதர வசதிகள் பாத்திரங்கள், டேபிள், சேர், குடிநீர் மற்றும் ஜென்ரேட்டர் ஏதும் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பொது மக்களிடம் வசூலிக்கப்படும் முன்வைப்பு தொகையில் மின்சார கட்டணத்தொகை மட்டுமே பிடித்தம் செய்து மீத தொகையினை, மண்டபத்தை முன் பதிவு செய்தவரிடம் திரும்ப அளிக்கப்படுகிறது. பொது மக்கள் அதிக அளவில் இம்மண்டபத்தினை பயன்படுத்திக் கொள்வதற்கு மேற்கண்டுள்ள விவரங்களின்படி இம்மண்டபத்திற்கான முன் வைப்பு தொகை ரூ.20,000/-லிருந்து, ரூ.5,000/- ஆக குறைத்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 556/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

R.D.C.SUSV.No.06078/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1204/2025 **பொருள் எண்.52**

Greater Chennai Corporation –Revenue Department - Support to Urban Street Vendors – Constituted 15 Town Vending Committees under the Chairmanship of the Regional Deputy Commissioner concerned – Regulation of street vending - issue of Certificate of Vending (CoV) - fixation of vending fees- for orders.

Whereas, in compilation with the orders of the Hon'ble High Court passed on 02.04.2025 in Writ Petition No.14977/2024 filed by P.Hemaganesh and other batch cases, the Government issued an order G.O. (4D) No.46, Municipal Administration and Water Supply (MC2) Department, dated 07.10.2025 for the constitution of Town Vending Committees for each Zone under the Chairmanship of the Regional Deputy Commissioner concerned.

- As per the Para No.4 of the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street vending) Scheme 2015, the Town Vending Committee shall issue the Certificate of Vending (CoV) to the street vendors with the terms & conditions prescribed in Para No.5 of the said Scheme.
- As per the Para No.6 of the Street Vendors Scheme 2015, the categories of the street vendors are as follows:
  1) Stationary vendors,
  2) Mobile vendors,
  3) Mobile vendors using motor vehicles and
  4) Other categories of street vendors such as vendors in weekly markets, heritage markets, festival markets and night bazaars:
- As per the Para No.10 of the Scheme 2015 the Certificate of Vending (CoV) shall be valid for a period of 5 years from the date of issue or until the next enumeration of vendors whichever is earlier. As per Para No.11, Certificate of Vending shall be renewed by the concerned Town Vending Committee for a period of 5 years on collection renewal fee of Rs.100/-.

- As per the Para No.9 of the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Scheme, 2015, the vending fees for various categories are as follows:

S.No.	Category of street vendors	Area	Vending fees
1	Stationary vendor (Full time)	Up to10 sq.ft.	1% of the Guideline value subject to minimum of Rs. 750/- per annum
		From 10sq.ft to 25 sq.ft.	2% of the Guideline value subject to a minimum of Rs. 1500/- per annum
		More than 25 sq.ft.	3% of the Guideline value subject to a minimum of Rs. 3000/- per annum
2	Stationary Vendor (Part Time or time sharing)	Up to10 sq.ft.	0.5% of the Guideline value subject to minimum of Rs. 375/- per annum
		From 10 sq.ft to 25 sq.ft.	1% of the Guideline value subject to a minimum of Rs. 750/- per annum

		More than25 sq.ft.	1.5% of the Guideline value subject to a minimum of Rs. 1,500/- per annum
3	Mobile vendor (with motor vehicle)	Up to10 sq.ft.	Rs. 750/- per annum
		From 10 sq.ft to 25 sq.ft.	Rs. 1500/- per annum
		More than25 sq.ft.	Rs. 3000/- per annum
4	Mobile vendor (vehicle without motor)	Up to10 sq.ft.	Rs. 375/- per annum
		From 10 sq.ft to 25 sq.ft.	Rs. 750/- per annum
		More than25 sq.ft.	Rs. 1,500/- per annum
5	Mobile vendor (head loads)	----	Rs.250/- per annum

In this connection, it is stated that earlier, there was one Committee called as "Hawking Zone Implementation Committee" under the Chairmanship of the Retired Judge for Hawkers. Permission was given to the hawkers based on the orders of this "Hawking Zone Implementation Committee" and irrespective of the locations in Chennai City the monthly rent at Rs.100/- was fixed uniformly. The monthly rent fixed by the Hawking Zone Implementation Committee is still being collected by the Zones from the Hawkers at Armenian Street, Zone-5, Pantheon Lane, Zone-5, Mylapore, Zone-9 etc.,

Likewise, instead of following the guideline value the monthly rent may be fixed uniformly for the categories Sl.Nos. 1 to 3 as follows:

S.No.	Category of street vendors	Area	Vending fees
1	Stationary vendor (Full time)	More than 25 sq.ft.	Rs. 3000/- per annum (monthly @ Rs.250/-)
2	Stationary Vendor (Part Time or time sharing)	More than 25 sq.ft.	Rs. 3000/- per annum (monthly @ Rs.250/-)
3	Mobile vendor (with motor vehicle)	More than 25 sq.ft.	Rs. 3000/- per annum (monthly @ Rs.250/-)
For the categories Sl. No. 4 and 5, the fees may be fixed as follows:			
4	Mobile vendor (vehicle without motor)	More than 25 sq.ft.	Rs. 1,500/- per annum
5	Mobile vendor (head loads)	----	Rs.250/- per annum

The above said proposal for issue of certificate of vending (COV) and fixation of vending fees to the street Vendors is submitted for approval of the Council through Standing Committee (T&F).

தமிழாக்கம்:

திருமதி. பி.ஹேமாகணேஷ் என்பவர் தாக்கல் செய்த ரிட் மனு எண்.14977/2024 மற்றும் பிற தொகுதி வழக்குகளில் 02.04.2025 அன்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளுக்கு இணங்க, அரசு, அரசாணை (4D) எண்.46 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறையின் 07.10.2025 தேதியிட்ட உத்தரவை பிறப்பித்தது. இதனைத்

தொடர்ந்து சம்பந்தப்பட்ட வட்டார துணை ஆணையரின் தலைமையில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒன்று என 15 நகர விற்பனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் சாலையோர வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் 2015 இன் பத்தி எண் 4 இன் படி, நகர விற்பனைக் குழு, அந்தத் திட்டத்தின் பத்தி எண் 5 இல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் சாலையோர வியாபாரிகளுக்கு விற்பனைச் சான்றிதழை (CoV) வழங்கும்.

சாலையோர வியாபாரிகளுக்கான 2015 திட்டத்தின் பத்தி எண் 6 இன் படி, சாலையோர வியாபாரிகளின் வகைகள் பின்வருமாறு:

1) நிலையான வியாபாரிகள்,
2) நடமாடும் வியாபாரிகள்,
3) மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்தும் நடமாடும் வியாபாரிகள் மற்றும்
4) வாராந்திர சந்தைகள், பாரம்பரிய சந்தைகள், திருவிழா சந்தைகள் மற்றும் இரவு நேர பஜார்கள் போன்ற சாலையோர வியாபாரிகள்.

மேற்படி 2015 திட்டத்தின் பத்தி எண்.10 இன் படி, விற்பனைச் சான்றிதழ் (CoV) வழங்கப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்கு அல்லது சாலையோர வியாபாரிகள் குறித்த அடுத்த கணக்கெடுப்பு வரை, எது முந்தையதோ அது வரை செல்லுபடியாகும். பத்தி எண்.11 இன் படி, விற்பனைச் சான்றிதழானது சம்பந்தப்பட்ட நகர விற்பனைக் குழுவால் ரூ.100/- புதுப்பித்தல் கட்டணத்தில் 5 ஆண்டுகளுக்கு புதுப்பிக்கப்படும்.

தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் சாலையோர வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்) திட்டம், 2015 இன் பத்தி எண்.9 இன் படி, பல்வேறு பிரிவுகளுக்கான விற்பனைக் கட்டணங்கள் பின்வருமாறு:

வ. எண்	சாலையோர வியாபாரிகளின் வகைகள்	பகுதி (சதுர அடியில்)	கட்டணம்
1	நிலையான வியாபாரிகள் (முழு நேரம்)	10 சதுர அடி வரை	நிலத்தின் வழிகாட்டுதல் மதிப்பில் 1% ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ. 750/-
		10 சதுர அடி முதல் 25 சதுர அடி வரை	நிலத்தின் வழிகாட்டுதல் மதிப்பில் 2% ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ.1500/-
		25சதுரடிக்குமேல்	நிலத்தின் வழிகாட்டுதல் மதிப்பில் 3% ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ. 3000/-

2	நிலையான வியாபாரிகள் (பகுதி நேர அல்லது நேரப் பகிர்வு)	10 சதுர அடி வரை	நிலத்தின் வழிகாட்டுதல் மதிப்பில் 0.5% ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ. 375/-
		10 சதுர அடி முதல் 25 சதுர அடி வரை	நிலத்தின் வழிகாட்டுதல் மதிப்பில் 1% ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ. 750/-
		25சதுரடிக்குமேல்	நிலத்தின் வழிகாட்டுதல் மதிப்பில் 1.5% ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ. 1,500/-
3	நடமாடும் வியாபாரிகள் (மோட்டார் வாகனத்துடன்)	10 சதுர அடி வரை	ஆண்டுக்கு Rs. 750/-
		10 சதுர அடி முதல் 25 சதுர அடி வரை	ஆண்டுக்கு Rs. 1500/-
		25சதுரடிக்குமேல்	ஆண்டுக்கு Rs. 3000/-
4	நடமாடும் விற்பனையாளர்(மோட்டார் இல்லாத வாகனம்)	10 சதுர அடி வரை	ஆண்டுக்கு Rs. 375/-
		10 சதுர அடி முதல் 25 சதுர அடி வரை	ஆண்டுக்கு Rs. 750/-
		25சதுரடிக்குமேல்	ஆண்டுக்கு Rs. 1,500/-
5	தலை சுமை கொண்டு நடமாடும் விற்பனையாளர்	----	ஆண்டுக்கு Rs.250/-

இது தொடர்பாக, முன்னதாக, சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதிபதி அவர்களின் தலைமையில் "*Hawking Zone Committee*" என்று ஒரு குழு அமைக்கப்பட்டு இருந்தது. இந்த குழுவின் உத்தரவுகளின் அடிப்படையில் சாலையோர வியாபாரிகளுக்கு சென்னை நகரத்தில் இடம் ஒதுக்கப்பட்டு ரூ.100/- என ஒரே சீராக மாதாந்திர வாடகை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறு இக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர வாடகை, ஆர்மேனியன் தெரு, மண்டலம்-5, பாந்தியன் லேன், மண்டலம்-5, மைலாப்பூர், மண்டலம்-9 போன்ற இடங்களில் வியாபாரிகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில், நிலத்தின் வழிகாட்டுதல் மதிப்பின் அடிப்படையிலும் சதுரடியின் அடிப்படையிலும் ஓராண்டுக்கு குறைந்தபட்ச கட்டணமாக பின்வருமாறு நிர்ணயம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வ எண்.	சாலையோர வியாபாரிகளின் வகைப்பாடு	குறைந்தபட்ச ஆண்டு கட்டணம்	மாதக் கட்டணம்
1.	நிலையான வியாபாரிகள் (முழு நேரம்)	ரூ.3,000/-	ரூ.250/-
2.	நிலையான வியாபாரிகள் (பகுதி நேரம் அல்லது நேரப் பகிர்வு)	ரூ.1,500/-	ரூ.125/-
3.	நடமாடும் வியாபாரிகள் (மோட்டார் வாகனத்துடன்)	ரூ.3,000/-	ரூ.250/-

சாலையோர வியாபாரம் செய்யக்கூடிய ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஒவ்வொரு தெருவுக்கும் (நிலத்தின்) வழிகாட்டுதல் மதிப்பு வெவ்வேறு விதமாக அமையும். மேலும், இந்த மதிப்பு பகுதிக்கேற்றவாறு அவ்வப்போது உயரக்கூடும். இதனடிப்படையில் கட்டணம் நிர்ணயம் செய்யும்பட்சத்தில் சாலையோர வியாபாரிகளுக்கிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் வரக்கூடும். சாலையோர வியாபாரிகளுக்கிடையில் விற்பனை செய்யும் பகுதியின் அடிப்படையில் எந்தவித பாரபட்சமும் இல்லாமல், சாலையோர வியாபாரிகளின் திட்ட வழிகாட்டுதலின்படி குறைந்தபட்ச ஓராண்டுக்கான கட்டணம் ரூ.3,000/- அதாவது மாதாந்திர கட்டணம் ரூ.250/- என்ற கட்டணத்தை மாநகராட்சிக்கு எந்தவித நிதி இழப்பீடு ஏற்படாத வகையில் அனைத்து சாலையோர வியாபாரிகளுக்கும் ஒரே சீராக ஓராண்டுக்கு ரூ.3,000/- அதாவது மாதாந்திர கட்டணம் ரூ.250/- என பின்வரும் அட்டவணையின்படி ஒரே சீராக கட்டணம் நிர்ணயம் செய்யலாம்.

வ. எண்	சாலையோர வியாபாரிகளின் வகைகள்	பகுதி (சதுர அடியில்)	கட்டணம்
1	நிலையான வியாபாரிகள் (முழு நேரம்)	25 சதுரடிக்குமேல்	ஆண்டுக்கு Rs. 3000/- (Rs.250/-மாத வாடகை)
2	நிலையான வியாபாரிகள் (பகுதி நேர அல்லது நேரப் பகிர்வு)	25 சதுரடிக்குமேல்	ஆண்டுக்கு Rs. 3000/- (Rs.250/-மாத வாடகை)
3	நடமாடும் வியாபாரிகள் (மோட்டார் வாகனத்துடன்)	25 சதுரடிக்குமேல்	ஆண்டுக்கு Rs. 3000/- (Rs.250/-மாத வாடகை)
பிரிவு எண் 4 மற்றும் 5 க்கு, கட்டணங்கள் பின்வருமாறு நிர்ணயிக்கலாம்:			
4	நடமாடும் வியாபாரிகள் (மோட்டார் இல்லாத வாகனம்)	25 சதுரடிக்குமேல்	ஆண்டுக்கு Rs.1,500/-
5	தலை சுமை கொண்டு நடமாடும் வியாபாரிகள்	----	ஆண்டுக்கு Rs.250/-

மேற்குறிப்பிட்டவாறு சாலையோர வியாபாரிகளுக்கு வியாபாரிகளின் வகைக்கேற்ப கட்டணங்களை நிர்ணயம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.557/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

வ.து.(தேர்தல்) ந.க.எண்.005570/2025

ஆணையர் அவர்களின் 22.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1205/2025 **பொருள் எண்.53**

தேர்தல்கள் - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய்துறை - சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2011 - 17.10.2011 வாக்குப்பதிவு நாளன்று நடைபெற்ற தேர்தல் பயன்பாட்டிற்கும் அதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வாக்கு எண்ணிக்கை உள்பட பல்வேறு தேர்தல் பணிகளுக்காக மண்டலம்-1 முதல் 15 வரை மற்றும் உள்ளாட்சி தேர்தல் 2011ல் பணிபுரிந்த அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் தேர்தலுக்கான ஆயத்தப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, அனைத்து மண்டல அலுவலர்கள்/மேற்பார்வையாளர்களும் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கும் தேர்தல் செலவினங்கள் மேற்கொள்ளவும் மற்றும் வாக்குச்சாவடி மையங்கள், வாக்கு எண்ணும் மையங்கள் மற்றும் இதர தேர்தல் பணிகளை மேற்கொண்டமைக்காக பெறப்பட்ட முன்பணங்கள் - முன்பணங்கள் நேர் செய்யும் கோப்புகள் 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக பெரும்பாலான கோப்புகள் அழிந்துவிட்ட நிலையிலும் மேலும் இக்கோப்புகள் கிடைக்கப்பெறாததாலும் மற்றும் இப்பணிகளை மேற்கொண்ட பெரும்பாலான அலுவலர்கள் ஓய்வு பெற்றும் பல அலுவலர்கள் இறந்தும் விட்டனர் - இம்முன்பணங்கள் நீண்ட காலமாக நேர் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது - நிதி ஆலோசகர் அவர்கள் முன்பணங்களை நேர் செய்ய அறிவுறுத்தியது - தேர்தல் முன்பணங்களை நேர் செய்ததாக கருதி தணிக்கை தடையை நீக்கம் செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு *2011* ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண உள்ளாட்சி தேர்தலில் வாக்குப்பதிவு நாளான *17.10.2011* அன்று, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் *03.10.2011* நாளிட்ட ஆணையின்படி, மண்டலம்-*1* முதல் *15* வரையில் தேர்தல் நாள் அன்று பணிபுரிந்த பணியாளர்களுக்கும் மற்றும் வாக்கு எண்ணிக்கை நாள் அன்று பணிபுரிந்த பணியாளர்களுக்கும் மதிப்பூதியம் வழங்குதல் மற்றும் வாக்குச்சாவடி மையங்கள், வாக்கு எண்ணும் மையங்கள் மற்றும் தேர்தல் பயன்பாட்டு பொருட்கள் வழங்கும் மையங்களுக்கு தேவையான குடிநீர், உணவு மற்றும் இதர செலவினங்களுக்கு மண்டல அலுவலர்கள்/ஒருங்கிணைப்பு அலுவலர் தேர்தல் மேற்பார்வையாளர் ஆகியோரின் தேர்தல் செலவினங்களுக்காக முன்பணம் பெறப்பட்டுள்ளது.

மேலும், *2011* உள்ளாட்சி தேர்தல் பயன்பாட்டிற்காக *M/s. IDEA Cellular*, என்ற நிறுவனத்திடமிருந்து *5500* சிம் கார்டுகள் கொள்முதல் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை ரூ.*2,69,500/-*ஐ தேர்தல் செலவின முன்பணமாக மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) துறைக்கு வழங்கப்பட்டது மற்றும் இதர தேர்தல் பணிகளை மேற்கொள்ள பின்வரும் *BPV*-க்களின் மூலமாக பெறப்பட்ட முன்பணத் தொகையில் இந்நாள் வரையில் நேர் செய்தது போக மீதமுள்ள முன்பணத் தொகை ரூ.***34,42,279/-*** தலைமை காசாளர் மூலமாக மண்டல அலுவலர்கள்/மண்டலம்-*1* முதல் *15* வரை

மற்றும் துறைகளுக்கு முன்பணங்கள் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

Sl.No.	BPV No.	Date	Description	Total Advance for 2011 LB Election Expenditure	Zones/ Department Balance Advance Pending after advance adjustment	Advance Pending Zones
1	A/174	10.10.2011	Local body election-2011, Advance to M/s. IDEA Cellular to supply of 5500 Nos. pre paid Sim Card during the local body election-2011 purpose.	**2,69,500/-**	**2,69,500/-**	SE/Electrical
2	A/181	14.10.2011	Remuneration of Polling Officials, Counting Officials during the day of Polling in local body election -2011 and overall election Officials.	3,93,00,000/-	**21,99,213/-**	Zone-1 to 15
3	A/188	15.10.2011	Local body Election -2011 advance to meet out election expenditure for videography arrangements in all polling booths in Chennai corporation.	75,00,000/-	**4,43,200/-**	Zone-1 to 15
4	A/185	15.10.2011	Advance for making Electrical arrangements in counting centre D.B.Jain College Zone -15	2,60,000/-	**500/-**	Zone-15
5	A/241	13.10.2011	Local Body Election 2011 advance for Nodal Officers and Zonal Officers disbursed Rs.50000 Each Nodal officer (18 x50000 =9,00,000/-)	9,00,000/-	**3,29,866/-**	Zone-14 & 15
6	A/167	27.9.2011	Local Body Election 2011 advance for Nodal Officers and Zonal Officers disbursed Rs.50000 Each Nodal officer (18 x50000 =9,00,000/-)	9,00,000/-	**2,00,000/-**	Zone-1 to 13
					34,42,279/-	

மேற்கூறியவாறு *2011* ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட முன்பணங்கள் நேர் செய்யப்பட்டது போக மீதமுள்ள முன்பணங்கள் நீண்ட காலமாக நேர் செய்யப்படாமல் உள்ளதால் பகுதி கணக்கு குழுமம் (வருவாய்துறை தலைமையிடம்) மூலம் *29.12.2020* நாளிட்ட நிதி நிர்வாக பிரிவின் சுற்றறிக்கையில் முன்பணம் நிலுவைகளை உடனடியாக நேர் செய்ய அறிவுறுத்தப்பட்டது. மேலும், முதுநிலை கணக்கு அலுவலர் (வருவாய்) அவர்களின் *10.11.2025* நாளிட்ட கடிதத்தில் உள்ளாட்சி தேர்தல் *2011* தேர்தல் செலவினங்களுக்காக பெறப்பட்ட முன்பணத் தொகை நிலுவைப்பட்டியலில் காணும் இனங்களை விரைந்து நேர் செய்திடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி விரிவுப்படுத்தப்பட்டு, 9 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் ஆக மொத்தம் 42 பகுதிகள் வார்டு மறுவரையறையின்படி, சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும் சேர்த்து 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்ட காரணத்தினால், புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கும் சேர்த்து தேர்தல் நடத்தப்பட வேண்டிய அவசியத்தினை கருத்தில் கொண்டு இப்பகுதிகளில் தேர்தல் நடத்துவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்திடும் பொருட்டு தேர்தல் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண உள்ளாட்சி தேர்தலில் வாக்குப்பதிவு நாளான 17.10.2011 அன்று, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் 03.10.2011 நாளிட்ட ஆணையின்படி, மண்டலம்-1 முதல் 15 வரையில் வாக்குச்சாவடிகளில் பணிபுரிந்த அலுவலர்களுக்கு தேர்தல் நாளன்றே பணிமுடித்தவுடன் மதிப்பூதியம் வழங்கப்பட்டுவிடும், அந்த வகையில் மதிப்பூதியம் பெறப்படவில்லை என்று 2011 தேர்தலில் பணிபுரிந்த எவரும் கோரவோ, புகார் தெரிவிக்கவோ இல்லை மற்றும் வாக்கு எண்ணிக்கை நாள் அன்று பணிபுரிந்த பணியாளர்களுக்கும் மதிப்பூதியம் வழங்குதல் மற்றும் வாக்குச்சாவடி மையங்கள், வாக்கு எண்ணும் மையங்கள் மற்றும் தேர்தல் பயன்பாட்டு பொருட்கள் வழங்கும் மையங்களுக்கு தேவையான குடிநீர் மற்றும் இதர செலவினங்களுக்காக மண்டல அலுவலர்கள்/ஒருங்கிணைப்பு அலுவலர்கள் வாயிலாக பெறப்பட்ட முன்பணங்கள் தேர்தல் செலவினங்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் பயன்பாட்டிற்காக மெர்சஸ். ஐடியா செல்லுலார் நிறுவனத்தின் மூலம் குறைந்த காலத்திற்கு மட்டுமே பயன்படுத்ததக்க வகையில் உள்ள ப்ரிப்பெய்டு சிம்கார்டுகள் 5500 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யப்பட்டு, தேர்தல் நாளன்று ஒவ்வொரு மணி நேரத்திற்கும் வாக்குப்பதிவு விவரத்தை தெரிவிக்க வேண்டி வாக்குச்சாவடி தலைமை அலுவலருக்கு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இச்சிம்கார்டுகள் மிகக் குறைந்த கால பயன்பாட்டிற்குட்பட்டதாகும். இப்பணியை மேற்கொள்ள பெறப்பட்ட முன்பணம் ரூ.2,69,500/-ஐ கொண்டு மெர்சஸ் ஐடியா செல்லுலார் நிறுவனத்திடமிருந்து ப்ரிப்பெய்டு சிம்கார்டுகள் கொள்முதல் செய்யப்பட்ட முன்பணம் மற்றும் இதர தேர்தல் செலவினங்களுக்கு பெறப்பட்ட முன்பணத் தொகைகளில் நேர் செய்யப்பட்டது போக மீதமுள்ள முன்பணத் தொகை ரூ.34,42,279/- நேர் செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது.

இம்முன்பணங்கள் பல்வேறு தேர்தல் செலவினங்களுக்கு பெறப்பட்டு செலவிடப்பட்டுள்ளதாலும், மேலும், செலவினப்பட்டிகள் நேர்செய்திட கோப்புகள் தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த நிலையில், வார்டு மறுவரையறையின்படி, மண்டல அலுவலகங்கள்/துறைகளில் இருப்பு வைக்கப்பட்டிருந்த கோப்புகள் இடமாற்றம் செய்யப்பட்ட காரணத்தினாலும், மேலும், மேற்படி கோப்புகள் 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டு கோப்புகள் ஏதும் கிடைக்கப் பெறாததாலும், மேலும், இப்பணிகளை மேற்கொண்ட பெரும்பாலான அலுவலர்கள் ஒய்வு பெற்றுவிட்ட காரணத்தினாலும், மேலும், பல உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் இறந்து விட்டதாலும்,

மண்டலம்-1 முதல் 15 வரையில் மற்றும் துறைகள் மூலமாக, 2011 தேர்தல் செலவினங்களுக்காக பெறப்பட்ட முன்பணங்கள் தேர்தல் பணிகளுக்காக மட்டுமே செலவிடப்பட்டுள்ளதாலும், இவ்வினத்தில் நிலுவைப்பட்டிகள் ஏதும் இல்லாததாலும், மேற்காணும் முன்பணங்கள் நீண்ட காலமாக நிலுவையிலுள்ள காரணத்தினால், இம்முன்பணங்களை நேர் செய்ததாக கருதி, நீக்கம் செய்திடவும், மேற்சொன்ன முன்பணங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்திட நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"16.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு(கணக்கு மற்றும் தணிக்கை) கூட்டத்தில் தீர்மான எண்.05/2025, நாள்.16.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

வ.து.ந.க.எண்.தி1/006324/2025

ஆணையர் அவர்களின் 22.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1206/2025 **பொருள் எண்.54**

பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய் துறை -- காலிமனை வரிவிதிப்பு - தணிக்கை ஆண்டு 2024-25 - காலிமனைகளுக்கு 13 அரையாண்டுகளுக்கு உண்டான சொத்துவரி எழுப்பப்பட்டதில் 2/2021-22 வரையிலான காலத்திற்கு 12.40 % என தள அடிப்படையில் (Floor Rates) எழுப்பப்படாதது என குறைபாடு - அரசாணையில் உள்ள வழிவகையின் அடிப்படையிலேயே காலிமனை சொத்துவரி விதிக்கப்பட்டது தொடர்பாக தணிக்கை தடை நீக்கம் செய்வது தொடர்பாக மன்றத்தின் அனுமதி.

அரசாணை எண்.151, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.08.2009ல், சென்னை மாநகராட்சியினை தவிர்த்து, ஏனைய மாநகராட்சிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மட்டுமே காலிமனை விதிக்க சட்டம் மற்றும் விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியினை தவிர்த்து இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு காலிமனை வரிவிதிப்பு செய்ய சட்ட விதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டு அரசாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், சென்னை மாநகராட்சியானது, மன்றத் தீர்மானம் எண்.405/2009, நாள் 29.10.2009ன் வாயிலாக **காலி நிலவரியினை சதுர அடி அடிப்படையில் நிர்ணயம் செய்யவும்**, காலி நிலத்திற்கு குறைந்தபட்சமாகவும், வியாபார நோக்குடன் பயன்படுத்தப்படும் காலி நிலத்திற்கு அதிகப்பட்சமாகவும் வரி விதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

காலி நிலங்கள் அமைந்துள்ள பகுதி	குறைந்தபட்சம்	அதிகபட்சம்
	ரூ. பை	ரூ. பை
குடியிருப்பு பகுதிகளில் உள்ள சாலைகள்	0.30	0.50
உட்புற சாலைகளை நோக்கிச் செல்லாத பிரதான சாலைகள் மற்றும் பேருந்து தட சாலைகள்	0.40	0.75
உட்புற சாலைகள் மற்றும் உட்புற சாலைகளை நோக்கிச் செல்லும் பிரதான சாலைகள் மற்றும் பேருந்து தட சாலைகள்	0.50	1.50

அதன்படி, வியாபார நோக்குடன் பயன்படுத்தப்படும் காலிநிலங்களுக்கு அதிகபட்சமாக ஒரு சதுர அடிக்கு, ரூ.1.50/- என்ற அடிப்படையிலும் மற்றும் வியாபார நோக்கம் இல்லாத காலிநிலங்களுக்கு ஒரு சதுர அடிக்கு 0.50 பைசா என்ற அடிப்படையிலும், காலி நிலங்களுக்கு காலிமனை வரி 2/2021-22 வரை விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வந்தது.

அதாவது, காலிமனை பரப்பின் அடிப்படையில் (சதுர அடி) மற்றும் ஒரு சதுர அடிக்கான கட்டணம் கொண்டு, காலிமனை வரி (AREA (in sqft.) X VLT Rate per sqft. = Vacant Land Tax) நிர்ணயித்து, காலிமனை வரியிலிருந்து நேரடியாக காலிமனைக்கான ஆண்டு மதிப்பு கணக்கிடப்பட்டு வந்தது (Vacant Land Tax /12.40 X 100). உதாரணமாக

2000 சதுர அடிக்கான காலிமனை வரி ரூ.0.50 என்ற அடிப்படையில் அரையாண்டிற்கு ரூ.1000/- எனவும், ஆண்டு மதிப்பு ரூ.8,064/- (ரூ.1000/12.40%) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக கடிதம் நாள்: 17.02.2018ல், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919ல் காலிமனை வரி விதிக்க வழிவகையில்லாத நிலையில் அதற்கான சட்ட வழிவகை மேற்கொள்ள அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, அரசால் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளும் பொது சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள அரசாணை எண். 53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ல், வழிகாட்டுதல்கள் வழங்கி ஆணை பிறப்பித்து, அவ்வரசாணையில், பத்தி 9ல், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

C. Vacant Land Tax

Vacant Land Tax may be increased by 100% in all urban local bodies. Further, where two-third or more of the land is vacant, Vacant Land Tax on such vacant land should also be levied alongwith the property tax in Greater Chennai Corporation as is the case in rest of the State.

D. Floor Rates

The Annual value of the property is calculated based on the Basic Street Rates in Chennai and Zonal Basic Values in other cities. The Property Tax Rate as a percentage is applied on this Annual Value. **The existing rates of property tax (i.e. % of Annual Value, which is levied as Tax) in each city may be notified as the Floor Rates of property tax**.

மேற்படி அரசாணையின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.63/2022, நாள் 30.05.2022ல், இனம்-3ல்," காலிமனை வரியானது, 600 சதுர அடிக்கு கீழ் உள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு நிர்ணயிக்கப்படவுள்ள அடிப்படை தெரு கட்டணத்தில், 50 சதவீதம் என நிர்ணயம் செய்யவும், வணிக ரீதியாக உபயோகப்படுத்தப்படும் காலிமனைகளுக்கான மதிப்பீடுகளுக்கு, 600 சதுர அடிக்கு கீழேயுள்ள கட்டிடங்களுக்கு நிர்ணயிக்கப்படும் அடிப்படை தெரு கட்டணத்தில் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும், இவ்விரு இனங்களுக்கும் காலிமனை வரி குறைந்த பட்சமாக சதுர அடிக்கு ரூ.0.50 மற்றும் ரூ.1.00 என நிர்ணயம் செய்யவும், மற்றும் காலிமனைகளில் கட்டப்படும் கட்டிடங்களில், கட்டிடத்தின் பரப்பளவில் இரண்டு மடங்கை விட, மீதமுள்ள காலியாக உள்ள நிலத்தின் அளவீடுகளுக்கு காலிமனை வரியும் சேர்த்து விதிக்கவும், இதனை நடப்பு நிதியாண்டின் முதலாம் அரையாண்டு அதாவது 1/2022-23 முதல் நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது".

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி 266ல் மேற்கண்ட காலிமனை வரி விதிக்க சட்டப்பூர்வமாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. காலிமனைகளுக்கு, காலிமனை பரப்பு மற்றும் அடிப்படை தெரு கட்டணம் கணக்கில் கொண்டு (AREA (in sqft.) X BSR), ஆண்டு மதிப்பு கண்டறிந்து (AV) , ஆண்டு மதிப்பில், 12.40 சதவீதம் காலிமனை வரியாக, 1/2022-23 முதல் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட அரசாணைகளின் அடிப்படையிலும் மற்றும் மன்றத் தீர்மானங்களின் அடிப்படையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட காலிமனைகளுக்கு,

காலி நில வரி விதிக்கப்பட்டு வரும் நிலையில், நிதி ஆண்டு 2024-25ஆம் ஆண்டில், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் காலிமனைகள் வரி தொடர்பான தணிக்கை பத்திகளில் (பத்தி எண். 16/2024-25 உட்பட) கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.,

" காலிமனை வரி ஆண்டு மதிப்பின் தள வீதத்தின் அடிப்படையில் 2/2021-22 வரை (sqft x BSR x 12 x 12.40%) என கணக்கீடு செய்யாமல், காலிமனை பரப்பினை அடிப்படை தெரு கட்டணத்தின் 50% (sqft. x BSR 50%) உடன் பெருக்கி வரும் மதிப்பினை காலிமனை வரியாக கணக்கிட்டு குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது."

சென்னை மாநகராட்சி தவிர்த்து, இதர உள்ளாட்சி அமைப்புகள் காலி நிலங்களுக்கு சதுர அடி அடிப்படையில் காலிமனை வரி விதிக்க சட்ட திருத்தம், அரசாணை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 20.08.2009ன் வாயிலாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியில், காலிமனை வரி என்பது, மன்றத் தீர்மானம் எண்.405/2009, நாள் : 29.10.2009ன்படி, சதுர அடி அடிப்படையில், வியாபார நோக்குடன் பயன்படுத்தப்படும் காலி நிலத்திற்கு, சதுர அடிக்கு ரூ. 1.50 எனவும், காலி நிலமாக மட்டும் ரூ.0.50 எனவும், 2/2021-22 வரையிலான காலத்திற்கு, நாளது தேதி வரை காலி நில வரி கணக்கிடப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண்.53, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.03.2022ன் தொடர்ச்சியாக மன்றத் தீர்மானம் எண்.63/2022 நாள் 30.05.2022ன்படி, அடிப்படை தெரு கட்டணத்தின் அடிப்படையில் காலிமனை வரி விதிக்க வழிவகை செய்யப்பட்ட நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியில் காலிமனை வரி அடிப்படை தெரு கட்டணங்களைக் கணக்கில் கொண்டு, சொத்தின் ஆண்டு மதிப்பு நிர்ணயிக்கப்பட்டு வருவதாலும், விதிக்கப்படும் ஆண்டு மதிப்பில், குறிப்பிட்ட சதவீதம் வரியாக நிர்ணயிக்கப்படும் வரி வீதங்களை, தளவீதமாக கொள்ளவும் வழிவகை செய்யப்பட்ட நிலையிலும், காலி மனைகளுக்கு, ஆண்டு மதிப்பின் அடிப்படையில், 1/2022-23 முதல் காலிமனை வரி எவ்வித குறைபாடும் இன்றி நிர்ணயிக்கப்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி 266ல் காலிமனை வரி விதிக்க சட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால், தணிக்கை ஆண்டு 2024-25ல், 2/2021-22 வரை மேற்கொள்ளப்பட்ட காலிமனைவரி கேட்பு குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள பத்திகளை நிவர்த்தி செய்திட, கீழ்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இனம்-(1) – அரசாணை எண்.150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 20.08.2009ன் **சென்னை மாநகராட்சியினை தவிர்த்து** இதர உள்ளாட்சி அமைப்புகளுக்கு காலிமனை வரிவிதிப்பு செய்ய பிறப்பிக்கப்பட்ட நிலையில், சென்னை மாநகராட்சியானது, மன்றத் தீர்மானம் எண்.405/2009, நாள் 29.10.2009ன் வாயிலாக **காலிமனை பரப்பு (சதுர அடியில்) மற்றும் ஒரு சதுர அடிக்கான கட்டணம் கொண்டு,** காலிமனை வரி (AREA (in sqft.) X VLT கட்டணம்) நிர்ணயம் செய்ததற்கும்,

அதனைக்கொண்டு ஆண்டு மதிப்பு எற்கனவே உருவாக்கப்பட்ட கேட்புகளுக்கும், மற்றும் இனி வரும் காலங்களில், 2/2021-22ஆம் ஆண்டு வரை காலிமனை வரி விதிப்புகள் மேற்கொள்ளும் மதிப்பீடுகளுக்கு உருவாக்கப்படும் கேட்புகளுக்கும், ஆண்டு மதிப்பு தளவீதம் அடிப்படை பொருந்தாது என உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு தெளிவுபடுத்திடவும்.

இனம்-(2)- மன்றத் தீர்மானம் எண்.63/2022 நாள் 30.05.2022ன்படி, **<u>காலி மனைகளுக்கு அடிப்படை தெரு கட்டணம் நிர்ணயம் செய்து,</u>** ஆண்டு மதிப்பின் அடிப்படையில், 1/2022-23 முதல் காலிமனை வரி விதிக்கப்பட்டு வருவதால், ஆண்டு மதிப்பு தளவீதம் 1/2022-23லிருந்து பொருந்தும் என உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு தெளிவுபடுத்திடவும்,

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.591/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.மஉ.து.நக.எண்.எல்இ6/2558/2025

ஆணையர் அவர்களின் 20.11 2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1207/2025 **பொருள் எண்.55**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-7 கோட்டம் 79 முதல் 93 வரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் தற்போது இயங்கி வரும் கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் நியாய விலைக்கடைக்கு மாத வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.

துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் கடிதத்தில், தலைவர் (வரி விதிப்பு (ம) நிதி) அவர்கள் *25.08.2025* அன்று நடைப்பெற்ற கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் அரசின் கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் பல நியாயவிலைக்கடைகள் வாடகை நிர்ணயம் செய்யப்படாமலும் மற்றும் குறைவான வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலும், இதனை முறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உதவி ஆணையர் (முதுநிலை) மண்டலம்-*7* அவர்களின் *06.11.2025* நாளிட்ட கடிதத்தில், மணடலம்-*7* கோட்டம் *79* முதல் *93* வரையிலான பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வரும் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் நியாய விலைக்கடைகளுக்கு மாத வாடகை நிர்ணயம் செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வ. எண்.	வார்டு எண்	கடை முகவரி	கடை பெயர்	கடை எண்	தளம்	சதுர அடி
1	79	சங்கம் தெரு, ஓரகடம், அம்பத்தூர், சென்னை600 053.	*SGCMS*	02FF002NT	GF	500
2	79	ராம் நகர் வங்கி தெரு, ஓரகடம், அம்பத்தூர்,செ-*53*	*SGCMS*	02FF004NT	GF	400
3	79	*AK* நகர், துலுக்காணத்தம்மன் கோயில் தெரு, செ.53	சிந்தாமணி	02FF040NT	GF	500
4	79	*79*, 2வது பிரதான சாலை லெனின் நகர், அம்பத்தூர், செ.53	*SGCMS*	02FF041NT	GF	300
5	79	எண்.1 ஒத்தவாடை தெரு, காந்தி நகர் ஓரகடம், அம்பத்தூர், செ.53,	சிந்தாமணி	02FB012NT	GF	525
6	81	எண்.12 மேல்நிலைப்பள்ளி சாலை, கணபதி முதலி தெரு, அம்பத்தூர் மார்க்கெட், செ.53	சிந்தாமணி	02FB003NT	GF	400
7	81	எண்.1 துலுக்காணத்தம்மன் தெரு, வெங்கடாபுரம்	சிந்தாமணி	02FB008NT	GF	600
8	83	சூரப்பேடு *II*	*SGCMS*	02FF009NT	GF	200
9	84	*3*6வது தெரு, *TNHB* காலனி கொரட்டூர், செ.80	சிந்தாமணி	02FB030NT	GF	300

10	84	36வது தெரு, *TNHB* காலனி கொரட்டூர், செ.80	சிந்தாமணி	02FB031NT	GF	400
11	84	பட்டரவாக்கம் குளம் அருகில், ஆவின் பாலகம் சாலை, செ.98	சிந்தாமணி	02FB032NT	GF	550
12	84	36வது தெரு, *TNHB* காலனி கொரட்டூர், செ.80	சிந்தாமணி	02FB033NT	GF	225
13	84	36வது தெரு, *TNHB* காலனி கொரட்டூர், செ.80	சிந்தாமணி	02FB106NT	GF	377
14	85	அமுதம், சம்தாரியா நகர் 2	அமுதம்	02FA059NT	GF	400
15	85	*T.I cycle - I*	சிந்தாமணி	02FB015NT	GF	600
16	85	*T.I cycle - II*	சிந்தாமணி	02FB016NT	GF	300
17	85	மங்களாபுரம்	சிந்தாமணி	02FB029NT	GF	300
18	86	செல்லியம்மன் நகர்	*S.T.CO-Operative*	02FF048NT	GF	510
19	86	அன்னை சத்தியா நகர்	சிந்தாமணி	02FB147NT	GF	483
20	86	ஆலமரம் தெரு, அத்திப்பட்டு	சிந்தாமணி	02FB148NT	GF	504
21	86	வன்னியர் தெரு, குப்பம் சாலை	சிந்தாமணி	02FB149NT	GF	495
22	91	2வது பிளாக், காளமேகம் சாலை	சிந்தாமணி	02FB064NT	GF	598
23	91	2வது பிளாக், காளமேகம் சாலை	சிந்தாமணி	02FB134NT	GF	598
24	92	இளங்கோசாலை, முகப்பேர் கிழக்கு	சிந்தாமணி	02FA006NT	GF	748
25	92	இளங்கோசாலை, முகப்பேர் கிழக்கு	சிந்தாமணி	02FB067NT	GF	748
26	91	எண்1கண்ணாத்தம்மன் கோயில், *20A* பஸ் ஸ்டாப், வேணுகோபால் தெரு	சிந்தாமணி	02FB146NT	GF	660
27	93	எண்,3/202, வீரமுனிவர்சாலை முகப்பேர், சென்னை 37	அமுதம்	02FA034NT	GF	400
28	93	எண்,3/202, வீரமுனிவர்சாலை முகப்பேர், சென்னை 38	அமுதம்	02FA035NT	GF	400

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வரும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் நியாய விலைக்கடைகளுக்கு மாத வாடகை, *The tamil nadu urban local bodies rules, 2023, [G.O. Ms. No. 45, Municipal Administration and Water Supply (Election) Department, 12th April 2023*-விதிகளின் படி கீழ்கண்ட கட்டிடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

வ. எண்	வார்டு எண்	கடை முகவரி	கடை பெயர்	கடை எண்	தளம்	சதுர அடி	மாத வாடகை	GST -18%	12 மாத வாடகை
1	79	சங்கம் தெரு ஓரகடம் அம்பத்தூர் சென்னை600 053	SGCMS	02FF002NT	GF	500	2712	488	32544
2	79	ராம் நகர் வங்கி தெரு.ஓரகடம். அம்பத்தூர்,செ-53	SGCMS	02FF004NT	GF	400	2400	432	28800
3	79	AK நகர், துலுக்கானத்தம்மன் கோயில் தெரு.செ.53	சிந்தாமணி	02FF040NT	GF	500	3000	540	36000
4	79	79,2வது பிரதான சாலை லெனின் நகர், அம்பத்தூர், செ.53	SGCMS	02FF041NT	GF	300	1800	324	21600
5	79	எண்.1 ஒத்தவாடை தெரு, காந்தி நகர் ஓரகடம், அம்பத்தூர், செ.53,	சிந்தாமணி	02FB012NT	GF	525	3150	567	37800
6	81	எண்.12 மேல்நிலைப்பள்ளி சாலை, கணபதி முதலி தெரு, அம்பத்தூர் மார்க்கெட் செ.53	சிந்தாமணி	02FB003NT	GF	400	2400	432	28800
7	81	எண்.1 துலுக்கானத்தம்மன் தெரு வெங்கடாபுரம்	சிந்தாமணி	02FB008NT	GF	600	3600	648	43200
8	83	சூரப்பேடு II	SGCMS	02FF009NT	GF	200	1200	216	14400
9	84	36வது தெரு, TNHB காலனி கொரட்டூர்.செ.80	சிந்தாமணி	02FB030NT	GF	300	1800	324	21600
10	84	36வது தெரு, TNHB காலனி கொரட்டூர்.செ.80	சிந்தாமணி	02FB031NT	GF	400	2400	432	28800
11	84	பட்டரவாக்கம் குளம் அருகில், ஆவின் பாலகம் சாலை, செ.98	சிந்தாமணி	02FB032NT	GF	550	3955	712	47460
12	84	36வது தெரு, TNHB காலனி கொரட்டூர், செ.80	சிந்தாமணி	02FB033NT	GF	225	1350	243	16200

13	84	3வது தெரு, TNHB காலனி கொரட்டூர், செ.80	சிந்தாமணி	02FB106NT	GF	377	2262	407	27144
14	85	அமுதம், சம்தாரியாநகர் 2	அமுதம்	02FA059NT	GF	400	2400	432	28800
15	85	T.I cycle - I	சிந்தாமணி	02FB015NT	GF	600	4315	777	51780
16	85	T.I cycle - II	சிந்தாமணி	02FB016NT	GF	300	2157	388	25884
17	85	மங்களாபுரம்	சிந்தாமணி	02FB029NT	GF	300	1627	293	19524
18	86	செல்லியம்மன் நகர்	S.T.CO-Operative	02FF048NT	GF	510	3060	551	36720
19	86	அன்னை சத்தியா நகர்	சிந்தாமணி	02FB147NT	GF	483	2898	522	34776
20	86	ஆலமரம் தெரு, அத்திப்பட்டு	சிந்தாமணி	02FB148NT	GF	504	3024	544	36288
21	86	வன்னியர் தெரு, குப்பம் சாலை	சிந்தாமணி	02FB149NT	GF	495	3560	641	42720
22	91	2வது பிளாக். காளமேகம் சாலை	சிந்தாமணி	02FB064NT	GF	598	4300	774	51600
23	91	2வது பிளாக். காளமேகம் சாலை	சிந்தாமணி	02FB134NT	GF	598	4300	774	51600
24	92	இளங்கோசாலை, முகப்பேர் கிழக்கு	சிந்தாமணி	02FA006NT	GF	748	4488	808	53856
25	92	இளங்கோசாலை, முகப்பேர் கிழக்கு	சிந்தாமணி	02FB067NT	GF	748	4488	808	53856
26	91	எண்1, கண்ணாத்தம்மன் கோயில், 20A பஸ் ஸ்டாப், வேணுகோபால தெரு	சிந்தாமணி	02FB146NT	GF	660	3960	713	47520
27	93	எண்,3/202, வீரமுனிவர்சாலை முகப்பேர், சென்னை 37	அமுதம்	02FA034NT	GF	400	2400	432	28800
28	93	எண்,3/202, வீரமுனிவர்சாலை முகப்பேர், சென்னை 38	அமுதம்	02FA035NT	GF	400	2400	432	28800

எனவே, மண்டலம்-7ல் மேற்கண்ட இடங்களில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் நியாய விலைக்கடைகளுக்கு மாத வாடகை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு,

1. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதி *2023* பிரிவு *316*ன்படி மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு பொருந்தும்.
2. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வாடகைத் தொகையில் *15* சதவீதம் உயர்த்தப்படும்,
3. கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும்.
4. மாத வாடகையினை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் *5*ம் தேதிக்குள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-*7*ல் செலுத்த வேண்டும்.
5. பின்வரும் காலங்களில் மாநகராட்சிக்கு தேவை ஏற்படின் உடனடியாக மூன்று மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்

மேற்படி கட்டிடங்களில் உள்ள நியாயவிலைக் கடைகளுக்கு மாத வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.552/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ4/479/1990

ஆணையர் அவர்களின் 28.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1208/2025 **பொருள் எண்.56**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமை துறை - சேனாய் நகர், பெரிய கூடல் கிராமம், A பிளாக் 1.5 ஏக்கர் மற்றும் D பிளாக் 1.35 ஏக்கர் மாநகராட்சி நிலக் குத்தகை - திரு. வி. க. டாக்டர். மு.வ.கல்வி அறக்கட்டளைக்கு 31.05.2025 வரை குத்தகை நீட்டிக்கவும் 01.06.2025 முதல் 9 வருடங்களுக்கு புதியதாக குத்தகை வழங்கவும் பெறப்பட்ட அரசாணை எண். 631, நாள்.04.11.2025 - மாநகராட்சியில் நடைமுறை செய்திட மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, சேனாய் நகர், பெரிய கூடல் கிராமத்தில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மொத்தம் *9.25* ஏக்கர் நிலமானது மன்றத்தீர்மான எண்.*316/1959*, நாள். *26.03.1959* இன் படி மண்டலம்-*8*, சேனாய் நகர், பெரியகூடல் கிராமத்தில் உள்ள திரு.வி.க. டாக்டர்.மு.வ. கல்வி அறக்கட்டளைக்கு குத்தகைக்கு விடப்பட்டது அதன் விவரம்:

வ. எண்	பிளாக் (ம) விஸ்தீரணம்	நகரபுல எண்	பயன்பாடு	வாடகை	குத்தகை காலம்
1.	'A ' 1.5 Acre	T.S.No.4,15 , 16,18 (p) and 19 (p)	High School	(4 % on the capital cost of acquisition viz. Rs.7290) Rs.291.60 Paise	01.06.1955 to 31.05.1988
2.	' B' 2.1 Acre	T.S.No.20	Play Ground	Free of Cost	01.06.1955 to 31.05.1988
3.	' C' 4.3 Acre	4 and18 (p)	Play Ground	(4% of the 25 % of cost paid during acquisition) Rs.232	21.11.1962 to 20.11.1995
4.	' D' 1.35 Acre	T.S.No.13	Matriculation School	(Rs.5 per acre per annum) Rs.6.75	21.11.1962 to 20.11.1995

அரசாணை (நிலை) எண்.*114* நகராட்சி நிர்வாகம் & குடிநீர் வழங்கல் துறை, நாள்.*04.04.1994*-யின் படி *'A'* பிளாக்கில் உள்ள *1.5* ஏக்கர் நிலத்திற்கான குத்தகைக் காலத்தை நீட்டித்து நிலத்தின் சந்தை மதிப்பில் *7%* குத்தகை வாடகையை நிர்ணயித்து அரசு உத்தரவிட்டது. மேலும் *B*-பிளாக்கில் உள்ள *2.1* ஏக்கர் பரப்பளவில் உள்ள குத்தகை நிலத்தினை மீட்டு எடுக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடப்பட்டது. அவ்வாணையின் படி *05.12.1998* -அன்று *B*-பிளாக்கில் உள்ள *2.1* ஏக்கர் குத்தகை நிலமானது மாநகராட்சியால் கையகப்படுத்தப்பட்டது.

அறக்கட்டளையின் குத்தகை காலம் *20.11.1995* அன்று முடிவடைந்த போதிலும், *'C'* - பிளாக் மற்றும் *'D'* - பிளாக்கில் உள்ள குத்தகை நிலமானது, குத்தகை நீட்டிக்கப்படாத நிலையில் அறக்கட்டளையால் ஆக்கிரமிக்கப்பட்டு அனுபவிக்கப்பட்டது. அதனால் பிப்ரவரி மற்றும் மே *2002* இல், *A*- பிளாக்கில் உள்ள நிலத்தின் ஒரு பகுதியையும், *'C'* பிளாக் மற்றும் *'D'*- பிளாக்கில் உள்ள முழு நிலத்தினையும் மீண்டும் கையகப்படுத்துவதற்காக

அறக்கட்டளைக்கு சென்னை மாநகராட்சி மூலம் வெளியேற்ற அறிவிப்பை அனுப்பியது. ஆனாலும் திரு.வி.க. கல்வி அறக்கட்டளையானது குத்தகை நிலத்தினை மாநகராட்சியிடம் ஒப்படைக்காமல் சென்னை மாநகராட்சிக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் *W.P.எண்.30876/2002* இல் வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் *19.01.2011* அன்று பின்வரும் உத்தரவுகளை பிறப்பித்தது:

I. *'A'* பிளாக் மற்றும் *&* *'D'* பிளாக்கில் உள்ள நிலத்தினை *2010-2011* கல்வியாண்டு முடிந்தவுடன் *01.06.2011*-க்குள் கையகப்படுத்தும்படியும்

II. *'C'* பிளாக்கில் உள்ள நிலத்தினை உடனடியாக கையகப்படுத்தும்படியும் முதல் பிரதிவாதி/ஆணையர் அவர்களுக்கு உத்தரவிட்டது.

III. மனுதாரரான அறக்கட்டளையினால் நடத்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பணியாளர்களின் நலனைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவும், மாநகராட்சியால் அல்லது நிரூபிக்கப்பட்ட கல்வித் தரங்களைக் கொண்ட எந்தவொரு கல்வி அறக்கட்டளையிடம் ஒப்படைப்பதன் மூலம், எந்தவொரு இடையூறும் அல்லது தடையும் இல்லாமல் பள்ளிகளைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க முதல் பிரதிவாதி/ஆணையர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

IV. அறக்கட்டளையிடமிருந்து குத்தகை நிலுவைத் தொகையை வசூலிக்க ஆணையருக்கு உரிமை உண்டு என்றும் தெரிவிக்கப்பட்டது.

- *W.P. எண். 30876/2002* இல் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து திரு.வி.க கல்வி அறக்கட்டளை *S.L.P.No.4806/2011* இல் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.
- மாண்பமை உச்ச நீதிமன்றம் *16.08.2016* அன்று *S.L.P*-யை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது:
- *17.10.2019* தேதியிட்ட ஆணையரின் உத்தரவின்படி, *4.3* ஏக்கர் பரப்பளவு கொண்ட *C*-பிளாக்கில் உள்ள குத்தகை நிலமானது *24.10.2019* அன்று பெருநகர சென்னை மாநகராட்சியால் கையகப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.
- இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியானது புதிய குத்தகைக் கொள்கையை முன்மொழிந்து, அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் வழிகாட்டு மதிப்பின் அடிப்படையில் குத்தகையைப் புதுப்பித்தல் மற்றும் புதிய குத்தகை வாடகையை நிர்ணயிப்பதற்காக அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது. அதன்படி, குத்தகையைப் புதுப்பித்தல் மற்றும் புதிய குத்தகை வாடகையினை நிர்ணயிப்பதற்காக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை *(D)* எண்.*389*, நாள். *30.09.2019* –யினை வெளியிட்டது.

திரு.வி.க டாக்டர் மு.வ. கல்வி அறக்கட்டளையானது 1955 முதல் பள்ளிகளை நடத்தி வருகிறது என்றும், குத்தகை வாடகையைக் குறைத்து குத்தகையைப் புதுப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 27.01.2023 மற்றும் 19.04.2023 நாளிட்ட கடிதங்களின் மூலம் கோரியது.

மேலும் திருக்குறளுக்கு தெளிவுரை எழுதியது உட்பட பல படைப்பிலக்கியங்களை தமிழுக்கு வழங்கிய டாக்டர் மு.வ. அவர்களால் தொடங்கப்பட்டு நிர்வகிக்கப்பட்ட ஒரே அறக்கட்டளை எனவும் அவரது முயற்சிகளையும் நோக்கங்களையும் தொடந்து நிறைவேற்ற வேண்டிய கடமை இந்த அறக்கட்டளைக்கு உள்ளது எனவும் அதற்கு ஆதரவு அளிக்க வேண்டிய தேவையும் அரசுக்கு உள்ளது எனவும், எனவே உலகறிந்த தமிழறிஞர் டாக்டர் மு.வ அவர்கள் தொடங்கிய அறக்கட்டளைக்கு தொடர்ந்து நிலத்தினை குத்தகைக்கு வழங்கிட வேண்டும் எனவும், அவரது நினைவாக இந்த அறக்கட்டளை தொடர்ந்து செயல்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், சென்னை நகர் பகுதியைச் சுற்றியுள்ள சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நலிவடைந்த மாணவர் சமூகத்திற்கு தரமான கல்வியை வழங்கும் கல்வி நடவடிக்கைகளை அறக்கட்டளை மேற்கொண்டு வருவதாகவும், அதிக மானிய விலையில் கல்வி வழங்குவதைக் கருத்தில் கொண்டு, நிலுவையில் உள்ள குத்தகை வாடகை மற்றும் தற்போதைய குத்தகை வாடகையைக் குறைக்க கோருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, குத்தகை நீட்டிப்புக்கான திரு.வி.க டாக்டர் மு.வ . கல்வி அறக்கட்டளையின் கோரிக்கையினை பரிசீலனை செய்து முடிவு செய்வதற்காக, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறைக்கு தகுந்த உத்தரவுக்காக அனுப்பப்பட்டது.

இதற்கிடையில், அறக்கட்டளைக்கு குத்தகை விடப்படும் நிலம் குறித்து 03.04.2025 அன்று அரசு நிதித்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் முன்னிலையில் முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, மற்றும் துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) உடன் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

1. நிலுவையில் உள்ள குத்தகை நிலுவைத் தொகையை தள்ளுபடி செய்வதற்கான திட்டம் பின்னர் பரிசீலிக்கப்படலாம் எனவும்,
2. மனுதாரருக்கு குத்தகை நீட்டிப்பு/ புதிதாக வழங்குவது தொடர்பாக, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அல்லது பெருநகர சென்னை மாநகராட்சி, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, ஏற்கனவே உள்ள விதிகளுக்கு இணங்க முடிவெடுக்கலாம் எனவும்,
3. கொள்கையில் ஏதேனும் மாற்றம் செய்ய, ஏற்கனவே வெளியிட்ட அரசாணைகளில் திருத்தம் செய்ய கல்வித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் விவாதிக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் முன்மொழிவையும், மேலே விவரிக்கப்பட்ட சூழ்நிலைகளையும் கவனமாக ஆராய்ந்த அரசு, திரு.வி.க.டாக்டர்.மு.வ. கல்வி அறக்கட்டளையால் வழங்கப்படும் கல்வி சேவைகள் தொடர்ந்து கிடைப்பதை உறுதி செய்வதற்காக, மேற்கண்ட பள்ளியின் கல்வி சேவைகளை பெரும்பாலும் சார்ந்து இருக்கும் நகரத்தின் வளர்ச்சியடையாத பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு, அறக்கட்டளைக்கு குத்தகையினை நீட்டித்தல் / புதிய குத்தகைக்கு விடுவது அவசியம் என்று கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 இன் பிரிவு 78(3) இன் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு தேவையான நடவடிக்கைகளைத் தொடர அனுமதி வழங்க உத்தரவிட முடிவு செய்து அரசாணை டி எண்.631 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.4.11.2025ன் படி அரசாணையினை வெளியிட்டுள்ளது. அவ்வாணையில்

1. திரு. வி. க. டாக்டர். மு.வ.கல்வி அறக்கட்டளைக்கு 65340 சதுர அடி பரப்பளவு கொண்ட – A பிளாக் மற்றும் 58806 சதுர அடி பரப்பளவு கொண்ட D - பிளாக்கில் உள்ள நிலத்தின் குத்தகையினை 31.05.2025 வரை நீட்டிக்கவும்.
2. மேற்கண்ட நிலங்களுக்கான 31.05.2025 வரை நிலுவையில் உள்ள குத்தகை வாடகையினை செலுத்துவது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 இன் பிரிவு 78 இன் துணைப்பிரிவு (3) இன் விதிமுறைகளின்படி, 01.06.2025 முதல் 9 ஆண்டுகளுக்கு அறக்கட்டளைக்கு 65,340 சதுர அடி பரப்பளவு கொண்ட A - பிளாக் மற்றும் 58,806 சதுர அடி பரப்பளவு கொண்ட D - பிளாக்கில் இல் உள்ள நிலத்தை புதியதாக குத்தகைக்கு வழங்கவும்,
4. குத்தகைத் தொகையானது தமிழ்நாடு - நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், - 2023 இன் விதி – 316-யின் படி நிர்ணயிக்கப்படும். அதாவது,

- மெட்ரிகுலேஷன் பள்ளி இயங்கி வரும் 58,806 சதுர அடி பரப்பளவிலான D-பிளாக்கிற்கான குத்தகை விகிதம் வழிகாட்டுதல் மதிப்பில் 3% ஆக இருக்க வேண்டும்; எனவும்
- அரசு உதவி பெறும் பள்ளியைக் கொண்ட 65,340 சதுர அடி பரப்பளவு கொண்ட A-பிளாக்கிற்கான குத்தகை விகிதம் வழிகாட்டுதல் மதிப்பில் 0.5% ஆக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. நடைமுறையில் உள்ள உத்தரவுகளின்படி உரிய குத்தகை நிலுவைத் தொகையினை செலுத்திய பின்னரே குத்தகை ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும்.
6. நிலத்தின் குத்தகையை புதுப்பிப்பது குறித்து பின்னர் பொருத்தமான நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

இது தொடர்பாக உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு நிதித் துறைகளின் ஒப்புதலுடன் *U.O.No.3474/FS/P/2025*, நாள். *07.10.2025* இல் வெளியிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சென்னாய் நகர், பெரிய கூடல் கிராமம், *A* பிளாக்கில் உள்ள *1.5* ஏக்கர் நிலம் மற்றும் *D* பிளாக்கில் உள்ள *1.35* ஏக்கர் நிலத்தின் குத்தகையினை திரு. வி. க. டாக்டர். மு.வ.கல்வி அறக்கட்டளைக்கு *31.05.2025* வரை குத்தகை நீட்டிக்கவும், *01.06.2025* முதல் *9* வருடங்களுக்கு புதியதாக குத்தகை தொகையினை நிர்ணயித்து வழங்கவும் பெறப்பட்ட அரசாணை (டி) எண். *631*, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள். *04.11.2025*-யினை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறை செய்திட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.590/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.நக.எண்.எல்.இ4 / 2555 / 2024

ஆணையர் அவர்களின் 15.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1209/2025 **பொருள் எண்.57**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - பிராட்வே பஸ் நிலையத்தில் பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் அமைத்தல் -- மாநகர போக்குவரத்து கழக பேருந்துகளை இயக்குவதற்காக மண்டலம்-5, கோட்டம்-60ல் சென்னை துறைமுகத்திற்கு சொந்தமான 14014 ச.மீ. பரப்பளவில் இப்ராஹிம் சாலையில் அமைந்துள்ள இடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் முதல் ஆண்டிற்கான குத்தகை தொகை செலுத்தப்பட்டது - இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகை, GST, முன்பணம் பெறுவதற்கும், செலுத்துவதற்கும், நேர்செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி.

*2022-2023*ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட *(அறிவிப்பு எண்.22)* பெருநகர சென்னை மாநகராட்சியில் பிராட்வே பஸ் நிலையத்தில் பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக வெளியிடப்பட்ட திருத்திய நிர்வாக அனுமதிக்கான அரசாணை எண். 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC1), நாள் 30.08.2024 வெளியிடப்பட்டது.

இவ்வரசாணையினை தொடர்ந்து பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் அமைப்பதற்காக அங்கிருந்த பிராட்வே பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியால் உத்தேசிக்கப்பட்டதன் அடிப்படையில், மண்டலம் -5க்குட்பட்ட கோட்டம்-60ல் சென்னை துறைமுகத்திற்கு சொந்தமான தண்டையார்பேட்டை கிராமம், இப்ராஹிம் சாலையில் அமைந்துள்ள பிளாக் எண்.1, TS எண்.4/1, விஸ்தீரணம் 17.96.305 ஹெக்டேர் நிலத்தில் 3.5 ஏக்கர் *(14,014* சதுர மீட்டர்) நிலத்தினை வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியால் கோரப்பட்டது.

இதன் அடிப்படையில், சென்னை துறைமுக பொறுப்பு கழகத்தின் 10.09.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக சென்னை துறைமுகத்திற்குச் சொந்தமான மேற்காணும் நிலத்தினை 3 ஆண்டுகளுக்கு குத்தகையின் பேரில் வழங்க முன்வந்ததன் அடிப்படையில், துறைமுக பொறுப்பு கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட குத்தகை தொகை ரூ.230 *x 14,014 sq.m. x 12 months* ரூ.3.86,78,640/-ம் மற்றும் 24 மாதத்திற்கான (2 ஆண்டுகள்) திரும்ப பெறத்தக்க பாதுகாப்பு வைப்பு தொகையாக (வட்டி நீங்கலாக) ரூ. 3,86,78,640 × *2 = 7,73,57,280/-*ஆக மொத்தம் ரூ.11,60,35,920/- (ரூபாய் பதினொன்று கோடியே அறுபது இலட்சத்து முப்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது மட்டும்) தொகையினை செலுத்துமாறு சென்னை துறைமுக பொறுப்பு கழகத்தால் தெரிவிக்கப்பட்டது.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் இத்தொகையினை சென்னை துறைமுக பொறுப்பு கழகத்திற்கு வழங்க மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. *(மன்றத்தீர்மான எண். 559/2024, நாள் 30.12.2024)*

மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டதனையடுத்து, இக்கோப்பின் மீது உரிய மேல்நடவடிக்கை தொடருமாறு இவ்வலுவலக *03.01.2025* நாளிட்ட கடிதம் வாயிலாக சிறப்பு திட்டங்கள் துறையை கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனை தொடர்ந்து இக்கோப்பில் மேற்கண்ட குத்தகை தொகைக்கான காசோலையை வழங்க நிலம் மற்றும் உடைமைத்துறை மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளும்படி மேற்பார்வை பொறியாளர் சிறப்புத் திட்டங்கள் துறை அவர்களின் *07.01.2025* நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

சென்னை பொறுப்பு துறைமுக கழகத்தின் கடிதம் இவ்வலுவலகத்தில் *03.01.2025* அன்று பெறப்பட்டது. இதில் வித்தியாச தொகை ரூ.*95,64,146/-* செலுத்த கோரப்பட்டதன் அடிப்படையில், ஆணையர் அவர்களின் *08.01.2025* மற்றும் *09.01.2025* நாளிட்ட ஆணைகளின்படி, ஒரு ஆண்டுக்கான குத்தகை தொகை மற்றும் அதற்கான வித்தியாச தொகையுடன் சேர்த்து ரூ.*3,94,49,410/-*ம் மற்றும் திரும்ப பெறத்தக்க வகையில் இரண்டு ஆண்டுக்கான பாதுகாப்பு வைப்பு தொகை (வட்டி நீங்கலாக) ரூ*7,88,98,820/-* மற்றும் *GST* ரூ.*71,00,894* ஆக மொத்தம் ரூ.*12,54,49,124/-* முன்பணமாக பெற்று சென்னை பொறுப்பு கழகத்திற்கு *09.01.2025* மற்றும் *10.01.2025* ஆகிய தேதிகளில் *RTGS* முறையில் செலுத்தப்பட்டது.

சென்னை துறைமுக பொறுப்பு கழகத்தின் *10.01.2025* நாளிட்ட ஒதுக்கீட்டு ஆணையில், மேற்கண்ட இடத்தினை மூன்று ஆண்டுகளுக்கு (*10.01.2025* முதல் *09.01.2028* வரை) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்வதாகவும் ஓராண்டிற்கான குத்தகை தொகை ரூ.*12,56,00,066/-* எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் பெறப்பட்ட *16.01.2025* நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில், பெருநகர சென்னை மாநகர போக்குவரத்துக்கழக பேருந்துகளை இயக்குவதற்காக சென்னை துறைமுகத்திற்கு சொந்தமான *14014* சதுர மீட்டர் பரப்பளவில் இப்ராஹிம் சாலையில் அமைந்துள்ள இடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்குவதற்கு குத்தகை தொகையாக ரூ.*12,54,49,124/-* பெறப்பட்டுள்ளதாகவும், வித்தியாச தொகையான ரூ.*1,50,942/-*யினை (குத்தகை தொகையில் ரூ.*47,466/- GST* தொகை ரூ.*8,544/-*, பாதுகாப்பு வைப்புத் தொகை ரூ.*94,932/-*) உடன் செலுத்துமாறு தெரிவித்து மின்னஞ்சல் பெறப்பட்டதை தொடர்ந்து வித்தியாசத்தொகை செலுத்தப்பட்டது.

தற்போது இரண்டாம் ஆண்டு குத்தகை தொகை செலுத்த வேண்டியுள்ளதால் குத்தகை தொகை ரூ. *4,03,60,320/-* மற்றும் *GST* தொகை ரூ.*72,64,858/-* செலுத்துவதற்கும் முன்பணம் பெறுவதற்கும், நேர் செய்வதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.592/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.நக.எண். எல்இ10/006/2025

ஆணையர் அவர்களின் 15.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1210/2025 **பொருள் எண்.58**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் -13 - பகுதி 179 மற்றும் பகுதி -180 ல் உள்ள மயானத்தை பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் மேம்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி.

மாநகர நல அலுவலர், பொது சுகாதாரத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் *30.12.2024* நாளிட்ட கடிதத்தில், மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் *19.12.2024* அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியில் *1* முதல் *15* மண்டலங்களிலும் உள்ள விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகள் உட்பட அனைத்து மயானங்களையும் மன்ற ஒப்புதலுக்கு பின் அரசிதழில் *Notifications* பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வலுவலக *09.01.2025* நாளிட்ட கடிதத்தில் கள ஆய்வு விவரம் கோரி *1* முதல் *15* மண்டலங்களுக்கு அனுப்பப்பட்டது.

உதவி ஆணையர், மண்டலம் *-13* அவர்களின் *24.11.2025* நாளிட்ட அறிக்கை குறிப்பில் மேற்கண்ட பொருள் தொடர்பாக அறிவிக்கப்படாத தகனக்கூடம் *(Un-notified Crematorium)* அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் வருவாய்த்துறை பதிவுகளின்படி,

S.No.	Div.No.	Block No.	T.S.No.	Old R.S.No.	Type of Land	Area	Adangal
1	179	55	284	170/5	சர்க்கார் புறம்போக்கு	1450 ச.மீ	மயானம்
2	180	-	-	211/18	சர்க்கார் புறம்போக்கு	1700 ச.மீ	மயானம்

வார்டு-179 க்குட்பட்ட பிளாக் எண்.55, சர்வே எண்.170/5ல் உள்ள நிலத்தினை பெசன்ட் நகர் ஓடைக்குப்பத்தில் வசித்து வரும் மீனவர் பகுதியை சார்ந்த மக்கள் கடந்த பல ஆண்டுகாலமாக மயானமாக பயன்படுத்தி வருவதாகவும் அந்த இடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என 179 வது வார்டு கவுன்சிலர் கோரிக்கை வைத்துள்ளதாகவும் புலத்தணிக்கையில் கடந்த பல ஆண்டுகளாக நிலம் மயானமாக செயல்பட்டு வருகிறது என்றும், சுகாதாரத்துறை பெருநகர சென்னை மாநகராட்சி பதிவுகளின்படி, கடந்த 4 ஆண்டுகளாக அறிவிக்கப்படாத தகனக்கூடங்களில் 88 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்றும், பெருநகர சென்னை மாநகராட்சியால் சான்றளிக்கப்பட்டுள்ளது எனவும், மேற்கூறிய நிலங்களின் எதிர்கால மேம்பாட்டிற்கான திட்டத்தை பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்ளப்பட்டுள்ளது.

மேற்கண்ட பொருள் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -13 உட்பட்ட பகுதி எண். 179 ல் சர்வே எண். 170/5 மற்றும் பகுதி எண்.180 ல் சர்வே எண்.211/18 ல் உள்ள மயானத்தை பொதுமக்கள் பயன்படுத்தும் நோக்கில் பெருநகர சென்னை மாநகராட்சியால் வளர்ச்சிப்பணிகளை மேற்கொள்ள, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.593/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண். எல்இ10/2429/2019

ஆணையர் அவர்களின் 19.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1211/2025 **பொருள் எண்.59**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் – 9, வார்டு எண்.120 மைலாப்பூர் கிராமம், பிளாக் -17, புல எண்.925/1 உள்ள இராம் நகர் குடியிருப்பு பகுதியில் குடியிருந்து வரும் ஆதி ஆந்திரா இன மக்களுக்கு கிரய பத்திரம் வழங்க அரசாணை பெறப்பட்டதை நடைமுறைபடுத்த அனுமதி.

அரசாணை எண்.2160, வருவாய் துறை, நாள்.21.10.1976ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் வசித்து வந்த ஆதி ஆந்திரா இன மக்களுக்கு அவர்கள் குடியிருந்து வரும் நிலங்களை அவர்களுக்கே விற்பனை செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்த அரசாணையில் 750 ச.அடிக்கு மிகாமல் இருந்தால் ரூ.3000 வீதமும் 750 ச.அடிக்கு மேல் இருந்தால் ரூ.6000 வீதமும் நிலக்கிரையம் பெற்றுக்கொண்டு நிலத்தினை விற்பனை செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த அரசாணையின் அடிப்படையில் மண்டலம் – 9, வார்டு எண். 120ல் ஆதி ஆந்திரா இன மக்கள் வசித்து வந்த சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மைலாப்பூர் கிராமம், பிளாக் -17, புல எண்.925/1 உள்ள 2 காணி, 23 மனை, 177 ச.அடி பரப்பளவு கொண்ட நிலத்தினை மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டு 287 மனைகள் ஆந்திர இன மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வாறு ஒதுக்கீடு பெற்ற 287 நபர்களில் 141 நபர்களுக்கு கிரயப்பத்திரம் வழங்கப்பட்டது. மீதமுள்ள 146 நபர்கள் கிரையத்தொகை செலுத்தாததால் இவர்களுக்கு கிரையப்பத்திரம் வழங்கப்படவில்லை.

அரசாணை எண்.103,ந.நி.ம.கு.வ.துறை, நாள்.08.08.2000ன்படி, இப்பகுதியில் வசித்து வரும் ஆதி ஆந்திரா இனத்தவர்க்கு 750 ச.அடிக்கு மிகாமல் இருந்தால் ரூ.3000 வீதமும் 750ச.அடிக்கு மேல் இருந்தால் ரூ.6000 வீதமும் நிலக்கிரையம் பெற்றுக்கொண்டு நிலத்தினை விற்பனை செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஒதுக்கீடு பெற்ற 287 நபர்களில் கிரையம் பெறாமல் மீதமுள்ள 146 நபர்களில் ஆவணங்கள் அடிப்படையில் 40 நபர்களுக்கு கிரையபத்திரம் வழங்கப்பட்டது.

திரு.M.இராமகிருஷ்ணா மற்றும் 67 நபர்களால் தொடுக்கப்பட்ட வழக்கில் மாண்பமை உயர்நீதி மன்றமானது அரசாணை (நிலை) எண்.2160, வருவாய்த் துறை, நாள்.21.10.1976ன் படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட மைலாப்பூர் கிராமம், பிளாக்-17, புல எண்.925/1ல் உள்ள இராம் நகர் குடியிருப்பு பகுதியில் குடியிருந்து வரும் கிரையபத்திரம் வழங்கப்படாமல் உள்ள வழக்கு தொடுத்த ஆதி ஆந்திரா இன மக்களுக்கு கிரயபத்திரம் பதிவு செய்து கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்தது.

மேற்கண்ட உத்தரவின்படி மண்டல அலுவலர்-9 அவர்களால் கள ஆய்வு மேற்கொண்டு வழக்கு தொடுத்த 68 நபர்களிடம் உள்ள சென்னை மாநகராட்சியால்

வழங்கப்பட்ட ஒதுக்கீடு ஆணை அல்லது குடியிருப்பு மனை பெற்ற விவரம் (1) ஆதி ஆந்திரா இன சான்றிதழ் (2) ஆதார் அடையாள அட்டை (3) குடும்ப அட்டை (4) மின்கட்டண இரசீது மற்றும் (5) ஆதி ஆந்திரா இன சான்றுகள் போன்ற ஆவணங்களை பரிசீலனை செய்து அவர்கள் சமர்பித்த ஆவணங்கள் அடிப்படையில் 54 நபர்கள் கிரைய பத்திரம் பெற தகுதியானவர்கள் என தெரியவந்தது,

மாவட்ட வருவாய் அலுவலர் (நிமஉது) அவர்கள் மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களுக்கு 03.12.2019ல் அனுப்பியுள்ள நாளிட்ட கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.2160, வருவாய்த் துறை, நாள்.21.10.1976ன்படி மனை ஒன்றுக்கு நிலக்கிரையத் தொகையாக ரூ.3000/- மதிப்பு விலையில் வழங்க தற்பொழுது வழிவகை உள்ளதா என்றும் அரசின் கருத்துரு பெறப்படவேண்டும் என்பதால், பயனாளர்களிடமிருந்து உரிய ஆவணங்கள் பெற்று அரசுக்கு விரிவான முன் மொழிவுகள் (Detailed Proposal) அனுப்பி கருத்துரு மற்றும் அனுமதி பெறுவதற்கு வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்கள் மூலமாக உரிய வழியில் கோப்பினை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பொருள் தொடர்பாக இராம் நகர் குடியிருப்பு பகுதியில் குடியிருந்து வரும் ஆதி ஆந்திரா இன மக்களுக்கு நிலக்கிரையத் தொகை நிர்ணயம் செய்து கிரயப்பத்திரம் வழங்குவது தொடர்பாக 21.04.2023 அன்று மாலை 05.00 மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை முதல் தளம், துணை ஆணையர் (வமநி) அவர்களின் தலைமையில் நடந்த கலந்தாலோசனை கூட்டத்தில் நிதி ஆலோசகர், நிதி மேலாண்மை குழுமம் (ம) செயற் பொறியாளர், மண்டலம்-9 அவர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் 1) Workout different options for interest rate based on procedure. 2) Get report from zone for payment capacity of beneficiaries. என துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களின் 05.05.2023 நாளிட்ட குறிப்பின்படி, 9 சதவிகிதம் மற்றும் 12 சதவிகிதம் அடிப்படையில் தனி வட்டி மற்றும் கூட்டு வட்டி கணக்கிட அறிவுறுத்தப்பட்டது.

துணை ஆணையர் (வ(ம)நி) அவர்களின் 18.05.2023 நாளிட்ட கடிதத்தில் 1976-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 750 சதுர அடிகளுக்கு குறைவான மனைகளுக்கு மதிப்பிடப்பட்ட தொகை ரூ.3000/- என நிர்ணயிக்கப்பட்டு 1976-ஆம் ஆண்டு முதல் 2023-ஆம் ஆண்டு வரை 48 ஆண்டுகளுக்கு 9 (ம) 12 சதவீதத்தின்படி கூட்டு வட்டியின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டதில் 12 சதவீதத்தின்படி ஒருவருக்கு ரூ.6,91,172/- மற்றும் 9 சதவீதத்தின்படி ஒருவருக்கு ரூ.1,87,756/- என தொகையினை பயனீட்டாளர்கள் செலுத்த திறன்பெற்றவர்களா என்பது குறித்து மண்டலம்-9, வார்டு-120, இராம் நகர் குடியிருப்பு பகுதியில் கள ஆய்வு மேற்கொண்டு விரிவான ஆய்வறிக்கையினை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களின் 17.08.2023 நாளிட்ட கடிதத்தில், கோட்டம்-120 ராம்நகர் ஆதி ஆந்திரா மக்கள் குடியிருந்துவரும் பகுதியில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டு 12.07.2023 அன்று மண்டல அலுவலர்-9 அவர்களின் தலைமையில் மாமன்ற உறுப்பினர் வார்டு-120 அவர்கள் முன்னிலையில் பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI) வளாக கட்டிடம் லாயிட்ஸ் காலனியில் பயனாளிகளிடம் கருத்து கேட்பு கூட்டம் மேற்கொள்ளப்பட்டது என்றும், இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ராம்நகர் குடியிருப்பு மக்கள் கிரயப்பத்திரம் பெறுவது தொடர்பாக கருத்துகளை தெரிவித்துள்ளார்கள் எனவும், மேலும் 54 பயனாளிகள் ஒருமித்த கருத்தாக தங்களால் மேற்படி இராம் நகரில் குடியிருந்து வரும் நிலத்திற்கான 750 சதுர அடி கீழ் உள்ள மனை ஒன்றுக்கு ரூ.3,000/- மற்றும் 750 சதுரஅடிக்கு மேல் உள்ள மனை ஒன்றுக்கு ரூ.6,000/- மட்டுமே தற்போதைய நிலையில் தங்களால் செலுத்த இயலும் என தெரிவித்துள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அரசாணை எண்.2160, நாள்.21.10.1976-ன் படி ஆதி ஆந்திரா இனத்தைச்சேர்ந்த அசல் ஒதுக்கீடுதாரர்கள் விடுபட்டு போனவர்களுக்கு நிலக்கிரையம் செய்வதற்கு ரூ.3000/- மற்றும் ரூ.6000/- வீதம் இந்நிலையில் உறுதி செய்ய (FIX) இயலாததாலும் இவர்களது பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு மற்ற இனங்களுக்கு நிலமதிப்பு நிர்ணயிப்பது போல் இன்றைய நிலையில் அரசு வழிகாட்டி மதிப்பு (GLV)-ன் படியும் நிர்ணயிக்க இயலாத நிலையில் உள்ளதால் அரசாணையில் 750 சதுர அடிக்கு 1976ஆம் ஆண்டில் நிர்ணயித்த தொகையான ரூ.3000 ற்கு இந்நாள் வரை 9% மற்றும் 12% வட்டி, தனிவட்டியாகவும், கூட்டு வட்டியாகவும் கணக்கீடு செய்யப்பட்டு அரசின் பரிந்துரைக்காக துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் குறிப்பின்படி தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட்டது.

1. 750 சதுர அடிக்கு குறைவாக உள்ள மனை ஒன்றுக்கு அரசாணையின்படி 1976 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.3000/-ற்கு இந்நாளில் (2023-ஆம் ஆண்டிற்கு **9% தனிவட்டி** வீதம் 48 ஆண்டுகளுக்கு (1976 முதல் 2023வரை) **ரூ.15,960/-**

(அல்லது)

2. 750 சதுர அடிக்கு குறைவாக உள்ள மனை ஒன்றுக்கு அரசாணையின்படி 1976 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.3000/-ற்கு இந்நாளில் (2023-ஆம் ஆண்டிற்கு **9% கூட்டு வட்டி** 48 ஆண்டுகளுக்கு (1976 முதல் 2023வரை) **ரூ.1,87,756/-**

(அல்லது)

3. 750 சதுர அடிக்கு குறைவாக உள்ள மனை ஒன்றுக்கு அரசாணையின்படி 1976 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.3000/-ற்கு இந்நாளில்

(2023-ஆம் ஆண்டிற்கு **12% தனிவட்டி வீதம்** 48 ஆண்டுகளுக்கு (1976 முதல் 2023வரை) **ரூ.20,250/-**

(அல்லது)

4. 750 சதுர அடிக்கு குறைவாக உள்ள மனை ஒன்றுக்கு அரசாணையின்படி 1976 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.3000/-ற்கு இந்நாளில் (2023-ஆம் ஆண்டிற்கு 12% கூட்டு வட்டி 48 ஆண்டுகளுக்கு (1976 முதல் 2023வரை) **ரூ.6,91,172/-**

மேற்படி 4 இனங்களில் இராம் நகர் குடியிருப்புதாரர்களுக்கு நிலக்கிரையம் செய்வதற்கு ஏதுவாக நிலமதிப்பீடு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி கணக்கீடுகளில் அரசு அனுமதிக்கும் இனத்தில் இராம் நகர் குடியிருப்புதாரர்களிடமிருந்து நிலமதிப்பு தொகையினை வசூலித்து நிலத்தினை குடியிருப்புதாரர்களுக்கு நிலக்கிரையம் செய்து வழங்க அரசின் கருத்துரை வேண்டி கூடுதல் தலைமைச்செயலாளர்/ஆணையர் அவர்களின் 06.12.2023 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 18.05.2025 நாளிட்ட கடிதத்தில், கூடுதல் விவரங்கள் அனுப்புமாறு கோரப்பட்டது. அதன்படி உதவி ஆணையர், மண்டலம்-9 அவர்களின் 19.06.2025 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் அரசுக்கு அனுப்பப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, அரசாணை (3ப) எண்.15, நாள்.25.09.2025ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமான பரிசீலித்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, கோட்டம்-120-ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சென்னை, மயிலாப்பூர் கிராமம், இராம் நகர் குடியிருப்பு பகுதியில் குடியிருந்து வரும் ஆதி ஆந்திரா இன மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 287 வீட்டுமனைகளில், 181 நபர்களுக்கு நிலகிரயப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், கிரயப்பத்திரம் பெறாமல் வசித்து வருபவர்களில், 68 நபர்கள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் W.P.No. 19873/2011-இல் 05.10.2012 அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய ஆணையின்படி, உரிய ஆவணங்கள் சமர்ப்பித்த 54 நபர்களுக்கு, 750 சதுர அடிக்கு குறைவாக உள்ள மனை ஒன்றுக்கு, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி 1976 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.3000/-ற்கு 12% கூட்டுவட்டி நிர்ணயித்து அவர்களின் பொருட்டு நிலகிரயம் செய்திட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாணை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.*8932132/LD.1(1)/2024*, நாள்.*20.02.2025* மற்றும் நிதித்துறையின் அ.சா.*e-file* எண்.*6213/Finance (HG & MAWS)/2025*, நாள்.*16.08.2025*-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்டுள்ள அரசாணையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் நிறைவேற்றிட, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.549/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ1/2285/2024

ஆணையர் அவர்களின் 21.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1212/2025 **பொருள் எண்.60**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் - 9, வார்டு – 126, மந்தைவெளிப்பாக்கம், நார்ட்டன் 3வது தெருவிற்கு, திருச்சி லோகநாதன் அவர்களின் பெயரினை சூட்ட மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது - மன்றத்தின் அனுமதி வேண்டுவது.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 18.08.2025 நாளிட்ட கடிதத்தில், திரு. T. லோக மகாராசன், தமிழ் இசை பாணர் கலைமாமணி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்தில் அளித்துள்ள மனுவில், தனது தந்தையும் தமிழ் திரைப்பட உலகின் முதல் பின்னணி பாடகர் என்ற சிறப்புக்கு உரியவருமான இசைத் தென்றல் திருச்சி லோகநாதன் அவர்களின் 101ஆம் நினைவு ஆண்டில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள மண்டலம் – 9, வார்டு – 126, மந்தைவெளிப்பாக்கதில் உள்ள நார்ட்டன் 3வது தெருவிற்கு அன்னாரது பெயரை சூட்டிட தங்களது குடும்பத்தின் கோரிக்கையை ஏற்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022-ன் வழிமுறைகளை பின்பற்றி மேற்படி இடத்தினை புலத்தணிக்கை மேற்கொண்டு விரிவான அறிக்கையினை உடன் இத்துறைக்கு அனுப்புமாறு உதவி ஆணையர், மண்டலம்-9 அவர்களிடம் இவ்வலுவலக 07.10.2025 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

உதவி ஆணையர், மண்டலம்-9 அவர்களின் 14.10.2025 நாளிட்ட கடிதத்தில் திரு. T. லோக மகராசன், தமிழ் இசை பாணர் கலைமாமணி அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் புலமானது கள ஆய்வு செய்யப்பட்டது என்றும், மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள நார்ட்டன் 3-வது தெருவிற்கு திருச்சி லோகநாதன் அவர்களின் பெயரை சூட்ட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மண்டலம் -9, வார்டு – 126, மந்தைவெளிப்பாக்கம், நார்ட்டன் 3வது தெருவிற்கு, திருச்சி லோகநாதன் அவர்களின் பெயரை சூட்டுவதற்கு மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட, அரசின் அனுமதி வேண்டி அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக 23.10.2025 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 08.11.2025 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் - 9, வார்டு – 126, மந்தைவெளிப்பாக்கம், நார்ட்டன் 3வது தெருவிற்கு, திருச்சி லோகநாதன் அவர்களின் பெயர் சூட்டுவது குறித்த தீர்மானத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் முன் ஒப்புதலுக்கு வைத்திட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் -9, வார்டு – 126, மந்தைவெளிப்பாக்கம், நார்ட்டன் 3வது தெருவிற்கு, திருச்சி லோகநாதன் அவர்களின் பெயரினை சூட்டுவதற்கு மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிட, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.551/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.ந.க.எண்.D1/PPA/WDCN08/06293/2025

ஆணையர் அவர்களின் 24.09.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1213/2025 **பொருள் எண்.61**

பெருநகர சென்னை மாநகராட்சி - நகரமைப்பு துறை - அயனாவரம் கிராமத்தில் ரயில்வே காலனியில் உள்ள பகுதி -C.R.S.No.53/1-5,BlockNo.5ல் உள்ள நிலம் M/S Rail Land Development Authorityயால் M/s. Velammal (Chennai) Educational Trustக்கு குத்தகை வழங்கப்பட்டது -தெற்கு இரயில்வேயால் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெரிவித்ததின்படி Duncan Road-ஐ மேம்படுத்த பொது சாலையாக அமைக்க மன்றத்தின் அனுமதி.

சென்னை அயனாவரம் ரயில்வே காலனி, *Duncan Road*, பகுதி -C.R.S.No.53/1-5, BlockNo.5, அயனாவரம் கிராமத்தில் உள்ள நிலத்தில், கல்வி நிறுவன கட்டிடம் கட்டுவதற்காக திட்ட அனுமதி விண்ணப்பம் PPA/WDCNO8/06293/2025ன்படி M/s.Velammal (Chennai) Educational Trust (Lessee) சமர்ப்பித்துள்ளார்கள்.

இந்த மனையானது Duncan Roadஐ ஒட்டி அமைந்துள்ளது, இந்த சாலை இரயில்வேக்கு சொந்தமான சாலையாகும். இந்த சாலையானது தெற்கு இரயில்வேயால் பராமரிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக கீழ் கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

அயனாவரம் கிராமத்தில் R.S.No.53/1-5, Block No.5 ல் அமைந்துள்ள 3.50 ஹெக்டேர் (35,000 சதுர மீட்டர்) பரப்பளவு உள்ள Southern Railwayக்கு சொந்தமான நிலத்தினை மேம்படுத்த M/s. Rail Land Development Authority முடிவு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து, M/s. Rail Land Development Authority மற்றும் Southern Railway உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், பிரிவு 7.0 ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"The Duncan Road is a Railway Road since RLDA is inviting tender of Aynavaram Colony trifurcating the Plot in three land Parcels it is advisable to designate Duncan Road for public use with the width of 15 metres to be developed by the bidder as this road is the only access road for Plot A, B and Plot C for Public use through commercial development".

இதன் தொடர்ச்சியாக அயனாவரம் பகுதி C.R.S.No.53/1-5, Block No.5 அயனாவரம் கிராமத்தில் 3.6 ஏக்கர் நிலத்தை மேம்படுத்துவதற்கான ஏலத்தில் M/s. Velammal (Chennai) Educational Trust கலந்து கொண்டு அந்த நிலத்தினை மேம்படுத்துவதற்கு ஒப்பம் பெற்றுள்ளார். M/s Rail Land Development Authority மற்றும் M/s. Velammal (Chennai) Educational Trust இடையே 09.04.2025 தேதியிட்ட 2025 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.3131 இன் மூலம் நிலத்தை மேம்படுத்துவதற்கான குத்தகை வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தில் தற்பொழுது M/s. Velammal (Chennai) Educational Trust பள்ளி கட்டிடம் கட்ட திட்ட அனுமதி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள்.

தெற்கு இரயில்வேயுடன் கையெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கோள் காட்டி, M/s Rail Land Development Authority , “The Duncan Road is a Railway Road since RLDA is inviting tender of Aynavaram Colony trifurcating the Plot in three land Parcels it is advisable to designate Duncan Road for public use with the width of 15 metres to be developed by the bidder as this road is the only access road for Plot A, B and Plot C for Public use through commercial development” கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

இந்த இடத்தினை ஆய்வு செய்ததில் கொன்னூர் நெடுஞ்சலையினை ஒட்டி 15.00 மீ அகலம் கொண்ட Duncan Road இருப்பது கண்டறியப்பட்டுள்ளது, மேலும் இது இரயில்வே மற்றும் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

M/s Rail Land Development Authority அவர்களின் கோரிக்கையான Duncan Road ஐ பொது சாலையாக பயன்படுத்த வேண்டுவது தொடர்பாக 27.10.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.95/2025, நாள்.27.10.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

27.10.2025 நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இப்பொருள் மாவட்ட வருவாய் அலுவலர் (நி.ம.உ.து) அவர்களின் கருத்துருவுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தீர்மான எண்.530/2025, நாள்.27.10.2025ன்படி, இதனை நிலைக்குழு (வ.வி.ம.நி)வால் ஒத்தி வைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மாவட்ட வருவாய் அலுவலர் (நி.ம.உ.து) அவர்களின் கருத்துரு வேண்டி நகரமைப்பு துறையின் மூலம் 26.11.2025 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் (நி.ம.உ.து) அவர்களின் 03.12.2025 நாளிட்ட கருத்துருவில், Konnur High Road முதல் Constable Road வரை உள்ள Duncan Road பொது சாலையாக அமைத்து மேம்படுத்துவதற்கு மன்றத்திற்கு சமர்ப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. இக்குறிப்பிற்கு ஆணையர் அவர்களால் 09.12.2025 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.

எனவே, அயனாவரம் கிராமத்தில் Block No.5, Old S.No.53/1-5 உள்ள நிலங்களை மேம்படுத்துவதற்கு வசதியாக, Konnur High Road முதல் Constable Road வரை உள்ள டங்கன் சாலையினை (Duncan Road) பொது சாலையாக அமைக்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.560/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

க.து.ந.க.எண்.அ4/12234/2025

ஆணையர் அவர்களின் 21.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1214/2025 **பொருள் எண்.62**

பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - கல்வித்துறையின் நிர்வாக வசமுள்ள மண்டலம் 1 முதல் 15 வரையிலுள்ள சென்னைப்பள்ளிகள், அரசுப்பள்ளிகளில் 200 மாணவர்களுக்கு ஒரு Sweeper, 10 கழிப்பறைகளுக்கு 1 Scavanger என தற்காலிக தூய்மை பணியாளர்கள் நிர்ணயம் செய்வதற்கும் மண்டலம் 8, சமுதாய கல்லூரி மண்டலம் 9 தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் 13 அரசு ஆதி திராவிட தொடக்கப்பள்ளிகளுக்கு தூய்மை பணியாளர்களை பணியமர்த்தவும் - தினக்கூலியாக ஊதியம் ரூ.753/- உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது - திருத்திய 1829 தற்காலிக தூய்மை பணியாளர்கள் நிர்ணயத்திற்கு, மன்ற தீர்மான எண்.1149 அனுமதி பெறப்பட்டது, அதில் திருத்தம் செய்ய அனுமதி.

அரசாணை (நிலை) எண். 166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந4) துறை, நாள். 23.11.2016ல் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள உள்ளாட்சி பள்ளிகள், அரசு பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை பராமரிக்க பெருக்குபவர் / துப்புரவு பணியாளர்களை தனியார் நிறுவனங்களின் மூலம் நியமனம் செய்து அப்பராமரிப்பு பணிகளை நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் வசூலிக்கும் கல்வி வரியின் மூலம் மேற்கொள்ளுமாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கல்வித்துறையின் 23.01.2017, 30.03.2017, 31.05.2017 மற்றும் 14.09.2022 நாளிட்ட சுற்றறிக்கையில் மேற்காணும் அரசாணையின்படி மண்டலம்-1 முதல் 15 வரையிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகள், அரசு பள்ளிகளிலுள்ள வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகளை பராமரிக்க பெருக்குபவர்/ துப்புரவு பணியாளர்களை ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் 11 மாதங்களுக்கு/ (ஜூன் முதல் ஏப்ரல் வரை) ஒவ்வொரு பள்ளிக்கும் தூய்மை பணிகளை மேற்கொள்ள தனியார் நிறுவன ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொள்ள மண்டல அலுவலர்கள் 1 முதல் 15 வரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

மன்றத்தீர்மான எண்.1014, நாள்.26.08.2025ன்படி 200 பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு தூய்மை பணியாளர் என்ற விகிதத்தில் (200:1) மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள அனைத்து சென்னை பள்ளிகளில் 1747 தூய்மை பணியாளர்கள் பணியமர்த்திட அனுமதி பெறப்பட்டுள்ளது மற்றும் 74 (காலமுறை ஊதியம்) தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

19.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா, (ம) விளையாட்டுத்திடல்) கூட்டத்தில், நிலைக்குழு உறுப்பினர்களின் கோரிக்கையின்படியும் மற்றும் தலைவர் அவர்களின் பரிந்துரையின்படியும், சென்னை பள்ளிகளில் மாணவ மாணவிகளின் நலன்கருதியும், அவர்களின் சுகாதாரம் கருதியும் பள்ளிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கைக்கேற்ப தற்போது வரை பணிபுரியும் தூய்மை பணியாளர்களை பணி நீக்கம் செய்யாமல் தொடர்ந்து பள்ளியில் பணியில் ஈடுபடுத்த வேண்டுமென்றும், அதற்கு துணை ஆணையர் (கல்வி) (பொ) அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவும்

கேட்டுக்கொண்டதற்கிணங்க, *200* மாணாக்கர்களுக்கு *1* தூய்மைப்பணியாளர்கள் என்ற விகிதத்தில் திருத்திய *1829* தற்காலிக தூய்மை பணியாளர்கள் பணியமர்த்த அனுமதி பெறப்பட்டது.

மன்றத்தீர்மான எண்.*1149*, நாள்.*31.10.2025*ன்படி, மன்றத்தில் அனுமதி பெறப்பட்டது. உதவி கல்வி அலுவலர்கள் சிலர் இரண்டு மண்டலங்களில் உள்ள பள்ளிகளை கண்காணிப்பதால், அப்பள்ளிகளின் பெயர்கள் வேறு மண்டலத்தில் இடம்பெற்றுள்ளது. எனவே பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு மன்றத்தின்அனுமதி பெற வேண்டியுள்ளது.

திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட அட்டவணை, விவரம் பின்வருமாறு:

200:1 (Sweeper and Scavenger)									
S.NO	ZONE	AEO'S	NO.OF. CHENNAI SCHOOLS	NO. OF GOVT SCHOOLS	Time scale of pay sweeper	Time scale of pay Scavenger	SWEEPER	SCAVENGER	TOTAL
1	1	1	26	4	0	0	53	40	93
2	2	2	17	8	0	0	49	33	82
3	3		13	4	0	0	34	23	57
4	4	3	46	3	1	8	105	74	179
5	5	4	42	7	11	3	72	74	146
6	6	5	48	6	6	4	94	87	181
7	7	6	35	4	0	0	61	52	113
8	8	7	30	5	2	5	70	68	138
9	COMMUNITY CENTRE (Z-8)	7	1	-	-	-	2	2	4
10	9	8	53	5	13	10	78	86	164
11	ITI (Z-9)	8	1	-	-	-	2	2	4
12	10	9	36	8	5	2	130	109	239
13	11	6	12	13	0	0	48	30	78
14	12	10	11	8	0	0	31	26	57
15	13		24	4	1	3	90	57	147
16	14	11	8	5	0	0	24	19	43
17	15		16	7	0	0	60	44	04
TOTAL			419	91	39	35	1003	826	1829

எனவே,

1. மன்றத்தீர்மான எண்.1149, நாள்.30.10.2025ல் தற்காலிக தூய்மை பணியாளர்கள் 1829 நபர்களுக்கு பணியமர்த்தி / ஊதியம் வழங்க அனுமதி பெறப்பட்டது. உதவி கல்வி அலுவலர்கள் சிலர் இரண்டு மண்டலங்களில் உள்ள பள்ளிகளை கண்காணிப்பதால், அப்பள்ளிகளின் பெயர்கள் வெவ்வேறு மண்டலத்தில் இடம் பெற்றுள்ளதால், மேற்காணும் பட்டியலின்படி திருத்தங்கள் மேற்கொள்வதற்கு அனுமதியும்,
2. இனிவரும் காலங்களில் தற்காலிக தூய்மை பணியாளர்களை நீக்கவோ பணியமர்த்தவோ கல்வி அலுவலர் அவர்களுக்கு அனுமதி வழங்கவும்,

3. பட்டியலில் குறிப்பிட்டுள்ள பள்ளிகளில் இனிவருங்காலங்களில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அதனை கல்வி அலுவலர் வாயிலாக உரிய ஒப்புதல் பெற்று ஊதியம் வழங்குவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"10.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) கூட்டத்தில் தீர்மான எண்.111/2025, நாள்.10.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. "

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 562/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.நு.க.எண்.பி3 / 14123 / 2025

ஆணையர் அவர்களின் 08.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1215/2025 **பொருள் எண்.63**

பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 2025–2026 ஆம் ஆண்டு சிறப்பு வகுப்புகள் - 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ/மாணவியர்களுக்கு - ஜனவரி-2026, பிப்ரவரி-2026 மற்றும் மார்ச்-2026 ஆகிய மூன்று மாதங்களுக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகளின் போது சிற்றுண்டி (சுண்டல்) வழங்க அனுமதி.

சென்னை பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகளின்போது அவர்களின் அயற்சியை போக்கும் விதமாகவும், கற்றலின் முழு அடைவினை பெறுவதின் பொருட்டும் பயிறு வகைகள் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை நடைபெறும் சிறப்பு வகுப்புகளின்போது வழங்கப்படும் என்று அறிவித்ததன்படி, ஒவ்வொரு ஆண்டும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணாக்கர்களுக்கு 2011 ஆம் ஆண்டு முதல் மாலை நேர சிற்றுண்டி சுண்டல் வழங்கப்பட்டு வருகிறது.

1. **திட்டத்தின் செயல்பாடு:**

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு கல்வி ஆண்டின் இறுதியில், அரசு பொதுத்தேர்வுகளை முன்னிட்டு மாலை நேர சிறப்பு பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்படும். இப்பயிற்சியானது வாரத்தின் ஆறு நாட்களுக்கு, அரசு விடுமுறை நாட்கள் தவிர பள்ளி செயல்படும் அனைத்து திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரையிலான 6 நாட்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடைபெறும் நேரங்களில் பயிறு வகைகள் வழங்கப்படும்.

இதில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பள்ளி வகுப்பு நாட்கள் கணக்கிடப்பட்டு முன்பணத்தொகை ECS வாயிலாக சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள் வங்கி கணக்கில் செலுத்தப்படும். அத்தொகையினை கொண்டு தேவைக்கான பயிறு வகைகள் அரசு கூட்டுறவு விற்பனை (TUCS) கடைகளிலும் கொள்முதல் செய்யப்பட்டு அன்றாட தேவைக்கேற்ப முதல் நாள் ஊறவைக்கப்பட்டு மறுநாள் மாணவ/மாணவியர்களுக்கு சமைத்து வழங்கப்படும். இதற்கான செலவினப்பட்டிகள் வருட இறுதியில் சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களால் கல்வித்துறைக்கு சமர்ப்பிக்கப்படும். இந்த நடைமுறையானது 2011 முதல் 2025 வரை நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

நடப்பு கல்வி ஆண்டு (2025-2026):

நடப்பு கல்வி ஆண்டில் (2025-2026) 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் 12,558 மாணவ/மாணவியர்கள் எதிர்வரும் மார்ச் / ஏப்ரல் மாதங்களில் பொதுத்தேர்வினை எதிர்நோக்க உள்ளதால், இம்மாணவ/ மாணவியர்களுக்கு மாலை 4.00 முதல் 6.00 மணி வரை ஆசிரியர்களின் வழிகாட்டுதலில் மேற்பார்வை வகுப்புகள் வழக்கமாக நடைபெறும். இம்மாணவர்களின் அயற்சியை போக்கும் விதமாகவும், கற்றலின் முழு அடைவினை

பெறுவதின் பொருட்டும் ஒவ்வொரு ஆண்டும் பயிறு வகைகள் வழங்கப்பட்டது போலவே நடப்பு கல்வி ஆண்டில் (2025-2026) மாலை 4.00 மணி அளவில் பயிறு வகைகள் வழங்கி கற்றல் நிகழ்வினை தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

பயிறு வகைகள்:

மாணவ/மாணவியர்கள் விருப்பத்துடன் சுவைத்து மகிழ வாரத்தின் 6 நாட்களுக்கும் (ஞாயிறு தவிர) ஆறு வகையான பயிறு வகைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அவை வருமாறு.

1. கருப்பு கடலை
2. வெள்ளை கடலை
3. பச்சை பட்டாணி
4. வெள்ளை பட்டாணி
5. வேர்கடலை
6. பச்சை பயிறு

இவ்வகையில் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு ரூ.10/- வீதம் செலவினம் எதிர்நோக்கப்படுகிறது.

2. மாணவ/மாணவியர்களின் விவரம்:

பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையின் கீழ் செயல்படும் சென்னை பள்ளிகள் மற்றும் சென்னை நகரில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதியிலுள்ள உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகள் சேர்த்து, 35 மேல்நிலை, 46 உயர்நிலைப்பள்ளிகள் என ஆக மொத்தம் 81 பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு பயிறு வகைகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 2025-2026 ஆம் ஆண்டு 10 ஆம் வகுப்பில் 7268 மாணவ/மாணவியர்கள், மற்றும் 12 ஆம் வகுப்பில் 5290 மாணவ/மாணவியர்கள் என மொத்த மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை 12,558 ஆகும். இவர்களின் பள்ளி வாரியான விவரம் அட்டவணையாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது வெளிச்சந்தையில் சாதாரணமாக ஒரு நபர் சாப்பிடுவதற்கு சுண்டல் ரூபாய் 10/-ற்கு விற்பனை செய்யப்படுகிறது. எனவே, அதன் அடிப்படையில் மாணக்கர்களுக்கு ரூ.10/- விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

3. விலைப்பட்டியல்:

இதனை தொடர்ந்து, விலைப்புள்ளிகள் அளித்த கீழ்கண்ட 3 கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து விலைப்பட்டியல் பெறப்பட்டது. இந்நிறுவனங்கள் அளித்துள்ள விலை விவரத்தினை ஒப்பிடுகையில், திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிட் குறைந்த விலைப்பட்டியல் அளித்துள்ளது. விவரம் வருமாறு,

வ. எண்.	பெயர்கள்	திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிட், கிலோவில் (ரூபாய்) (Including GST)	பார்க் டவுன் கோ-ஆபரேட்டிவ் மொத்த விலைக்கடை கிலோவில் (ரூபாய்) (Including GST)	தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் லிமிடெட் இண்ட்,
1	கருப்பு கடலை	87	88	97
2	வெள்ளை கடலை	109	110	143.50
3	பச்சை பட்டாணி	162	165	190
4	வெள்ளை பட்டாணி	60	60	76.50
5	வேர்கடலை	151	154	174
6	பச்சை பயிறு	109	110	143.50
		(இவ்விலை விவரம் மாறுதலுக்குட்பட்டது)	(இவ்விலை விவரம் மாறுதலுக்குட்பட்டது)	(இவ்விலை விவரம் மாறுதலுக்குட்பட்டது) ஒரு விநியோகத்திற்கு போக்குவரத்து செலவு ரூ.360/-

மேலும், தேர்வு செய்யப்படவுள்ள மேற்கண்ட நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் அளித்துள்ள கடிதத்தில், "மேற்படி நிர்ணயம் செய்துள்ள விலை தற்போதைய சந்தை விலை சார்ந்தது. சந்தை நிலவரங்களுக்கேற்றவாறு நாளுக்கு நாள் விலையில் மாற்றம் ஏற்படும் என்ற விவரத்தையும் தெரிவித்துள்ளார். மேலும் சுண்டல் சென்னை உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களால் அவரவர் பள்ளிகளிலேயே தயார் செய்து வழங்கப்பட உள்ளது.

பயிறு வகைகளை சாப்பிடுவதற்கு ஏற்ப தயார் செய்தல்:

பயிறு வகைகளை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம், லிட் என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நாளுக்கான அன்றைய விலையின்படி சுண்டல் பொருட்களுக்கான கருப்பு கடலை, வெள்ளை கடலை, பச்சைபட்டாணி, வெள்ளை பட்டாணி, வேர்க்கடலை மற்றும் பச்சைபயிறு T.U.C.Sல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதில் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு சுண்டல் வழங்க தானிய செலவு (50 Gram Sundal) தாளிப்பு (கடுகு, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய், கருவேப்பிலை, எண்ணெய், உப்பு), எரிபொருள் (சமையல் எரிவாயு) மற்றும் போக்குவரத்து செலவு உட்பட ஆக மொத்தம் ஒரு நாளைக்கு மாணவனுக்கு ஆகும் செலவு ரூ.10/- ஆகும்.

நடப்பு கல்வி ஆண்டில் (2025-2026) 81 சென்னைப்பள்ளிகளில் பயிலும் 12,558 மாணவ/மாணவியர்களுக்கு இவ்வகையில் ஜனவரி-2026, பிப்ரவரி-2026 மற்றும் மார்ச்-2026 ஆகிய 3 மாதங்களுக்கு 10 ஆம் வகுப்பிற்கு 70 நாட்களுக்கும், மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு 45 நாட்களுக்கும் சுண்டல் வழங்க ரூ.74,68,100/- தோராயமாக எதிர்நோக்கப்படுகிறது. செலவின விவரம் வருமாறு,

மொத்த செலவின விவரம் ஜனவரி-2026, பிப்ரவரி-2026 மற்றும் மார்ச்- 2026

மூன்று மாதங்களுக்கு

வகுப்பு	மாணவ/ மாணவியர்களின் எண்ணிக்கை	ஒரு மாணவனுக்கு செலவு	ஒரு நாள் செலவு	நாட்கள்	மொத்தம் ரூபாய்
10-ஆம்வகுப்பு	7268	ரூ.10/-	ரூ.72,680/-	70	ரூ. 50,87,600/-
12- ஆம் வகுப்பு	5290	ரூ.10/-	ரூ.52,900/-	45	ரூ.23,80,500/-
மொத்தம்	12558				ரூ.74,68,100/-

செலவின விவரம் ஜனவரி-2026

வகுப்பு	மாணவ/ மாணவியர்களின் எண்ணிக்கை	ஒரு மாணவனுக்கு செலவு	ஒரு நாள் செலவு	நாட்கள்	மொத்தம் ரூபாய்
10-ஆம்வகுப்பு	7268	ரூ.10/-	ரூ.72,680/-	21	ரூ.15,26,280/-
12- ஆம் வகுப்பு	5290	ரூ.10/-	ரூ.52,900/-	21	ரூ.11,10,900/-
மொத்தம்	12558				ரூ.26,37,180/-

செலவின விவரம் பிப்ரவரி-2026

வகுப்பு	மாணவ/ மாணவியர்களின் எண்ணிக்கை	ஒரு மாணவனுக்கு செலவு	ஒரு நாள் செலவு	நாட்கள்	மொத்தம் ரூபாய்
10-ஆம்வகுப்பு	7268	ரூ.10/-	ரூ.72,680/-	24	ரூ.17,44,320/-
12- ஆம் வகுப்பு	5290	ரூ.10/-	ரூ.52,900/-	24	ரூ.12,69,600/-
மொத்தம்	12558				ரூ.30,13,920/-

செலவின விவரம் மார்ச்-2026

வகுப்பு	மாணவ/ மாணவியர்களின் எண்ணிக்கை	ஒரு மாணவனுக்கு செலவு	ஒரு நாள் செலவு	நாட்கள்	மொத்தம் ரூபாய்
10-ஆம்வகுப்பு	7268	ரூ.10/-	ரூ.72,680/-	25	ரூ.18,17,000/-
மொத்தம்					ரூ.18,17,000/-

எனவே,

1. சுண்டல் வழங்கும் இத்திட்டத்தினை சென்னை உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளில் *10* ஆம் வகுப்பு மற்றும் *12* ஆம் வகுப்பு பயிலும் *12558* மாணாக்கர்களுக்கு ஜனவரி-*2026*, பிப்ரவரி-*2026* மற்றும் மார்ச்-*2026* ஆகிய *3* மாதங்களுக்கு செயல்படுத்தவும்,
2. ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு சுண்டல் வழங்க தானிய செலவு *(50 Gram Sundal)* தாளிப்பு (கடுகு, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய், கருவேப்பிலை, எண்ணெய், உப்பு), எரிபொருள் (சமையல் எரிவாயு) மற்றும் போக்குவரத்து செலவு உட்பட ஆக மொத்தம் ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு ஆகும் செலவு ரூ.*10*/க்கு அனுமதியும்,
3. ஒரு மாணவருக்கு ரூ.*10*/- வீதம் *10* ஆம் வகுப்பு பயிலும் *7268* மாணவ / மாணவியர்களுக்கு *70* நாட்களுக்கு ரூ.*50,87,600*/- மற்றும் *12* ஆம் வகுப்பு பயிலும் *5290* மாணவ / மாணவியர்களுக்கு *45* நாட்களுக்கு ரூ.*23,80,500*/-ம் ஆக மொத்தம் ரூ.*74,68,100*/-க்கு (ரூபாய் எழுபத்து நான்கு இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து நூறு மட்டும்) அனுமதியும்,
4. இதனை கணக்கு குறியீட்டு எண் *460-50-01-19 Advance Recoverable Expenses* என்ற தலைப்பில் முன்பணமாக வழங்க அனுமதியும்,
5. குறைந்த விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிட் விற்பனை கூடத்தில் *(Triplicane Urban Co-Operative Society Ltd)* பள்ளிகளுக்கு வழங்குவதற்கான, பயிறு வகைகள் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,
6. *81* சென்னை உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளின் தலைமை ஆசரியர்கள் தங்கள் பள்ளிக்கு அருகாமையில் உள்ள திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிட் விற்பனை கூடத்தின் *(TUCS)* ஏதேனும் ஒரு கிளையில் தேவையான சுண்டல் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு அனுமதியும்,
7. இத்தொகையினை கல்வி அலுவலர் அவர்களின் பெயரில் வழங்கவும், கணக்கு குறியீட்டு எண். *E-80-82-01 , 230-11-01-01* கல்வி தர மேம்பாடு, சிறப்பு வகுப்புகள் என்ற தலைப்பில் சுண்டல் செலவினங்களுக்காக பெறப்படும் முன்பணத்தை சம்மந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர் வாயிலாக நேர்செய்வதற்கும்,

மேற்கண்ட *1* முதல் *7* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 10.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 16.12.2025 அன்று தீர்மான எண்.112/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.594/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

****

சி.தி.து.நக.எண்.பி1 / 1376 / 2023

ஆணையர் அவர்களின் 22.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1216/2025 **பொருள் எண்.64**

பெருநகர சென்னை மாநகராட்சி - சிறப்புத் திட்டங்கள் துறை - உலக வங்கி சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தின் கீழ் கட்டம் I - "வார்டு - 39, மண்டலம் – 4 இல் திருவொற்றியூர் நெடுஞ்சாலை (டோல்கேட் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையம் வரை) மற்றும் வார்டு 39, 40 (பகுதி), மண்டலம் – 4ல் அருணாச்சலேஸ்வர் கோயில் தெரு (புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து QQ திட்ட சாலை வரை) மறுசீரமைப்பு - TANGEDCO (TNPDCL) லிருந்து ரூ. 8,46,58,900/-க்கு பெறப்பட்ட திருத்தப்பட்ட செலவு மதிப்பீடு - TANGEDCO (TNPDCL) ஆல் பணியை மேற்கொள்ள வைப்புத்தொகை செய்ய வேண்டி ஒப்புதல் கோரப்பட்டுள்ளது - திருத்தப்பட்ட மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்படும் - திருத்தப்பட்ட நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் அனுமதி.

சிறப்பு திட்டங்கள் துறை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி உலக வங்கியின் சென்னை நகர கூட்டாண்மை திட்டத்தின் கீழ் கட்டம்-*I*, 'நிலையான நகர்ப்புற சேவைகள் திட்டம்' *(SUSP)* இன் கீழ் முழுமையான சாலைகள் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. *SUSP* இன் கீழ், அதிகரித்த நடைபாதை கிடைக்கும் தன்மையை மேம்படுத்துவதே இலக்கு. *11.6* கி.மீ நீளத்திற்கு பாதசாரிகளுக்கு ஏற்ற பல பயன்பாட்டு வீதிகள். இந்தத் திட்டம் தரைக்கு மேல் மற்றும் நிலத்தடி *(*நீர், கழிவுநீர், மின் இணைப்புகள், *OFC)* பயன்பாடுகளை நிர்மாணிப்பதை உள்ளடக்கியது.

இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக, பிரிவு *39*, மண்டலம் - *4* இல் திருவொற்றியூர் நெடுஞ்சாலை *(*டோல்கேட் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ நிலையம் வரை*)* மற்றும் பிரிவு *39*, *40* (பகுதி), மண்டலம் - *IV* இல் அருணாச்சலேஸ்வரர் கோயில் தெரு (புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ நிலையத்திலிருந்து *QQ* திட்ட சாலை வரை*)* ரூ. *64.14* கோடி திட்ட மதிப்பில் முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளது. திட்டச் செலவு மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி *(2/3)* மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதி *(1/3)* ஆகியவற்றிலிருந்து ஈடுசெய்யப்படும். முழுமையான திட்டத்தில் அனைத்து நிலத்தடி பயன்பாடுகளின் மறுவடிவமைப்பு, அதாவது, கழிவுநீர், நீர் வழங்கல், புயல் நீர், மின் கேபிள் குழாய் வேலை, *OFC* மற்றும் தரைக்கு மேல் கூறுகள் போன்ற பல்வேறு கூறுகளை செயல்படுத்துவது அடங்கும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பணியின் நோக்கத்தை தவிர, *TNPDCL* தொடர்பான பணிகளுக்கான செலவு மதிப்பீடுகள் *(*முன்னாள் *TANGEDCO)* மற்றும் *CMWSSB* ஆகியவை லைன் துறையினரால் தயாரிக்கப்பட்டு, பட்ஜெட் மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக, திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் மற்றும் அந்தந்த பயன்பாடுகளுக்கான விரிவான தேவைகள் குறித்து அந்தந்த லைன் துறைகளுடன் பல

சுற்று விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. *TNPDCL*-க்கான பணியின் நோக்கம் முதலில் திருவொற்றியூர் நெடுஞ்சாலை மற்றும் அருணாச்சலேஸ்வரர் கோயில் தெருவின் மொத்தப் பகுதிக்கு புதிய தூண் பெட்டிகள், நிலத்தடி கேபிள்கள் பதித்தல் & மாற்றுதல் மற்றும் *RMU*-வை மாற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கியது. அதன்படி, *TNPDCL* தலைமை பொறியாளர் (வடக்கு மண்டலம்) அலுவலகத்திலிருந்து *10.06.2020* மின்னஞ்சல் மூலம் ரூ.*70,75,469/-* தொகைக்கான செலவு மதிப்பீடுகளை பகிர்ந்து கொண்டது.

TNPDCL சமர்ப்பித்த மதிப்பிடப்பட்ட தொகை ரூ.*70,75,469/-* ஒட்டுமொத்த திட்ட மதிப்பிடப்பட்ட செலவில் சேர்க்கப்பட்டுள்ளது மற்றும் நிர்வாக ஒப்புதல் ரூ.*64.14* கோடிக்கு அரசாணை *(3D)* எண்.*2, 15.03.2024* நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டது. போட்டி ஒப்பம் செயல்முறைக்குப் பிறகு, *M/s.Mars Construction*-க்கு ஒப்ப ஏற்பு கடிதம் *26.07.2024* அன்று வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, திட்டம் தொடங்கப்பட்டு, இன்று வரை சுமார் *40%* பணிகள் நிறைவடைந்துள்ளன.

பணிகளை நிறைவேற்றும் அதே வேளையில், *TANGEDCO* பணியைத் தொடர, ரூ.*70,75,469/-*க்கான ஆலோசனைச் சீட்டு கோரப்பட்டது, அதையொட்டி, *TANGEDCO* ரூ.*8,46,58,900/-*க்கான திருத்தப்பட்ட செலவு மதிப்பீட்டை சமர்ப்பித்துள்ளது. அதன்படி, *TNPDCL* ரூ.*7,78,96,060/-* மதிப்பீட்டுச் செலவுக்கான குறிப்பாணையை சமர்ப்பித்துள்ளது, *21.02.2025* நாளிட்ட குறிப்பாணையை ரூ.*70,75,469/-* இலிருந்து ரூ.*8,46,58,900/-* ஆகக் காண்க.

பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து *TNPDCL* க்கு பதில் அளிக்கும் விதமாக, மதிப்பீட்டுச் செலவு (அதாவது) ரூ.*70,75,469/-* இலிருந்து ரூ.*8,46,58,900/-* ஆக அதிகரித்திருப்பது குறித்து ஒரு தெளிவுபடுத்தல் கடிதம் *20.04.2025* அன்று அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மேற்கூறியவற்றுக்காக *TNPDCL* உடன் பல கூட்டங்கள் மற்றும் கூட்டு ஆய்வுகள் நடத்தப்பட்டன. மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், *R K* நகர் தொகுதி அவர்களால் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் *TNPDCL* அதிகாரிகளுடன் சேர்ந்து நடத்தப்பட்டது தொகுதி. இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சி கோரிய விளக்கங்களுக்கு *TNPDCL* எந்த பதிலும் வழங்கவில்லை. அதற்கு பதிலாக, *TNPDCL* பின்வரும் பணி நோக்கத்திற்காக *31.10.2025* நாளிட்ட குறிப்புகளில் விரிவான செலவு மதிப்பீடுகளை சமர்ப்பித்துள்ளது.

- *Exg.2* கம்ப அமைப்பை *3*-வழி *RMU* மாற்றத்திற்கு மாற்றுதல்.
- *DT* மற்றும் *HT* கேபிள் மற்றும் *LT* கேபிள் மற்றும் தூண் பெட்டி ஆகியவை சௌந்தரபாண்டியன் உயர்நிலைப் பள்ளி, *AE* கோயில் தெருவில் உள்ள *LIG* காலனி *1*வது தெருவிற்கு இடையே உள்ளன.
- தற்போதுள்ள *3/4/5*-வழி *RMU* கட்டமைப்பை மாற்றுதல்.

- ஆவின் *SS/250 KVA*, லிப்டன்*SS/250 KVA* & தமிழ்நாடு டவர் *SS/63 KVA* ஆகிய *3* எண் *3* துருவ *DT* கட்டமைப்பை *R-R-R-L* உள்ளமைவுடன் *4*-வழி *RMU* ஆக மாற்றுதல்.
- *R-R-R-R-L* உள்ளமைவுடன் *3* எண் *5*-வழி *RMU* ஐ மாற்றுதல்.
- *R-R-L-L* உள்ளமைவுடன் *5* எண் *4*-வழி *RMU* ஐ மாற்றுதல்.
- *R-R-R-L-L* உள்ளமைவுடன் *1* எண் *5*-வழி *RMU* ஐ *R-R-R-L-L* உள்ளமைவுடன் மாற்றுதல்.
- *R-R-R-L* உள்ளமைவுடன் *2* எண் *3*-வழி *RMU* ஐ மாற்றுதல்.
- தங்கம் எஸ்டேட் *SS I* இல் *500 KVA DT* இல் *8* எண்ணிக்கையிலானவை, *250 KVA DT* இல் *2* எண்ணிக்கையிலானவை மற்றும் *63 KVA DT* இல் *2* எண்ணிக்கையிலானவை வெளியிடப்பட்டு மீண்டும் அமைக்கப்பட்டன.
- *33/11KV* டோல்கேட் *SS* இல் இருந்து பெறப்பட்ட *11kvh CBH* மற்றும் தெற்கு ஃபீடர்களில் உள்ள *HT/LT* தூண் பெட்டிகளை அதன் தற்போதைய இடங்களிலிருந்து புதிய இடத்திற்கு மாற்றுதல்.

TNPDCL சமர்ப்பித்த மொத்த திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட செலவு ரூ.*8,46,58,900/-* ஆகும், சுருக்கம் கீழே பகிரப்பட்டுள்ளது:

A) திருவொற்றியூர் நெடுஞ்சாலை (டோல்கேட் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையம் வரை) (புதிய வண்ணாரப்பேட்டை பிரிவு)

வ.எண்	விவரம்	தொகை
1	கட்டுமானப் பொருட்கள் உட்பட பொருட்களின் விலை	5,10,20,000.00
2	எதிர்பாராத செலவுகள் @ *5%*	25,51,000.00
3	சேமிப்பு @ *3%*	16,07,130.00
4	தொழிலாளர் மற்றும் போக்குவரத்து கட்டணங்கள் (ஏற்றுதல், இறக்குதல், போக்குவரத்து @*5%* மற்றும் புதிய இடத்தில் கட்டுமானப் பொருட்கள் *@10%)* மொத்தம் *15%*	82,76,720.00
5	பழைய இடத்தில் அகற்றப்பட்டு புதிய இடத்தில் மீண்டும் பயன்படுத்தப்பட்ட அதே பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு இந்த திட்டத்திற்கு	60,600.00
6	மதிப்பீடு, & மேற்பார்வை கட்டணங்கள் @ *5 %*	31,75,780.00
7	கடைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் ஸ்கிராப் பொருட்களுக்கான போக்குவரத்துக் கட்டணங்கள்	1,450.00
8	மொத்த வேலை மதிப்புக்கு ஜிஎஸ்டி @ *18%* (ரூ.*6,66,92,680.00* இல்)	1,20,04,690.00

9	வாடிக்கையாளருக்கு வரவு வைக்கப்படும் மீட்டெடுக்கக்கூடிய பொருட்களின் தற்போதைய மதிப்பில் கழித்தல்-10%	(-)2,900.00
10	மொத்த தொகை (A)	7,86,94,470.00

B)அருணாச்சலேஸ்வரர் கோயில் தெரு (புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து QQ திட்டச் சாலை வரை) (VOC நகர் பிரிவு)

வ.எண்	விவரம்	தொகை
1	கட்டுமானப் பொருட்கள் உட்பட பொருட்களின் விலை	38,02,600.00
2	தற்செயல் செலவுகள் @ 5%	1,90,130.00
3	சேமிப்பு @ 3%	1,19,790.00
4	தொழிலாளர் மற்றும் போக்குவரத்து கட்டணங்கள் (ஏற்றுதல், இறக்குதல், போக்குவரத்து @5% மற்றும் புதிய இடத்தில் கட்டுமானப் பொருட்களுக்கு @10%) மொத்தம் 15%	6,16,880.00
5	பழைய தளத்தில் அகற்றப்பட்டு புதிய தளத்தில் மீண்டும் பயன்படுத்தப்பட்ட அதே பொருட்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு இந்த திட்டத்திற்கு	84,830.00
6	மதிப்பீடு, & மேற்பார்வை கட்டணங்கள் @ 5 %	2,40,720.00
7	கடைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் ஸ்கிராப் பொருட்களுக்கான போக்குவரத்துக் கட்டணங்கள்	100.00
8	மொத்த வேலை மதிப்புக்கு ஜிஎஸ்டி @ 18%(ரூ.50,55,050.00 இல்)	9,09,910.00
9	விலக்கு-வாடிக்கையாளருக்கு வரவு வைக்கப்படும் மீட்டெடுக்கக்கூடிய பொருட்களின் தற்போதைய மதிப்பில் 10%	(-)530.00
10	மொத்தத் தொகை(B)	59,64,430.00
11	திருவொற்றியூர் நெடுஞ்சாலை மற்றும் அருணாச்சலேஸ்வரர் கோயில் தெருவிற்கான ஒட்டு மொத்தத் தொகை(C=A+B)	8,46,58,900.00
12	மேலே குறிப்பிடப்பட்டுள்ள 5வது குறிப்பின்படி (D)	70,75,469.00
13	செலுத்த வேண்டிய இருப்பு (E=C-D)	7,75,83,431.00

முன்மொழியப்பட்ட பணிகள் TNPDCL இன் முயற்சிகளை "உலக வங்கி நிதியுதவி முழுமையான சாலைகள் திட்டத்தில்" ஒருங்கிணைக்கும், மேலும் பாதை மேம்படுத்தல்கள் அடையாளம் காணப்பட்ட பகுதியில் இணைப்பை தடையின்றி மேம்படுத்துவதோடு எதிர்கால

செயல்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவுகளையும் குறைக்கும். மேலும், இந்த திட்டம் உலக வங்கி திட்டத்தின் கீழ் செய்யப்படுவதால், இந்த திட்டம் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் எந்த தாமதமும் இல்லாமல் முடிக்கப்பட வேண்டும். மேற்கூறிய பணிகளை நிறைவேற்றுவது திட்டத்தின் முக்கியமான செயல்பாடுகளில் ஒன்றாகும். எனவே, கேபிள் பதித்தல், மின்மாற்றி மாற்றுதல் மற்றும் பிற தொடர்புடைய பணிகளை *TNPDCL* மூலம் மேற்கொள்வதற்கு ரூ.*7,75,83,431/-* தொகையை செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

எனவே, உலக வங்கியின் *SUSP* முழுமையான சாலைகள் திட்டத்தின் கீழ், "திருவொற்றியூர் நெடுஞ்சாலை மற்றும் அருணாச்சலேஸ்வரர் கோயில் தெரு (புதிய வண்ணாரப்பேட்டை பிரிவு & *VOC* நகர் பிரிவு) க்கான *TNEB* கேபிள் பதித்தல் மற்றும் மின்மாற்றி மாற்றும் பணிகள்" பணிக்காக *TNPDCL* கோரியபடி, மேற்கண்ட கூடுதல் தொகையான ரூ.*7,75,83,431/-* (ரூபாய் ஏழு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து நானூற்று முப்பத்தொன்று மட்டும்) ஒப்புதலுக்காக அரசாங்கத்திற்கு இந்த முன்மொழிவை அனுப்பலாம்,

எனவே,

1) TANGEDCO (TNPDCL) சமர்ப்பித்த கூடுதல் மதிப்பீட்டை "வார்டு - 39, மண்டலம் - 4ல் திருவொற்றியூர் நெடுஞ்சாலை (டோல்கேட் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையம் வரை) மறுசீரமைப்பு மற்றும் வார்டு-39, 40 (பகுதி), மண்டலம் - 4ல் அருணாச்சலேஸ்வரர் கோயில் தெரு (புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து QQ திட்ட சாலை வரை) மறுசீரமைப்பு" திட்டத்திற்கான "TNEB கேபிள் பதித்தல் மற்றும் மின்மாற்றி மாற்றும் பணிகளுக்கு " ரூ. 8,46,58,900/- (ஜிஎஸ்டி உட்பட).

2) வார்டு - 39, மண்டலம் -4ல் திருவொற்றியூர் நெடுஞ்சாலை (டோல்கேட் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையம் வரை) மற்றும் வார்டு-39,40 (பகுதி), மண்டலம்-4ல் அருணாச்சலேஸ்வரர் கோயில் தெரு (புதிய வண்ணாரப்பேட்டை மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து QQ திட்ட சாலை வரை) மறுசீரமைப்பு திட்டத்திற்காக ரூ. 71.90 கோடி (64.14 கோடி + 7.76 கோடி) திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதலுக்காக அரசுக்கு கோரிக்கை அனுப்பவும்.

3) கூடுதல் செலவினங்களை ஈடுகட்ட CCP நிதியிலிருந்து வழங்கவும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.629/2025, நாள். 12.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. ”

“17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.579/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

பொ.து.கா.ம.நக.எண்.அ2/0913/2025

ஆணையர் அவர்களின் 09.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1217/2025 **பொருள் எண்.65**

பெருநகர சென்னை மாநகராட்சி - கால்நடை மருத்துவத்துறை - உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மீட்கப்படும் தெருநாய்களை - நிரந்தர பராமரிப்பிற்கு தனியார் காப்பகங்கள் மற்றும் தனியார் தன்னார்வலர்களிடம் ஒப்படைக்கவும் - நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்தல் - பராமரிப்பு செலவு வழங்கவும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த பிராணிகள்வதை தடுப்புச்சட்டம் 1960, நாய் இனக்கட்டுப்பாடு விதிகள் 2023க்கு உட்பட்டு தெருநாய்கள் பிடிக்கப்பட்டு கருத்தடை அறுவை சிகிச்சைக்கு பின்னர் மீண்டும் பிடிக்கப்பட்ட இடத்திலேயே விடுவிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தெருநாய்கள் தொல்லை குறித்த உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் (*SUO MOTO WRIT PETITION(CIVIL) NO(S). 5 OF 2025)* உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு கீழ்க்கண்ட உத்தரவுகளை பிறப்பித்துள்ளது.

A. இரண்டு வாரங்களுக்குள் அரசு மற்றும் பள்ளி வளாகங்கள், மருத்துவமனைகள், விளையாட்டு அரங்கம், பேருந்து நிலையம் மற்றும் இரயில் நிலையம் உள்ளிட்டவற்றை கண்டறியவும்,

B. மேற்குறிப்பிட்ட பொது இடங்களில் தெருநாய்கள் உள்ளே நுழையாத வண்ணம் எட்டு வாரங்களுக்குள் சுற்றுசுவர் மற்றும் கதவு அமைத்திடவும்,

C. பள்ளி வளாகங்கள், மருத்துவமனைகள், விளையாட்டு அரங்கம், பேருந்து நிலையம் மற்றும் இரயில் நிலையம் ஆகியவற்றை தூய்மையாக வைத்திருக்கவும், தெருநாய்கள் உள்ளே நுழைவது மற்றும் வசிப்பதை தடுக்கவும், ஆகியவற்றை கண்காணிக்க கண்காணிப்பு அலுவலரை நியமிக்கவும்,

D. மாநகராட்சி அதிகாரிகள் குறைந்தது மூன்று மாதத்திற்கு ஒருமுறை இந்த இடங்களை ஆய்வு செய்து தெருநாய்கள் இல்லாமல் இருப்பதை உறுதி செய்யவும், தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகள் இதற்கு பொறுப்பேற்க நேரிடும் என்றும்,

E. மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் தெருநாய்கள் இருப்பின் அவற்றை பிடித்து நாய் இனக்கட்டுப்பாடு விதிகள் 2023ன் படி கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தி மீண்டும் அதே வளாகத்தினுள் விடுவிக்க கூடாது எனவும், அவ்வாறு பிடிக்கப்பட்ட நாய்களை காப்பகங்களில் ஒப்படைத்து நிரந்தரமாக பராமரிக்கவும்,

F. தனியார் மற்றும் அனைத்து மருத்துவமனைகளும் போதுமான அளவு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசியை இருப்பு வைத்திருக்கவும்,

G. அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகள் தங்களின் மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வெறிநாய்க்கடி நோய் பாதிப்பிலிருந்து தற்காத்து கொள்ளும் வழிமுறைகள், நாய் கடித்த பின் முதலுதவி சிகிச்சை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்படுத்திடவும்,

H. விளையாட்டு அரங்கங்களில் சிறப்பு பாதுகாவலர்களை நியமித்து நாய்கள் உள்ளே வருவதை தடுத்திடவும்,

I. இரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையம் ஆகியவற்றின் பொறுப்பு அலுவலர்கள் தங்கள் நிலையத்தினுள் நாய்கள் திரிவதை தடுக்கவும் அவ்விடத்தை தூய்மையாக பராமரிக்கவும்,

J. இந்திய விலங்கு நல வாரியம் அரசு மற்றும் தனியார் வளாகங்களுக்குள் குறிப்பாக பள்ளி, மருத்துவமனைகள் மற்றும் விளையாட்டு அரங்கம் ஆகியவற்றில் தெரு நாய்கள் குறித்தும் நாய்க்கடி பாதிப்பிலிருந்து பாதுகாப்பு குறித்தும் வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து நான்கு வாரத்திற்குள் வெளியிடவும் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் உச்ச நீதிமன்ற உத்த்தரவின்படி கல்வி நிறுவன வளாகங்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள், இரயில் நிலையம், சுற்றுலா தலங்கள், வழிபாட்டு தலங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட அனைத்து அரசு, பொது நிறுவன வளாகங்களிலிருந்தும் மீட்கப்படும் நாய்களுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தி இனக்கட்டுபாட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அவற்றை மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் மீண்டும் விடுவிக்காமல் நாய்கள் காப்பகங்களில் நிரந்தர பராமரிப்பிற்காக *(Shelters)* ஒப்படைக்க அறிவுறுத்தியுள்ளது. இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மணலி மற்றும பெருங்குடி மண்டலங்களில் இரண்டு பராமரிப்பு மையங்கள் *(Dog Shelters)* ஏற்படுத்த இடங்கள் தேர்வு செய்யப்பட்டு கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் புதிய இடங்கள் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இப்பணிகளை மேலும் சிறப்புடன் செயல்படுத்த மீட்கப்படும் நாய்களை தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் காப்பகங்களுக்கு ஒப்படைத்து உணவு மற்றும் பராமரிப்பிற்கான செலவினை மாநகராட்சி சார்பில் வழங்க வேண்டியுள்ளது. கூடுதலாக விருப்பப்படும் தன்னார்வலர்கள் மீட்கப்படும் நாய்களை பராமரிப்பு செலவின்றி தத்தெடுக்க வழிவகைகள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தெருநாய்கள் பிடிக்கப்பட்டு நிரந்தர பராமரிப்பிற்காக தனியார் தொண்டு நிறுவனங்கள்/ நாய்கள் காப்பகங்களுக்கு அனுப்பும் போது பின்பற்ற வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு:

<u>பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்:</u>

1. கல்வி வளாகங்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள், இரயில் நிலையம், சுற்றுலா தளங்கள், வழிபாட்டு தளங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் விளையாட்டு அரங்கம்

ஆகியவை உள்ளிட்ட அனைத்து அரசு, பொது நிறுவன வளாகங்களில் உள்ள சுற்றித்திரியும் தெருநாய்களை பிடிக்கவும்,

2. பிடிக்கப்பட்ட நாய்களில் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படாத நாய்களை இனக்கட்டுபாட்டு மையங்களுக்கு கொண்டு சென்று அவற்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளவும், வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தவும்,
3. கருத்தடை அறுவை சிகிச்சைக்கு பின்னர் மேற்கண்ட நாய்களை நிரந்தர பராமரிப்பிற்காக தன்னார்வலர்களால் பராமரிக்கப்படும் நாய்கள் காப்பகங்களுக்கு அனுப்பவும்,
4. ஏற்கனவே கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நாய்களை வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் தன்னார்வலர்களால் பராமரிக்கப்படும் நாய்கள் காப்பகங்களுக்கு அனுப்பவும்,
5. காப்பகங்களுக்கு அனுப்பபடும் தெருநாய்களின் தரவுகளை முறையாக பராமரிக்கவும்,
6. ஒப்படைக்கப்பட்ட நாய்களுக்கு முறையாக பராமரித்து உணவு மற்றும் சிகிச்சைகள் அளிக்கப்படுவதை உறுதி செய்யவும்,
7. நாய் ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு உணவு செலவாக(*Feeding Cost*) ரூ.50/- ஐ பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வழங்கவும்,
8. பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து நிரந்தர பராமரிப்பிற்காக அனுப்பப்படும் 20 மற்றும் அதற்கு அதிகமான எண்ணிக்கையில் தெருநாய்களின் பராமரிப்பிற்கு நியமிக்கப்படும் இரண்டு பணியாளர்களுக்கு நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ஊதியமாக ரூ.750 /- வீதம் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வழங்கப்படும்.
9. பெருநகர சென்னை மாநகராட்சி கால்நடை மருத்துவ அதிகாரிகள் மற்றும் பிற அலுவலர்கள் தேவைப்படும் போது காப்பகங்களை ஆய்வு செய்யவும்.

<u>தனியார் தொண்டு நிறுவனங்கள்/ நாய்கள் காப்பகங்கள்/ தனியார் தன்னார்வலர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்:</u>

1. பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து நிரந்தர பராமரிப்பிற்காக அனுப்பபடும் தெருநாய்களின் தரவுகளை முறையாக பராமரிக்க வேண்டும்,
2. ஒப்படைக்கப்பட்ட நாய்களுக்கு முறையாக பராமரித்து உணவு வழங்க வேண்டும்,
3. ஒப்படைக்கப்பட்ட நாய்களுக்கு முறையான தடுப்பூசிகளை செலுத்தி தேவைப்படும் மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும்,
4. பெருநகர சென்னை மாநகராட்சி கால்நடை மருத்துவ அதிகாரிகள் மற்றும் பிற அலுவலர்கள் ஆய்வு செய்ய வரும் போது முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்,
5. விருப்பப்படும் தன்னார்வலர்கள் மீட்கப்படும் நாய்களை பராமரிப்பு செலவின்றி தத்தெடுத்து கொள்ள அனுமதியும், அவ்வாறு பெற்றுக் கொண்ட தெருநாய்கள்

கைவிடப்படாமல் *(abandonment)* பராமரிக்கப்படும் என்று முத்திரை தாளிட்ட உறுதி மொழி பத்திரத்தில் கையொப்பமிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே,

1. உச்ச நீதிமன்ற உத்தரவின்படி கல்வி நிறுவன வளாகங்கள், மருத்துவமனைகள், பூங்காக்கள், இரயில் நிலையம், சுற்றுலா தலங்கள், வழிபாட்டு தலங்கள், பேருந்து நிலையங்கள் மற்றும் விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட அனைத்து அரசு, பொது நிறுவன வளாகங்களிலிருந்தும் சுற்றித்திரியும் தெருநாய்களை மீட்கவும்,
2. மீட்கப்படும் தெருநாய்களை நிரந்தர பராமரிப்பிற்காக தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் காப்பகங்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு ஒப்படைக்கவும்,
3. ஒப்படைக்கப்படும் நாய்களுக்கு நாய் ஒன்றிற்கு நாள் ஒன்றிற்கு உணவு செலவாக *(Feeding Cost)* ரூ.50/- வீதம் கணக்கிட்டு தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் காப்பகங்களுக்கு வழங்கிடவும்,
4. பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து அனுப்பப்படும் 20 மற்றும் அதற்கு அதிகமான எண்ணிக்கையிலான தெருநாய்களின் நிரந்தர பராமரிப்பிற்கு நியமிக்கப்படும் இரண்டு பணியாளர்களுக்கு நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ஊதியமாக ரூ.750/- வீதம் கணக்கிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் காப்பகங்களுக்கு வழங்கிடவும்,
5. இக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்கிடவும்,
6. இதற்காக தேவைப்படும் தோராய செலவீன தொகையை கணக்கீட்டு பிரிவு குறியீடு எண்.40-*43*-02, கணக்கு குறியீடு எண்.230-*15-09-00 (Salary - Privatization Health Worker)* மற்றும் 230-*20-12-00 (Purchase Animal Feeds)* ஆகிய கணக்கு தலைப்புகளில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு பெற்று நேர் செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.201/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.596/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

பொ.து.கா.ந.ம.எண்.அ2/0940/2025

ஆணையர் அவர்களின் 10.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1218/2025 **பொருள் எண்.66**

பெருநகர சென்னை மாநகராட்சி - கால்நடை மருத்துவத்துறை - பொது மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் பிட்புல் (PIT BULL) மற்றும் ராட்வீலர் (ROTTWEILLER) இன வளர்ப்பு நாய்களை வளர்க்க தடை விதிப்பதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் கட்டாயம் பெருநகர சென்னை மாநகராட்சியின் உரிமம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் செல்லப்பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தி, முறையாக உணவு, தண்ணீர் மற்றும் இருப்பிடம் ஆகியவற்றை வழங்கி பராமரிக்கவும், பொது இடங்களுக்கு அழைத்து செல்லும் பொழுது கழுத்துப்பட்டையுடன் சங்கிலி இல்லாமல் கொண்டு செல்வதை கண்டிப்பாக தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனை உரிமையாளர்கள் உணர்ந்து கொண்டு பொறுப்புணர்வுடன் பிறருக்கு இடையூறு ஏற்படாத வகையில் செல்லப்பிராணிகளை வளர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது. பொது இடங்கள், அடுக்கு மாடி குடியிருப்புகளின் மின்தூக்கிகள் *(Lift)* ஆகியவற்றில் மிகுந்த பாதுகாப்போடு மற்றவர்களுக்கு அச்சமூட்டும் வகையிலோ (அ) அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலோ நாய்களின் நடவடிக்கைகள் இல்லாதிருப்பதை உறுதி செய்ய வேண்டியது உரிமையாளர்களின் பொறுப்பாகும் என்றும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

எனினும் சமீப காலமாக வளர்ப்பு நாய்கள் பொது மக்களை தாக்கும் சம்பவங்களும் அது குறித்து புகார்களும் அதிகமாக பெறப்பட்டு வருகின்றன.

இவற்றில் பெருமளவு சம்பவங்களில் பிட்புல் *(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* இன நாய்களின் ஆக்ரோஷமான *(Ferocious and Aggressive)* குணநலன்களால் அதிகளவு பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இது குறித்து சம்பந்தப்பட்ட வளர்ப்பு நாய்களின் உரிமையாளர்களுக்கு உரிய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பிட்புல் *(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* இன நாய்களின் நடவடிக்கைகள் நன்கு அறிமுகமான மனிதர்கள் மற்றும் அதன் இருப்பிட சூழ்நிலையில் இயல்பு நிலையிலும், பிற மனிதர்கள் மற்றும் புதிய இடங்களில் மாறுபட்டும் இருக்கக்கூடும்.

இந்நிலையில் பொது மக்களுக்கு அச்சமூட்டும் வகையில் ஆக்ரோஷமான தன்மை கொண்ட வளர்ப்பு நாய் இனங்களான பிட்புல் *(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* நாய் இனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பதற்கு தடை விதிக்க வேண்டியுள்ளது.

எனவே, மேற்கண்ட பிட்புல் *(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* இன நாய்களை 20.12.2025 முதல் புதிதாக செல்லப்பிராணிகளின் உரிமம் பெற விண்ணப்பிக்க தடை விதிக்கவும், அவற்றிற்கு புதிதாக உரிமம் வழங்குவதை நிறுத்தவும், வளர்ப்பதற்கு உரிமம் *(Pet License)* பெற்றவர்கள் அவற்றை வெளியே அழைத்து செல்லும் போது கழுத்துப்பட்டை மற்றும் வாய்க்கவசம் அணிவிப்பதை கட்டாயம் ஆக்கவும், இதனை பின்பற்றாத உரிமையாளர்களுக்கு ரூ.5,000/- வீதம் அபராதம் விதிக்கவும், பிட்புல் *(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* இன நாய்களின் ஆண்டு உரிமத்தை புதுப்பிப்பதற்கு *(Renewal of Pet License)* தடை விதிக்கவும் வேண்டியுள்ளது.

20.12.2025 முதல் பிட்புல் *(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* நாய் இனங்களை புதிதாக வாங்கி வளர்ப்பவர்களுக்கு ரூ.1,00,000/- வீதம் அபராதம் விதிக்க வேண்டியுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் பிட்புல்*(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* இன வளர்ப்பு நாய்களை வளர்ப்பதற்கு தடை விதிக்கவும்,
2. 20.12.2025 முதல் பிட்புல் *(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* இன நாய்களை செல்லப்பிராணிகளின் உரிமம் பெற விண்ணப்பிப்பதற்கு தடை விதிக்கவும் மற்றும் உரிமத்தை புதுப்பிப்பதற்கு *(Renewal of Pet License)* தடை விதிக்கவும்,
3. ஏற்கனவே உரிமம் *(Pet License)* பெற்ற பிட்புல் *(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* இன வளர்ப்பு நாய்களை வீட்டிற்கு வெளியே அழைத்து செல்லும் போது அவற்றிற்கு கழுத்துப்பட்டை *(Leashing)* மற்றும் வாய்க்கவசம் *(Muzzling)* அணிவிப்பதை கட்டாயம் ஆக்கவும், இதனை பின்பற்றாத உரிமையாளர்களுக்கு ரூ.5,000/- வீதம் அபராதம் விதிக்கவும்,
4. உரிமமின்றி சட்ட விரோதமாக பிட்புல் *(PIT BULL)* மற்றும் ராட்வீலர் *(ROTTWEILLER)* நாய் இனங்களை புதிதாக வாங்கி வளர்ப்பவர்களுக்கு ரூ.1,00,000/- வீதம் அபராதம் விதிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.202/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.597/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

சுது.நக.எண். NUHM / B2 / 3022 / 2022

ஆணையர் அவர்களின் 11.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1219/2025 **பொருள் எண்.67**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறையில் 1 முதல் 15 மண்டலங்களிலும் மாநகராட்சி மருத்துவமனைகளில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சுய உதவி குழுக்களின் மூலம் (NULM) தற்காலிகமாக பணியாற்றி வரும் 319 தூய்மை பணியாளர்களுக்கு 04.11.2024 முதல் 03.11.2025 வரை ஓராண்டு காலத்திற்கு பணியாணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது - இந்த பணியினை 04.11.2025 முதல் 03.11.2026 வரை ஓராண்டு காலத்திற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு மேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில், 1 முதல் 15 மண்டலங்களில் செயல்பட்டு வரும் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள், 3 மகப்பேறு மருத்துவமனைகளில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் (NUHM) கீழ் 319 தூய்மை பணியாளர்கள் ஒப்பளிக்கப்பட்டு, நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சுய உதவி குழுக்களின் மூலம் இந்த தூய்மை பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

அட்டவணை எண்.1

வ எண்	பணியமர்த்தப்பட வேண்டிய இடம்	தூய்மை பணியாளர்கள் விவரம்	மொத்தம் பணியமர்த்தப் பட்டுள்ள தூய்மை பணியாளர்கள்
1	140 - நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள்	ஒரு சுகாதார மையத்திற்கு ஒரு பணியாளர்	140
2	16-நகர்ப்புற சமுதாய நல மையங்கள்	16 சமுதாய நல மையத்திற்கு மொத்த பணியாளர்கள்	167
3	3-மகப்பேறு மருத்துவமனைகள்	ஒரு மகப்பேறு மருத்துவமனைக்கு 4 பணியாளர்கள்	12
மொத்தம்			319

திட்ட இயக்குநர், தேசிய சுகாதாரத்திட்டம் அவர்களின், 29.11.2013 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, ஒரு தூய்மை பணியாளருக்கு மாத ஊதியமாக ரூ.8500/- நிர்ணயிக்கப்பட்டு சென்னை மாநகர நல சங்கத்திற்கு வழங்கப்படுகிறது. இந்த ஊதியம் குறைவாக உள்ளதால், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் அரசாணை எண்-36, நாள்:16.06.2023-ன்படி, மன்றத் தீர்மான எண்.626/2023, நாள்.29.12.2023-ல் தீர்மானம் பெறப்பட்டு நகர்ப்புற வாழ்வாதார குழுக்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு மாத ஊதியமாக ரூ. 17,867/ நிர்ணயம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட மண்டலங்களில் மண்டல அலுவலர் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், உழைப்போர் உரிமை இயக்கமானது, தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டு துறையின் அரசாணை எண் *(2D) 36* நாள்.16.06.2023க்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில் *W.P.No.25767 of 2023 in W.P.No.26344/2023 D1.11.09.2023*ல் எண்.36ன் மீது இடைக்கால தடையாணை வழங்கி, அடுத்த உத்திரவு வரும் வரையில், தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டு துறையின் அரசாணை எண்.*(2D)* எண்.62ன்படி குறைந்தபட்ச *wages* வழங்கிட நடைமுறைபடுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மைச் செயலர், தொழிலாளர் நலன் ஆணையர் அவர்களின், 02.05.2024 நாளிட்ட ஆணையில் 2023ஆம் ஆண்டிற்கான தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி ரூ.6,593/- வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அரசாணை எண்.*(2D)* எண்.62ன்படி *Unskilled* தொழிலாளர்களுக்கு *Minimum Rate of Basic wages*ன் படி ஒரு மாதத்திற்கு ரூ.13,000/- என நிர்ணயித்துள்ளது.(ரூ.13,000/- + ரூ.6,593/-) ஆகமொத்தம் ரூ. 19,593/- மாத கூலி கணக்கிட்டு, தினக்கூலியாக ரூ.753/- என கணக்கிடப்பட்டுள்ளது.

ஆணையர் அவர்களின், 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, ஏற்கனவே ரூ.687/- தினக்கூலி (மாத ஊதியம் ரூ.17,867) நிர்ணயித்து அனுமதி பெற்றுள்ளவர்களுக்கு ரூ.753/- தினக்கூலி (மாத ஊதியம் ரூ.19,593) என நிர்ணயித்து 01.04.2024 முதல் வழங்கவும், தினக்கூலி உயர்த்தப்படுவதால் ஏற்படும் கூடுதல் நிதிக்கு, செலவினம் கணக்கிட்டு உரிய அனுமதி பெற்றுக் நிதி நிர்வாக பிரிவில் நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொள்ள வேண்டும், எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

04.11.2025 முதல் 03.11.2026 வரை 319 தூய்மை பணியாளர்கள் பணியமர்த்த தேவைப்படும் தொகை

இப்பணியினை ஒரு வருட காலத்திற்கு (04.11.2025 முதல் 03.11.2026 வரை) மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. 319 தூய்மை பணியாளர்களை வாழ்வாதார குழுக்கள் மூலம் பணியமர்த்த ஒரு வருட காலத்திற்கு, தூய்மை பணியாளர் ஒருவருக்கு மாத ஊதியமாக ரூ.19,593 என நிர்ணயித்து வழங்க தேவைப்படும் மொத்த செலவினத்தொகை பின்வருமாறு.

அட்டவணை எண்.1

மொத்தம் பணியமர்த்த வேண்டிய தூய்மை பணியாளர்கள்	தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தில் வழங்கப்படும் மாத ஊதியம் (ரூ)	மொத்தம் (ஒரு வருடத்திற்கு) (ரூ) *(NUHM* வழங்கும் தொகை) *(1x2x12M)*	அரசாணையின் 62ன் வழங்கப்பட வேண்டிய மாத ஊதியம்(ரூ)	மொத்தம் ஒரு வருடத்திற்கு ஆகும் செலவு (ரூ) *(1x4x12M)*	மாநகராட்சியில் இருந்து மேற்கொள்ளப்படும் தொகை (ரூ)(5-3)
1	2	3	4	5	6
319	8500	3,25,38,000	19,593	7,50,02,004	4,24,64,004

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் தூய்மை பணியாளர்கள் பணியமர்த்தப்பட வழங்கப்பட்ட தொகை ரூ.3,25,38,000/-ஐ (ரூபாய் மூன்று கோடியே இருபத்தி ஐந்து இலட்சத்து முப்பத்தி எட்டாயிரம் மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் செலுத்தலாம். மேலும், கூடுதலாக ஏற்படும் செலவினம் ரூ.4,24,64,004 (ரூபாய் நான்கு கோடியே இருபத்தி நான்கு இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து நான்கு மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சி நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படும் ஊதியத் தொகையானது (மாதம் ஒரு நபருக்கு ரூ.8,500) பெருநகர சென்னை மாநகராட்சியில் செலுத்தப்பட்டு வருகின்றது. கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 30.07.2024 மற்றும் 12.08.2024 நாளிட்ட ஆணைகளின்படி, மார்ச் 2023 முதல் ஜூலை 2024 வரையில் ரூ.4,60,95,500/- (ரூபாய் நான்கு கோடியே அறுபது இலட்சத்து தொண்ணூற்றி ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

மொத்த செலவினத் தொகை

அரசாணை எண்.*(2D) 36*, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு *(JI)* துறை நாள்:*16.06.2023*-ன்படி, தூய்மை பணியாளர்களுக்கு ஊதியம் ரூ.17,867 லிருந்து ரூ.19,593 என உயர்த்தப்படுவதால் 01.04.2024 முதல் 01.11.2024 வரை நிலுவை தொகை வழங்கவும், 04.11.2025 முதல் 03.11.2026 வரை வரையிலும் ஊதியம் வழங்க தேவைப்படும் தொகை விவரம்

அட்டவணை எண்.2

வ. எண்	விவரம்	தொகை
1	அரசாணையின் 62ன் தூய்மை பணியாளர் ஒருவருக்கு மாத ஊதியம் ரூ.19,593 என நிர்ணயிக்கப்படும் பட்சத்தில் 319 பணியாளர்களுக்கு 04.11.2025 முதல் 03.11.2026 வரை ஊதியம் வழங்க கூடுதலாக தேவைப்படும் தொகை (தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் வழங்கப்படும் தொகை தவிர்த்து மாநகராட்சி நிதியில் மேற்கொள்ளப்படும் தொகை)	ரூ. 4,24,64,004
2	மொத்தம் தேவைப்படும் தொகை	ரூ. 4,24,64,004

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களிலும், மாநகராட்சி மருத்துவமனைகளில் தூய்மை பணிகள் மேற்கொள்ள நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சுய உதவி குழுக்களின் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ள 319 தூய்மை பணியாளர்களின் பணியாணை 03.11.2025 உடன் முடிவடைகின்றது. இப்பணியினை 04.11.2025 முதல் 03.11.2026 வரை ஓராண்டு காலத்திற்கு மன்றத்தின் பின்னேற்பு

அனுமதிக்குட்பட்டு பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,

2. தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அரசாணை எண்.62 நாள்:11.10.2017 ன்படி தூய்மை பணியாளர்களுக்கு (unskilled category - Sanitary worker) (தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.753) மாத ஊதியமாக ரூ.19,593 என நிர்ணயித்து வழங்கவும்.

3. 04.11.2025 முதல் 03.11.2026 வரை ஓராண்டு காலத்திற்கு இப்பணியினை மேற்கொள்ள பெருநகர மாநகராட்சி நிதியில் தேவைப்படும் தொகை ரூ.4,24,64,004 (ரூபாய். நான்கு கோடியே இருபத்து நான்கு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து நான்கு மட்டும்) (அட்டவணை எண்.2ல் தெரிவிக்கப்பட்டவாறு) மேற்கொள்ள அனுமதிக்கும்,

4. தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தில் தூய்மைபணியாளர்களுக்கு வழங்கப்படும் Human Resources- Salary for Sanitary workers from "Support Staff for Health Facilities- Other Support Staff") மொத்த ஊதியத்தொகை ரூ.3,25,38,000 யில் (மூன்று கோடியே இருபத்தி ஐந்து இலட்சத்து முப்பத்தி எட்டாயிரம் மட்டும்) மாதந்தோறும் பணியாளர்கள் ஊதியமாக விடுவிக்கப்படும் தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த அனுமதிக்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.198/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.574/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

சுதுநக.எண்.பி2/0003/2025

ஆணையர் அவர்களின் 06.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1220/2025 **பொருள் எண்.68**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள மயானபூமிகளை மேம்படுத்துதல் - 50 மயான பூமிகளுக்கு ஒரு சுழற்சிக்கு 2 பாதுகாவலர்கள் வீதம் மொத்தம் 300 பாதுகாவலர்களை ஒப்பந்த அடிப்படையில் வெளிநிறுவனம் மூலம் பணியமர்த்த மின்னணு ஒப்பம் கோரப்பட்டது - இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Monisha Security Agency மற்றும் M/s. Black Cat Solutions நிறுவனங்களுக்கு தலா 150 பாதுகாவலர்களை பணியமர்த்த அரசின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்ட விவரம் மன்றத்தின் தகவலுக்காக.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள மயானபூமிகளை மேம்படுத்துவதற்கென, மன்றத்தீர்மான எண்.607/2024, நாள்.30.12.2024ன்படி, 50 மயான பூமிகளுக்கு ஒரு சுழற்சிக்கு 2 பாதுகாவலர்கள் வீதம் மொத்தம் 300 பாதுகாவலர்களை ஒப்பந்த அடிப்படையில் நிறுவனம் மூலம் பணியமர்த்த மின்னணு ஒப்பம் *(E-Tender) 17/02/2025*-ல் கோரப்பட்டது.

இதற்கென கீழ்கண்ட அளவில் அலுவலக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அட்டவணை எண்.1

Sl no	Category of Staff	Salary per month (Rs)	EPF (13%)	ESI (3.25%) (Rs)	Admin Charges (Approx. 10%)	GST (18%) (1+2+3+4)	Total (1+2+3+4+5)	Required Number of Staf	Total 12 months Rs. (6x7x12M)
		1	2	3	4	5	6	7	8
1	Security Guard	19,593	-	637	2,023	4,006	26,259	300	9,45,32,400

இந்த ஒப்பம் சம்பந்தமாக ஒப்பந்ததாரர்களுக்கு முன்ஒப்பந்த கூட்டம் *(Prebid Meeting)* மாநகர நல அலுவலர் அலுவலகத்தில் 05.05.2025 அன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட பல்வேறு நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பாதுகாவலர்களுக்கு ரூ.15000/- வரையிலான ஊதியத்திற்கு வருங்கால வைப்பு நிதி *(Employee Provident Fund)* செலுத்தப்பட வேண்டியுள்ளதாகவும் *(Employer Contribution 13% upto Rs.15000)* அதனை ஒப்பத்தில் சேர்த்து வழங்கவும் கேட்டுக்கொண்டனர். இது சம்பந்தமாக ஆணையர் அவர்களின், 18.03.2025 நாளிட்ட ஆணையில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பாதுகாவலர்களுக்கு அவர்களது ஊதியத்தில் ரூ. 15000/த்திற்கு மட்டும் வருங்கால வைப்பு நிதி (ரூ.1950) வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டு, இது ஒப்பந்தத்தில் திருத்தமாக 19.03.2025 அன்று வெளியிடப்பட்டது.

எனவே, திருத்திய அலுவலக மதிப்பீட்டின் விவரம் பின்வருமாறு

அட்டவணை எண்.2

Sl no	Category of Staff	Salary per month (Rs)	EPF (13%)	ESI (3.25%) (Rs)	Admin Charges (Approx. 10%)	GST (18%) (1+2+3+4)	Total (1+2+3+4+5)	Required Number of Staf	Total 12 months Rs. (6x7x12M)
		1	2	3	4	5	6	7	8
1	Security Guard	19593	1950	637	2218	4392	28790	300	10,36,44,000

25.03.2025 அன்று ஆவணம் திறக்கப்பட்டதில் அதில் 6 ஒப்பந்ததாரர்கள் ஒப்பபுள்ளி அளித்திருந்தனர்.

அட்டவணை.3

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி	தொழில்நுட்ப ஒப்பத்தில் *(Technical Bid)* கோரப்பட்ட ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ள விவரம்	பரிந்துரை
1	M/s. Monisha Security Agency	ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது	ஒப்பம் ஏற்கப்பட்டது
2	M/s Black Cat Solutions	ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது	ஒப்பம் ஏற்கப்பட்டது
3	M/s. Ruby Global	ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது	ஒப்பம் நிராகரிக்கப்பட்டது
4	M/s. U.K. Security Services	ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளது	ஒப்பம் நிராகரிக்கப்பட்டது
5	M/s. Alert Serurity	ஆவணங்கள் அளிக்கப்படவில்லை	ஒப்பம் நிராகரிக்கப்பட்டது
6	M/s. CISB Services Private Limited	ஆவணங்கள் அளிக்கப்படவில்லை	ஒப்பம் நிராகரிக்கப்பட்டது

இதில் வரிசை எண்.1 மற்றும் 2ல் உளள ஒப்பந்ததாரர்கள் மட்டுமே போதிய ஆவணம் அளித்திருந்த காரணத்தினால் அவர்களின் ஒப்பங்கள் ஏற்கப்பட்டு நிதி ஒப்பம் 22.05.2025 அன்று திறக்கப்பட்டது.

அட்டவணை எண்.4

Sl no	Name of the Bidders	Salary per month (Rs)	EPF (13%)	ESI (3.25%) (Rs)	Admin Charges (Approx. 10%)	GST (18%) (1+2+3+4)	Total (1+2+3+4+5)	Required Number of Staf	Total 12 months Rs. (6x7x12M)
		1	2	3	4	5	6	7	8
1	M/s. Monisha Security Agency (L1)	19593	1950	637	443.60	4072	26695.60	300	9,61,04,160
2	M/s.Black Cat solutions	19593	1950	637	443.60	4072	26695.60	300	9,61,04,160

இதில் இரண்டு ஒப்பந்ததாரர்களும் நிதி ஒப்பத்தில் நிர்வாக கட்டணமாக ரூ.443.60/ ஒப்பத்தொகை அளித்துள்ளனர். மேற்கண்ட குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள

ஒப்பந்ததாரர்களிடம் விலைக்குறைப்பு கோரியதில் அவர்கள் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துவிட்டனர்.

ஒப்பந்ததாரர்கள் இருவரும் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.9,61,04,160/- யானது அலுவலக மதிப்பீட்டுடன் ரூ.10,36,44,000/- ஒப்பிடுகையில் *(-)7.27% (lower)* குறைவாக உள்ளது.

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 பிரிவு 10(5) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒரே ஒப்பந்தபுள்ளி தொகை அளித்திருக்கும் பட்சத்தில் அந்த ஒப்பந்தாரருக்கும் அந்த ஒப்பத்தினை சமமாக பிரித்து வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU TRANSSPARANCY TENDERS ACT 1998

Sec 10, Evaluation and Acceptance of Tender.

(5) In case where two or more tenders quoted the same price, the Tender Accepting Authourity shall split the procurement among such tenderers taking into consideration the experience and credentials of such tenders, where such splitting is not possible or could not be done equally, (the said authourity) shall record reasons for the same.

எனவே, 300 பாதுகாவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த பணியாணையினை இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் சமமாக பிரித்து *M/s. Monisha Security Agency* நிறுவனத்தின் மூலம் 150 பாதுகாவலர்கள் *M/s. Black Cat Solutions* நிறுவனத்தின் மூலம் 150 பாதுகாவலர்கள் என சமமாக பிரித்து வழங்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை எண்.5

Sl no	Name of the Bidders	Salary per month (Rs)	EPF (13%)	ESI (3.25%)(Rs)	Admin Charges	GST (18%) (1+2+3+4)	Total (1+2+3+4+5)	Required Number of Staf	Total 12 months Rs. (6x7x12M)
		1	2	3	4	5	6	7	8
1	M/s. Monisha Security Agency (L1)	19593	1950	637	443.60	4072	26695.60	150	4,80,52,080
2	M/s.Black Cat Solutions	19593	1950	637	443.60	4072	26695.60	150	4,80,52,080

எனவே, இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஒப்ப கூர்ந்தாய்வு குழு 22.05.2025 அன்று கூடி மேற்கண்ட ஒப்பந்தத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பாதுகாவலர்களுக்கு ரூ.15000/ வரையிலான ஊதியத்திற்கு வருங்கால வைப்பு நிதி *(Employee Provident Fund)* செலுத்த *(Employer Contribution 13% upto Rs.15000)* அதனை ஒப்பத்தில் சேர்த்ததால் ஒப்பத்தின் நிர்வாக அனுமதியானது ரூ.9,45,32,400 லிருந்து ரூ.10,36,44,000/- ஆக அதிகரித்ததால் அரசின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்ட விவரம் மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த ஒப்பந்தத்தில் *M/s/ Monisha Security Agency* மற்றும் *M/s. Black Cat Solutions* நிறுவனத்தினர் *L-1* ஒப்பந்ததாரர்களாக தேர்வு செய்யப்பட்டு, இரண்டு நிறுவனத்தினருமே நிர்வாக கட்டணமாக ரூ.443.60 அளித்துள்ள நிலையிலும், இவர்கள் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.9,61,04,160/-யானது அலுவலக மதிப்பீடான ரூ.10,36,44,000/- உடன்

ஒப்பிடுகையில் (-)7.27% *(lower)* குறைவாக உள்ளதாலும், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டம் 1998 பிரிவு 10(5) ன்படி இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒரே ஒப்பந்தபுள்ளி அளித்திருக்கும் பட்சத்தில் இரண்டு ஒப்பந்ததாரருக்கும் அந்த ஒப்பத்தினை சமமாக பிரித்து வழங்க வேண்டும் என்ற விதியின்படி 300 பாதுகாவலர்களை பணியமர்த்தும் பணியாணையினை, இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் சமமாக பிரித்து *M/s. Monisha Security Agency* நிறுவனத்தின் மூலம் 150 பாதுகாவலர்கள் (ரூ.4,80,52,080/-), *M/s. Black Cat Solutions* நிறுவனத்தின் மூலம் 150 பாதுகாவலர்கள் (ரூ.4,80,52,080/-), என பிரித்து அரசின் அனுமதி பெற்றதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களுக்கு பணியாணை வழங்கப்படவுள்ள விவரம் நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.199/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
>
> "17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.575/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

மா.நீ.வ.து.நி.க.எண்.பி2/2536-16/2025

ஆணையர் அவர்களின் 27.10.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1221/2025 **பொருள் எண்.69**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மண்டலம்-9, வார்டு-109ல் உள்ள டிரஸ்ட்புரம் நீர்வழி கால்வாயில் ch.1000 மீ முதல் ch.1470மீ வரை வெள்ளத்தடுப்பு சுவர் மற்றும் கான்கீரிட் தரை அமைக்கும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர். Abbundu Interiors & Construction Pvt Ltd அவர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்க அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறை மண்டலம்-9, வார்டு-109 உள்ள டிரஸ்ட்புரம் நீர்வழி கால்வாயில் ch.1000 மீ முதல் ch.1470மீ வரை வெள்ளத்தடுப்பு சுவர் மற்றும் கான்கீரிட் தரை அமைக்கும் பணிக்கு ரூ. 7,73,00,000/- மதிப்பில் 2024-2025 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் நிர்வாக அனுமதி 26.08.2025 அன்று பெறப்பட்டது.

அதன்படி இப்பணிக்கான ஒப்பந்த புள்ளி 16.09.2025 கோரப்பட்டது. இவ்வொப்பந்த புள்ளி 17.09.2025 அன்று ஆங்கில செய்தித்தாளான "தி டைம்ஸ் ஆப் இந்தியா" தமிழ் செய்தித்தாளான தினமலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய நாள்.03.10.2025 என்றும், ஒப்ப திறப்பு நாள்.03.10.2025 என ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. பின்னர் நிர்வாக நலன் கருதி ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய நாள்.06.10.2025 என்றும் ஒப்ப திறப்பு நாள்.06.10.2025 என்றும் ஒப்பம் நீட்டிப்பு செய்யப்பட்டது.

மின்னணு ஒப்பம் திறப்பு நாளான 06.10.2025 அன்று மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர் முன்னிலையில் ஒப்பம் திறக்கப்பட்டன. இவ்வொப்பத்தில் மூன்று ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். இதற்கான தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் தகுதி வாய்ந்தவர்களாக தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரின் நிதி ஆவணங்கள் (Financial Bid) 15.10.2025 அன்று திறக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இரண்டு ஒப்பந்ததாரர்கள் அளித்த விலை விவரப்பட்டியல் பின்வருமாறு.

(அட்டவணை-I)

வ-எண்	ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி (18% GST சேர்த்து) ரூ.	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (18% GST சேர்த்து) ரூ	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பசதவீதம் 2024-25 ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியலின்படி
1	Abbundu Interiors & Construction Pvt. Ltd.	7,65,13,568.02	8,18,69,517.79	(+) 7.00 %

2	KSM Construction Private Limited		8,56,95,196.19	(+) 12.00 %

மேற்கண்ட பணிக்கு விலை ஒப்பீட்டு அறிக்கையின் படி, குறைந்த விலைப் புள்ளி அளித்த திருவாளர். *Abbundu Interiors & Construction Pvt. Ltd.* அவர்கள் அலுவலக விலையைவிட *(+) 7.00 %* கூடுதலாக விலைப்புள்ளி அளித்துள்ளார்.

எனவே, திருவாளர். *Abbundu Interiors & Construction Pvt. Ltd.* அவர்களிடம் விலைக்குறைப்பு செய்ய கடிதம் அளிக்கப்பட்டது, திருவாளர். *Abbundu Interiors & Construction Pvt. Ltd.* அவர்கள் விலைக்குறைப்பு செய்துள்ளார். திருவாளர். *Abbundu Interiors & Construction Pvt. Ltd* அளித்துள்ள விலைக்குறைப்பு ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-*II*)

பணியின் விவரம்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் திரு/திருவாளர்கள் *(L1)*	பணியின் அலுவலக தொகை *2024-25* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல்படி *(18 % GST* சேர்த்து) ரூ.	முதல் விலை குறைப்பு கடிதம் அளித்த பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்பத்தொகை *(18% GST* சேர்த்து) ரூ.	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் *2024-25*ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி
மண்டலம்-*9*, வார்டு-*109* உள்ள டிரஸ்ட்புரம் நீர்வழி கால்வாயில் *ch.1000* மீ முதல் *ch.1470*மீ வரை வெள்ளத்தடுப்பு சுவர் மற்றும் கான்கீரிட் தரை அமைக்கும் பணிக்கு	Abbundu Interiors & Construction Pvt. Ltd.	7,65,13,568.02	8,07,21,814.27	(+)5.50%

மேற்கண்ட பணிக்கு விலை ஒப்பீட்டு அறிக்கையின்படி, குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்.*Abbundu Interiors & Construction Pvt. Ltd.* அவர்கள் அலுவலக விலையைவிட *(+)5.50%* கூடுதலாக விலைப்புள்ளி அளித்துள்ளார். திருவாளர் *Abbundu Interiors & Construction Pvt. Ltd.* அவர்களிடம் இரண்டாவது முறையாக விலைக்குறைப்பு செய்ய *22.10.2025* அன்று கடிதம் அளிக்கப்பட்டது.

(அட்டவணை-III)

பணியின் விவரம்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் திரு/திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல் படி (18% GST சேர்த்து) ரூ.	இரண்டாவது விலைக் குறைப்பு கடிதம் அளித்த பின் ஒப்பந்த தாரர் அளித்த ஒப்பத் தொகை (18% GST சேர்த்து) ரூ.	இரண்டாவது பேச்சு வார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல்படி
மண்டலம்-9, வார்டு-109ல் உள்ள டிரஸ்ட்புரம் நீர்வழி கால்வாயில் ch.1000 மீ முதல் ch.1470மீ வரை வெள்ளத்தடுப்பு சுவர் மற்றும் கான்கீரிட் தரை அமைக்கும் பணிக்கு	Abbundu Interiors & Construction Pvt. Ltd.	7,65,13,568.02	7,99,56,678.59	(+)4.50%

திருவாளர் *Abbundu Interiors & Construction Pvt. Ltd.* அவர்கள் அளித்துள்ள ஒப்பத் தொகை ரூ.*7,99,56,678.59* ஆகும். இத்தொகையானது *2024-25* ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட *(+)4.50%* அதிகம் ஆகும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறை, மண்டலம்-9, வார்டு-109ல் உள்ள டிரஸ்ட்புரம் நீர்வழி கால்வாயில் ch.1000மீ முதல் ch.1470மீ வரை வெள்ளத்தடுப்பு சுவர் மற்றும் கான்கீரிட் தரை அமைக்கும் பணிக்கு 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட கூடுதலாக (+)4.50% விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர். Abbundu Interiors & Construction Pvt. Ltd. அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ.7,99,56,678.59 க்கு (18% GST வரி உட்பட) பணியேற்பு கடிதம் வழங்க அனுமதியும்,

2. மேற்காணும் பணிக்கு ஒப்பந்ததாரருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண். 412-401-100 (Storm Water Drain and Culverts) என்ற நிதி ஒதுக்கீட்டில் பட்டி தீர்வு செய்ய அனுமதியும்,

3. இப்பணிக்குண்டான செலவீனத்தை நிதி ஆலோசகர் அவர்கள் மூலம் மூலதன நிதி கணக்கு குறியீட்டு எண்.412-401-100 (Storm Water Drain and Culverts) கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறுவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.648/2025, நாள். 12.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.588/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/7849/2025

ஆணையர் அவர்களின் 04.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1222/2025 **பொருள் எண்.70**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மண்டலம் 1 முதல் 15 வரை சேகரிக்கப்படும் "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை ஒரு வருடகாலத்திற்கு (Domestic Hazardous Waste) குறிப்பிட்ட சேமிப்பு இடங்களில் இருந்து சேகரிப்பு, போக்குவரத்து, சேமிப்பு மற்றும் அகற்றுவதற்கு நிர்வாக அனுமதி மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில், மண்டலம் 1 முதல் 15 வரை தினந்தோறும் சுமார் 6150 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016ல் கூறியுள்ளபடி, பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவுகளை கையாள்வதற்காக பரவலாக்கப்பட்ட செயலாக்க மையங்களை உருவாக்கியுள்ளது, மேலும் திடக்கழிவுகளை செயலாக்கம் செய்ய பல்வேறு முன்னெடுப்புகளை செய்து வருகிறது. திடக்கழிவு மேலாண்மையை மேலும் மேம்படுத்த, பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 1 முதல் 15 வரை சேகரிக்கப்படும் "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளான - வர்ண டப்பாக்கள், காலி பூச்சிக்கொல்லி மருந்து டப்பாக்கள், கண்ணாடி பாட்டில், சானிடரி பிளாஸ்டிக் டின்கள், நச்சுக் கழிவுகள், சி.எப்.எல் விளக்குகள், குழல் விளக்குகள், மற்றும் இதர விளக்குகள், காலாவதியான மருந்துகள், ஒப்பனை பொருட்கள், உடைந்த பாதரச ஜுரமானிகள், பயன்படுததப்பட்ட பேட்டரிகள், பயன்படுத்தப்பட்ட ஊசிகள் மற்றும் ஊசிமருந்து குழல்கள் மற்றும் மாசு அடைந்த அளவை மானிகள் ஆகியவைகளைக் குறிக்கும் இந்த "தீங்கு விளைவிக்க கூடிய வீட்டுக்கழிவுகளை" ஒரு வருடகாலத்திற்கு குறிப்பிட்ட சேமிப்பு இடங்களில் இருந்து சேகரிப்பு, போக்குவரத்து, சேமிப்பு மற்றும் அகற்றுவதற்கு ஒப்பம் கோர பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் முன்மொழிவுகள்

பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு வெளிப்படைத்தன்மை ஒப்பந்த சட்டம், 1998 மற்றும் விதிகள், 2000 ஆகியவற்றால் நிர்வகிக்கப்படும் மின்னணு ஒப்பந்த செயல்முறை மூலம் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் ஒரு வருட காலத்திற்கு மண்டலம் 1 முதல் 15 வரை சேகரிக்கப்பட்ட தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை-சேகரிப்பது, அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பான வாகனங்கள் பயன்படுத்தி பாதுகாப்பான முறையில் கொண்டு செல்வது, சேமிப்பது மற்றும் அகற்றுவதற்கு பொறுப்பாவார்.

பணியின் நோக்கம்

- மண்டலம் 1 முதல் 15 வரை சேகரிக்கப்பட்ட "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை" சேமிக்கப்பட்ட இடங்களிலிருந்து "தீங்கு விளைவிக்க கூடிய வீட்டுக்கழிவுகளை" சேகரித்தல், பாதுகாப்பாக கொண்டு செல்லுதல், சேமித்தல், செயலாக்கம் செய்தல் மற்றும் பாதுகாப்பான முறையில் அகற்றுதல்.

- வண்ணக் குறியீட்டுடன் கூடிய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாகனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
- பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் எடை மேடைகள் மூலம் கழிவுகளின் எடையை கண்டறியலாம், அவை அனைத்தும் பெருநகர சென்னை மாநகராட்சியின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் முன்னிலையில் சரிபார்க்கப்படும்.
- *TNPCB/CPCB* விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.
- பதிவுகள் மற்றும் விவரங்களை விதிமுறைகளின்படி பராமரிக்கப்பட வேண்டும்.

முக்கிய ஒப்பந்த விவரங்கள்:

- ஒப்பந்த காலம்: 1 ஆண்டு
- ஒப்பம் சமர்ப்பிக்கும் முறை: தமிழ்நாடு மின்னணு இணையதளம் மூலம் ஆன்லைனில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- தேர்வு முறை : இரண்டு கவர் சிஸ்டம் (தொழில்நுட்ப மற்றும் விலைப்புள்ளி ஒப்பங்கள்)
- செயல்திறன் வங்கி உத்தரவாதம் *(Performance Bank Guarantee)*: ரூ. 13,00,000
- முதலீடு காப்புத் தொகை *(EMD)*: ரூ. 6,50,000

தகுதிக்கான அளவுகோல்கள் *(Eligibility Criteria)*:

முன் தகுதிக்கான அளவுகோல்கள் *(Pre-Qualification Criteria)*:

- **நிறுவன பதிவு:** குறைந்தபட்சம் 3 ஆண்டுகளாக போக்குவரத்துச் சேவையை இயக்கி வரும் நிறுவனமாக இருத்தல் வேண்டும், இந்நிறுவனம் *Companies Act* சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்.
- **நிதி நிலைமை :**
    - கடைசி 3 ஆண்டுகளில் சராசரி ஆண்டு வருவாய் ரூ. 25 கோடி இருக்க வேண்டும்.
    - கடைசி 3 ஆண்டுகளில் நிகர மதிப்பு *(Net worth)* நல்லமுறையில் *(Positive)* இருத்தல் வேண்டும்,
- **நிபந்தனைகள்:**
    - எந்தவொரு அரசு நிறுவனத்தாலும் தடைப் பட்டியலில் *(Black list)* சேர்க்கப்பட்டிருக்கக் கூடாது.
    - தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் *(Hazardous Waste Management Rules) TSDF* செயல்பாடுகளுக்கான அங்கீகாரத்தை தமிழ்நாடு / மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து *(TNPCB/SPCB)* பெற்றிருக்க வேண்டும்.

- **அனுபவம்:**ஆபத்தான தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுகளை *(Hazadous Waste Management)* கையாளுதல் உட்பட, ஆண்டுக்கு 3700 மெட்ரிக்டன் "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை அகற்றுதல் மற்றும் கையாளுதல் போன்று நிரூபிக்கப்பட்ட அனுபவம் இருத்தல் வேண்டும்.
- **ஆதார ஆவணங்கள்:** நிறுவன பதிவு சான்றிதழ், பட்டயக் கணக்காளரால் *(CA)* சான்றளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், தன்னறிவிப்பு *(Self Declaration)*, முன்- அனுபவத்திற்கான சான்று மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அங்கீகாரம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

தொழில்நுட்ப மதிப்பீட்டுக்கான அளவுகோல்கள்

மொத்த மதிப்பெண்கள்: *100.*

- **அனுபவம் *(Experience)*:**

3 வருடங்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 3700 மெட்ரிக்டன் "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை கையாண்டதற்கான ஆவண ஆதாரங்கள் - *60* மதிப்பெண்கள்.

- **கள ஆய்வு *(Field Verification)*:**

திடக்கழிவு மேலாண்மை *(SWM)* துறையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட குழுவினரால் நேரில் ஆய்வு செய்து வழங்கும் மதிப்பெண் - *40* மதிப்பெண்கள்.

- **குறைந்தபட்ச மதிப்பெண்:**

நிதி ஒப்பந்தத்தை திறக்க தகுதிபெற, குறைந்தபட்சம் 80 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

- **நிதி விதிமுறைகள் *(Financial Terms)*:**
  - முன் பணம் எதுவும் வழங்கப்படாது; மாதாந்திர பில்லிங் மட்டுமே.
  - சேவை நிலை ஒப்பந்தத்தின்படி *(SLA)*, ஒப்பந்த விதிமுறைகளை மீறுதல் மற்றும் தாமதங்களுக்கு அபராதங்கள் விதிக்கப்படும்.
  - மாதாந்திர விலைப்பட்டியல் *(Monthly Invoice)* மதிப்பில் அதிகபட்ச அபராதம் 10% ஆக இருக்கும்.
- **ஒப்பந்த மதிப்பீடு:**
  - **நிலை 1**: முன் தகுதி *(Pre Qualification)*
  - **நிலை 2** : தொழில்நுட்ப மதிப்பீடு *(Technical Evaluation)* (தகுதி பெற குறைந்தபட்சம் 80 மதிப்பெண்கள் தேவை)
  - **நிலை 3** : நிதி ஒப்பந்த *(Financial Evalution)*
  - மதிப்பீடு மிகக் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்தவர் ஒப்பந்தம் வழங்குவதற்காக பரிசீலிக்கப்படுவார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் *(GCC)* உருவாகும் "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை" *(DHW)* சரியான அளவு பற்றிய மதிப்பீடு இல்லாததால், இது குறித்து கூகுளில் *(Google)* தேடப்பட்டது. அதன்படி, *Centre for Science and Environment New-Delhi*

என்ற அமைப்பு 2022-ல் வெளியிட்ட "இந்தியாவில் தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை - அறிவியல் ரீதியில் சேகரிப்பு, செயலாக்கம் மற்றும் அகற்றுதலுக்கான ஒரு அணுகுமுறை" *(Domestic Hazardous Waste - An approach towards scientific collection, treatment and disposal in India)* என்ற அறிக்கையிலிருந்து தகவல்கள் பெறப்பட்டன. *www.cseindia.org'.*

அதன்படி, இந்தூர் மாநகராட்சியில் சுமார் 30 இலட்சம் மக்கள் தொகைக்கு, ஆண்டுக்கு 1000 மெட்ரிக்டன் (ஒரு நாளைக்கு 2.7 டன்) "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை" கையாள்வதாக மத்திய பிரதேச மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் *(MPPCB)* அங்கீகாரம் அளித்துள்ளது.

மேற்கண்ட தகவலின் அடிப்படையில், ஏறக்குறைய 1 கோடி மக்கள் தொகை கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சியில், தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகள் உற்பத்தி ஆண்டுக்கு 3700 டன் என மதிப்பிடப்படுகிறது. இது, இந்தூர் மாநகராட்சியில் ஒரு ஆண்டுக்கு உருவாகும் கழிவின் அளவை அடிப்படையாகக் கொண்டு, சென்னையின் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

- **<u>கணக்கீடு:</u>**

(1,00,000,00 ÷ 30,00,000) x 1000 மெட்ரிக்டன் = 3333 மெட்ரிக்டன்) இந்த மதிப்பீட்டில், கடந்த ஆண்டுகளைக் கருத்தில்கொண்டு, 10% அதிகரிப்புடன் சேர்த்து, தோராயமாக ஆண்டுக்கு 3700 டன் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சேமிக்கப்பட்ட இடங்களில் இருந்து "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை" *(DHW)* சேகரித்து, கொண்டு செல்வது உட்பட, *TSDF* கட்டணம் ஒரு டன்னுக்கு ரூ.17,500/- என அனுமானித்தால், ஓராண்டுக்கான மதிப்பிடப்பட்ட செலவு (3700 மெட்ரிக்டன் *X* ரூ.17,500/- மெட்ரிக் டன்) ரூ.6,47,50,000/- ஆகும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் (GCC) மண்டலம் 1 முதல் 15 வரை சேகரிக்கப்பட்ட "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை" (DHW) ஒரு வருடகாலத்திற்கு சேமிக்கப்பட்ட இடங்களில் இருந்து, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (TNPCB) தரநிலைகளின்படி - சேகரிப்பு, போக்குவரத்து, சேமிப்பு, செயலாக்கம் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றுக்கான மதிப்பிடப்பட்ட செலவினமான ரூ.6,47,50,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்.
2. மேற்சொன்ன "தீங்கு விளைவிக்கக்கூடிய வீட்டுக்கழிவுகளை"சேமிக்கப்பட்ட இடங்களில் இருந்து சேகரிப்பு, போக்குவரத்து, சேமிப்பு, செயலாக்கம் மற்றும் அகற்றுவதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரை கண்டறிய மின்னணு ஒப்பம் கோரவும்,
3. இந்த செலவினத்தை கணக்கு தலைப்பு குறியீடு எண்.230-800-501 மூலம் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.11.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.183/2025, நாள்.20.11.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.554/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.ந.க.எண்.அ7/4646A1/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1223/2025 **பொருள் எண்.71**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - தூய்மை இந்தியா திட்டம் (SBM) (U) 2.0 கீழ் பெருங்குடி குப்பை கிடங்கை -Bio mining முறையில் நிலத்தினை மீட்டெடுத்தல் - (இரண்டாம் கட்டம்) (கூடுதல் அளவு) - அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி குப்பைக் கிடங்கை *Bio – Mining* முறையில் நிலத்தினை மீட்டெடுக்க (இரண்டாம் கட்டம்) (கூடுதல் அளவு) திட்டமிடப்பட்டுள்ளது. இது திடக்கழிவு மேலாண்மை விதிகள் *2016* படியும், மாண்புமிகு தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் வழிகாட்டுதலின்படியும் செயல்படுத்தப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி குப்பைக் கிடங்கில் 225 ஏக்கர் நிலத்தை தூய்மை இந்தியா திட்டம் *(U)* 2.0 நிதியின் கீழ் ரூ.350.65 கோடிக்கு பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தினை *Bio-mining* முறையில் நிலத்தினை மீட்டெடுக்கும் பணி ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 09.11.2025 அன்றைய நிலவரப்படி மொத்தம் உள்ள *29.28* இலட்சம் கன மீட்டர் கழிவுகளில் இருந்து 28.45 இலட்சம் கன மீட்டர் கழிவுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 6 தொகுப்புகளில், 3, 4 மற்றும் 5 தொகுப்புகளில் *(Packages 3, 4 & 5)* பணிகள் முற்றிலும் நிறைவடைந்துள்ளன. 1, 2 மற்றும் 6 தொகுப்புகளில், *(Packages 1, 2, & 6)* பணிகள் நடைபெற்று வருகின்றன. மார்ச் 2026 க்குள் பணியினை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு கோரப்பட்ட ஒப்பத்தில் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் 30.61 லட்சம் கன மீட்டர் திடக்கழிவுகளின் *(Legacy waste)* அளவு மதிப்பிடப்பட்டது. தற்போது நடைபெற்று வரும் திடக்கழிவுகளை *(Legacy waste) Bio-mining* முறையில் நிலத்தினை மீட்டெடுக்கும் பணி, கடந்த நவம்பர் 2021ல் தொகுப்பு 5ல் ஆரம்பிக்கப்பட்டு, அதனை தொடர்ந்து பிற தொகுப்புகளிலும் பணிகள் தொடங்கப்பட்டது. ஜனவரி 2021 முதல் ஜூன் 2021 வரையிலான காலகட்டத்தில் தினமும் சராசரியாக 2500 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் இப்பகுதியில் கொட்டப்பட்டன. ஜூன் 2025-ல் மேற்கொள்ளப்பட்ட ட்ரோன் கணக்கெடுப்பில், மேற்கண்ட காலகட்டத்தில் தொகுப்பு 1 மற்றும் 2 பகுதியில் கொட்டப்பட்ட கூடுதல் திடக்கழிவுகள் *(Legacy Waste) 6.01* லட்சம் கன மீட்டர் என சென்னை அண்ணா பல்கலைக்கழக சுற்றுச்சூழல் ஆய்வு மையத்தின் இயக்குநரால் சான்றளிக்கப்பட்டது. கீழ்க்கண்ட அட்டவணைப்படி கூடுதல் அளவுள்ள திடக்கழிவுகள் *(Legacy Waste) Bio-mining* முறையில் நிலத்தினை மீட்டெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு (Package)	Legacy Waste அளவு (Cu.m.)
1A1	145977
1A2	67757
1B	229118
2A	63825
2B	94548
Total	6,01,225

இத்திட்டத்திற்கான மொத்த தொகை ஒரு மெ.டன்னிற்கு ரூ.963.23/- வீதம் ரூ.52.98 கோடி ஆகும்.

வ. எண்.	*Legacy Waste* திடக்கழிவு அளவு *(Cu.m.)*	*Legacy Waste* அளவு (மெட்ரிக் டன்னில்)	*Legacy Waste* அளவு (மெட்ரிக் டன்)	1மெட்ரிக் டன் *Bio-mining* முறையில் நிலத்தினை மீட்டெடுக்க ஆகும் தொகை	மொத்த தொகை ரூ.
1.	6,01,225	5,41,103	5,50,000	ரூ.963.23	ரூ.52,97,76,500

மேற்கண்ட முன்மொழிவு 15.10.2025 அன்று நடைபெற்ற 10-வது மாநில உயர்அதிகார குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தூய்மை இந்தியா திட்டம் *(U)* 2.0 திட்டத்தின் கீழ் ரூ.52.98 கோடி மதிப்பிலான மேற்கண்ட திடக்கழிவுகளை *(Legacy Waste) Bio-mining* முறையில் நிலத்தினை மீட்டெடுக்கும் திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு அரசு தலைமைச் செயலாளர் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

தூய்மை இந்தியா திட்டம் *(U)* 2.0 வழிகாட்டுதல்களின்படி, 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள நகரங்களில் *(Million Plus Cities)* கீழ்கண்டவாறு தூய்மை இந்தியா திட்டம் 2.0 இன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

வ.எண்	விவரம்	நிதி சதவீதம்	தொகை (கோடியில்)
1	இந்திய அரசு	25%	7.56
2	மாநில அரசு	16%	4.84
3	பெருநகர சென்னை மாநகராட்சி *(ULB)*	59%	40.58
	திடக்கழிவுகளை *(Legacy Waste) Bio-mining* முறையில் நிலத்தினை மீட்டெடுக்கும் பணிக்கு ஆகும் மொத்த தொகை		52.98

மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய விதிமுறைகளுக்கு இணங்க முறையே ரூ.0.46 கோடி மற்றும் ரூ.0.16 கோடி (மொத்தம் ரூ.0.62 கோடி) சமூக மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு செலவினங்களும் இத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே, ஒட்டுமொத்த திட்ட மதிப்பீடு தொகை ரூ.53.60 கோடி ஆகும்.

வ. எண்	செலவுத் தலைப்பு	திட்ட மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்)
1.	திடக்கழிவுகளை *(LEGACY WASTE) BIO-MINING* முறையில் நிலத்தினை மீட்டெடுத்தல் பணிக்கு ஆகும் மொத்த தொகை	52.98

2.	சுற்றுச்சூழல் செலவு *(B)*	0.46
3.	சமூக செலவு *(IEC* நடவடிக்கைகள்*) (C)*	0.16
	மொத்த திட்ட மதிப்பீட்டு தொகை	53.60

சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பணிகளுக்கான கண்காணிப்பு செலவினம் ரூ.0.62 கோடி, பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி 14 மாத திட்டகாலத்திற்கு ரூ.41.20 கோடி (ரூ.40.58 கோடி + ரூ.0.62 கோடி) செலவினத்தை அதன் சொந்த வருவாய் நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட உள்ளது.

ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு செயல்பாடுகளின் ஒட்டுமொத்த மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் பணி சான்றிதழ்களுக்காக இத்திட்டம் திட்ட ஆலோசகர் (அண்ணா பல்கலைக்கழகம்) மூலம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, 10வது மாநில உயர்மட்டக் குழுவின் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் ஒப்புதலின் அடிப்படையில், திடக்கழிவுகளை *(Legacy Waste) Bio-mining* முறையில் நிலத்தினை மீட்டெடுக்கும் திட்டம் மூலம் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தினை மீட்டெடுக்க இரண்டாம் கட்டம் (கூடுதல் அளவு) திட்டத்திற்கான மொத்த திட்ட மதிப்பீடு தொகை ரூ.53.60 கோடிக்கு தமிழக அரசின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.197/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.573/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/4076/2025

ஆணையர் அவர்களின் 11.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1224/2025 **பொருள் எண்.72**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு - மண்டலம் 2, வார்டு-22, சின்ன சேக்காடு (மணலி) பகுதியில் புதிய மெகா பேலிங் மையத்திற்கு காண்கீரிட் தளம், G.I.ஷீட் மேற்கூரையுடன் கூடிய கட்டிடம் அமைப்பதற்காக குறைந்த ஒப்பவிழுக்காடு அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியாணை வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு நாளைக்கு சராசரியாக *6150* மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இதில் ஒரு நாளைக்கு சுமார் *3200* மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளும், *2450* மெட்ரிக் டன் உலர் கழிவுகளும் மற்றும் 500 மெட்ரிக் டன் செயலாக்கம் செய்ய இயலாத கழிவுகளும் *(Inert)* அடங்கும். மேற்கண்ட, திடக்கழிவுகள் செயலாக்கம் மற்றும் மறுசுழற்சிக்கு பின்னர் மீதம் உ'ள்ள திடக்கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதி 2016-ஐ பின்பற்றும் வகையில், அனைத்து மண்டலங்களிலும் ஒரு நாளைக்கு *735* மெட்ரிக் டன் வடிவமைப்பு திறன் கொண்ட ஈரக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் கூடங்கள் *(MCC)*, இயற்கை எரிவாயு *(Bio-gas)* ஆலைகள், எரியூட்டும் கலன்கள் *(Incinerators)*, பொருட்கள் மீட்பு மையங்கள் *(MRF)* மற்றும் பொருட்கள் வளமீட்பு வசதி *(RRC)* போன்ற பல்வேறு பரவலாக்கப்பட்ட செயலாக்க வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய 3 இடங்களில் தலா 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 உயிரி-எரிவாயு *(Bio-CNG)* ஆலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மணலியில் 50 மெட்ரிக் டன் திறன் கொண்ட இரண்டு எண்ணிக்கையில் காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் கூடங்கள் *(Windrow Composting)* சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன.

மேற்கண்ட பேலிங் மையங்களுக்கு மண்டலம் 1 முதல் 15 வரை சேகரிக்கப்படும் பயன்படுத்த இயலாத நெகிழி கழிவுகள் கொண்டு சேர்க்கப்படுகின்றன. இதனால் *2025 - 2026* நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு எண்.49ல், மண்டலத்திற்கு ஒரு பேலிங் மையங்கள் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அனைத்து மண்டலங்களிலும் பேலிங் மையங்கள் அமைவதில் உள்ள சிக்கல் மற்றும் பிரச்சனைகளை விளக்கினார். மேலும் தீ விபத்துகள் மற்றும் பொதுமக்களின் புகார்கள் எழும் வாய்ப்பு இருப்பதால் வடக்கு மற்றும் தெற்கு வட்டாரத்தில் ஒரு மெகா பேலிங் மையத்தை அமைக்க பரிந்துரைத்தார். அதன்படி வடக்கு வட்டாரத்தின் கீழ் உள்ள மண்டலம்-2, பகுதி-5, வார்டு-22ல் சின்ன சேக்காடு (மணலி) பகுதி வேலு தெருவில் எண்.72ல் சுமார் 3025 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தை பேலிங் மையம் அமைக்க தேர்வு செய்யப்பட்டது.

இதன்படி, மண்டலம்-2, வார்டு-22ல் சின்ன சேக்காடு (மணலி) புதிய மெகா பேலிங் மையத்திற்கு கான்கீரிட் தளம், G.I.ஷீட் மேற்கூரையுடன் கூடிய கட்டிடம் அமைப்பதற்கு ரூ.5,50,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்கண்ட பணிக்கு மன்றத் தீர்மான எண்.1078/2025 நாள்.29.09.2025-ன்படி மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து மேலே கண்டுள்ள பணிக்கான தொழில்நுட்ப தகுதிக்கான ஒப்பம் 10.10.2025 அன்று திறக்கப்பட்டதில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ் வருமாறு,

வரிசை எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	தொழில்நுட்ப ஆவணம் தகுதி பெற்றது (அ) தகுதி பெறவில்லை
1	திருவாளர்கள். பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ்	ஒப்பம் தகுதி பெற்றது
2	எஸ். வள்ளி	ஒப்பம் தகுதி பெற்றது

இதில் திருவாளர்கள் பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ் மற்றும் எஸ்.வள்ளி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் (Financial Bid) அனுமதிக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிக்கான ஒப்பம் 17.10.2025 அன்று திறக்கப்பட்டதில் கீழ் கண்டுள்ளவாறு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

வ. எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	மதிப்பீடு தொகை	ஒப்ப தொகை (வரிகள் நீங்கலாக)	ஒப்ப சதவீதம்
1.	திருவாளர்கள். பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ்	ரூ.4,58,93,077.15பை	ரூ.4,83,02,463.70பை	(+)5.25% அதிகம்
2.	எஸ். வள்ளி	ரூ.4,58,93,077.15 பை	ரூ.4,87,84,341.01பை	(+)6.30% அதிகம்

மேற்படி விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர்கள். பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ் அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.4,83,02,463.70 பை ஆகும். இது அலுவலக தொகையான ரூ.4,58,93,077.15 பை விட (+) 5.25% அதிகம் ஆகும்.

திருவாளர்கள்.பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ் (L1) ஒப்பந்ததாரரிடம் விலைகுறைப்பு கோரப்பட்டதில், 20.10.2025, 23.10.2025 மற்றும் 25.10.2025 மூன்றுமுறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் (+) 4.99% அதிகத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் கீழ் வருமாறு.

வரிசை எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	மதிப்பீடு தொகை	ஒப்ப தொகை (வரிகள் நீங்கலாக)	ஒப்ப சதவீதம்
1.	திருவாளர்கள். பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ்	ரூ.4,58,93,077.15பை	ரூ.4,81,83,141.70பை	(+) 4.99% அதிகம்

மேற்படி விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர்கள். பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ் பேச்சுவார்த்தைக்கு பிறகு அளித்துள்ள இறுதி ஒப்ப தொகை ரூ.**4,81,83,141.70**பை ஆகும், இது அலுவலக தொகையை விட **(+) 4.99%** அதிகம் ஆகும்.

எனவே,

1. **மண்டலம்-2, வார்டு-22ல் சின்ன சேக்காடு (மணலி) பகுதியில் புதிய பேலிங் மையத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகளை அமைக்கும் பணி மேற்கொள்ள குறைந்த ஒப்பவிழுக்காடு அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களுக்கு ஒப்பத் தொகைரூ.4,81,83,142/- மற்றும் GST 18% ரூ.86,72,966/- மொத்த தொகை ரூ.5,68,56,108/-(ரூபாய் ஐந்து கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நூற்று எட்டு மட்டும்)க்கு அனுமதி வேண்டியும்,**
2. **மேற்கண்ட பணியினை திருவாளர்கள். பியேர்ல் கன்ஸ்டரக்ஷன்ஸ் அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ.4,81,83,142/- மற்றும் GST 18% ரூ.86,72,966/- மொத்ததொகை ரூ.5,68,56,108/- (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நூற்று எட்டு மட்டும்)க்கு பணி ஆணை வழங்குவதற்கும்,**
3. **மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Budget Head Code.412-40-05-08 SWM Department Buildings தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணி மேற்கொள்ளவும்,**

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.11.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.186/2025, நாள்.20.11.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.555/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

தி.க.மே.து.ந.க.எண்.அ7/5591/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1225/2025 **பொருள் எண்.73**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு - மண்டலம் 14, வார்டு 188ல் தாம்பரம் - வேளச்சேரி பிரதான சாலையில் பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் (கிழக்கு பக்கம்) புதிய மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் அமைப்பதற்காக குறைந்த ஒப்பவிழுக்காடு அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்டரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணியாணை வழங்க மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு நாளைக்கு சராசரியாக *6150* மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இதில் ஒரு நாளைக்கு சுமார் *3200* மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளும், *2450* மெட்ரிக் டன் உலர் கழிவுகளும் மற்றும் 500 மெட்ரிக் டன் செயலாக்கம் செய்ய இயலாத கழிவுகளும் *(Inert)* அடங்கும். மேற்கண்ட, திடக்கழிவுகள் செயலாக்கம் மற்றும் மறுசுழற்சிக்கு பின்னர் மீதம் உள்ள திடக்கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதி 2016-ஐ பின்பற்றும் வகையில், அனைத்து மண்டலங்களிலும் ஒரு நாளைக்கு *680* மெட்ரிக் டன் வடிவமைப்பு திறன் கொண்ட ஈரக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் கூடங்கள் *(MCC)*, இயற்கை எரிவாயு *(Bio-gas)* ஆலைகள், எரியூட்டும் கலன்கள் *(Incinerators)*, பொருட்கள் மீட்பு மையங்கள் *(MRF)* மற்றும் பொருட்கள் வளமீட்பு வசதி *(RRC)* போன்ற பல்வேறு பரவலாக்கப்பட்ட செயலாக்க வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய 3 இடங்களில் தலா 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 உயிரி-எரிவாயு *(Bio-CNG)* ஆலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மணலியில் 50 மெட்ரிக் டன் திறன் கொண்ட இரண்டு எண்ணிக்கையில் காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் கூடங்கள் *(Windrow Composting)* சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட பிளாஸ்டிக்பேலிங் மையங்களுக்கு மண்டலம் 1 முதல் 15 வரை சேகரிக்கப்படும் பயன்படுத்த இயலாத நெகிழி கழிவுகள் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

இதனால் *2025 - 2026* நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு எண்.49ல், மண்டலத்திற்கு ஒரு பேலிங் மையங்கள் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அனைத்து மண்டலங்களிலும் பிளாஸ்டிக்பேலிங் மையங்கள் அமைவதில் உள்ள சிக்கல் மற்றும் பிரச்சனைகளை விளக்கினார். மேலும் தீ விபத்துகள் மற்றும் பொதுமக்களின் புகார்கள் எழ வாய்ப்பு இருப்பதால் வடக்கு மற்றும் தெற்கு வட்டாரத்தில் ஒரு மெகா பிளாஸ்டிக்பேலிங் மையத்தை அமைக்க பரிந்துரைதார்.

இதன்படி, மண்டலம்-*14*, வார்டு-*188*ல் தாம்பரம் – வேளச்சேரி பிரதான சாலையில் பள்ளிக்கரணை பழைய குப்பைகொட்டும் வளாகத்தில் (கிழக்கு பக்கம்) 3006 சதுர மீட்டர்

பரப்பளவு கொண்ட இடத்தில் 30 மெட்ரிக்டன் திறனுடைய புதிய மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் அமைப்பதற்கு ரூ.*7,70,00,000/-*க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்கண்ட பணிக்கு மன்றத் தீர்மான எண்.1059/2025, நாள்.29.09.2025-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து மேலே கண்டுள்ள பணிக்கான தொழில்நுட்ப தகுதிக்கான ஒப்பம் *24.10.2025* அன்று திறக்கப்பட்டதில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு,

வரிசை எண்	ஒப்பந்ததாரரின்பெயர்கள்	தொழில்நுட்ப ஆவணம் தகுதி பெற்றது (அ) தகுதி பெறவில்லை
1	திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்	ஒப்பம் தகுதி பெற்றது
2	திருவாளர்கள். மார்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ஒப்பம் தகுதி பெற்றது

இதில் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ரஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் மார்ஸ் கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் *(Financial Bid)* அனுமதிக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிக்கான ஒப்பம் *01.11.2025* அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

வரிசை எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	மதிப்பீடு தொகை	ஒப்ப தொகை (வரிகள் நீங்கலாக)	ஒப்ப சதவீதம்
1.	திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ரஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்	ரூ.6,40,16,401.54பை	ரூ.6,86,76,795.57பை	*(+) 7.28%* அதிகம்
2.	திருவாளர்கள் மார்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ.6,40,16,401.54பை	ரூ.7,03,47,623.65பை	*(+) 9.89%* அதிகம்

மேற்படி விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ரஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.6,86,76,795.57பை ஆகும். இது அலுவலக தொகையான ரூ.6,40,16,401.54பை விட (+) 7.28% அதிகம் ஆகும்.

திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்ர்ஸ் பிரைவேட் லிமிடெட் *(L1)* ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கோரப்பட்டதில், 03.11.2025 அன்று (+) 6.98% அதிகத்திற்கு விலை குறைப்பு செய்தார் மற்றும் 04.11.2025 ஆகிய இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் (+) 4.99% அதிகத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் கீழ்வருமாறு.

வ. எண்	ஒப்பந்ததாரரின் பெயர்	மதிப்பீடு தொகை	முதல் பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்ப தொகை (வரிகள் நீங்கலாக)	இரண்டாம் பேச்சுவார்த்தைக் குபின் ஒப்ப தொகை (வரிகள் நீங்கலாக)
1.	திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ரஸ்ட்ரக்ட்ர்ஸ் பிரைவேட் லிமிடெட்	ரூ.6,40,16,401.54பை	ரூ.6,84,84,746.37பை	ரூ.6,72,10,819.98பை
		ஒப்ப சதவீதம்	(+) 6.98% அதிகம்	(+) 4.99% அதிகம்

மேற்படி விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ரஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் பேச்சுவார்த்தைக்கு பிறகு அளித்துள்ள இறுதி ஒப்ப தொகை ரூ.6,72,10,819.98பை ஆகும், இது அலுவலக தொகையை விட (+) 4.99% அதிகம் ஆகும்.

எனவே,

1. மண்டலம்-14, வார்டு-188ல் தாம்பரம் – வேளச்சேரி பிரதான சாலையில் பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் (கிழக்கு பக்கம்) 3006 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் 30 மெட்ரிக் டன் திறனுடைய புதிய மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் அமைக்கும் பணிமேற்கொள்ள குறைந்த ஒப்பவிழுக்காடு அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்ர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ.6,72,10,820/- மற்றும் GST 18% ரூ.1,20,97,947/-மொத்த தொகை ரூ.7,93,08,767/-(ரூபாய் ஏழுகோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று அறுபத்தி எழு மட்டும்)க்கு அனுமதி மற்றும் பணி ஆணை வழங்குவதற்கும்,
2. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Budget Head Code. 412-40-05-08 SWM Department Buildings தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.187/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.565/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/5592/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1226/2025 **பொருள் எண்.74**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு - மண்டலம்-14, வார்டு-188ல் தாம்பரம் - வேளச்சேரி பிரதான சாலையில் பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் (மேற்கு பக்கம்) புதிய மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் அமைப்பதற்காக குறைந்த ஒப்ப விழுக்காடு அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ரஸ்டரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு பணியாணை வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு நாளைக்கு சராசரியாக *6150* மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இதில் ஒரு நாளைக்கு சுமார் *3200* மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளும், *2450* மெட்ரிக் டன் உலர் கழிவுகளும் மற்றும் 500 மெட்ரிக் டன் செயலாக்கம் செய்ய இயலாத கழிவுகளும் *(Inert)* அடங்கும். மேற்கண்ட, திடக்கழிவுகள் செயலாக்கம் மற்றும் மறுசுழற்சிக்கு பின்னர் மீதம் உ'ள்ள திடக்கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதி 2016-ஐ பின்பற்றும் வகையில், அனைத்து மண்டலங்களிலும் ஒரு நாளைக்கு *680* மெட்ரிக் டன் வடிவமைப்பு திறன் கொண்ட ஈரக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் கூடங்கள் *(MCC)*, இயற்கை எரிவாயு *(Bio-gas)* ஆலைகள், எரியூட்டும் கலன்கள் *(Incinerators)*, பொருட்கள் மீட்பு மையங்கள் *(MRF)* மற்றும் பொருட்கள் வளமீட்பு வசதி *(RRC)* போன்ற பல்வேறு பரவலாக்கப்பட்ட செயலாக்க வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய *3* இடங்களில் தலா 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 உயிரி-எரிவாயு *(Bio-CNG)* ஆலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மணலியில் 50 மெட்ரிக் டன் திறன் கொண்ட இரண்டு எண்ணிக்கையில் காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் கூடங்கள் *(Windrow Composting)* சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட பிளாஸ்டிக்பேலிங் மையங்களுக்கு மண்டலம் 1 முதல் 15 வரை சேகரிக்கப்படும் பயன்படுத்த இயலாத நெகிழி கழிவுகள் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

இதனால் *2025 - 2026* நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு எண்.49ல், மண்டலத்திற்கு ஒரு பிளாஸ்டிக்பேலிங் மையங்கள் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அனைத்து மண்டலங்களிலும் பிளாஸ்டிக்பேலிங் மையங்கள் அமைவதில் உள்ள சிக்கல் மற்றும் பிரச்சனைகளை விளக்கினார். மேலும் தீ விபத்துகள் மற்றும் பொதுமக்களின் புகார்கள் எழும் வாய்ப்பு இருப்பதால் வடக்கு மற்றும் தெற்கு வட்டாரத்தில் ஒரு மெகா பிளாஸ்டிக்பேலிங் மையத்தை அமைக்க பரிந்துரைத்தார்.

இதன்படி, மண்டலம்-14, வார்டு-188ல் தாம்பரம் – வேளச்சேரி பிரதான சாலையில் பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் (மேற்கு பக்கம்) 1664 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் 20 மெட்ரிக்டன் திறனுடைய புதிய மெகா பிளாஸ்டிக்பேலிங் மையம் அமைப்பதற்கு ரூ.6,80,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்கண்ட பணிக்கு மன்றத் தீர்மான எண்.1079/2025, நாள்.29.09.2025-ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து மேலே கண்டுள்ள பணிக்கான தொழில்நுட்ப தகுதிக்கான ஒப்பம் 24.10.2025 அன்று திறக்கப்பட்டதில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு,

வரிசை எண்	ஒப்பந்ததாரரின்பெயர்கள்	தொழில்நுட்ப ஆவணம் தகுதி பெற்றது (அ) தகுதி பெறவில்லை
1	திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ரஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்	ஒப்பம் தகுதி பெற்றது
2	திருவாளர்கள். மார்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ஒப்பம் தகுதி பெற்றது

இதில் திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் மார்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பத்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் (Financial Bid) அனுமதிக்கப்பட்டது.

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிக்கான ஒப்பம் 01.11.2025 அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

வரிசை எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	மதிப்பீடு தொகை	ஒப்ப தொகை (வரிகள் நீங்கலாக)	ஒப்ப சதவீதம்
1.	திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட்	ரூ.5,66,33,098.17பை	ரூ.6,07,55,987.72பை	(+) 7.28% அதிகம்
2.	திருவாளர்.கள்மார்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ.5,66,33,098.17பை	ரூ.6,22,34,111.58பை	(+) 9.89% அதிகம்

மேற்படி விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.6,07,55,987.72 பை ஆகும், இது அலுவலக தொகையான ரூ.5,66,33,098.17பை விட (+) 7.28% அதிகம் ஆகும்.

திருவாளர்கள்.தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்ர்ஸ் பிரைவேட் லிமிடெட் *(L1)* ஒப்பந்ததாரரிடம் விலை குறைப்பு கோரப்பட்டதில், 03.11.2025 அன்று (+) 6.98% அதிகத்திற்கு விலை குறைப்பு செய்தார் மற்றும் 04.11.2025 ஆகிய இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட தில் (+) 4.99% அதிகத்திற்குசம்மதம்தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் கீழ்வருமாறு.

வ. எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	மதிப்பீடு தொகை	முதல் பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்ப தொகை (வரிகள் நீங்கலாக)	இரண்டாம் பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பதொகை (வரிகள் நீங்கலாக)
1.	திருவாளர்கள் தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்ட்ர்ஸ் பிரைவேட் லிமிடெட்	ரூ.5,66,33,098.17பை	ரூ.6,05,86,088.42பை	ரூ.5,94,59,089.77பை
ஒப்பசதவீதம்			(+) 6.98% அதிகம்	(+) 4.99% அதிகம்

மேற்படி விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் பேச்சுவார்த்தைக்கு பிறகு அளித்துள்ள இறுதி ஒப்ப தொகை ரூ.5,94,59,089.77பை ஆகும். இது அலுவலக தொகையை விட (+) 4.99% அதிகம் ஆகும்.

எனவே,

1. மண்டலம்-14, வார்டு-188ல் தாம்பரம் – வேளச்சேரி பிரதான சாலையில் பள்ளிக்கரணை பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் (மேற்கு பக்கம்) 1664 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் 20 மெட்ரிக்டன் புதிய மெகா பேலிங் மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள குறைந்த ஒப்பவிழுக்காடு அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். தாமஸ் அய்யாதுரை இன்ப்ரஸ்ட்ரக்சரஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ.5,94,59,090/- மற்றும் GST 18% ரூ.1,07,02,636/- மொத்த தொகை ரூ.7,01,61,726/-(ரூபாய் ஏழு கோடியே ஒரு இலட்சத்து அறுபத்தி ஒன்றாயிரத்து எழுநூற்று இருபத்தி ஆறு மட்டும்)க்கு அனுமதி மற்றும் பணி ஆணை வழங்குவதற்கும்,
2. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Budget Head Code. 412-40-05-08 SWM Department Buildings தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கி அந்நிதியிலிருந்து பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.188/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.566/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/8188/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1227/2025 **பொருள் எண்.75**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மண்டலம் -1, 2, 3 மற்றும் 7 (82, 83, 85 (ம) 86 வார்டுகள்) (Package -1) ல் - தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் உள்கட்டமைப்பை - Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD நிறுவனம் மூலமாக பராமரிப்பதற்காக கூடுதலாக பணியாளர்கள், குப்பை தொட்டி, பேட்டரியால் இயக்கப்படும் மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள அனுமதி.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 18.02.2025 அன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, இனி வரும் காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் *(TNUHDB)* பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின்

1. உட்புற சாலைகள்
2. தெரு விளக்குகள்
3. திடக்கழிவு மேலாண்மை பணிகள்
4. பூங்கா மற்றும் விளையாட்டு திடல் பணிகள்
5. திறந்தவெளி முன்பதிவு நிலம்
6. ரேஷன் கடை பராமரிப்பு பணிகள்
7. தெரு விளக்கு அமைத்தல்
8. மரம் நடுதல்

ஆகிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி இனி வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளனதை தொடர்ந்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் இயக்குநரிடமிருந்தும் *(TNUHDB)* கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேற்கூறிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வட்டார வாரியாக 9 மாத காலத்திற்கு நான்கு ஒப்பங்கள் கோரப்பட்டு கடந்த 23.5.2025, 28.05.2025, 25.06.2025 மற்றும் 21.07.2025 முறையே பணி ஆணை வழங்கப்பட்டது. இவ்ஒப்ப பணிகள் பிப்ரவரி 2026 மற்றும் மார்ச் 2026ல் முடிவு பெறும். இப்பணி தொடங்கப்பட்ட மண்டலங்களான 1, 2 3 மற்றும் 7 (82, 83, 85 (ம) 86 வார்டுகள்) தொடர்ந்து தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் சரிவர நடைபெறவில்லை என வார்டு குழுவிலும், மாமன்றத்திலும் தொடர்ந்து மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மதிப்பிற்குரிய ஆணையர், மதிப்பிற்குரிய இணை ஆணையர் (சுகாதாரம்), மதிப்பிற்குரிய நிலைக்குழு பொது சுகாதாரத் தலைவர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், மேற்கூறிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் அந்தந்த மண்டலங்களில் தற்போது திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டதின் அடிப்படையில் மண்டலம் -1, 2, 3 மற்றும் 7 (82, 83, 85 (ம) 86 வார்டுகள்) *(Package –I)* ல் திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர் சென்னை என்விரோ நிறுவனத்திற்கு இப்பணியை மேற்கொள்ள ஒப்புதலும் மற்றும் ஆகும் செலவினை தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு 14.10.2025 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதற்கு திருவாளர்.*Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD.*, நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள நிறுவனத்திற்கு தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

PACKAGE 1 - SLUM TENAMENTS MANPOWER AND EQUIPMENT REQUIREMENT SUMMARY - Ramkey Working after Negotiation					
Zone		1	2	7(p)	P1 Total
No. of Tenements		9	2	3	14
No. of HH's		8,988	2,080	2,171	13,239
Manpower	No's of Sweepers required	67	15	4	86
	No's of BOV Drivers	11	2	2	15
	HMV Drivers	1	0	0	1
	LMV Drivers	2	1	1	4
	Helpers	6	2	2	10
	Supervisors	1	1	1	3
	Total	88	21	10	119
Equipments	No's of BOV required	9	2	2	13
	BOV Bins	54	12	12	78
	120 ltrs bins	54	12	4	70
	Compactor Count (14 Cum)		1		1
	RC Bins	54	12	4	70
	2T Vehicle	2	1	1	4
IMQ (in Rs.)		60,06,203			

மண்டலம் -1, 2, 3 மற்றும் 7 (82, 83, 85 (ம) 86 வார்டுகள்) *(Package–I)*ல் ஆகிய மண்டலங்களில் தனியார் நிறுவனமான திருவாளர்.*Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD.*, நிறுவனம் பணி மேற்கொண்டு வருவதாலும் புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற பகுதியில் இக்குடியிருப்பு அமைவதால் இப்பணியை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு பகுதியில், கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் தன்மைகள்:

i. அடுக்குமாடி குடியிருப்பு பின் புறத்தில் கொட்டப்படும் அனைத்து வகையான குப்பை கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.

ii. குடியிருப்பு பகுதியில் உள்ள பூங்கா, விளையாட்டுத்திடல் மற்றும் நடைபாதைகளில் துப்புரவு பணி மற்றும் பெருக்கும் பணி தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. சேகரிக்கும் அனைத்து குப்பைகளையும் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் *(BOV)* மற்றும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் *(RC Bins)* அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இத்தூய்மை பணிகளை கண்காணிக்கும் தனிப்பொறியாளர்கள் *(IE)* நிறுவனமான திருவாளர் *Infra En* ற்கு இப்பணியினை சேர்த்து தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் இணைத்து இப்பணிகளை மதிப்பீடு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

Details of Slum Tenements in Zone -1, 2, 3 and 7 (82, 83, 85 & 86 Div) (Package - 1)			
Zone	No's of tenements	No. of HH's	Area (in acres)
1	9	8988	62.06
2	2	2080	14.11
7 (p)	3	2171	14.09
Total	14	13239	90.26

மேற்கூறிய, மூன்று மண்டலங்களில் இருக்கும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் *(TNUHDB)* கட்டியுள்ள குடியிருப்புகளை பராமரிக்க ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.60,06,203 /- என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-1, 2, 3 மற்றும் 7 (82, 83, 85 (ம) 86 வார்டுகள்) (Pkg –I) திருவாளர்கள்.CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD., நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வருவதாலும், புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற இவ்விடங்களில் கட்டப்பட்டுள்ள 13239 குடியிருப்புகளை மார்ச் 01, 2026 முதல் இந்நிறுவனமே தூய்மை பணிகளை மேற்கொள்ளவும்,

2. மண்டலம் 1, 2, 3 மற்றும் 7 (82, 83, 85 (ம) 86 வார்டுகள்) (Pkg –I) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் உட்புறத்தில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.60,06,203 /- (ரூபாய் அறுபது இலட்சத்து ஆறாயிரத்து இருநூற்று மூன்று மட்டும்),

3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Budget Head Code 230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் நிதியில் பணியை மேற்கொள்ளவும்,

4. இப்பணிகளை தற்பொழுது மேற்பார்வையிடும் தனிப்பொறியாளர்களான (IE) Infra En மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய KPIல் மதிப்பீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.190/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.567/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/8186/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1228/2025 **பொருள் எண்.76**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மண்டலம் -9, 10 மற்றும் 13 (Package -5) ல் - தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் உள்கட்டமைப்பை - Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) V PVT. LTD நிறுவனம் மூலமாக பராமரிப்பதற்காக கூடுதலாக பணியாளர்கள், குப்பை தொட்டி, பேட்டரியால் இயக்கப்படும் மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள அனுமதி.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 18.02.2025 அன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவின் படி, இனி வரும் காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் *(TNUHDB)* பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின்

1. உட்புற சாலைகள்
2. தெரு விளக்குகள்
3. திடக்கழிவு மேலாண்மை பணிகள்
4. பூங்கா மற்றும் விளையாட்டு திடல் பணிகள்
5. திறந்தவெளி முன்பதிவு நிலம்
6. ரேஷன் கடை பராமரிப்பு பணிகள்
7. தெரு விளக்கு அமைத்தல்
8. மரம் நடுதல்

ஆகிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி இனி வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் இயக்குநரிடமிருந்தும் *(TNUHDB)* கடிதம் பெறப்பட்டது.

மேற்கூறிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வட்டார வாரியாக 9 மாத காலத்திற்கு நான்கு ஒப்பங்கள் கோரப்பட்டு கடந்த 23.5.2025, 28.05.2025, 25.06.2025 மற்றும் 21.07.2025 முறையே பணி ஆணை வழங்கப்பட்டது. இவ்ஒப்ப பணிகள் பிப்ரவரி 2026 மற்றும் மார்ச் 2026 ல் முடிவு பெறும். இப்பணி தொடங்கப்பட்ட மண்டலங்கலான 9, 10 மற்றும் 13 தொடர்ந்து தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும். பணிகள் சரிவர நடைபெறவில்லை என வார்டு குழுவிலும், மாமன்றத்திலும் தொடர்ந்து மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மதிப்பிற்குரிய ஆணையர், மதிப்பிற்குரிய இணை ஆணையர் (சுகாதாரம்), மதிப்பிற்குரிய நிலைக்குழு (பொது சுகாதாரம்) தலைவர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், மேற்கூறிய தமிழ்நாடு

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் அந்தந்த மண்டலங்களில் தற்போது திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டதின் அடிப்படையில் மண்டலம் -9, 10 மற்றும் 13 *(Package -V)* ல் திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர் உர்பேசர் நிறுவனத்திற்கு இப்பணியை மேற்கொள்ள ஒப்புதலும் மற்றும் ஆகும் செலவினை தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு 14.10.2025 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதற்கு திருவாளர் *Sumeet Urban Services (Chennai) V Pvt Ltd.,* நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள நிறுவனத்திற்கு தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

PACKAGE V - SLUM TENAMENTS MANPOWER AND EQUIPMENT REQUIREMENT SUMMARY - SUS working after Negotiation					
Zone		IX (T)	X (T)	XIII (T)	PV Total
No. of Tenements		64	20	19	103
No. of HH's		17938	7128	8488	33554
Manpower	No's of Sweepers required	162	74	104	340
	No's of BOV Drivers	13	13	4	30
	HMV Drivers	2	1	1	4
	LMV Drivers	1	1	1	3
	Helpers	6	4	4	14
	Supervisors	3	3	3	9
	Total	187	96	117	340
Equipments	No's of BOV required	10	10	3	23
	BOV Bins	60	60	18	138
	120 ltrs bins	162	66	104	332
	Compactor Count (8 Cum)	1			1
	Compactor Count (14 Cum)		1	1	2
	Compactor Count (18 Cum)	1			1
	RC Bins	116	34	48	198
	2T Vehicle	1	1	1	3
IMQ (in Rs.)		1,84,77,170			

மண்டலம் -9, 10 மற்றும் 13 *(Package V)* ஆகிய மண்டலங்களில் தனியார் நிறுவனமான திருவாளர் *Sumeet Urban Services (Chennai) V Pvt Ltd.,* நிறுவனம் பணி மேற்கொண்டு வருவதாலும் புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற பகுதியில் இக்குடியிருப்பு அமைவதால் இப்பணியை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு பகுதியில், கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் தன்மைகள்:

i. அடுக்குமாடி குடியிருப்பு பின் புறத்தில் கொட்டப்படும் அனைத்து வகையான குப்பை கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.

ii. குடியிருப்பு பகுதியில் உள்ள பூங்கா, விளையாட்டுத்திடல் மற்றும் நடைபாதைகளில் துப்புரவு பணி மற்றும் பெருக்கும் பணி தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. சேகரிக்கும் அனைத்து குப்பைகளையும் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் *(BOV)* மற்றும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் *(RC Bins)* அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இத்தூய்மை பணிகளை கண்காணிக்கும் தனிப்பொறியாளர்கள் *(IE)* நிறுவனமான திருவாளர் *Infra En* ற்கு இப்பணியினை சேர்த்து தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் இணைத்து இப்பணிகளை மதிப்பீடு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

Details of Slum Tenements in Zone -9, 10 and 13 (Package -5)			
Zone	No's of tenements	No. of HH's	Area (in acres)
9	64	17938	98.69
10	20	7128	54.46
13	19	8488	252.49
Total	103	33554	451.18

மேற்கூறிய, மூன்று மண்டலங்களில் இருக்கும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் *(TNUHDB)* கட்டியுள்ள குடியிருப்புகளை பராமரிக்க ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.1,84,77,170/- என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம் 9, 10 மற்றும் 13ல் (Pkg 5) திருவாளர்கள் Sumeet Urban Services (Chennai) V Pvt ltd. நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வருவதாலும், புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற இவ்விடங்களில் கட்டப்பட்டுள்ள 33554 குடியிருப்புகளை மார்ச் 01, 2026 முதல் இந்நிறுவனமே தூய்மை பணிகளை மேற்கொள்ளவும்,

2. மண்டலம் 9,10 மற்றும் 13ல் (PKG-5) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பபட்டுள்ள குடியிருப்புகளின் உட்புறத்தில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.1,84,77,170/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி நான்கு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரத்து நூற்று எழுபது மட்டும்),

3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Budget Head Code 230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் நிதியில் பணியை மேற்கொள்ளவும்,

4. இப்பணிகளை தற்பொழுது மேற்பார்வையிடும் தனிப்பொறியாளர்களான (IE) Infra En மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய KPIல் மதிப்பீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.191/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.568/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.ந.க.எண்.அ7/8187/ 2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1229/2025 **பொருள் எண்.77**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் உள்கட்டமைப்பை - Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT. LTD நிறுவனம் மூலமாக பராமரிப்பதற்காக கூடுதலாக பணியாளர்கள், குப்பை தொட்டி, பேட்டரியால் இயக்கப்படும் மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள அனுமதி.

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 18.02.2025 அன்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் எடுத்த முடிவின் படி, இனி வரும் காலங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் *(TNUHDB)* பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளின்

1. உட்புற சாலைகள்
2. தெரு விளக்குகள்
3. திடக்கழிவு மேலாண்மை பணிகள்
4. பூங்கா மற்றும் விளையாட்டு திடல் பணிகள்
5. திறந்தவெளி முன்பதிவு நிலம்
6. ரேஷன் கடை பராமரிப்பு பணிகள்
7. தெரு விளக்கு அமைத்தல்
8. மரம் நடுதல்

ஆகிய பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி இனி வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் இயக்குநரிடமிருந்தும் *(TNUHDB)* கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேற்கூறிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வட்டார வாரியாக 9 மாத காலத்திற்கு நான்கு ஒப்பங்கள் கோரப்பட்டு கடந்த 23.5.2025, 28.05.2025, 25.06.2025 மற்றும் 21.07.2025 முறையே பணி ஆணை வழங்கப்பட்டது. இவ்ஒப்ப பணிகள் பிப்ரவரி 2026 மற்றும் மார்ச் 2026 ல் முடிவு பெறும். இப்பணி தொடங்கப்பட்ட மண்டலங்கலான 11, 12, 14 மற்றும் 15 தொடர்ந்து தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும். பணிகள் சரிவர நடைபெறவில்லை என வார்டு குழுவிலும், மாமன்றத்திலும் தொடர்ந்து மாமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மதிப்பிற்குரிய ஆணையர், மதிப்பிற்குரிய இணை ஆணையர் (சுகாதாரம்), மதிப்பிற்குரிய சுகாதாரக்குழு

தலைவர் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், மேற்கூறிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் அந்தந்த மண்டலங்களில் தற்போது திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் தனியார் நிறுவனத்தினர் மூலம் பணிகள் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டதின் அடிப்படையில் மண்டலம் - 11, 12, 14 மற்றும் 15 (Package -II)ல் திடக்கழிவு பணிகளை மேற்கொள்ளும் திருவாளர்.SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT. LTD நிறுவனத்திற்கு இப்பணியை மேற்கொள்ள ஒப்புதலும் மற்றும் ஆகும் செலவினை தெரிவிக்குமாறு அந்நிறுவனத்திற்கு 14.10.2025 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

அதற்கு திருவாளர் Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT. LTD நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள நிறுவனத்திற்கு தேவையான கூடுதல் பணியாளர்கள், வாகனங்கள், குப்பைத்தொட்டிகள் மற்றும் ரோடமக் பின்கள் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்கள்.

PACKAGE II - SLUM TENAMENTS MANPOWER AND EQUIPMENT REQUIREMENT SUMMARY - SUS Working before Negotiation			
Zone		XV (T)	PII Total
No. of Tenements		5	5
No. of HH's		30,612	30,612
Manpower	No's of Sweepers required	131	131
	No's of BOV Drivers	6	6
	HMV Drivers	1	1
	LMV Drivers	2	2
	Helpers	6	6
	Supervisors	2	2
	Total	148	148
Equipments	No's of BOV required	5	5
	BOV Bins 60 ltrs	30	30
	120 ltrs bins	131	131
	Compactor Count (8 Cum)	1	1
	RC Bins	59	59
	2T Vehicle	2	2
IMQ (in Rs.)		66,51,296	

மண்டலம் -11, 12, 14 மற்றும் 15 (Package -II)ல் ஆகிய மண்டலங்களில் தனியார் நிறுவனமான திருவாளர் Ms. SUMEET URBAN SERVICES (CHENNAI)II PVT. LTD நிறுவனம் பணி மேற்கொண்டு வருவதாலும் புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற பகுதியில் இக்குடியிருப்பு அமைவதால் இப்பணியை இந்நிறுவனத்திற்கு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு பகுதியில், கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் தன்மைகள்:

i. அடுக்குமாடி குடியிருப்பு பின் புறத்தில் கொட்டப்படும் அனைத்து வகையான குப்பை கழிவுகள் தினந்தோறும் அகற்றப்பட வேண்டும்.

ii. குடியிருப்பு பகுதியில் உள்ள பூங்கா, விளையாட்டுத்திடல் மற்றும் நடைபாதைகளில் துப்புரவு பணி மற்றும் பெருக்கும் பணி தினந்தோறும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

iii. சேகரிக்கும் அனைத்து குப்பைகளையும் பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் *(BOV)* மற்றும் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த தொட்டிகள் *(RC Bins)* அமைத்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இத்தூய்மை பணிகளை கண்காணிக்கும் தனிப்பொறியாளர்கள் *(IE)* நிறுவனமான திருவாளர் *Infra En* ற்கு இப்பணியினை சேர்த்து தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய *KPI*ல் இணைத்து இப்பணிகளை மதிப்பீடு செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

Details of Slum Tenements in Zone - 11, 12,14 and 15 (Package -2)			
Zone	No's of tenements	No. of HH's	Area (in acres)
15	5	30,612	252.59
Total	5	30,612	252.59

மேற்கூறிய மண்டலங்களில் இருக்கும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் *(TNUHDB)* கட்டியுள்ள குடியிருப்புகளை பராமரிக்க ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.66,51,296 /- என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம் -11, 12, 14 மற்றும் 15 (Package -II) ல் திருவாளர்கள். SUMEET URBAN SERVICES (CHENNAI) II PVT. LTD நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வருவதாலும், புராஜக்ட் ஏரியா என்று சொல்லப்படுகின்ற இவ்விடங்களில் கட்டப்பட்டுள்ள 30612 குடியிருப்புகளை மார்ச் 01, 2026 முதல் இந்நிறுவனமே தூய்மை பணிகளை மேற்கொள்ளவும்,

2. மண்டலம் -11, 12, 14 மற்றும் 15 (Package -II) ல் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் உட்புறத்தில் மேற்கொள்ளப்படும் தூய்மை பணிகளுக்கு ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ. 66,51,296/- (ரூபாய் அறுபத்தி ஆறு இலட்சத்து ஐம்பத்தி ஓராயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஆறு மட்டும்),

3. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Budget Head Code 230-150-100 Privatization Conservancy தலைப்பின் கீழ் நிதியில் பணியை மேற்கொள்ளவும்,

4. இப்பணிகளை தற்பொழுது மேற்பார்வையிடும் தனிப்பொறியாளர்களான (IE) Infra En மூலம் தொடர்ந்து கண்காணிக்கவும், அதற்குரிய KPIல் மதிப்பீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"11.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.192/2025, நாள்.11.12.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.569/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

திக.மே.து.ந.க.எண்.அ7/8217/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1230/2025 **பொருள் எண்.78**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத்துறை - மண்டலம் -1, 2 ,3 மற்றும் 7 (82, 83 (ம) 85 வார்டுகள்) (Package -1) ல் - Bulk Waste Generators களான பெரிய கடைகள், குடியிருப்பு வளாகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிக வளாகங்களிலிருந்து - தரம் பிரிக்கப்பட்ட மற்றும் பிரிக்கப்படாத திடக்கழிவுகளை - Ms. CHENNAI ENVIRO SOLUTIONS PVT LTD நிறுவனம் மூலமாக இப்பணிகளை மேற்கொள்வதற்கு - கூடுதலாக பணியாளர்கள், பேட்டரியால் இயக்கப்படும் மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் இதர வாகனங்களைக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள அனுமதி.

திடக்கழிவு மேலாண்மை *(SWM)* விதிகள் 2016 மற்றும் திடக்கழிவு மேலாண்மை *(SWM)* துணை விதிகள், 2019ன்படி ஒரு நாளைக்கு 100 கிலோவுக்கு மேல் கழிவுகளை உருவாக்கும் அனைத்து குடியிருப்போர் நல சங்கங்களும், வணிக சங்கங்களும் மற்றும் 5000 சதுர மீட்டருக்கும் அதிகமான வளாகத்தை ஆக்கிரமித்துள்ள நிறுவனங்களும் மொத்த கழிவு உருவாக்கிகளாக *(Bulk Waste Generator)* வகைப்படுத்தப்படுகின்றன.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் கடந்த ஆண்டு கண்காணிப்பு பொறியாளர் அவர்கள், *27.11.2024* மற்றும் *26.12.2024* நாட்களில் வழங்கப்பட்டுள்ள பணி ஆணைகளின்படி, தினமும் *5* மணி நேரமும், *40* கிலோ மீட்டர் தூரமும் புகைப்பரப்பும் பணியில் ஈடுபடுத்துவதற்கு வாடகை தொகையாக ஒரு வாகனத்திற்கு ஒரு நாளைக்கு ரூ*1369/- (Incl.GST @ 5 %)* கூடுதல் கிலோமீட்டருக்கு ரூ*.12/-* மற்றும் கூடுதல் தொலைவிற்கு ரூ*.210/-* வீதம், *95* எண்ணிக்கையிலான *TATA ACE* அல்லது அதற்கு இணையான வாகனங்களுக்கு ஓராண்டு காலத்திற்கு வாடகைக்கு அமர்த்த ஆகும் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ*.4,05,77,160/- (Inclu.GST@ 5%)* என கணக்கிடப்பட்டுள்ளது, அதன் விவரம் பின்வருமாறு,

1)	ஒரு மாதத்தில் பணி செய்யும் நாட்கள் (வார விடுமுறை தவிர்த்து) (ஒரு ஷிப்டு)	:	*26* நாட்கள்
2)	ஒரு வருடத்திற்கு மொத்த நாட்கள் (26 *X 12)*	:	*312* நாட்கள்
3)	மொத்த வாகனங்களின் எண்ணிக்கை	:	*95*
4)	நாளொன்றிக்கு 5 மணி நேரம் மற்றும் 40 கிலோ மீட்டருக்கு வாடகைக்கட்டணம்	:	ரூ*.1369/- (Inclu.GST@ 5%)*
5)	மொத்த மதிப்பீட்டு தொகை (312 *X 95 Nos. X Rs.1369/-)*	:	ரூ*.4,05,77,160/- (Inclu.GST@ 5%)*

மேலும், இப்பணிக்கென பயன்படுத்தப்படும் *TATA ACE* அல்லது அதற்கு இணையான வாகனங்களுக்கான வாடகைத் தொகைக்கான செலவீனத்தினை மேற்கொள்ள பொது சுகாதாரம், பூச்சித்தடுப்பு துறை கணக்கு குறியீடு எண். *30-32-02*, கணக்கு தலைப்பு எண். *230-80-04-00 (HIRE CHARGES)* கீழ் புகைப்பரப்பும் பணிக்கான வாடகை செலவுத்தொகை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொசு தொல்லையை கட்டுப்படுத்த *15* மண்டலங்களுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும், குறுகிய தெருக்களிலும் புகைப்பரப்பும் பணியை மேற்கொள்ளும் இயந்திரங்களை எடுத்துச் செல்ல *95* எண்ணிக்கையிலான *TATA ACE* அல்லது அதற்கு இணையான வாகனங்களை தற்காலிகமாக ஓராண்டு காலத்திற்கு தோராய மதிப்பீட்டுத்தொகைக்கு ரூ*.4,05,77,160/- (Inclu.GST @ 5%)* வாடகை முறையில் பணி மேற்கொள்ளவும், இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் பின்னேற்பு நிர்வாக அனுமதிக்குட்பட்டு

மின்னணு ஒப்பம் கோரும் பணிகளை மட்டும் மேற்கொள்ள ஆணையர் அவர்களின், *13.10.2025* நாளிட்ட ஆணை பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

எனவே,

1)	பெருநகர சென்னை மாநகராட்சியில், கொசு தொல்லையை கட்டுப்படுத்த, 15 மண்டலங்களுக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும், குறுகிய தெருக்களிலும் புகைபரப்பும் பணியை மேற்கொள்ளும் இயந்திரங்களை எடுத்துச்செல்ல 95 எண்ணிக்கையிலான TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்களை பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி தற்காலிகமாக ஓராண்டு காலத்திற்கு தோராய மதிப்பீட்டு தொகையான ரூ.4,05,77,160/- (Inclu.GST@5%)க்கு (ரூபாய் நான்கு கோடியே ஐந்து இலட்சத்து எழுபத்தி ஏழாயிரத்து நூற்று அறுபது மட்டும்) மின்னணு ஒப்பம் கோரி வாடகை முறையில் பணிமேற்கொள்ள பின்னேற்பு நிர்வாக அனுமதியும் மற்றும் இதனை மன்றத்தில் பதிவு செய்ய அனுமதி வேண்டியும்,
2)	இப்பணிக்கென பயன்படுத்தப்படும் TATA ACE அல்லது அதற்கு இணையான வாகனங்களுக்கான வாடகைத் தொகைக்கான செலவீனத்தினை மேற்கொள்ள கணக்கு குறியீடு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண். 230-80-04-00 (HIRE CHARGES) கீழ் புகைப்பரப்பும் பணிக்கான வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாம்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"20.11.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.182/2025, நாள்.20.11.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது"

"17.12.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 550/2025, நாள்.17.12.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பின்னேற்பு அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

ம.அ1.நக.எண்.சி1 / 03720 / 2025

ஆணையர் அவர்களின் 12.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1248/2025 **பொருள் எண்.96**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 01, பகுதி - 01 முதல் 03 வரை, கோட்டம் - 01 முதல் 14 வரையிலான பகுதிகள் - போதிய நிரந்தர சாலை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் 47 எண்ணிக்கையிலான சாலை பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் சுய உதவி குழுவின் (SHG) கீழ் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களின் பணிக்காலம் 31.10.2025 அன்று முடிவடைந்ததால் 01.11.2025 முதல் 31.10.2026 வரை பணியமர்த்தியமைக்கும் (ம) ஊதியம் வழங்கியமைக்கும் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-01இல், கோட்டம் 1 முதல் 14 வரை உள்ளடங்கிய கோட்டங்களாகும். இப்பகுதிகள் 26.69 ச.கி.மீ பரப்பளவு உள்ளடங்கியது. இதில் மொத்த சாலைகள் 1591 இதில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 87418இல் 218.99 கி.மீ நீளமுள்ள 1498 உட்புறச்சாலைகள் 6 பேருந்து சாலைகள், மேலும் 4 தேசிய நெடுஞ்சாலைகளும், அந்தந்த கோட்ட இளநிலை / உதவி பொறியாளர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது., பெருநகர சென்னை மாநகராட்சி விதி மீறி கட்டப்பட்டுவரும் கட்டிடங்களுக்கு உரிய தாக்கீது வழங்கியும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும், ஆக்கிரமிப்பு ஏற்படாத வண்ணம் பாதுகாத்து வருகின்றனர். சாலையில் விதிமீறி கொட்டிய கட்டிட கழிவுகளுக்கு தண்டக்கட்டணம் வசூலிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் அந்தந்த கோட்ட இளநிலை / உதவி பொறியாளர்களுக்கு உதவவும், ஒரு கோட்டத்திற்கு 8 சாலை பணியாளர்கள் வீதம் 14 கோட்டத்திற்கு 112 பணியாளர்கள் இருக்க வேண்டும் என அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இப்பணிகளை திறம்பட செய்யவும், பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளவும் மற்றும் தெருக்கள் சாலைகள் ஆகியவற்றில் போக்குவரத்து இடையூறுகள் இல்லாதவாறு சாலைகளை பராமரிக்கவும், 47 தற்காலிக சாலை பணியாளர்கள் அத்தியாவசியமாக தேவைப்படுகிறார்கள்.

தற்போது இப்பணிகள் 31.10.2025 ஆம் தேதியுடன் முடிவடைந்துள்ளது. நிர்வாக நலன் கருதி கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி 47 தற்காலிக சாலை பணியாளர்களுக்கு 01.11.2025 முதல் 31.10.2026 வரை பணி நீட்டிப்பு செய்ய பின்னேற்பு ஆணை வேண்டப்படுகிறது.

அதன் விவரம் கீழ் வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது

மண்டலம்-1 பகுதி-1, 2 மற்றும் 3 கோட்டம் 1 முதல் 14 வரை

வ. எண்	வார்டு எண்	அனுமதிக்கப்பட்ட பணியிடம்	தற்போது பணிபுரியும் நிரந்தர சாலை பணியாளர்கள் எண்ணிக்கை	மாற்று பணியில் நிர்வாக வசதிக்காக மண்டல அலுவகத்தில் பணிபுரியும் சாலை பணியாளரின் எண்ணிக்கை	மாற்று பணி அடிப்படையில் தலைமையிடத்தில் பணிபுரியும் சாலை பணியாளர்கள் எண்ணிக்கை	தேவைப்படும் தினக்கூலி சாலை பணியாளர்கள் எண்ணிக்கை
1	1	8	5	1	2	4
2	2	8	3	1	3	2
3	3	8	5	-	2	5
4	4	8	4	1	3	3
5	5	8	6	0	2	2
6	6	8	5	2	1	4
7	7	8	4	0	5	3
8	8	8	3	1	3	4
9	9	8	5	0	3	4
10	10	8	5	2	2	2
11	11	8	2	4	1	3
12	12	8	5	0	2	3
13	13	8	5	1	3	4
14	14	8	3	1	3	4
மொத்தம்		112	60	14	35	47

மேற்கண்டவாறு, மண்டலம்-01இல், மொத்தம் 109 நிரந்தர சாலை பணியாளர்களில் 58 நபர்கள் உரிய உதவி/இளநிலை பொறியாளர்களுடன் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர், 2 நிரந்தர சாலை பணியாளர்கள் நீண்ட காலமாக பணிக்கு வருவதில்லை என்பதால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 35 நிரந்தர சாலை பணியாளர்களில் மாற்று பணி அடிப்படையில் தலைமையிடத்திலும் மற்றும் இதில் 14 நிரந்தர சாலை பணியாளர்களில் மாற்று பணியில் நிர்வாக நலன் கருதி மண்டல அலுவலரின் அனுமதியுடன் மண்டல அலுவகத்தில் (மொத்தம் 109 நபர்கள்) பணிபுரிகிறார்கள்.

ஆணையர் அவர்களின் 16.10.2024 நாளிட்ட அனுமதி மற்றும் மன்றத்தீர்மானத்தின் படி 01.11.2024 முதல் 31.10.2025 வரை 47 தற்காலிக சாலை பணியாளர்களுக்கு பணிகாலம் முடிவடைந்துள்ளது.

கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை, தி.க.மே.ந.க.எண்அ3/3974/2023, நாள்.29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின் படி, மண்டலம்-1, பகுதி-01 முதல் 03 வரை, கோட்டம் -01 முதல் 14 வரை உள்ள கோட்டங்களில், சுய உதவி குழு (SHG)ன் கீழ் பணிபுரியும் 47 தற்காலிக சாலைப் பணியாளர்களுக்கு 01.11.2024 முதல் 31.10.2025 வரை பணியமர்த்தி மொத்தம் ஒரு வருட காலத்திற்கான செலவினம் 47 நபர்களுக்கு X 365 நாட்கள் X ரூ.753 (நாள் ஒன்றுக்கு) = ரூ.1,29,17,715/-ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு தலைப்பு கணக்கு எண். 20-21-07

கணக்கு குறியீடு எண் 210-100-603 தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

மண்டலம்-01ல், மேற்கண்ட நிகழ்விற்கு வார்டு குழு தீர்மான எண்:2183/2025 நாள்: 22.09.2025 ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. 01.11.2025 முதல் 31.10.2026 வரை ஒரு வருட காலத்திற்கு 47 தற்காலிக சாலைப்பணியாளர்களை சுய உதவிகுழுக்களின் மூலம் பணியமர்த்தி பணிமேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதியும்,

2. 01.11.2025 முதல் 31.10.2026 வரை தற்காலிக சாலைப்பணியாளர்களுக்கு திடக்கழிவு மேலாண்மைத்துறையின் 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின் படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.753/- வீதம் (47 நபர்கள்X 365 நாட்கள் X ரூ.753) ரூ. 1,29,17,715/-(ரூபாய் ஒரு கோடியே இருபத்தி ஒன்பது இலட்சத்து பதினேழாயிரத்து எழுநூற்று பதினைந்து மட்டும்)க்கு பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ளவும், ஊதியம் வழங்குவதற்கும், இப்பணிக்கு தலைப்பு கணக்கு எண். 20-21-07 கணக்கு குறியீடு எண் 210-100-603 தலைப்பில் பட்டியை தீர்வு செய்வதற்கும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.656/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.608/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.4.ந.க.எண்.சி2/10524/2025

ஆணையர் அவர்களின் 11.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1249/2025 **பொருள் எண்.97**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் -4 - கோட்டம் 34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிக்கு போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் அண்டை வீட்டு குழுக்கள் (SHG) கீழ் 1147 தூய்மை பணியாளர்கள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர் - அப்பணியாளர்களின் பணிக்காலம் 30.11.2025 உடன் முடிவடைவதால் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.12.2025 முதல் 28.02.2026 வரை மொத்தம் 1147 தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக தூய்மை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ற்குட்பட்ட பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி மற்றும் இராயபுரம் போன்ற பகுதிகளை உள்ளடக்கியதாகும், மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்ப்பேட்டை நெடுஞ்சாலை ஆகிய நெடுஞ்சாலைகளை உள்ளடக்கிய 35.5 கி.மீ நீளமுள்ள 49 பேருந்து சாலைகள் மற்றும் 393.65 கி.மீ நீளமுள்ள 2846 உட்புறச் சாலைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் அரசு சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, தண்டையார்பேட்டை இரயில் நிலையம், காசிமேடு சுடுகாடு, முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர் சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், ஓட்டல்கள் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மற்றும் இலவச பொதுக்கழிப்பிடங்கள், மக்கும் குப்பை, மக்காத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணிகள் ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது மண்டலம்-4, கோட்டம் - 34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் பணிபுரிய வேண்டி உள்ள 1714 நிரந்தர பணியாளர்களில் (ஓய்வு, பணியிடமாற்றம், பதவி உயர்வு மற்றும் இறப்பு) காரணமாக 1266 பணியாளர்கள் போக மீதம் உள்ள 448 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 1147 அண்டை வீட்டு குழுக்கள் (SHG) பணியாளர்களை மட்டுமே கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வ.எண்	பொருள்	மண்டலம்	மொத்தம்
1	நீண்ட நாட்கள் பணிக்கு வராதவர்கள்	மண்டலம் - 5	13
2	உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவ ரீதியாக சான்று அளிக்கப்பட்டவர்கள்	மண்டலம் - 5	38
3	மாற்றுப்பணிஅடிப்படையில் பணிபுரிபவர்கள்	மண்டலம் - 5	8
4	உடல் ஊனமுற்றவர்கள்	மண்டலம் - 5	3
5	சரிவர பணிக்கு வராதவர்கள்	மண்டலம் - 5	42

6	மண்டலம்-4ல் பணியில் சேர்ந்து பிறகு ஓய்வு பெற்றவர்கள்	மண்டலம் - 5	6
7	28.02.2026 ற்குள் ஓய்வு பெறுபவர்கள்	மண்டலம் - 4 & மண்டலம் - 5	25
8	வேறு மண்டலத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டவர்கள்	மண்டலம் - 5	51
9	மண்டலம் -4ல் நிரந்தர பணியாளர்களின் காலிப்பணியிடங்களின் விவரங்கள்	மண்டலம் - 4	121
10	பணியிட மாற்றத்திற்கு விருப்பம் தெரிவித்து கடிதம் அளித்துள்ள பணியாளர்களின் எண்ணிக்கை	மண்டலம் - 5	48
11	சாலை பணியாளர்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் ஒரு வார்டிற்கு 10 பேர் வீதம் 15 வார்டுகளுக்கு 150 பணியாளர்களை சாலைப் பணியாளர்களாக பணிபுரிய பணியமர்த்தப்பட்டுள்ளவர்கள்.	மண்டலம் - 4	150
		மொத்தம்	505

எனவே, மண்டலம்-4ல் பணிபுரியும் 1147 தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு இதனால் மன்றத்தீர்மானம் பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை-6ன் கடித எண். செ3/5476/2024-3, நாள்:02.05.2024ல் தெரிவித்துள்ள *corrigendum*ல் அரசாணை எண்.62 ல் சுட்டிக்காட்டப்பட்ட *The DA is linked to the Average Consumer Price Index number of the city for the year 2019/That is 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance*ன் படி அகவிலைப்படி ரூ.6593/-ம் மற்றும் *unskilled* தொழிலாளர்களுக்கு *Minimum Rate of Basic Wages* ன் படி ஒரு மாதத்திற்கு (ரூ.13000/- + ரூ.6593/-) ஆக மொத்தம் ரூ.19593/- மாத கூலி கணக்கிட்டு தினக்கூலியாக ரூ.753/- என கணக்கிடப்பட்டுள்ளது-

கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின், 10.07.2024 நாளிடட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்வித்துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் *(SHG)* மற்றும் *NMR* கீழ் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் *unskilled* தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே, 05.07.2023 முதல் பெற்று வந்த மாத *wages* ரூ.*17,867/-* என்ற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.687/- வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2024 முதல் மாதந்திர *wages* ரூ.19593/- என்ற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/- என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.1147/2025, நாள்.30.10.2025-ன்படி, மண்டலம் -4, தூய்மை துறையில் கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் 1147 தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள 01.09.2025 முதல் 30.11.2025 வரை மூன்று மாத காலத்திற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்-4 அவர்களின் ஒப்புதலில் மேற்கண்ட 1147 SHG தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 30.11.2025 அன்றுடன் முடிவடைவதால், மேலும் மூன்று மாத காலத்திற்கு (01.12.2025 முதல் 28.02.2026 வரை) மொத்தம் 1147 SHG பணியாளர்கள் தூய்மை பணியில் ஈடுபடுத்த ஆணையர் அவர்களுக்கும் மற்றும் மன்றத்துறைக்கு குறிப்பு வைக்க மண்டல அலுவலர்-4 அவர்களின், 12.11.2025 நாளிட்ட ஆணை பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு ஊதிய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது

அட்டவணை

துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு

வ.எண்	கோட்டம்	மொத்தம் அனுமதி பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை	தற்போது பணிபுரியும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை	மன்றத்தீர்மானம் பெறப்பட்ட SHG பணியாளர்கள் எண்ணிக்கை	ஓய்வு /இறப்பு காலிபணியிடங்கள்	தலைமை பொறியாளர் (SWM) அவர்களின் சுற்றறிக்கை நாள் :10.08.2023 (தி.க.மே.துந.க.எண். அ3/3974/2023)	தோராய செலவினம் ரூ.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	34	165	25	132	8	ரூ.753/-	ரூ.753/- X 1147 (SHG தூய்மை பணியாளர்கள்) X 90 நாட்கள் = ரூ.77732190/- (01.12.2025 முதல் 28.02.2026 வரை)
2	35	150	28	107	15		
3	36	130	16	107	7		
4	37	140	20	114	6		
5	38	103	28	69	6		
6	39	87	26	51	10		
7	40	93	29	52	12		
8	41	101	41	47	13		
9	42	102	48	48	6		
10	43	100	28	68	4		
11	44	94	20	69	5		
12	45	114	25	84	5		
13	46	99	18	77	4		
14	47	88	33	52	3		
15	48	93	44	38	11		
16	KDG	55	17	32	6		
மொத்தம்		1714	446	1147	121		

எனவே, மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள அண்டை வீட்டு குழுக்கள் (SHG) மூலமாக 1147 தூய்மை பணியாளர்களை பணிக்கு எடுத்துக்கொள்ள 01.12.2025 முதல் 28.02.2026 வரை மூன்று மாத காலத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

(அ)	மண்டலம் -4 , கோட்டம்-34 முதல் 48 வரை மற்றும் கே.டி.ஜியில் தூய்மை பணிகள் மேற்கொள்ள 1147 *SHG* பணியாளர்களை அண்டை வீட்டு குழுக்கள் *(SHG)* மூலமாக 01.12.2025 முதல் 28.02.2026 வரை மூன்று மாத காலத்திற்கு (90 நாட்கள்) எடுத்துக்கொள்ள அனுமதியும்,
(ஆ)	கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் அவர்களின் 10.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் 1147 நபர்கள் *x 90* நாட்கள் *x* ரூ.753/- = ரூ.*7,77,32,190/-* (ரூபாய் ஏழு கோடியே எழுபத்து ஏழு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து நூற்று தொண்ணூறு மட்டும்)க்கு அனுமதியும்,
(இ)	தூய்மை பணியில் ஈடுபட்டு வரும் *SHG* தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை ஆணையர் அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும்,
(ஈ)	தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் அரசாணை / சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும்,
(உ)	நிதி ஆலோசகர் மூலமாக ரூ.7,77,32,190/- (தலைப்பு எண்: 40-*41-03 payment to casual staff conservancy works*, கணக்கு குறியீடு எண்.210-*100*-601) நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,
(ஊ)	மன்ற தீர்மானம் பெறப்பெற்ற 1147 தற்காலிக தூய்மை பணியாளர்கள் விடுப்பு துய்க்கும் பட்சத்தில் 10 சதவீதம் பதிலி பணியாளர்களை பணியமர்த்துவதற்கு அனுமதி வேண்டியும்,
(எ)	மண்டலம்-4ல் பணிபுரியும் தற்காலிக தூய்மை பணியாளர்களில் *(SHG)* 60 வயதை கடந்த பணியாளர்கள் எவரும் பணிபுரியவில்லை என சான்றளிக்கப்படுகிறது.

மேற்கண்ட அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 11.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.204/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.599/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

ம.அ.7.ந.க.எண்.எச்2/1311/2025/01

ஆணையர் அவர்களின் 10.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1250/2025 **பொருள் எண்.98**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 7 - பகுதி-18,19 மற்றும் 20ல்அடங்கியுள்ள கோட்டம்-79 முதல் 93 வரை - சுய உதவி குழு (SHG) கீழ் பணியமர்த்தப்பட்ட 220 தற்காலிக சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 18.01.2026ல் முடிவடைகிறது - 21.01.2026 முதல் 18.01.2027 வரை மேலும் ஒருவருட காலத்திற்கு 220 தற்காலிக சுகாதாரப் பணியாளர்களை பணியமர்த்த மன்றத்தின் நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-7 (அம்பத்தூர்), பகுதி-*18, 19* மற்றும் 20 (கோட்டம் 79 முதல் 93 வரை) 15 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் சுமார் 97392 வீடுகள் உள்ளன. இங்கு டெங்கு, மலேரியா, சிக்குன் குனியா போன்ற கொசுவினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த கொசுப்புழுக்கள் வளரிடங்களை கண்டறிந்து அழிக்கும் பணிகளான கிணறு, கீழ்நிலை மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் தினந்தோறும் மருந்திடும் பணி (Sector Work) மழைநீர் கால்வாய், நீர்வழிகளில் வளரும் கொசுப்புழுவை அழிக்கும் வகையில் மருந்து தெளிக்கும் பணி, புகை மருந்து அடிக்கும் பணி, தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்கள் பறிமுதல் செய்யும் பணி மற்றும் பேரிடர் காலங்களில் அனைத்து பொது சுகாதார பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற எண்ணற்ற பொது சுகாதார துறை சார்ந்த அனைத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் 86கி.மீ. நீளமுள்ள பக்கவாட்டு கால்வாய்களும், 135 கி.மீ. நீளமுள்ள மழைநீர் கால்வாயும், 27 கி.மீ. நீளமுள்ள நீர்வழித்தடமும் உள்ளது. மேலும் இம்மண்டலத்தில் புகை பரப்பும் பணிக்கென 7 வாகனங்களும், 18 கைப்புகை போக்கிகளும், கொசு மருந்து தெளிக்க 17 கைத்தெளிப்பான்களும் உள்ளது, இப்பகுதிகளில் பூச்சி தடுப்பு பணியை மேற்கொள்ள ஒரு சிறு வட்டத்திற்கு *(Sector)* ஒரு தொழிலாளர் என ஒரு நாளைக்கு 80 வீடுகள் மற்றும் 1 வாரத்திற்கு 500 வீடுகள் என பிரிக்கப்பட்டு கொசு ஒழிப்பு பணியில் 220 தற்காலிக சுகாதார பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மண்டலம்-7ல் உள்ள நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 220 தற்காலிக சுகாதார பணியாளர்களை பணியமர்த்த ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டு மொத்தம் 220 எண்ணிக்கையில் தற்காலிக சுகாதார பணியாளர்களை பணியமர்த்தி நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 18.01.2026ல் முடிவடைகிறது. எனவே இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள தற்காலிக சுகாதார பணியாளர்களை 21.01.2026 முதல் 18.01.2027 வரை (12 மாதங்கள்) பணியில் ஈடுபடுத்த அனுமதி கோரப்படுகிறது.

கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் அவர்களின், 27.09.2023 நாளிட்ட குறிப்பு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 29.07.2025 நாளிட்ட சுற்றறிக்கையின்படி 01.04.2024 முதல் ரூ.687/- லிருந்து ரூ.753/- ஆக உயர்த்தி அந்தந்த

மண்டலத்திலேயே வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 1 முதல் 15 மண்டலங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி உயர்த்தப்பட்ட ஊதியம் வழங்கப்பட்டதை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களது 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின்படி முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர் சென்னை -6ன் கடித எண்.செ3/5476/2024-3 நாள் 02.05.2024ல் தெரிவித்துள்ள *Corrigendum*ல் அரசாணை எண்.62ல் சுட்டிக்காட்டப்பட்ட *The DA is linked to the Average Consumer Price index Number of the city for the year 2019. That is 161 points(with base year 2001=100)and for every raise of one point over and above 161 points an increase of Rs.37.25 per month shall be paid as dearness allowance*ன்படி அகவிலைப்படி ரூ.6593/-ம் மற்றும் *Unskilled* தொழிலாளர்களுக்கு *Minimum Rate of Basic wages*ன் படி ஒரு மாதத்திற்கு ரூ.13000/- என நிர்ணயித்துள்ளது(ரூ.13000/- + ரூ.6593/-) ஆகதொத்தம் ரூ.19593/- மாத கூலி கணக்கிட்டு, தினக்கூயாக ரூ.753/- என கணக்கிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின், 11.10.2024 நாளிட்ட சுற்றறிக்கையில் பணியாளர்கள் பணி செய்த நாட்களுக்கு மட்டும் தினக்கூலி வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ளதின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ்வரும் அனைத்து துறை, மண்டலங்களிலும் (கல்வித் துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின்(*SHG*) கீழ் பணிபுரியும் தற்காலிக சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் *Unskilled* தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே 05.07.2023 முதல் பெற்று வந்த மாத கூலி ரூ.17,867/- எனற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.687/- வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2024 முதல் மாதாந்திர கூலி ரூ.19593/- என்ற வீதத்தில் நாளொன்றுக்கு தினக்கூலி ரூ.753/- என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

எனவே,

அ) சுகாதார துறையில் சுகாதார பணிபுரியும் 220 தற்காலிக சுகாதாரப் பணியாளர்களை மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு 21.01.2026 முதல் 18.01.2027 வரை சுகாதாரபணியில் தற்காலிகமாக பணியமர்த்தி பணி மேற்கொள்ளவும் (19.01.2026 மற்றும் 20.01.2026 இரண்டு நாள் மட்டும் சம்பளம் இல்லா விடுப்பு)

ஆ) மண்டலம்-7 பகுதி-18, 19 மற்றும் 20ற்கு உட்பட்ட கோட்டம்-79 முதல் 93 வரை உள்ள 15 கோட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு நாளொன்றுக்கு ரூ.753/- வீதம் ஒரு வருட காலத்திற்கு 220 தற்காலிக சுகாதார பணியாளர்களை 21.01.2026 முதல் 18.01.2027 வரை (12 மாதங்கள்) பணியில் ஈடுபடுத்தவும்,

இ) இப்பணிக்கான செலவினத்தை அரசாணை எண்.(2D)36 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, நாள்.29.07.2024-ன்படி ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் (220 நபர்கள் X ரூ.753 X 363 நாட்கள்) ரூ.6,01,34,580/- (ரூபாய் ஆறு கோடியே ஒரு இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து ஐந்நூற்றி எண்பது மட்டும்) செலவினம் மேற்கொள்ளவும்,

ஈ) சுகாதார துறையின் பிரிவு குறியீட்டு எண்.30-32-02 கணக்கு தலைப்பு எண்.210-10-06-02 என்ற கணக்கு தலைப்பில் செலவினங்களை மேற்கொள்ளவும்,

உ) மேலும் மேற்கண்ட சுய உதவி குழு(SHG)பணியாளர்களின் ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் உயர்த்தி வழங்கப்படும் பொழுது அதனடிப்படையில் தினக்கூலியினை உயர்த்தி வழங்கவும்,

மேற்கண்ட அ முதல் உ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 11.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.208/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.609/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.11.பொ.சு.து.ந.க.எண்.எச்2/2328/2025

ஆணையர் அவர்களின் 08.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1251/2025 **பொருள் எண்.99**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-11 -பொது சுகாதாரத்துறை - கோட்டம்-143 முதல் 155 வரை - கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள சுய உதவிக் குழு வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக கள உறுப்பினர்கள் 238 நபர்களின் பணிக்காலம் 07.01.2026 உடன் முடி வடைவதால் மேலும் 10.01.2026 முதல் ஓராண்டு காலத்திற்கு சுய உதவிக்குழு மூலம் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வளசரவாக்கம் பகுதியானது 143 முதல் 155 வரையிலான 13 கோட்டங்களை உள்ளடக்கியது. இதில் தோராயமாக 3181 சாலைகள்/ தெருக்கள், 68,562 வீடுகளும் 1,63,619 குடியிருப்புகளும், சுமார் 4.33 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட பகுதிகளில் உள்ள கூவம் ஆறு, விருகம்பாக்கம் கால்வாய், நொளம்பூர் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி தடையற்ற நீரோட்டத்தை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்படாமல் இருக்க மற்றும் கொசு உற்பத்தியாகாமல் தடுக்கவும், மேலும் 280 கி.மீ நீளம் கொண்ட மழை நீர் வடிகால்வாய் மற்றும் ஆறு கால்வாய்களில் ஆகாயத் தாமரை அகற்றவும், கொசு உற்பத்தியை தடுக்க சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் மூலம் புகைப்பரப்பும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொது சுகாதாரத் துறை சார்ந்த நோய்கள் தடுப்பு பணிகளான மழை நீர் தேங்கும் வகையில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றுதல், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யும் பணிகள் பருவமழை தொடங்க இருப்பதால் கொசு உற்பத்தி தடுக்கும் பணிகளான மருந்து தெளித்தல், புகைப் பரப்பும் பணிகள் மேற்கொள்ள அவசியமாகிறது. மேலும், பேரிடர் காலங்களில் அனைத்து பொது சுகாதார பணியினை மேற்கொள்ளுதல் மற்றும் இது போன்ற எண்ணற்ற பொது சுகாதாரத் துறை சார்ந்த அனைத்து பணிகளையும் மேற்கொள்ளும் பணியாளர்கள் மிகவும் இன்றியமையாததாகும்.

மண்டலம்-11, கோட்டம்- 143 முதல் 155 வரையுள்ள 13 கோட்டங்களில் 60 பூங்காக்கள், 77 அரசு அலுவலக கட்டிடங்கள், அரசு மற்றும் தனியார் பள்ளிகள் 92, வழிபாட்டுத் தலங்கள் 164, புதிய கட்டிடங்கள் 810 மற்றும் 26 அம்மா உணவகங்கள் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, கோட்டம்-143 முதல் 155 வரை 13 கோட்டங்களில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை 68,562 உள்ளன. இதனை 140 குறு வட்டங்களாக பிரிக்கப்பட்டு ஒரு செக்டார் பணியாளர்களுக்கு 500 வீடுகள் வீதம் 140 செக்டார் பணியாளர்கள் பணி செய்கின்றனர். மேலும் சுகாதாரத் துறையில் பணிபுரியும் பணியாளர்களின் விவரம் கீழ்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிரந்தர பணியாளர்கள் 21 பணியாளர்கள் உள்ளனர். நிரந்தர பணியாளர்கள் தவிர்த்து சுகாதாரம் சம்மந்தப்பட்ட பணிகள் செய்ய தற்காலிக சுய உதவிக்குழு மூலம் 238 பணியாளர்கள் தேவைப்படுகின்றது. கோட்ட வாரியாக பணியாளர்களின் விவரங்கள்.

DIV	NO OF HOUSE	SECTOR HEALTH WORKER	FOGGING	SWD/SD LENGTH (KM)	SWD/ SPRAYERS	CANAL	OTHER WORKERS	PREMANENT LABOUR	GRAND TOTAL	REQUIREMENT OF SHG MEMBER
A	B	C	D	E	F	G	H	I	J (C+D+F+G+H+I)	K
143	7354	13	1	12	2	2	2	5	25	20
144	6119	11	2	8	2	2	2	1	20	19
145	5104	10	2	29	2	2	2	1	19	18
146	6158	13	2	18	2	2	2	3	24	21
147	6301	14	2	18	3	0	2	3	24	21
148	4829	11	2	26	3	2	2	1	21	20
149	4259	11	2	19	2	0	1	1	17	16
150	6502	13	2	27	3	0	2	2	22	20
151	4321	9	2	30	4	0	2	0	17	17
152	4433	9	1	22	2	0	3	1	16	15
153	4530	9	2	20	4	0	3	1	19	18
154	3323	7	2	28	5	0	‘2	1	17	16
155	5329	10	1	23	4	0	2	1	18	17
Grand Total	68562	140	23	280	38	10	27	21	259	238

கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை தி.க.மே.ந.க.எண்.அ3/3974/2023, நாள்.10.07.2024 மற்றும் தலைமை பொறியாளர் (தி.க.மே) துறை அவர்களின் சுற்றறிக்கையில் முதன்மைச் செயலர், தொழிலாளர் ஆணையர், சென்னை -6ன்கடிதஎண். செ3/5476/2024/3 நாள்.02.05.2024 ல் தெரிவித்துள்ள Corrigendumல் அரசாணை எண். 62 ல் சுட்டிக்காட்டப்பட்ட The DA is linked to the Average Consumer Price index Number of the city for the year 2019, That is 161 Points with base year 2001=100) and for every raise of point over and above 161 points an increase of R.37.25 per month shall be paid as dearness allowance ன் படி அகவிலைப்படி ரூ 6593/ மற்றும் Unskilled தொழிலாளர்களுக்கு Minimum Rate of Basic wageன் படி ஒரு மாதத்திற்கு ரூ.13,.000/- என நிர்ணயித்துள்ளது (ரூ.13000+6593) ஆக மொத்தம்ரூ.19593/- மாத கூலி தினக்கூலியாக ரூ.753/- என கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ளதின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் வரும் அனைத்து துறை மண்டலங்களிலும் (கல்வித் துறை உட்பட) அண்டை வீட்டு குழுவின் (SHG) சுகாதார பணியாளர்கள் மற்றும் Unskilled தொழிலாளர்களுக்கு அவர்கள் ஏற்கனவே 05.07.2023 முதல் பெற்று வந்த மாத wages ரூ.17,867/- என்ற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.687/- வழங்கியதை, மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டும், 01.04.2024 முதல் மாதந்திர Wages ரூ.19,593/- என்ற வீதத்தில் நாளொன்றிற்கு தினக்கூலி ரூ.753/- என உயர்த்தி வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணையின் படி சுய உதவி குழுக்களிலுள்ள பணியாளர்களுக்கு ரூ.687/- லிருந்து ரூபாய் 753/- உயர்த்தப்பட்ட தினக் கூலி வழங்க மண்டலம் 11ல் மண்டல அலுவலர் 11

அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு சுய உதவி குழுக்களிலுள்ள பணியாளர்களுக்கு தினக்கூலியாக வழங்கப்பட்டு வருகிறது.

மன்றத் தீர்மான எண்.563/2024, நாள்.31/12/2024ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை மண்டலம்-11, கோட்டம் 143 முதல் 155 வரை சுகாதார களப் பணியினை மேற்கொள்ள பணியமர்த்தப்பட்ட 238 தற்காலிக களப்பணியாளர்களின் 08.01.2025 முதல் 07.01.2026 வரை ஒரு வருட காலத்திற்கு நீடித்துப் பெறப்பட்ட பணிக்காலம் 07.01.2026 அன்றுடன் முடிவடைகிறது. மூன்று நிரந்தர பணியாளர்கள் கடந்த ஓராண்டு காலமாக பணிக்கு வரவில்லை. எனவே, மண்டலம்-11ல் சுகாதாரப் பிரிவில் சுய உதவிக் குழு மூலம் பணியமர்த்தப்பட்ட 238 தற்காலிக சுகாதாரப் பணியாளர்களை 10.01.2026 முதல் 09.01.2027 வரை ஓராண்டு காலத்திற்கு நியமித்துக்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

அ	அட்டவணையின் படி மண்டலம்-11, பகுதி-32, 33 மற்றும் 34-க் குட்பட்ட கோட்டங்களான 143 முதல் 155 வரையிலான 13 கோட்டங்களிலும் கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணிக்காக தற்காலிக மலேரியா பணியாளர்களை நாளொன்றிற்கு ரூ.753/-வீதம் சுய உதவிக் குழு மூலம் 238 தற்காலிக மலேரியா பணியாளர்களை 10.01.2026 முதல் 09.01.2027 வரை ஓராண்டு காலத்திற்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ளவும்,
ஆ	இப்பணிக்கான செலவினம் 238x365x753=6,54,13,110/- (ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து பதின் மூன்றாயிரத்து நூற்றி பத்து மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
இ	இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீடு 30-32-02 மற்றும் கணக்கு குறியீடு 210-10-06-02 நிரந்தர மற்றவர் சம்பளம் சுகாதார பணி என்ற தலைப்பின் 2026-2027 நிதியாண்டில் ரூ.6,54,13,110/- (ரூபாய் ஆறு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து பதின்மூன்றாயிரத்து நூற்றி பத்து மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யவும்,
ஈ	இப்பணிக்கான செலவினத்தை பிரிவு குறியீடு 30-32-02 மற்றும் கணக்கு குறியீடு 210-10-06-02 நிரந்தர மற்றவர் சம்பளம் சுகாதார பணி என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்,
உ	கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் ஆணை தி.க.மே.ந.க. எண். அ3/3974/2023, நாள் .10.07.2024-ன்படி ரூ.753/- வழங்குவதற்கும் 2026-2027 ஆம் நிதியாண்டில் இத்தொகையை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்பட்ட தினக்கூலியை அப்பணியாளர்களுக்கு வழங்குவதற்கு அனுமதியும், இதற்குரிய கூடுதல் தொகையினை மேற்கண்ட இனத்தில் குறிப்பிட்டுள்ள கணக்கு குறியீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

ஊ	இப்பணிக்கு ஒப்பம் கோருவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கையிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 11.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.205/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.600/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

தி.க.மே.து.நக.எண்.அ7/7647/2025

ஆணையர் அவர்களின் 10.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1252/2025 **பொருள் எண்.100**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - தூய்மை இந்தியா திட்டம் 2.0 – மண்டலம்-7ல் உள்ள அத்திப்பட்டு குப்பை கிடங்கில் 72,083 மெட்ரிக் டன் கூடுதலாக உலர் கழிவுகள் Bio-mining முறையில் மேற்கொள்ளும் பணிகுறைந்த ஒப்ப விழுக்காடு அளித்த ஒப்பந்ததாராரான திருவாளர்கள். Zigma Global Environ Solutions Private Limited அவர்கள் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி.

TNUIFSL மூலம் நியமிக்கப்பட்ட ஆலோசகர் *M/s.IPE Global* அவர்கள் 2017ஆம் ஆண்டில் சமர்ப்பித்த விரிவான சாத்தியக்கூறு அறிக்கையின்படி அத்திப்பட்டு தளத்தில் கழிவு அளவு 86,122 கன மீட்டர்கள் எனும் அறிக்கையின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி *24.09.2018* நாளிட்ட*Swachh Bharat Mission1.0 (SBM)* நிதியுதவியின் கீழ் உயிரி சுரங்கம் மூலம் அத்திப்பட்டு குப்பைக் கிடங்கு மீட்டெடுப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கூறிய ஒப்புதலுக்குப் பிறகு, அத்திப்பட்டில் குப்பை கிடங்கில் பையோ மைனிங் முறையில் மீட்டெடுக்கும் பணிக்கு ஒப்பம்பெறப்பட்டு 08.03.2019 அன்று *M/s. Srinivas Waste Management Private Limited* நிறுவனத்திற்கு 24 மாத ஒப்பந்த காலத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டது. இதன்படி இப்பணியினை முறையான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி அண்ணா பல்கலைக்கழகத்தை *PMC (Project Monitoring Consulting)* ஆக நியமித்தது. ஒப்பந்ததாரர் 28.05.2019 அன்று இப்பணியினை துவங்கினார். மேலும் ஒப்பந்தத்தின்படி பணியை முடிப்பதற்கான காலம் *28.05.2021* ஆகும்.

இந்நிலையில் அத்திப்பட்டு குப்பை கிடங்கில் ஆரம்ப மரபு கழிவு அளவு அளவீட்டு கணக்கெடுப்பு தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளில் அத்திப்பட்டு தளத்தில் கழிவுகளின் அளவில் ஏதேனும் மாற்றத்தை மதிப்பிடுவதற்காக ஒரு *DroneSurvey* மேற்கொள்ளப்பட்டது. திருவாளர்கள்.*Gridline Surveys and Geospatial Private Limited* அவர்களின் *Drone Survey* அறிக்கையில் மரபு கழிவு அளவு 1,07,811 கன மீட்டர் எனக் கண்டறியப்பட்டது இரண்டு ஆண்டுகளில் கழிவு அளவு 21,689 கன மீட்டர் (25.18%) அதிகரித்ததற்குக் காரணம், பையோ மைனிங் முறையின் பணிகள் நடவடிக்கைகள் தொடங்கும் வரை, அத்திப்பட்டு தளம் ஒரு பரிமாற்ற நிலையமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட பிறகு, மார்ச் 2020 முதல் ஆகஸ்ட் 2020 வரை வடகிழக்கு பருவமழை மற்றும் *COVID*-19 தொற்றுநோய் காரணமாக நாடு தழுவிய ஊரடங்கு காரணமாக ஒப்பந்ததாரரால் அந்த இடத்தில் பையோ மைனிங் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. அதன் பிறகு, கோவிட்-19 இன் இரண்டாவது அலையின் தொடக்கத்தாலும் அதைத் தொடர்ந்து ஊரடங்கு அமலில் இருந்ததாலும் திட்டம் மேலும் தாமதமானது. எனவே, ஒப்பந்ததாரரால் திட்டமிடப்பட்ட காலக்கெடுவின்படி திட்டத்தை முடிக்க முடியவில்லை,

மேலும் பணியை முடிக்கProject Monitoring Consulting மூலம் கால நீட்டிப்பு கோரியுள்ளார், ஒப்பந்ததாரர் 57,304 கன மீட்டர் கழிவுகளை பதப்படுத்தியுள்ளார், மீதமுள்ள 50,328 கன மீட்டர் கழிவுகளை PMC அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் இன்னும் பதப்படுத்தவில்லை. ஒப்பந்ததாரர் சமர்ப்பித்த நீட்டிப்பு கடிதம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் (Project Monitoring Consulting) கடிதம் மற்றும் தளத்தில் கூடுதல் மரபு கழிவுகள் தாமதம் மற்றும் குவிவதற்கான காரணங்கள் தொடர்பான மேலே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகளைக் கருத்தில் கொண்டு, Project Monitoring Consulting 1,07,811 கன மீட்டர் (LoA படி 86,122 கன மீட்டர் + இரண்டு ஆண்டு இடைவெளியில் திரட்டப்பட்ட 21,689 கன மீட்டர் கூடுதல் அளவு) முழு கழிவு அளவையும் பையோ மைனிங் முடிக்க 31.08.2022 வரை ஒப்பந்ததாரருக்கு நீட்டிப்பு வழங்க பரிந்துரைத்துள்ளது மற்றும் மன்ற தீர்மானம் பெறப்பட்டது.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், தூய்மை இந்தியா திட்டம் 2.0ன் 1வது மாநில உயர் அதிகாரக் குழு கூடுதல் அளவு 21,689 கன மீட்டர் பரப்பளவை பரிந்துரைத்து ஒதுக்கியது. இதற்காக ஏற்படும் கூடுதல் செலவு ரூ.1,51,82,300/- ஆகும். இது ஒரு கன மீட்டருக்கு ரூ.700/- என்ற விகிதத்தில் கணக்கிடப்படுகிறது . அண்ணா பல்கலைக்கழக சுற்றுச்சூழல் ஆய்வு மைய இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில், உயிரி சுரங்கம் மூலம் அகற்றப்பட்ட பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சியால் கொட்டப்படும் புதிய கழிவுகள் மற்றும் அத்தகைய கழிவுகளை திறந்தவெளியில் எரிப்பது கவனிக்கப்படுகிறது. புதிய கழிவுகளை கொட்டுவது சமீபத்தில் நிறுத்தப்பட்டாலும், மரபுவழி கழிவுகள் கிடங்கைச் சுற்றி அதிக அளவு புதிய கழிவுகள் குவிந்து கிடப்பதைக் காணலாம். எரிந்த மற்றும் புதிய கழிவுகளை இடத்திலிருந்து மாற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், மரபுவழி கழிவுகள் மீதமுள்ள இடத்தின் தற்போதைய நிலையை படம்பிடிக்க தளத்தின் வான்வழிப் புகைப்படத்தை எடுக்குமாறும், மேலும் தளத்தில் மீதமுள்ள மரபுவழி கழிவுகளை அளவிட ஒரு விளிம்பு கணக்கெடுப்பை நடத்தவும் பரிந்துரைக்கப்படுகிறது. முன்னதாக இந்த கணக்கெடுப்பை மேற்கொண்ட சென்னையைச் சேர்ந்த M/s.Gridline Survey, இந்த இடத்தில் மீதமுள்ள மரபுவழி கழிவுகளின் உண்மையான அளவை மதிப்பிட முடியும், மேலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, மண்டல அதிகாரி VII, அத்திப்பட்டு குப்பைக் கிடங்கின் 50000 மெட்ரிக் டன் மரபுக் கழிவுகளை சேகரித்து, தீ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றி அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார், மேலும் தற்போதுள்ள மரபுக் கழிவுகளை கொடுங்கையூர் குப்பைக் கிடங்கிற்கு மாற்றுவதற்கான உத்தரவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் கூறினார். திருவாளர்கள். Srinivas Waste Management Private Limited நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட மரபுக் கழிவுகள் அளவிட்டு அளிக்கப்பட்ட பணி முழுவதும் அகற்றப்பட்டு விட்டது. முதன்மைக் கழிவுகள் கொட்டப்பட்டதை மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

மேற்கூறியவற்றின் தொடர்ச்சியாக, சென்னை *M/s. Srinivas Waste Management Private Limited* அகற்றிய கழிவுகளின் அளவு மற்றும் அத்திப்பட்டு குப்பைக் கிடங்கில் தற்போதுள்ள கழிவுகள் குறித்து விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அண்ணா பல்கலைக்கழகத்திற்கு அறிவிக்கப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகத்தின் அறிக்கையின்படி மற்றும் *M/s. Gridline surveys and geospatial Pvt Ltd* ஆகியவற்றின் கணக்கெடுப்பின் அடிப்படையில் விவரங்கள் பின்வருமாறு:

"M/s. Gridline surveys and geospatial Pvt Ltd நடத்திய 15.03.2022 அன்று நடத்தப்பட்ட ஆரம்ப கணக்கெடுப்பின்படி, அளவு 1,07,632 *m3* (குவியல்களாக 57,*304 m3* அளவிடப்பட்டது + கான்டோர் கணக்கெடுப்பால் அளவிடப்பட்டது 50,*328 m3)* எனக் கண்டறியப்பட்டது, இது *1,07,811 m3* என்ற *DPR* அளவோடு ஒத்துப்போகிறது. அகற்றல் பதிவின் அடிப்படையில், *1,06,690 m3* திரையிடப்பட்டு அகற்றப்பட்டதாகக் காணப்படுகிறது, இதில் சமீபத்திய கணக்கெடுப்பின்படி அகற்றப்பட்ட உண்மையான அளவு *94,439m3* என்பது குறிப்பிடப்பட்டுள்ளது, இது மீட்டெடுக்கப்பட்ட பகுதியின் அடர்த்தியில் ஏற்பட்ட மாறுபாடு காரணமாகும். தள நிலைமையின் அடிப்படையில், 94,439 *m3* மரபு கழிவுகளின் ஒட்டுமொத்த இறுதி அளவு, *M/s. Srinivas Waste Management (P) Ltd* சென்னையால் அத்திப்பட்டு தளத்திலிருந்து திரையிடப்பட்டு அகற்றப்பட்டதாகக் கருதப்படுகிறது, இதில் 85,*296m3*க்கு ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டுள்ளது."

தற்போது தள நிலைமையின்படி, குறிப்பு அளவை விட அதிகமான மரபு கழிவுகளின் அளவு மதிப்பிடப்பட்டு 80,092 கன மீட்டர் எனக் கண்டறியப்பட்டது. கொட்டப்பட்ட மரபு கழிவுகள் கொடுங்கையூர் குப்பைக் கிடங்கிற்கு மாற்றப்பட வேண்டும், ஆனால் அதே போக்குவரத்து செலவு அதிகமாகும். எனவே செலவை மீதப்படுத்த அத்திப்பட்டு முற்றத்தில் உயிரி சுரங்கத்தை மேற்கொள்வது சாத்தியமாகும். 80,092 கன மீட்டர் மரபு கழிவுகளின் அளவை உயிரி சுரங்கம் மூலம் அகற்ற வேண்டும், இது அண்ணா பல்கலைக்கழகத்தால் *(Project Monitoring Consulting)* பரிந்துரைக்கப்பட்டது.

எனவே மதிப்பீட்டுத் தொகை பின்வருமாறு:

Estimate amount ={Volume x density x Awarded Biomining rate of Rs.963.23/MT at KDG}.

= 80,092m3 x 0.9 = 72,083 MT

= 80,092m3 x 963.23/MT x 0.9 = Rs 6,94,32,315/-

மன்றத் தீர்மான எண். *649/2025*, நாள்.*28.05.2025*-ன்படி., மரபுவழி கழிவுகளின் தோராயமான அளவு 72,083 மெட்ரிக் டன் ஆகும், இது புதிய ஒப்பந்தம் மூலம் உயிரி-சுரங்கப்பட வேண்டும் மற்றும் கொடுங்கையூர் குப்பைக் கிடங்கில் கொடுக்கப்பட்ட தற்போதைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.963.23க்கு செலவு கணக்கிடப்படுகிறது மற்றும் மொத்த மதிப்பு ரூ.6,94,32,315/- ஆகும்.

எனவே,

1. **அத்திப்பட்டு குப்பைக் கிடங்கை மீட்டெடுப்பதற்காக** 72,083 **மெட்ரிக் டன் மரபு கழிவுகளை பையோ மைனிங் முறையில் அகற்றுவதற்கு ரூ.**6,94,32,315/- **(ரூபாய் ஆறு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து முப்பத்திரெண்டாயிரத்து முந்நூற்று பதினைந்து மட்டும்)செலவில் நிர்வாக அனுமதி வழங்குவதற்கும்,**

2. **மேற்கண்ட பணிகளுக்கான செலவினங்களை, திடக்கழிவு மேலாண்மைத் துறை கணக்கு குறியீடு** 40-41-02 **இன் கீழ், கணக்கு குறியீடு-**412-40-05-08 *(SWM* **துறை கட்டிடங்கள்) ல் மேற்கொள்ளவும்.**

மேற்கண்ட இனங்களுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து மேலே கண்டுள்ள பணிக்கான தொழில்நுட்ப தகுதிக்கான ஒப்பம் 12.08.2025 **அன்று திறக்கப்பட்டதில் இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு,**

வரிசை எண்	**ஒப்பந்ததாரரின் பெயர்கள்**	**தொழில் நுட்ப ஆவணம் தகுதி பெற்றது (அ) தகுதி பெறவில்லை**
1	**திருவாளர்கள்.** *Zigma Global Environ Solutions Private Limited*	**ஒப்பம் தகுதி பெற்றது**
2	**திருவாளர்கள்.** *Tharuni Associates*	**ஒப்பம் தகுதி பெற்றது**

இதில் திருவாளர்கள்*Zigma Global Environ Solutions Private Limited* **மற்றும் திருவாளர்கள்.** *Tharuni Associates* **ஒப்பத்ததாரர்களின் தொழில் நுட்ப ஆவணங்கள் தகுதி பெற்று விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில்** *(Financial Bid)* **அனுமதிக்கப்பட்டது.**

மேலே கண்டுள்ள இப்பணிக்கான விலைப்புள்ளிக்கான ஒப்பம் 07.10.2025 **அன்று திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன.**

வரிசை எண்	**ஒப்பந்ததாரரின் பெயர்கள்**	**உலர் கழிவுகளின் அளவு**	**பையோ மைனிங் தொகை** (ஒரு *MT)*	**மொத்த ஒப்ப தொகை**	**ஒப்ப சதவீதம்**
1.	**திருவாளர்கள்** Zigma Global Environ Solutions Private Limited	72,083MT	986.00	**ரூ.**7,10,73,838.00**பை**	**(+) 2.36% அதிகம்**
2.	**திருவாளர்கள்** Tharuni Associates	72,083MT	1220.00	**ரூ.**8,79,41,260.00**பை**	**(+)25.94% அதிகம்**

மேற்படி விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *Zigma Global Environ Solutions Private Limited* அளித்துள்ள ஒப்ப தொகை ரூ.***7,10,73,838/-*** ஆகும், இது அலுவலகதொகையானரூ.***6,94,32,315/-*** விட ***(+) 2.36%*** அதிகம் ஆகும்.

திருவாளர்கள். *Zigma Global Environ Solutions Private Limited (L1)* ஒப்பந்தாரரிடம் விலை குறைப்பு கோரப்பட்டதில், 04.11.2025 அன்று பெறப்பட்ட கடிதத்தில் ஒப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டு விகிதம் கொடுங்கையூர் திட்டத்திலிருந்து பெறப்பட்ட விலை தொகை இது இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகும். இந்த காலகட்டத்தில், உள்கட்டமைப்பு மற்றும் கழிவு மேலாண்மைத் துறையில் பல முக்கியமான உள்ளீட்டு அளவுகள் கணிசமான செலவு அதிகரிப்பைக் கண்டுள்ளது. போக்குவரத்து மற்றும் உபகரண செயல்பாட்டு செலவுகள் மற்றும் டீசல் விலைகள் கணிசமாக அதிகரித்துள்ளன. மின்சார கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன இதனால் மேலும் விலைக்குறைப்பிற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை.

எனவே விவரங்கள் கீழ்வருமாறு.

வரிசை எண்	ஒப்பந்ததாரரின் பெயர்கள்	உலர் கழிவுகளின் அளவு	பையோ மைனிங் தொகை (ஒரு *MT)*	மொத்த ஒப்ப தொகை	ஒப்ப சதவீதம்
1.	திருவாளர்கள் Zigma Global Environ Solutions Private Limited	72,083MT	986.00	ரூ.7,10,73,838.00பை	(+) 2.36% அதிகம்

மேற்படி விலைப்புள்ளிக்கான ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்ததாரரான திருவாளர்கள். *Zigma Global Environ Solutions Private Limited* பேச்சுவார்த்தைக்கு பிறகு அளித்துள்ள இறுதி ஒப்ப தொகைரூ.***7,10,73,838/-*** ஆகும், இது அலுவலக தொகையை விட ***(+) 2.36%*** அதிகம் ஆகும்.இதனை ஏற்று 10.11.2025 அன்று ஒப்ப கூர்ந்தாய்வு குழு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தூய்மை இந்தியா திட்டம் 2.0வின் 10வது *State High Powered Committee*. பொருள் எண்.22ல், நாள்.15.10.2025-ன்படி மண்டலல் 7ல் உள்ள அத்திப்பட்டு குப்பை கிடங்கில் 72,083 மெட்ரிக் டன் கூடுதலாக உலர் கழிவுகள் *Bio-mining* முறையில் மேற்கொள்ளும் பணிக்கு கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இடத்தின் பெயர்	கூடுதல் உலர் கழிவுகளின் அளவு *(MT)*	பையோ மைனிங் செயலாக்க கட்டணம் ரூ.550/- (ஒரு *MT)*	*RDF* மற்றும் *Inert* போக்குவரத்து செலவு	மொத்த பையோ மைனிங் கட்டணம்
		(ரூ. கோடியில்)		
அத்திப்பட்டு	72,083	3.960	2.983	6.943

நிதியின் பங்களிப்பு *(Funding Pattern)*

Dept	Category of population	Funding Pattern	Project Cost	Project cost @ Rs.550/MT	GoI Share	State Share	ULB share including Transportation cost for RDF and Inert
			(Rs. In crores)				
GCC	> 10 lakhs	25% : 16% : 59%	6.943	3.960	0.99	0.63	5.323

மேற்கண்டவாறு தூய்மை இந்தியா திட்டம் *2.0*ன் நிதியில் மேற்கொள்ள 15.10.2025 அன்று நடத்தப்பட்ட *10*வது மாநில உயர் அதிகாரக் குழுவில் பரிந்துரைக்கப்பட்டது.

எனவே,

1. மண்டலல் 7ல் உள்ள அத்திப்பட்டு குப்பை கிடங்கில் 72,083 மெட்ரிக் டன் கூடுதலாக உலர் கழிவுகள் Bio-mining முறையில் மேற்கொள்ளும் பணிமேற்கொள்ள குறைந்த ஒப்ப விழுக்காடு அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் Zigma Global Environ Solutions Private Limited அவர்களுக்கு பையோ மைனிங் செயலாக்க தொகை ஒரு மெட்ரிக் டன் ரூ.986/-க்கு மொத்த ஒப்பத்தொகை ரூ.7,10,73,838/- (ரூபாய் ஏழு கோடியே பத்து இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து எட்டு நூற்று முப்பத்தி எட்டு மட்டும்)க்கு அனுமதியும் மற்றும் பணி ஆணை வழங்குவதற்கும்,
2. மேற்கூறிய பணிகளுக்கு ஆகும் செலவினை Swachh Bharat Mission 2.0 Grants நிதியில் பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 11.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.206/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.601/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

திக.மே.நக.எண்.அ7/7816/2025

ஆணையர் அவர்களின் 11.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1253/2025 **பொருள் எண்.101**

பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மைத் துறை - பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் மண்டலங்கள் 4,7 மற்றும் 8ல் 1000 எண்ணிக்கையில் 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட Hot dip Galvanized Compactor Bins கொள்முதல் செய்ய பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சியில், 12 மண்டலங்களில் (மண்டலங்கள் 1, 2, 3, 5, 6, 9, 10, 11, 12, 13, 14 மற்றும் 15) மற்றும் தனியார் நிறுவனங்களால் தூய்மைப்பணி பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீதமுள்ள 3 மண்டலங்களில் (மண்டலங்கள் 4, 7 மற்றும் 8) பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 இன் படி, *"Secondary waste storage capacities should be designed to accommodate at least double the expected daily flow of waste that is the storage capacity should be 200% of the capacity daily in flow of waste".*

ஈரமான மற்றும் உலர்ந்த கழிவுகளை தனித்தனியாக சேமிக்க ஒரு இடத்தில் இரண்டு தொட்டிகள் இருக்க வேண்டும்.

மேலும், குப்பை நிரம்பி வழிதல் இல்லாமல் தொட்டியின் சுற்றுப்புறத்தை வைத்திருக்க, நடைமுறை கணிப்புகளின்படி எப்போதும் கூடுதல் எண்ணிக்கையிலான தொட்டிகள் வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் நடைமுறையின்படி, மூன்று மண்டலங்களிலிருந்து (4, 7 மற்றும் 8) பெறப்படும் கழிவுகளை *Secondary collection* சேகரிப்புக்காக, இது போதுமானதாக இல்லை மற்றும் அடிக்கடி தொட்டிகள் பெரும்பாலான இடங்களில் நிரம்பி வழிகின்றன, மேலும் தொட்டி நிரம்பி வழிவது மற்றும் சேதமடைந்த தொட்டிகளை மாற்றுவது குறித்து பொதுமக்களிடமிருந்து ஏராளமான புகார்கள் பெறப்படுகின்றன.

மண்டலம் 4, 7 மற்றும் 8-களுக்கு 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட *Hot dip Galvanized Compactor Bins* பின்வருமாறு தேவைப்படுகிறது;

மண்டலம்	தேவைப்படும் எண்ணிக்கை
மண்டலம் 4	302 Nos.
மண்டலம் 7	200 Nos.
மண்டலம் 8	390 Nos.
கையிருப்பு வைப்பதற்கு	108 Nos.
மொத்தம்	1000 Nos.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 1000 எண்ணிக்கை தேவைப்படுகிறது. மண்டலங்கள் 4, 7 மற்றும் 8-க்கு 1100 லிட்டர் கொள்ளளவு

கொண்ட *Hot dip Galvanized Compactor Bins* தலா *Rs.42,000/-* (வரி உட்பட) என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம் 4, 7 மற்றும் 8ற்கு தேவைப்படும் 1000 எண்ணிக்கை 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட Hot dip Galvanized Compactor Bins கொள்முதல் செய்வதற்கான நிர்வாக ஒப்புதல் ரூ.4,20,00,000/-(ரூபாய் நான்கு கோடியே இருபது இலட்சம் மட்டும்) பின்னேற்பு நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மண்டலம் 4, 7 மற்றும் 8ற்கு தேவைப்படும் 1000 எண்ணிக்கை 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட Hot dip Galvanized Compactor Bins கொள்முதல் செய்வதற்கு நிலைக்குழுக்களின் பின்னேற்பு அனுமதி எதிர்நோக்கி மின்னணு ஒப்பங்கள் (open E-tender) கோரியதற்கு பின்னேற்பு அனுமதியும்,
3. இக்கொள்முதலுக்கான செலவின தொகையினை கணக்கு தலைப்பு எண்.410-40-80-00 (Compost Bin)ல் மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 11.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.207/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் பின்னேற்பு அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.602/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

TVKNGR/361/2025-ADMIN(ENGINEERING)-E1

ஆணையர் அவர்களின் 10.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1254/2025 **பொருள் எண்.102**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-6, கோட்டம்-74, பெரம்பூர், Tank Bund சாலையில் புதியதாக ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் கட்டும் பணிக்கு 2024–25 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-74, பெரம்பூர், *Tank Bund* சாலையில் புதியதாக ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் கட்டும் பணிக்கு தலைமை பொறியாளர் (கட்டடம்) அவர்களின் 18.11.2025 நாளிட்ட தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு கீழ்கண்டவாறு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	கோட்டம் எண்.	பணி/சாலையின்பெயர்	பணியின் விவரம்	மதிப்பீடு தொகை(ரூ)
1	74	பெரம்பூர், *Tank Bund* சாலை	புதியதாக ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் கட்டும் பணி.	ரூ.2,77,00,000.00
			மொத்தம்	ரூ.2,77,00,000.00

2	பரிந்துரை செய்தவரின் விவரம்	செயற்பொறியாளர்/மண்டலம்-6
3	எந்த துறைக்காக செயலாக்கம்	மண்டலம்-6
4	சமந்தப்பட்ட துறையால் அனுமதி	ஆம்
5	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த செயல்முறை ஆணை எண் மற்றும் நாள்	தலைமை பொறியாளர் (கட்டடம்) T.S.No. 40/2025, நாள்-18.11.2025
6	மிதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைபட்டியல் முன் வைத்து தயாரிக்கபட்டது	2025-26 ஆம் ஆண்டின் அலுவலக விலைபட்டியலின்படி தயாரிக்கபட்டது
7	மதிப்பீட்டு தொகை	ரூ. 2,77,00,000.00
(அ)	பணி செலவீனம் மட்டும்	ரூ. 2,23,71,139.54
(ஆ)	மற்ற எதிர்பாரா செலவு 2.5%	ரூ. 5,19,073.94
(இ)	சரக்கு மற்றும் சேவை வரி18%	ரூ 40,26,805.12
(ஈ)	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 1%	ரூ. 2,23,711.40
(உ)	ஆலோசனை கட்டணம்	ரூ. 5,59,270.00
(ஊ)	மதிப்பீட்டின்மொத்ததொகை	ரூ. 2,77,00,000.00

8	மழைநீர்வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும்	இல்லை
9	ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	பொருந்தாது
10	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
11	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	வார்டு குழு மண்டலம்-6ன் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது
12	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதியதாக அமைக்கப்பட்டுள்ளது
13	கள ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? அதன் ஆய்வு விவரம் குறிப்பிடுக	ஆம்
14	நிதியின் மூலதன்மை	மூலதனநிதி *20-21-07/*
(அ)	வரவு செலவு ஒதுக்கீடு	ரூ.----------
(ஆ)	மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி	ரூ.----------
(இ)	மீதமுள்ளநிதி	ரூ.----------
	இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ.2,77,00,000.00

எனவே, மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-74, பெரம்பூர், Tank Bund சாலையில் புதியதாக ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் கட்டும் பணிக்காக மதிப்பீட்டு தொகை ரூ.2,77,00,000/-க்கு நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.655/2025ன்படி சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

TVKNGR/382/2025-ADMIN(ENGINEERING)-E1

ஆணையர் அவர்களின் 10.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1255/2025 **பொருள் எண்.103**

பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-6, கோட்டம்-76, செல்லப்பா தெருவில் புதியதாக சென்னை துவக்கப்பள்ளி கட்டிடம் கட்டும் பணிக்கு 2025–26 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17A, கோட்டம்-76, செல்லப்பா தெருவில் புதியதாக சென்னை துவக்கப்பள்ளி கட்டிடம் கட்டும் பணிக்கு கீழ்கண்டவாறு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	கோட்டம் எண்.	பணி/சாலையின் பெயர்	பணியின் விவரம்	மதிப்பீடுதொகை(ரூ)
1	76	செல்லப்பா தெரு	புதியதாக சென்னை துவக்கப்பள்ளி கட்டிடம் கட்டும் பணி	ரூ.4,58,00,000.00
			மொத்தம்	**ரூ.4,58,00,000.00**

2	பரிந்துரை செய்தவரின் விவரம்	செயற்பொறியாளர்/மண்டலம்-6
3	எந்ததுறைக்காக செயலாக்கம்	மண்டலம்-6
4	சமந்தப்பட்ட துறையால் அனுமதி	ஆம்
5	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த செயல்முறை ஆணை எண் மற்றும் நாள்	தலைமைபொறியாளர் (பொது) T.S.No. /2025, நாள்-
6	மிதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைபட்டியல் முன்வைத்து தயாரிக்கபட்டது	2025-26 ஆம் ஆண்டின்அலுவலக விலைபட்டியலின்படி தயாரிக்கபட்டது
7	மதிப்பீட்டு தொகை	ரூ.4,58,00,000.00
(அ)	பணிசெலவீனம்மட்டும்	ரூ.3,67,99,671.00
(ஆ)	மற்ற எதிர்பாராசெலவு 2.5%	ரூ. 8,88,400.00
(இ)	சரக்கு மற்றும் சேவை வரி18%	ரூ 66,23,941.00
(ஈ)	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 1%	ரூ. 3,67,997.00
(உ)	ஆலோசனை கட்டணம் 2.5%	ரூ. 9,19,992.00
(ஊ)	மின் இணைப்பு கட்டணம்	ரூ 2,00,000.00
(எ)	மதிப்பீட்டின்மொத்ததொகை	ரூ.4,58,00,000.00

8	மழைநீர்வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியாஅல்லது சாலைப்பகுதியா அதன் அளவு குறிப்பிடவும்	இல்லை
9	ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒருமீட்டருக்கு ஆகும் செலவு	பொருந்தாது
10	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
11	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	வார்டு குழு மண்டலம்-6ன் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது
12	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	புதியதாக அமைக்கப்படவுள்ளது.
13	கள ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? அதன் ஆய்வு விவரம் குறிப்பிடுக	ஆம்
14	நிதியின்மூலதன்மை	மூலதனநிதி *20-21-07/412-410-401 – Primary School*
(அ)	வரவுசெலவுஒதுக்கீடு	ரூ.
(ஆ)	மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கபட்ட நிதி	ரூ.
(இ)	மீதமுள்ள நிதி	ரூ.
	இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ.4,58,00,000.00

எனவே, மண்டலம்-6, பகுதி-*17A*, கோட்டம்-76, செல்லப்பா தெருவில் புதியதாக சென்னை துவக்கப்பள்ளி கட்டிடம் கட்டும் பணிக்காக மதிப்பீட்டு தொகை ரூ.4,58,00,000/-க்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.654/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".

ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.607/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

க.து.நக.எண்.பி1/2901/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1256/2025 **பொருள் எண்.104**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 02, வார்டு -15 மணலி புதுநகர் 80 அடி சாலையில் புதியதாக சமுதாயக்கூடம் கட்டும் பணிக்காக திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம் - 02, வார்டு -15 மணலி புதுநகர் 80 அடி சாலையில் புதியதாக சமுதாயக்கூடம் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 18.07.2025. 2. மன்ற தீர்மானம் எண் : 850/2025, நாள் : 30.07.2025.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 02.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 6,23,31,210.02
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 1,12,19,617.80
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 6,23,312.10
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 6,23,312.10
	(உ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 2,02,547.98
	மொத்தம் (Rounded Off)	ரூ. 7,50,00,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 16.10.2025. 2. தினமலர் 15.10.2025. 3. டெக்கான் க்ரோனிக்கல் 15.10.2025.
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	30.10.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Community Centre (20 - 28 - 00 / 412 - 400 - 603)

9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து *15/30* நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு *(e-Tender)* ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *31.10.2025* அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களில் திருவாளர். *Gajalakshmi Construction*., அவர்கள் தகுதி இல்லாமையால் நிராகரிக்கப்பட்டார். மற்ற ஒப்பந்ததாரர் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர் என்று அறியப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2024-2025*** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	*2024-2025*ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Thomas Iyadurai Infrastructure Pvt Ltd	6,23,31,210.02	6,60,64,849.48	(+) 5.99 % அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர். *Thomas Iyadurai Infrastructure Pvt Ltd*., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	*L1* ஒப்பந்ததாரர் *2024-2025*ஆம் ஆண்டு *SOR*-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள்*.13.11.2025*	ரூ. *6,57,53,193.43 (+) 5.49 %* அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள் *13.11.2025*	ரூ. *6,53,85,439.29 (+) 4.90 %* அதிகம்

இதன்படி, மண்டலம் - 02, வார்டு -15 மணலி புதுநகர் 80 அடி சாலையில் புதியதாக சமுதாயக்கூடம் கட்டும் பணிக்காக 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.90% அதிகம், ஒப்பத் தொகை ரூ.6,53,85,439.29 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,17,69,379.07ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.7,71,54,818.00- க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூபாய்) *(A)*	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் *(+) 4.90 %* சேர்த்து (ரூபாய்) *(B)*
1	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. *6,23,31,210.02*	ரூ. *6,53,85,439.29*
2	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி *18%*	ரூ. *1,12,19,617.80*	ரூ. *1,17,69,379.07*
3	(இ) த.நா.க.தொ.ந.வா. *1%*	ரூ. *6,23,312.10*	ரூ. *6,23,312.10*
4	(ஈ) தரக்கட்டுப்பாடு *1%*	ரூ. *6,23,312.10*	ரூ. *6,23,312.10*
5	(உ) எதிர்பாரா செலவு *2.50%*	ரூ. *2,02,547.98*	ரூ. *2,02,547.98*
	மொத்தம் *(Rounded Off)*	ரூ. *7,50,00,000.00*	ரூ. *7,86,03,991.00*
		கூடுதல் தொகை *(B- A)*	ரூ. *36,03,991.00*

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.90%, 2024-25 ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.7,86,03,991.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.7,86,03,991.00-க்கு நிர்வாக அனுமதியும்,

2. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணி மதிப்பு தொகையை விட (+)4.90% அதிகம், ஒப்பத் தொகை ரூ.6,53,85,439.29 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,17,69,379.07ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.7,71,54,818.00-க்கு (ரூபாய் ஏழு கோடியே எழுபத்தோரு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து எண்ணூற்று பதினெட்டு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்:Community Centre (20 - 28 - 00/ 412 - 400 -603) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.633/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

‘’ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.604/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

கதுநக.எண்.பி1/2741/2025

ஆணையர் அவர்களின் 08.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1257/2025 **பொருள் எண்.105**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 04, வார்டு - 38, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பின்புறம் உள்ள லூப் ப்ளான்ட் ரோடு, IOC நிறுவனத்தின் எதிரில் மற்றும் CISF குடியிருப்பு அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி நிலத்தில் Block No : 65, 66, Survey No : 3860-ல் இந்து, கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்களுக்கான மயான பூமி அமைக்கும் பணிக்காக திருவாளர். M Cube Infra., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம் - *04*, வார்டு - *38*, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பின்புறம் உள்ள லூப் ப்ளான்ட் ரோடு, *IOC* நிறுவனத்தின் எதிரில் மற்றும் *CISF* குடியிருப்பு அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி நிலத்தில் *Block No : 65, 66, Survey No : 3860-* இந்து, கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்களுக்கான மயான பூமி அமைக்கும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : *22.09.2025*. 2. மன்ற தீர்மானம் எண் : *1071/2025*, நாள் : *29.09.2025*.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - *04*.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	*2024-2025* ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 7,65,83,576.40
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 1,37,85,043.75
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 7,65,835.76
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 7,65,835.76
	(உ) எரியூட்டு உபகரணங்கள்	ரூ. 50,00,000.00
	(ஊ) மின்சாரம் மற்றும் பிற இனங்கள்	ரூ. 6,00,000.00

	(எ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 4,99,708.32
	மொத்தம் (Rounded Off)	ரூ. 9,80,00,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 02.10.2025. 2. தினமலர் 01.10.2025. 3. தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 01.10.2025.
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	30.10.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Health Department Buildings (20 - 28 - 00 / 412 - 400 - 301)
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	மூன்று (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 31.10.2025 அன்று மூன்று ஒப்பங்கள் பெறப்பட்டன. திருவாளர். Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., மற்றும் திருவாளர். Thirumalagiri Infra Projects Pvt Ltd., அவர்கள் தொழில் நுட்ப தகுதியில்லாமையால் நிராகரிக்கப்பட்டார்கள். மற்ற ஒப்பந்ததாரர் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர் என்று அறியப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு **2024-2025** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	M Cube Infra	7,65,83,576.40	8,15,61,508.87	(+) 6.50% அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர். M Cube Infra., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு :

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	L1 ஒப்பந்ததாரர் 2024-2025ஆம் ஆண்டு SOR-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள் **25.11.2025**	ரூ. 8,03,36,171.64 (+) 4.90 % அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள் 26.11.2025	ரூ. 8,00,06,862.27 (+) 4.47 % அதிகம்

இதன்படி, மண்டலம் - 04, வார்டு - 38, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பின்புறம் உள்ள லூப் ப்ளான்ட் ரோடு, *IOC* நிறுவனத்தின் எதிரில் மற்றும் *CISF* குடியிருப்பு அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி நிலத்தில் *Block No: 65, 66, Survey No : 3860*-ல் இந்து, கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்களுக்கான மயான பூமி அமைக்கும் பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.47% அதிகம், ஒப்பத் தொகை ரூ.8,00,06,862.27 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,44,01,235.20ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,44,08,097.00- க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு *2024*-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூபாய்) *(A)*	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.47 % சேர்த்து (ரூபாய்) *(B)*
1	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. *7,65,83,576.40*	ரூ. *8,00,06,862.27*
2	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி *18%*	ரூ. *1,37,85,043.75*	ரூ. *1,44,01,235.20*
3	(இ) த.நா.க.தொ.ந.வா. *1%*	ரூ. *7,65,835.76*	ரூ. *7,65,835.76*
4	(ஈ) தரக்கட்டப்பாடு *1%*	ரூ. *7,65,835.76*	ரூ. *7,65,835.76*
5	(உ) எரியூட்டு உபகரணங்கள்	ரூ. *50,00,000.00*	ரூ. *50,00,000.00*
6	(ஊ) மின்சாரம் மற்றும் பிற இனங்கள்	ரூ. *6,00,000.00*	ரூ. *6,00,000.00*
7	(எ) எதிர்பாரா செலவு *2.50%*	ரூ. *4,99,708.32*	ரூ. *4,99,708.32*
	மொத்தம் *(Rounded Off)*	ரூ. *9,80,00,000.00*	
இப்பணிக்காக ஒப்புதல் அளிக்கப்படும் மொத்த தொகை			ரூ.9,99,00,000.00

இப்பணிக்கு 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி (+) 4.47% அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.9,99,00,000.00ஆகும்.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.9,99,00,000.00-க்கு நிர்வாக அனுமதியும்,

2. மேற்கண்ட பணிக்காக 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணி மதிப்பு தொகையை விட (+)4.47% அதிகம், ஒப்பத் தொகை ரூ.8,00,06,862.27 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,44,01,235.20ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.9,44,08,097.00-க்கு (ரூபாய் ஒன்பது கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து எட்டாயிரத்து தொண்ணூற்று ஏழு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். M Cube Infra., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

3. இப்பணிக்கான மொத்த செலவீனத் தொகையான ரூ.9,99,00,000.00-யினை கணக்கு குறியீட்டு எண் : Health Department Building (20 - 28 - 00 / 412 - 400 - 301) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.640/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.606/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

க.து.நக.எண்.பி1/2740/2025

ஆணையர் அவர்களின் 18.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1258/2025 **பொருள் எண்.106**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 11, வார்டு -152 வளசரவாக்கம், அம்பேத்கர் சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணிக்காக திருவாளர். Sri Lakshana Foundation., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம் - 11, வார்டு -152 வளசரவாக்கம், அம்பேத்கர் சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 17.09.2025. 2. மன்ற தீர்மானம் எண் : 1056/2025, நாள் : 29.09.2025.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 11.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 6,11,30,233.49
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 1,10,03,442.03
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 6,11,302.33
	(ஈ) வடிவமைப்பு மற்றும் ஆலோசனை கட்டணங்கள் 2.50%	ரூ. 18,03,341.89
	(உ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 14,51,680.26
	மொத்தம் (Rounded Off)	ரூ. 7,60,00,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 02.10.2025. 2. தினமலர் 01.10.2025. 3. தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 01.10.2025
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	30.10.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Community Centre (20-28-00/412-400-603)

9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து *15/30* நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	மூன்று *(e-Tender)* ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *31.10.2025* அன்று மூன்று ஒப்பங்கள் பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களில் திருவாளர். *Gajalakshmi Construction.*, மற்றும் திருவாளர். *PTM Projects Pvt Ltd.*, அவர்கள் தகுதி இல்லாமையால் நிராகரிக்கப்பட்டார்கள். மற்ற ஒப்பந்ததாரர் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர் என்று அறியப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு *:*

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2024-2025*** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	***2024-2025***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Sri Lakshana Foundation	6,11,30,233.49	6,54,09,349.83	(+) 7.00 % அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர். *Sri Lakshana Foundation.*, அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு *:*

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	*L1* ஒப்பந்ததாரர் *2024-2025*ஆம் ஆண்டு *SOR*-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள். *13.11.2025*	ரூ. *6,41,86,745.16 (+) 5.00 %* அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள் *13.11.2025*	ரூ. *6,41,80,632.14 (+) 4.99 %* அதிகம்

இதன்படி, மண்டலம் - 11, வார்டு -152 வளசரவாக்கம், அம்பேத்கர் சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணிக்காக *2024*-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.99% அதிகம், ஒப்பத் தொகை ரூ.6,41,80,632.14 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,15,52,513.78ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.7,57,33,146.00- க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூபாய்) *(A)*	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் *(+) 4.99 %* சேர்த்து (ரூபாய்) *(B)*
1	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. *6,11,30,233.49*	ரூ. *6,41,80,632.14*
2	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி *18%*	ரூ. *1,10,03,442.03*	ரூ. *1,15,52,513.78*
3	(இ) த.நா.க.தொ.ந.வா. *1%*	ரூ. *6,11,302.33*	ரூ. *6,11,302.33*
4	(ஈ) வடிவமைப்பு மற்றும் ஆலோசனை கட்டணங்கள் *2.50%*	ரூ. *18,03,341.89*	ரூ. *18,03,341.89*
5	(உ) எதிர்பாரா செலவு *2.50%*	ரூ. *14,51,680.26*	ரூ. *14,51,680.26*
	மொத்தம் *(Rounded Off)*	ரூ. *7,60,00,000.00*	ரூ. *7,95,99,470.00*
		கூடுதல் தொகை *(B- A)*	ரூ. *35,99,470.00*

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.99%, 2024-25 ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.7,95,99,470.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.7,95,99,470.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணி மதிப்பு தொகையை விட (+)4.99% அதிகம், ஒப்பத் தொகை ரூ.6,41,80,632.14 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,15,52,513.78ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.7,57,33,146.00-க்கு (ரூபாய் ஏழு கோடியே ஐம்பத்து ஏழு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து நூற்று நாற்பத்து ஆறு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Sri Lakshana Foundation., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. மேற்கண்ட சமூக நலக்கூடம் கட்டும் இடத்தின் வகைப்பாட்டினை ருத்ரபூமி என்கிற வகைப்பாட்டிலிருந்து நத்தம் என்ற வகைப்பாட்டிற்கு மாற்றம் செய்ய சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணை பெறப்பட்ட பின்னர் சமூக நலக்கூடம் கட்டும் பணி தொடங்கப்பட வேண்டும் என்கின்ற நிபந்தனைக்குட்பட்டும்,
4. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Community Centre (20 -28 - 00 / 412 - 400 - 603) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.631/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.603/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

க.து.ந.க.எண்.பி1/2743/2025

ஆணையர் அவர்களின் 22.11.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1259/2025 **பொருள் எண்.107**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 13, வார்டு -170 கோட்டூர்புரம், சித்ரா நகரில் உள்ள சென்னை ஆரம்பப் பள்ளியில் New Integrated Acadamic Block கட்டும் பணிக்காக திருவாளர். Andal Associates Private Limited., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம் -13, வார்டு -170 கோட்டூர்புரம், சித்ரா நகரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளியில் *New Integrated Acadamic Block* கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 22.09.2025,. 2. மன்ற தீர்மானம் எண் : 1080/2025, நாள் : 29.09.2025.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் -13.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 4,06,14,108.00
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 73,10,539.44
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 4,06,141.08
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 7,84,211.00
	மொத்தம் (Rounded Off)	ரூ. 4,91,15,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 02.10.2025. 2. தினமலர் 01.10.2025. 3. தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 01.10.2025.
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	16.10.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Primary School (20 - 28 - 00 / 412 - 400 - 401)

9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து *15/30* நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு *(e-Tender)* ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *17.10.2025* அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களில் திருவாளர். *Abbundu Interior & Construction.*, அவர்கள் தகுதி இல்லாமையால் நிராகரிக்கப்பட்டார். மற்ற ஒப்பந்ததாரர் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர் என்று அறியப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு *:*

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு ***2024-2025*** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	***2024-2025***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Andal Associates Private Limited	4,06,14,108.00	4,46,75,518.80	(+) 10.00% அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர். *Andal Associates Private Limited.*, அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு *:*

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	*L1* ஒப்பந்ததாரர் *2024-2025*ஆம் ஆண்டு *SOR*-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள் *. 24.10.2025*	ரூ. *4,38,22,622.53 (+) 7.90 %* அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள். *25.10.2025*	ரூ. *4,26,04,199.29 (+) 4.90 %* அதிகம்

இதன்படி, மண்டலம் - 13, வார்டு -170 கோட்டூர்புரம், சித்ரா நகரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளியில் *New Integrated Acadamic Block* கட்டும் பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.90% அதிகம், ஒப்பத் தொகை ரூ.4,26,04,199.29 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.76,68,755.87ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.5,02,72,955.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூபாய்) (A)	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+)4.90 % சேர்த்து (ரூபாய்) (B)
1	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 4,06,14,108.00	ரூ. 4,26,04,199.29
2	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 73,10,539.44	ரூ. 76,68,755.87
3	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 4,06,141.08	ரூ. 4,06,141.08
4	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 7,84,211.00	ரூ. 7,84,211.00
	மொத்தம் (Rounded Off)	ரூ. 4,91,15,000.00	ரூ. 5,14,63,307.00
		கூடுதல் தொகை (B- A)	ரூ. 23,48,307.00

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.90%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.5,14,63,307.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.5,14,63,307.00-க்கு நிர்வாக அனுமதியும்,

2. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணி மதிப்பு தொகையை விட (+)4.90% அதிகம், ஒப்பத் தொகை ரூ.4,26,04,199.29 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.76,68,755.87ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.5,02,72,955.00-க்கு (ரூபாய் ஐந்து கோடியே இரண்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஐந்து மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Andal Associates Private Limited., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : Primary School (20 - 28 - 00 / 412 - 400 - 401) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.636/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

‘’ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.605/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

க.து.ந.க.எண்.பி1/2663/2025

ஆணையர் அவர்களின் 27.10.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1260/2025 **பொருள் எண்.108**

பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 13, வார்டு - 169, வெங்கடாபுரத்தில் உள்ள பழுதடைந்த ஒப்பனை அறையை இடித்துவிட்டு தரைதளத்தில் தையல் பயிற்சிக்கூடமும், முதல் தளத்தில் மகளிர் உடற்பயிற்சி கூடம் கட்டும் பணி மற்றும் மண்டலம் - 15, வார்டு - 192, நீலாங்கரை சென்னை நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளுக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

1	பணியின் பெயர்	1. மண்டலம் - 13, வார்டு - 169, வெங்கடாபுரத்தில் உள்ள பழுதடைந்த ஒப்பனை அறையை இடித்துவிட்டு தரைதளத்தில் தையல் பயிற்சிக்கூடமும், முதல் தளத்தில் மகளிர் உடற்பயிற்சி கூடம் கட்டும் பணி. 2. மண்டலம் - 15, வார்டு - 192, நீலாங்கரை சென்னை நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 15.05.2025, 03.09.2025. 2. மன்ற தீர்மானம் எண் : 1036/2025, நாள் : 29.09.2025.
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 13 மற்றும் 15.
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	**மதிப்பீட்டின் தொகை**	
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 2,47,66,037.34
	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 44,57,886.72
	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 2,47,660.37
	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 2,00,282.82
	(உ) மின்சார செலவு	ரூ. 75,000.00
	(ஊ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 5,53,132.75
	மொத்தம் (Rounded Off)	ரூ. 3,03,00,000.00

6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 02.10.2025. 2. தினமலர் 01.10.2025. 3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 01.10.2025.
7	ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	16.10.2025
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000) Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 401)
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	இரண்டு (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 17.10.2025 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களில் திருவாளர். Vindhra Construction., அவர்கள் தகுதி இல்லாமையால் நிராகரிக்கப்பட்டார். மற்ற ஒப்பந்ததாரர்கள் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று அறியப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு:

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்று தகுதியான ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு **2024-2025** (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	Raghul Constructions	2,47,66,037.34	2,60,01,862.25	(+) 4.99 % அதிகம்

இவ்வொப்பத்தில் திருவாளர். Raghul Constructions., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு:

வ. எண்	மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம்	L1 ஒப்பந்ததாரர் **2024-2025**ஆம் ஆண்டு **SOR**-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம்
1	முதற் கட்ட விலை குறைப்பு நாள். 24.10.2025	ரூ. 2,59,91,955.83 (+) 4.95 % அதிகம்
2	இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள். 24.10.2025	ரூ. 2,59,91,955.83 (+) 4.95 % அதிகம்

இதன்படி, மண்டலம் - 13, வார்டு - 169, வெங்கடாபுரத்தில் உள்ள பழுதடைந்த ஒப்பனை அறையை இடித்துவிட்டு தரைதளத்தில் தையல் பயிற்சிக்கூடமும், முதல் தளத்தில் மகளிர் உடற்பயிற்சி கூடம் கட்டும் பணி மற்றும் மண்டலம் - 15, வார்டு - 192, நீலாங்கரை சென்னை நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிகளுக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.95% அதிகம், ஒப்பத் தொகை ரூ.2,59,91,955.83 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.46,78,552.04ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,06,70,508.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மதிப்பீட்டின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூபாய்) (A)	தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.95 % சேர்த்து (ரூபாய்) (B)
1	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 2,47,66,037.34	ரூ. 2,59,91,955.83
2	(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 44,57,886.72	ரூ. 46,78,552.04
3	(இ) த.நா.க.தொ.ந.வா. 1%	ரூ. 2,47,660.37	ரூ. 2,47,660.37
4	(ஈ) தரக்கட்டுப்பாடு 1%	ரூ. 2,00,282.82	ரூ. 2,00,282.82
5	(உ) மின்சார செலவு	ரூ. 75,000.00	ரூ. 75,000.00
6	(ஊ) எதிர்பாரா செலவு 2.50%	ரூ. 5,53,132.75	ரூ. 5,53,132.75
	மொத்தம் (Rounded Off)	ரூ. 3,03,00,000.00	ரூ. 3,17,46,584.00
		கூடுதல் தொகை (B- A)	ரூ. 14,46,584.00

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+) 4.95%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.3,17,46,584.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.3,17,46,584.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிகளுக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 4.95% அதிகம், ஒப்பத் தொகை ரூ.2,59,91,955.83 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.46,78,552.04ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,06,70,508.00-க்கு (ரூபாய் மூன்று கோடியே ஆறு இலட்சத்து எழுபதாயிரத்து ஐந்நூற்று எட்டு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Raghul Constructions., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

3. **இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்** : Miscellaneous (20 - 28 - 00 / 412 - 403 - 000) **மற்றும்** Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 401) **நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்**,

மேற்கண்ட 1 **முதல்** 3 **வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் இனம்**-1 **மட்டும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.**

"**ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம்** 12.12.2025 **அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு** 18.12.2025 **அன்று தீர்மான எண்**.635/2025**ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்கள் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது**".

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

நி.ம.உ.து.நக.எண்.எல்.இ1 / 2780 / 2025

ஆணையர் அவர்களின் 18.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1261/2025 **பொருள் எண்.109**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை -- மண்டலம் - 10, வார்டு-139 ஆர் ஆர் காலனி மூன்றாவது தெருவில் அமைந்துள்ள மாநகராட்சியின் விளையாட்டு மைதானத்திற்கு டாக்டர் டி எம் நாயர் அவர்களின் பெயரினை சூட்ட அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி மன்றத்தின் அனுமதி.

திரு. வைகோ, பொதுச்செயலாளர், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் அவர்கள் 16.12.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அளித்துள்ள மனுவில், டாக்டர் டி எம் நாயர் அவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி, வார்டு-139, சென்னை-83, ஜாபர்கான்பேட்டை, ஆர் ஆர் காலனி மூன்றாவது தெருவில் அமைந்துள்ள மாநகராட்சியின் விளையாட்டு மைதானத்திற்கு டாக்டர் டி எம் நாயர் அவர்களின் பெயரை சூட்ட ஆவண செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6) துறை, நாள்.11.07.2022ன்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் ஆணையாளர் ஆகியோர் வழியாக அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மன்றங்கள் / மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அறிவுறுத்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, 139 வது வார்டில் ஆர் ஆர் காலனி மூன்றாவது தெருவில் அமைந்துள்ள மாநகராட்சியின் விளையாட்டு மைதானத்திற்கு **"டாக்டர் டி எம் நாயர்"** அவர்களின் பெயரினை சூட்ட அரசின் ஒப்புதலை எதிர் நோக்கி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.610/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

பொ.சு.து.நக.எண். B1 / 6041 / 2025

ஆணையர் அவர்களின் 17.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1262/2025 **பொருள் எண்.110**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - மண்டலம்-5, கொண்டித்தோப்பு மற்றும் மண்டலம் 6 கொளத்தூர் ஆகியவற்றில் புதிதாக தொடங்கப்படவுள்ள இரத்த சுத்திகரிப்பு மையம், செயற்கை கால் மையம், இயன்முறை பயிற்சி மையம் ஆகியவற்றை பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்க மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, மண்டலம்-5க்கு உட்பட்ட கொண்டித்தோப்பு மற்றும் மண்டலம்-6க்கு உட்பட்ட கொளத்தூரில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் *(CMDA)* மூலம் சுகாதார மைய கட்டிங்கள் கட்டப்பட்டு வருகிறது. இந்த நான்கு மாடி கட்டடத்தில் கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மண்டலம் 6ல் உள்ள தான்தோன்றியம்மன் கோயில் தெரு, வார்டு-69, மாநகராட்சி அலுவலகம் அருகில், அகரம், (கொளத்தூர்) சென்னை 600 082.

1. முதல் தளம் - செயற்கை கால் மையம்
2. இரண்டாவது தளம் – இயன்முறை பயிற்சி மையம்
3. மூன்றாவது தளம் - இரத்த சுத்திகரிப்பு மையம்
4. நான்காவது தளம் நோயாளிகளுக்கான வசதிகள்

மண்டலம்-5ல், எண்.36, பேசின் வாட்டர் ஒர்க்ஸ் தெரு, சௌகார் பேட்டை கொண்டித்தோப்பு, சென்னை. 600 079.

1. முதல் தளம் - செயற்கை கால் மையம்
2. கொண்டித்தோப்பு இரண்டாவது தளம் – இயன்முறை பயிற்சி மையம்
3. மூன்றாவது தளம் - நோயாளிகளுக்கான வசதிகள்
4. நான்காவது தளம் - இரத்த சுத்திகரிப்பு மையம்

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர், கூடுதல் தலைமைச்செயலாளர், (நகர்ப்புற மற்றும் வீட்டு வசதி), உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் *(CMDA)* மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் (சுகாதாரம்) மற்றும் வடக்கு வட்டார துணை ஆணையர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துக்கொண்டு சுகாதார மையத்தின் செயல்பாடுகள் குறித்து விவாதித்தனர். இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட இன்றியமையாத குறிப்புகளாவன.

1. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வசதிகள் மூலம் நிறுவப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் இந்த மையங்கள் நடத்தப்படும்.
2. அப்போலோ மருத்துவமனை மூலம் இரத்த சுத்திகரிப்பு மையம் நடத்தப்படும், ஆதிநாத் டிரஸ்ட் வாயிலாக செயற்கை கால் மையம் மற்றும் இயன்முறை பயிற்சி மையத்திற்கும் செயல்படுத்தப்படும்.

3. ஒவ்வொரு இரத்த சுத்திகரிப்பு மையத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்முதல் செய்ய சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.3,00,00,000/- (ரூபாய் மூன்று கோடி) விடுவித்துள்ளது.
4. இம்மையங்களை நிறுவி தொடர்ந்து நடத்துவதற்கான நடவடிக்கைகளை கவனிக்க வேண்டிய பொறுப்பு மாநகர நல அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
5. இம்மையங்கள் இயங்குவதற்காக கூடுதல் செலவினங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் நிதி மூலம் மேற்கொள்ளப்படும்.

இதனை தொடர்ந்து அப்போலோ மருத்துவமனை மற்றும் ஆதிநாத் டிரஸ்ட் உரிமையாளர்களுடன் நடைபெற்ற கலந்தாய்வில் புதியதாக தொடங்கப்பட்ட சுகாதார மைய கட்டிடத்தில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டதை தொடர்ந்து அம்மாற்றங்கள் செயல்படுத்தப்பட்ட அப்போலோ மருத்துவமனையின் பிரதிநிதிகள் இம்மையங்களுக்கான பொருட்களை வாங்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தில் கூடுதலாக சில உபகரணங்கள் மற்றும் நுகர்பொருட்களை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் கோரியுள்ளார்.

ஆதிநாத் டிரஸ்ட் உடனான பேச்சு வார்த்தையின் போது இம்மையத்தை நடத்துவதற்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அல்லது சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலமாக கொள்முதல் செய்து நிறுவப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்துடனான பேச்சு வார்த்தையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதி மூலமாக செயற்கை கால் மையம் மற்றும் இயன் முறை பயிற்சி மையங்களுக்கு தேவையான கருவி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

இரத்த சுத்திகரிப்பு மையத்தை நடத்துவதற்கு தமிழ் நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக பயனாளிகள் பயனடையும்படி செய்யவும், இக்காப்பீட்டுத் திட்டத்தின் ஒப்புதல் கிடைக்கும் வரை அப்போலோ மருத்துவ மனை மூலம் பயனாளிகள் பயனடையவும் அதற்குரிய தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி அப்போலோ மருத்துவ மனைக்கு செலுத்தும் எனவும் முன்மொழியப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் கட்டிதரப்பட்டுள்ள இவ்விரண்டு மையங்களையும் நடத்த அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் கட்டியிருக்கும் இவ்விரண்டு சுகாதார வளாகங்களை செயல்படுத்துவதற்கு அனுமதியும்,
2. இரத்த சுத்திகரிப்பு மையம், செயற்கை கால் மையம் மற்றும் இயன் முறை பயிற்சி மையம் ஆகிய மையங்களுக்கு தேவையான கூடுதலாக கருவி மற்றும் உபகரணங்களை கொள்முதல் செய்து அளிக்கவும்,

3. **தேவையான உபகரணங்களை தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்** *(TNMSC)* **மூலமாக கொள்முதல் செய்யவும்,** *TNMSC* **மூலம் கிடைக்கப்பெறாத உபகரணங்களை வெளிச்சந்தையில், விதிமுறைகளின்படி கொள்முதல் செய்யவும்,**
4. **தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஒப்புதல் கிடைக்கும் வரை** இரத்த சுத்திகரிப்பு மையத்திற்கு **பெருநகர சென்னை மாநகராட்சி நிதியை பயன்படுத்தவும்,**
5. மேற்கண்ட மையங்களை இயக்குவதற்கு தேவையான பாதுகாப்பு, பராமரிப்பு, மற்றும் இதர வசதிகள் செய்ய **பெருநகர சென்னை மாநகராட்சி நிதியை பயன்படுத்துவதற்கு அனுமதியும்,**

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 11.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.209/2025ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பூ.து.நி.க.எண்.பி2 / 0774 / 2025

ஆணையர் அவர்களின் 16.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1263/2025 **பொருள் எண்.111**

பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் மண்டலம் -1 முதல் 15 வரையுள்ள 781 எண்ணிக்கையிலான பூங்காக்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிக்க திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தனித்தனியாக நிர்வாக அனுமதி பெறப்பட்டது - ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பணிகள் மேற்கொள்வதற்கு திறந்தவெளி ஒப்பங்கள் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்களுக்கு பணி ஏற்பு கடிதம் வழங்கப்பட்டது -பணிகள் நடைபெற்று வருகின்றன. பணியின் Scope of Workயை மாற்றம் செய்வதற்கும், இப்பணிக்கான ஒப்பத்தினை நிராகரித்து உடன்படிக்கையினை இரத்து செய்வதற்கும், ஒப்பந்ததாரர்கள் செலுத்திய EMD / ASD / Security Depositயை திரும்ப வழங்குவதற்கும் மற்றும் நிலுவையில் உள்ள ஒப்பந்ததாரர்களின் பட்டியினை தீர்வு செய்யவும் - இதுநாள் வரை பெறப்பட்ட பகுதி செலவினப் பட்டிகளுக்கு உரிய தொகைகளை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம்-*1* முதல் *15* வரை *908* பூங்காக்கள் உருவாக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், பல்வேறு அரசு திட்டங்களின் மூலமாக புதியதாக பூங்காக்கள் உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட அனைத்து பூங்காக்களையும் பூங்கா பணியாளர்கள் மூலமாக பராமரிப்பு பணிகளை மேற்கொண்டால் பணிகளில் தொய்வு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. ஆதலால், ஆணையர் அவர்களின் *04.05.2025* நாளிட்ட நிர்வாக அனுமதியின்படி மண்டலம்-*1* முதல் *15* வரையுள்ள *781* எண்ணிக்கையிலான பூங்காக்களை ஒரு வருடத்திற்கு பராமரிக்க தனித்தனியாக திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோருவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

அதனை தொடர்ந்து, ஆணையர் அவர்களின் *12.05.2025* நாளிட்ட அனுமதியில் *(Request for Proposal) 22* சிப்பங்களாக ஒப்பங்கள் கோருவதற்கு அனுமதி பெறப்பட்டது. இவ்வனுமதியில், வடக்கு வட்டாரத்திற்கு *5* சிப்பங்களாகவும், மத்திய வட்டாரத்திற்கு *9* சிப்பங்களாகவும், தெற்கு வட்டாரத்திற்கு *8* சிப்பங்களாகவும் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பங்கள் கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனங்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதங்கள் *05.07.2025* மற்றும் *01.09.2025* அன்று வழங்கப்பட்டது. அதன் விவரங்கள் கீழ்வருமாறு :

Package Nos	No. of Parks	L1 Bidder	Work Order Amount (Work value Incl.18% GST & Service Charges)	Work Order Date	Period of Contract
Package - 1	39	M.Mahesh - 4.50%	3,32,17,728.71	01.09.2025	08.09.2025 to 07.09.2026
Package - 2	42	Black cat Solution - 4.50%	3,82,10,972.63	01.09.2025	08.09.2025 to 07.09.2026
Package - 3	49	CISB(P) Ltd - 4.79 %	3,62,09,671.02	05.07.2025	15.07.2025 to 14.07.2026

Package - 4	49	MVK Murugan - 4.50%	3,57,10,616.84	01.09.2025	08.09.2025 to 07.09.2026
Package - 5	19	Padmavathi Hospitality and Facilities Management Service - 2 %	3,20,52,246.36	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 6	26	Padmavathi Hospitality and Facilities Management Service - 2.05 %	3,36,82,351.33	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 7	24	Padmavathi Hospitality and Facilities Management Service - 2.05 %	2,20,46,220.88	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 8	28	Padmavathi Hospitality and Facilities Management Service - 5 %	3,73,75,171.71	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 9	31	Padmavathi Hospitality and Facilities Management Service - 2 %	3,45,03,132.61	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 10	40	Padmavathi Hospitality and Facilities Management Service - 2.05 %	3,60,24,382.73	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 11	32	Padmavathi Hospitality and Facilities Management Service - 2.05 %	3,23,07,410.47	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 12	22	Padmavathi Hospitality and Facilities Management Service - 2.05 %	3,39,20,545.66	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 13	43	Padmavathi Hospitality and Facilities Management Service - 4 %	3,79,69,087.28	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 14	30	Black Cat Solution - 0.25 %	3,37,91,477.83	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 15	49	Black Cat Solution - 1 %	3,43,10,405.70	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 16	43	CISB(P) Ltd - 4.79 %	3,00,90,328.65	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 17	40	CISB(P) Ltd - 4.79 %	2,67,04,356.85	05.07.2025	15.07.2025 to 14.07.2026

Package - 18	36	Padmavathi Hospitality and Facilities Management Service - 2 %	3,15,53,471.83	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 19	38	Padmavathi Hospitality and Facilities Management Service - 2.05 %	2,75,38,416.73	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 20	41	Padmavathi Hospitality and Facilities Management Service - 2 %	3,09,58,749.72	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 21	37	Padmavathi Hospitality and Facilities Management Service - 2.05 %	3,27,79,408.49	05.07.2025	15.07.2025 to 14.07.2026
Package - 22	30	Padmavathi Hospitality and Facilities Management Service - 2 %	3,09,99,383.49	05.07.2025	15.07.2025 to 14.07.2026

மேற்குறிப்பிட்ட *22* சிப்பங்களில் ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு வரும் நிறுவனங்கள் ஒப்ப உடன்படிக்கையில் தெரிவித்துள்ளவாறு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பூங்கா பணியாளர்களுக்கான ஊதியம் அந்தந்த பணியாளர்களின் வங்கி கணக்கில் மாதந்தோறும் *07*ஆம் தேதிக்குள் செலுத்தப்பட வேண்டுமெனவும், ஒப்பந்ததாரர் வங்கியில் செலுத்தியதற்கான அத்தாட்சி நகலையும், மற்றும் *ESI*, *EPF* இணைத்து செலவினப்பட்டிகளை மாதந்தோறும் *10* ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பராமரிப்பு பணிகளை மேற்பார்வையிட திட்ட மேலாண்மை கலந்தாளுநர் *(PMC) M/s.ITCOT Ltd* அவர்களுக்கு *22.09.2025* நாளிட்ட ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஒப்ப விதிகளின் படி, ஒப்ப ஏற்பு கடிதம் பெறப்பட்ட ஒப்பந்ததாரர்கள் இப்பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்கள் / தொழிலாளர்களின் விவரம் உரிய ஆவணங்கள் *(Photos, Adhar Card Xerox, Bank Statement)* ஆகியவற்றை இவ்வலுலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என கண்காணிப்பு பொறியாளர்(பூ(ம)வி) அவர்களின் அலுவலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்ததாரர்கள் இப்பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் பணியாளர்கள் / தொழிலாளர்கள் விவரம் உரிய ஆவணங்கள் *(Photos, Adhar Card Xerox, Bank Statement)* ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவித்து கடிதங்கள் அனுப்பப்பட்டது.

M/s.ITCOT Ltd அவர்களின் கடிதத்தின்படி, இப்பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களின் பகுதி செலவினப்பட்டிகளை ஆய்வு செய்ததில், ஒப்ப விதிகளின்படி இவ்வொப்பந்ததாரர்கள் பராமரிப்பு பணிகள் செய்யும் பூங்கா பணியாளர்கள் / தொழிலாளர்களின் ஊதியம் சரியாக வழங்கப்படவில்லை என்பதும், அந்தந்த ஊழியர்களின் வங்கி கணக்கில் செலுத்தியுள்ள ஊதியம் ஒப்ப உடன்படிக்கையில் நிர்ணயம் செய்த ஊதியத்தை விட வேறுபாடு உள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும், பூங்காக்களை ஆய்வு செய்ததில் சில இடங்களில் பராமரிப்பு பணிகள் சரியாக மேற்கொள்ளப்படாதது தெரிய வருகிறது. மேலும் இது குறித்து அக்டோபர் மாத மன்றக்கூட்டத்தில் பல வார்டு குழு உறுப்பினர்கள் மற்றும் மண்டல குழுத் தலைவர்கள் *(Zone Chairman)* ஆகியோர் தெரிவித்தனர். ஆணையர் மன்றத்தில் மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து, பூங்கா பணியாளர்களுக்கு தகுந்த ஊதியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும், ஒப்ப விதிகளை பின்பற்றாததால், பூங்காக்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்கள் மீதும் இவ்வொப்பந்ததாரர்கள் மீதும் ஒப்ப விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் பணி முடித்த காலத்திற்குரிய ஏற்கனவே செய்யப்பட்ட பகுதி செலவினங்களை *Bank Statement* மற்றும் *ESI. PF* செலுத்தியதற்கான உரிய ஆவணங்கள் சமர்ப்பித்த ஒப்பந்ததாரருக்கு பட்டியினை தீர்வு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூங்காக்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பிக்கும் செலவினப்பட்டிகளை *M/s.ITCOT Ltd, Project Management Consultant* அவர்கள் ஆய்விற்கு பின் பணம் பட்டுவாடா செய்த வரை பரிந்துரைத்துள்ள பகுதி செலவினத்தொகை வழங்குவதற்கும், ஒப்ப உடன்படிக்கையில் நிர்ணயம் செய்த ஊதியத்தை விட வழங்கப்பட்ட ஊதியம் குறைந்த ஊதியம் என்பதாலும், பூங்காக்களை ஆய்வு செய்ததில் பராமரிப்பு பணிகள் சரியாக மேற்கொள்ளப்படாததாலும் இப்பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மீது ஒப்ப விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், *15.07.2025* முதல் *30.09.2025* வரை பெறப்பட்ட செலவினப் பட்டிகளுக்கு உரிய தொகைகளை கண்காணிப்பு பொறியாளர் *(பூ(ம)வி)* அவர்களின் அனுமதி பெற்று வழங்குவதற்கும் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் மீது ஒப்ப விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும், இந்த பூங்காக்களை பராமரிக்க எற்கனவே உள்ள ஒப்ப உடன்படிக்கை விதிகளுடன், கூடுதலாக சில விதிகள் மற்றும் சரிபார்த்து சமன் செய்தல் *(Check & Balance verification)* செய்வதற்கு உண்டான விதிகளைக் கூடுதலாக ஏற்படுத்தலாம் என கருதப்படுகிறது. இவ்வாறு கூடுதலாக சில விதிகள் ஏற்படுத்துவதால், பராமரிப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகளை சரிவர பராமரிக்கவும், தவறும்பட்சத்தில் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மீது தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கவும், வழிவகை செய்யும்.

பணிகளின் *Scope of Works* மாற்றம் செய்ய ஒப்பந்ததாரர்களின் இசைவு தெரிவிக்க வேண்டி ஒப்பந்ததாரர்களுக்கு கடிதம் அனுப்ப *03.12.2025* நாளிட்ட ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

பணிகளின் *Scope of Works* மாற்றம் செய்ய ஒப்பந்ததாரர்கள் விருப்பமின்மை தெரிவித்து *09.12.2025* நாளிட்ட கடிதங்கள் பெறப்பட்டது

ஒப்ப உடன்படிக்கையில் நிர்ணயம் செய்த ஊதியத்தை விட பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம் குறைந்த ஊதியம் என்பதாலும், பூங்காக்களை ஆய்வு செய்ததில் பராமரிப்பு பணிகள் சரியாக மேற்கொள்ளப்படாததாலும், இது குறித்து அக்டோபர் மாத மன்றக்கூட்டத்தில் பல வார்டு குழு உறுப்பினர்கள் மற்றும் மண்டல குழுத் தலைவர்கள் *(Zone Chairman)* ஆகியோர் தெரிவித்துள்ளனர். எனவே மண்டலம் *-1* முதல் *15* வரையுள்ள *781* எண்ணிக்கையிலான பூங்காக்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பணிகளுக்கான ஒப்பங்களை நிராகரிக்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே,

1. மண்டலம் *-1* முதல் *15* வரையுள்ள *781* எண்ணிக்கையிலான பூங்காக்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பணிகளுக்கு தனித்தனியாக நிர்வாக அனுமதி பெறப்பட்ட மதிப்பீடுகளை நிராகரிக்கவும்,
2. மண்டலம் *-1* முதல் *15* வரையுள்ள *781* எண்ணிக்கையிலான பூங்காக்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பணிகளின் *Scope of Works* மாற்றம் செய்ய அனுமதியும்,
3. இப்பராமரிப்பு பணிகளுக்கு ஏற்கனவே கோரப்பட்ட சிப்பம் *1* முதல் *22* வரைக்கான ஒப்பங்களை இரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டியும்,
4. இப்பராமரிப்பு பணிகளுக்கு ஏற்கனவே கோரப்பட்ட சிப்பம் *1* முதல் *22* வரைக்கு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை இரத்து செய்து ஒப்பந்ததாரர்கள் செலுத்திய *EMD/ASD & Security Deposit*ஐ ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்கவும், ஒப்பந்த நிபந்தனைகளின்படி தகுந்த மேல்நடவடிக்கை எடுக்கவும்,
5. மண்டலம்- *1* மற்றும் *15* வரை உள்ள , பூங்காக்களை ஒரு வருட காலத்திற்கு பராமரிக்கும் பணிகள் *(சிப்பங்கள் 1* முதல் *22* வரை *)* க்கு *Bank Statement* மற்றும் *ESI. PF* செலுத்தியதற்கான உரிய ஆவணங்கள் சமர்ப்பித்த ஒப்பந்ததாரருக்கு பட்டியினை தீர்வு செய்யவும்,

மேற்கண்ட *1* முதல் *5* வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 10.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.113/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”

******

அ.து.ந.க.எண்.அ3 / 1171 / 2025

ஆணையர் அவர்களின் 16.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1264/2025 **பொருள் எண்.112**

பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா (ம) விளையாட்டுத்திடல் - மண்டலம் -14, வார்டு-181, ஏ.ஜி.எஸ் காலனி முதல் பிரதான சாலையில் (ECR) புதிய உள்ளரங்க இறகுபந்து திடல் அமைக்கும் பணிக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

1	துறையின் பெயர்	:	பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்
2	கோட்டம் மற்றும் மண்டலம்	:	வார்டு-181, மண்டலம் - 14
3	பணியின் பெயர் மற்றும் விவரங்கள்	:	மண்டலம் -14, வார்டு-181, ஏ.ஜி.எஸ் காலனி முதல் பிரதான சாலையில் (ECR) புதிய உள்ளரங்க இறகுபந்து திடல் அமைக்கும் பணி
4	நிதியின் தன்மை	:	கணக்கு குறியீடு எண். 412 - 400 - 100
5	மதிப்பீட்டின் எண்	:	NP/2025-26/6754
6	திட்ட குறியீடு எண்		--
7	மதிப்பீட்டு தொகை	:	**ரூ.199.80 இலட்சங்கள்**
8	அலுவலக விலைப்பட்டியல் ஆண்டு	:	2024-25
9	ஒப்பம் கோரப்பட்ட நாள்	:	06.10.2025
10	எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்ட விவரம் மற்றும் நாள்	:	தினகரன், நாள். 08.10.2025 The Times of India, Dt. 08.10.2025 பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்த புள்ளி செய்தி மலர் நாள். 09.10.2025
11	எத்தனை முறை ஒப்பம் கோரப்பட்டது	:	முதல் முறை
12	ஒரு முறைக்கு மேல் ஒப்பம் கோரப்பட்டிருப்பின் அதற்கான காரணம்/ மன்றத்தின் தீர்மான எண்.	:	
13	ஒப்ப நாள்	:	24.10.2025

ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர் திரு./திருவாளர்கள்	முன்வைப்புத்தொகை (EMD) செலுத்தப்பட்ட விவரம்	கூடுதல் பிணை வைப்புத்தொகை இணைக்கப்பட்ட விவரம்
1.	BSM கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ.1,96,000/- IGATKGRES8 Dated: 18.10.2025	--

2.	Thiru. Devarajan Gokulakrishnan	ரூ.1,96,000/-CPAFUCIQU7 Dated: 18.10.2025	--

ஒப்ப நாளான 24.10.2025 அன்று ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டது.

தொழில் நுட்ப ஆவணத்தில் தகுதிபெற்ற/ தகுதிபெறாத ஒப்பந்ததாரர்களின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	பெயர் திரு./திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு (Incl 18% GST)	குறிப்பு
1.	BSM கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ.1,95,95,135.53	தொழில் நுட்ப தகுதி பெற்றவர்கள்
2.	Thiru.Devarajan Gokulakrishnan	ரூ.1,95,95,135.53	

தொழில் நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்ததாரின் நிதி ஆவணங்கள் 11.11.2025 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

நிதி ஆவணங்கள் திறக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் விவரம்

வ. எண்	பெயர் திரு./திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு (With GST) ரூ.	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (With GST) ரூ.	2024-25 அலுவலக விலைக்கு விழுக்காடு அதிகம்/குறைவு
1.	BSM கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	ரூ.1,95,95,135.53	ரூ.2,08,08,074.42	(+) 6.19%
2.	Thiru.Devarajan Gokulakrishnan	ரூ.1,95,95,135.53	ரூ.2,07,31,653.39	(+) 5.80%

பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை (ம) ஒப்ப சதவீதம்	:	http:tntenders.gov.in என்ற இணையதள வழியாக 12.11.2025 அன்று விலைக்குறைப்பு கோரப்பட்டதில், திரு. Devarajan Gokulakrishnan அவர்கள் விலைக்குறைப்பு செய்துள்ளார், ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை ரூ.2,05,65,094.74 (Including GST 18%) மற்றும் 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலையைவிட (+) 4.95% அதிகம் ஆகும்.
பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் (ம) முகவரி	:	திரு. Devarajan Gokulakrishnan, எண்.17B, வ.உ.சி தெரு, நிலமங்கை நகர், ஆதம்பாக்கம், சென்னை-600 088.
ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	:	90 நாட்கள்
ஒப்பந்த புள்ளிக்காலம் நீட்டிக்கப்பட்டிருப்பின் கடித எண் (ம) தேதி	:	--

மேலும் ஒப்ப கூர்ந்தாய்வு குழுமத்தில் *(Tender Scrutinizing Committee)* மேற்கண்ட பணிக்காக ரூ.*2,05,65,094.74 (Including GST 18%)* (ரூபாய். இரண்டு கோடியே ஐந்து இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொண்ணூற்று நான்கு மற்றும் எழுபத்து நான்கு பைசா மட்டும்) ஒப்பத்தை ஏற்று, இவ்வொப்ப பணியை ஒப்பந்ததாரர் திரு. *Devarajan Gokulakrishnan*, அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-*14*, வார்டு-*181*, ஏ.ஜி.எஸ் காலனி முதல் பிரதான சாலையில் *(ECR)* புதிய உள்ளரங்க இறகுபந்து திடல் அமைக்கும் பணிக்கு ரூ.*2,05,65,094.74 (Including GST 18%)* (ரூபாய். இரண்டு கோடியே ஐந்து இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொண்ணூற்று நான்கு மற்றும் எழுபத்து நான்கு பைசா மட்டும்) ஒப்பத்தினை ஏற்கவும் மற்றும் திருத்திய நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இப்பணிக்கு அலுவலக விலையைவிட அதிக ஒப்பத் தொகை அளித்துள்ள திரு. *Devarajan Gokulakrishnan* அவர்களுக்கு ஒப்பத்தொகை ரூ.*2,05,65,094.74 (Including GST 18%)* (ரூபாய். இரண்டு கோடியே ஐந்து இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொண்ணூற்று நான்கு மற்றும் எழுபத்து நான்கு பைசா மட்டும்) என்ற மதிப்பிற்கு *2024-25* ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி *(+) 4.95%* அதிக விழுக்காட்டில் இப்பணியை அளிப்பதற்கும்,
3. இப்பணியினை மண்டலம் *14*ன் மூலம் மேற்கொள்ளவும் மற்றும் பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் துறை மூலதன நிதியின் கீழ், கணக்கு குறியீடு எண். *412 – 400 – 100* என்ற தலைப்பின் கீழ் பட்டித்தீர்வு செய்யவும்,

மேற்கண்ட *1* முதல் *3* வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி, பூங்கா(ம) விளையாட்டு திடல்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 10.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.114/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

அ.து.ந.க.எண்.அ3 / 1558 / 2025

ஆணையர் அவர்களின் 16.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1265/2025 **பொருள் எண்.113**

பெருநகர சென்னை மாநகராட்சி - பூங்கா (ம) விளையாட்டுத்திடல் - மண்டலம் – 9, வார்டு126 தெற்கு கால்வாய்கரை சாலையில் உள்ள அல்போன்சா விளையாட்டு மைதானத்தின் சேதமடைந்த சுற்றுச்சுவற்றை இடித்து அகற்றி புதிதாக கட்டும் பணிக்கு பின்னேற்பு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

1	துறையின் பெயர்	:	பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்
2	கோட்டம் மற்றும் மண்டலம்	:	வார்டு -*126*, மண்டலம் - *9*
3	பணியின் பெயர் மற்றும் விவரங்கள்	:	தெற்கு கால்வாய்கரை சாலையில் உள்ள அல்போன்சா விளையாட்டு மைதானத்தின் சேதமடைந்த சுற்றுச்சுவற்றை இடித்து அகற்றி புதிதாக கட்டும் பணி.
4	நிதியின் தன்மை	:	கணக்கு குறியீடு எண். *230-670-300*
5	மதிப்பீட்டின் எண்	:	*NJ/2024-25/29698*
6	திட்ட குறியீடு எண்		--
7	மதிப்பீட்டு தொகை	:	**ரூ.182.45 இலட்சங்கள்**
8	அலுவலக விலைப்பட்டியல் ஆண்டு	:	*2024-25*ஆம் ஆண்டு
9	ஒப்பம் கோரப்பட்ட நாள்	:	*31.10.2025*
10	எந்தெந்த பத்திரிக்கைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்ட விவரம் மற்றும் நாள்	:	இந்து- தமிழ் திசை, நாள். 05.11.2025 *The Times of India, Dt. 05.11.2025* பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்த புள்ளி செய்தி மலர் நாள்.06.11.2025
11	எத்தனை முறை ஒப்பம் கோரப்பட்டது	:	முதல் முறை
12	ஒரு முறைக்கு மேல் ஒப்பம் கோரப்பட்டிருப்பின் அதற்கான காரணம்/ மன்றத்தின் தீர்மான எண்.	:	
13	ஒப்ப நாள்	:	*21.11.2025*

ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர் திரு./ திருவாளர்கள்	முன்வைப்புத்தொகை *(EMD)* செலுத்தப்பட்ட விவரம்	கூடுதல் பிணை வைப்புத்தொகை இணைக்கப்பட்ட விவரம்
1.	J.P.Construction	ரூ.1,77,677/- CPAFXKLUQ0 Dated: 20.11.2025	--
2.	J.S & Sons	ரூ.1,77,677/- CPAFXKUIF1 Dated: 20.11.2025	--

ஒப்ப நாளான 21.11.2025 அன்று ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தொழில்நுட்ப ஆவணங்கள் திறக்கப்பட்டது.

தொழில் நுட்ப ஆவணத்தில் தகுதிபெற்ற/ தகுதிபெறாத ஒப்பந்ததாரர்களின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	பெயர் திரு. / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு *(Incl 18% GST)*	குறிப்பு
1.	J.P.Construction	ரூ.1,77,20,125.67	தொழில் நுட்ப தகுதி பெற்றவர்கள்
2.	J.S & Sons	ரூ.1,77,20,125.67	

தொழில் நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்ததாரின் நிதி ஆவணங்கள் 01.12.2025 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

நிதி ஆவணங்கள் திறக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் விவரம்

17	வ. எண்	பெயர் திரு. / திருவாளர்கள்	பணியின் அலுவலக மதிப்பு *(With GST)* ரூ.	ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை *(With GST)* ரூ.	*2024-25* அலுவலக விலைக்கு விழுக்காடு அதிகம் / குறைவு
	1.	*J.P.Construction*	ரூ.1,77,20,125.67	ரூ.1,87,83,333.21	*(+) 6.00%*
	2.	*J.S & Sons*	ரூ.1,77,20,125.67	ரூ.1,91,37,735.72	*(+) 8.00%*

18.	பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை (ம) ஒப்ப சதவீதம்	:	*http:tntenders.gov.in* என்ற இணையதள வழியாக 04.12.2025 அன்று விலைக்குறைப்பு கோரப்பட்டதில், திருவாளர்கள். *J.P.Construction* அவர்கள் விலைக்குறைப்பு செய்துள்ளார், *1.* ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை ரூ.1,86,04,359.94 *(Including GST 18%)* மற்றும் *2024-25* ஆம் ஆண்டு அலுவலக விலையைவிட *(+) 4.99%* அதிகம் ஆகும். மேலும், *08.12.2025* அன்று விலைகுறைப்பு கோரப்பட்டதில், திருவாளர்கள். *J.P.Construction* அவர்கள் விலைக்குறைப்பு செய்துள்ளார், *2.* ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை ரூ.1,82,60,589.50 *(Including GST 18%)* மற்றும் *2024-25* ஆம் ஆண்டு அலுவலக விலையைவிட *(+) 3.05%* அதிகம் ஆகும்.

19	பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் (ம) முகவரி	:	திருவாளர்கள். J.P.Construction எண்.86/102, கம்தர் நகர் 3வது தெரு, நுங்கம்பாக்கம் சென்னை – 600 034.
20	ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம்	:	90 நாட்கள்
21	ஒப்பந்த புள்ளிக்காலம் நீட்டிக்கப்பட்டிருப்பின் கடித எண் (ம) தேதி	:	--

மேலும், ஒப்ப கூர்ந்தாய்வு குழுமத்தில் (Tender Scrutinizing Committee) மேற்கண்ட பணிக்காக ரூ.1,82,60,589.50 (Including GST 18%) (ரூபாய். ஒரு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தொன்பது மற்றும் ஐம்பது பைசா மட்டும்) ஒப்பத்தை ஏற்று, இவ்வொப்ப பணியை ஒப்பந்ததாரர் திருவாளர்கள். J.P.Construction அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1. இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.182.45 இலட்சத்திற்கான பின்னேற்பு நிர்வாக அனுமதியும் பின்னேற்பு நிர்வாக அனுமதி எதிர்நோக்கி மின்னணு ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. மண்டலம்-9, வார்டு-126 தெற்கு கால்வாய்கரை சாலையில் உள்ள அல்போன்சா விளையாட்டு மைதானத்தின் சேதமடைந்த சுற்றுச்சுவற்றை இடித்து அகற்றி புதிதாக கட்டும் பணிக்கு ரூ.1,82,60,589.50 (Including GST 18%) (ரூபாய் ஒரு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தொன்பது மற்றும் ஐம்பது பைசா மட்டும்) ஒப்பத்தினை ஏற்கவும்,
3. இப்பணிக்கு அலுவலக விலையைவிட அதிக ஒப்பத் தொகை அளித்துள்ள திருவாளர்கள். J.P.Construction அவர்களுக்கு ஒப்பத்தொகை ரூ.1,82,60,589.50 (Including GST 18%) (ரூபாய். ஒரு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து ஐந்நூற்று எண்பத்தொன்பது மற்றும் ஐம்பது பைசா மட்டும்) என்ற மதிப்பிற்கு 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி (+) 3.05% அதிக விழுக்காட்டில் இப்பணியை அளிப்பதற்கும்,
4. இப்பணியினை மண்டலம்-9ன் மூலம் மேற்கொள்ளவும் மற்றும் பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல் துறை வருவாய் நிதியின் கீழ், கணக்கு குறியீடுஎண். 230-670-300 என்ற தலைப்பின் கீழ் பட்டித்தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

GCC/4905/2025-CHO

ஆணையர் அவர்களின் 11.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1266/2025 **பொருள் எண்.114**

பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத் துறை - அம்மா உணவகம் - புதுடெல்லி தமிழ்நாடு இல்லம் பொங்கல் விழா அம்மா உணவகம் மாதிரி - செலவினம் செய்ய முன்பணம் ரூ.5,00,000/- பெற்றது - செலவினப் பட்டியல்கள் ; ரூ.2,26,591/-ற்கு சமர்பித்துள்ளது - மீதத் தொகையில் ரூ.1,50,000/- கருவூலத்தில் செலுத்தியுள்ளது - பெற்ற முன்பணத் தொகையில் செலவினத் தொகை மற்றும் கருவூலத்தில் செலுத்திய தொகை போக எஞ்சிய தொகையான ரூ.1,23,409/- செலுத்த வேண்டியது - முன்பணம் பெற்ற அலுவலர் இறந்து விட்ட காரணத்தினால் எஞ்சிய தொகையினை தள்ளுபடி (WRITE OFF) செய்யவும் மற்றும் மொத்த முன்பணத்தொகையினை பட்டி நேர் செய்யவும் பொது துறையின் கருத்துரு கோரி கருத்துரு பெற்றது - நிதி ஆலோசகர் மூலம் நிலைக்குழு (கணக்கு) அவர்களுக்கு குறிப்பு சமர்ப்பித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளது - முன்பணம் பெற்ற அலுவலர் இறந்து விட்ட காரணத்தினால் எஞ்சிய தொகையினை தள்ளுபடி (WRITE OFF) செய்யவும் மற்றும் மொத்த முன்பணத்தொகையினை பட்டி நேர் செய்யவும் மன்றத்தின் அனுமதி.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் *06.01.2014* நாளிட்ட ஆணையின்படி *(சு.து.ந.க.எண்.336/2013)* புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா நடைபெற்றதை முன்னிட்டு மாதிரி அம்மா உணவகம் அமைக்க *Through fair charges for officials and SHGs, Installation charges, Purchase or hiring of equipments and utensils, Purchase of raw materials and vegetables in open market at New Delhi & Miscellaneous Expenses* ஆகிய செலவினங்கள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டு *1/BPV/00044313/01/2013-14* நாள் – *07.01.2014*ன்படி ரூ.*5,00,000/-* முன்பணம் திரு. கோ. த. தங்கராஜ், ஒய்வு பெற்ற கூடுதல் மாநகர நல அலுவலர் அவர்களால் பெறப்பட்டு கீழ்கண்டவாறு செலவினம் செய்யப்பட்டுள்ளது.

Table -1

S.No	Date	Description	Amount
1	31.01.14	Transport charges & Travelling allowances to ACHO Dr.G.T.Thangaraj	19,997.00
2	31.01.14	Travelling allowances to R.Koil, S.O.	3,722.00
3	31.01.14	Travelling allowances to J.Sakthi Umaibalan, S.O.	3,322.00
4	10.01.14	Train ticket - J.Sakthi Umaibalan, S.O.	696.24
5	10.01.14	Train ticket - R.Koil, S.O. & others	3,436.24
6	10.01.14	Train ticket - Usharani	696.24
7	09.01.14	Big shot prints - printing charges	34,000.00
8	14.01.14	vegetables & provisions - Safal Booth No 218	3,333.91
9	14.01.14	vegetables & provisions - Safal Booth No 218	342.04
10	14.01.14	vegetables & provisions - Safal Booth No 218	1,528.96
11	13.01.14	vegetables & provisions - Safal Booth No 218	450.00
12	13.01.14	vegetables & provisions - Safal Booth No 218	103.70
13	13.01.14	vegetables & provisions - Safal Booth No 218	2,081.93
14	12.01.14	vegetables & provisions - Safal Booth No 218	2,406.44

15	12.01.14	vegetables & provisions - Safal Booth No 218	506.04
16	14.01.14	vegetables & provisions - Khurana Gen. Store	410
17	14.01.14	vegetables & provisions - Garg store	2,450.00
18	12.01.14	vegetables & provisions - Aggarwal General stores	1,255.00
19	10.01.14	vessels - Sree Rama stores	34,890.00
20	10.01.14	vessels - New Delhi tent house	10,000.00
21	14.01.14	vessels - Sree Rama stores	7,500.00
22	10.01.14	vegetables & provisions - Sree rama stores	38,963.00
23	10.01.14	stall installation - Gulshan enterprises	48,500.00
24	14.01.14	banners - celebraty arts	6,000.00
Total Expenditure in Rupees			**2,26,590.74**

Table -2

1	பெற்ற முன்பணத் தொகை (ரூபாயில்)	5,00,000.00
2	செலவினம் செய்த தொகை (ரூபாயில்) = *2,26,590.74*	2,26,591.00
3	கரூவூலத்தில் செலுத்திய தொகை (ரூபாயில்) *(03/2013-14/1253178, Dated.11.03.2014)*	1,50,000.00
4	மீதத் தொகை (ரூபாயில்) *(1) –[(2) + (3)]*	1,23,409.00

மேற்குறிப்பிட்ட முன்பணத் தொகையினை நீண்ட காலமாக *2013-14*ம் நிதியாண்டில் இருந்து நிலுவையில் இருப்பதால் நேர் செய்ய நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்பு எண் ப.க.கு.அ.உ_ந.க.எண் அ*1*/சிறப்பு/*2019* நாள் – *15.11.2019*ன்படி அறிவுறுத்தப்பட்டுள்ளன.

துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் *29.11.2019* நாளிட்ட கடிதத்தின்படி, பெற்ற முன்பணத் தொகை ரூ. *5,00,000/-* யில் செலவினம் செய்த மற்றும் கரூவூலத்தில் செலுத்திய தொகை ரூ.*3,76,591/-* போக மீதத் தொகையான ரூ.*1,23,409/-* ற்குரிய பட்டிகளை வழங்க அறிவுறுத்தி ஒய்வு பெற்ற கூடுதல் மாநகர நல அலுவலர் திரு. கோ. த. தங்கராஜ் அவர்களுக்கு துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் வாயிலாக கடிதம் அனுப்பபட்டது. ஆனால் மேற்படி அலுவலர் எவ்வித பதிலும் அளிக்கவில்லை. இதனிடையில் மேற்படி ஒய்வு பெற்ற கூடுதல் மாநகர நல அலுவலர் திரு. கோ. த. தங்கராஜ் அவர்கள் கடந்த *11.09.2023* அன்று இறந்து விட்டார். எனவே மேற்படி எஞ்சிய தொகையினை பெற இயலாத நிலை உள்ளது.

09.02.2024 அன்று நடைபெற்ற மாநகர நல அலுவலர் அவர்களின் முன்பணம் நிலுவை குறித்த ஆய்வு கூட்டத்தில் மேற்படி நிலுவை குறித்து நிதி துறை அலுவலர்களிடம் விசாரித்து நேர் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் ஆணையர் / இணை ஆணையர்(சுகாதாரம்) / மாநகர நல அலுவலர் அவர்களின் ஒப்புதல் அளித்த முன்பணத் தொகைகளுக்கு மண்டல நல அலுவலர் (புள்ளி விவரம்) அவர்களின் பெயரில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கு எண்ணில் முன்பணம் பெறப்பட்டு பின்னர் மேற்படி மண்டல நல அலுவலர் (புள்ளி விவரம்) நிலையில் உள்ள அலுவலர் அவர்களினால் முன்பணம் கோரிய நிறுவனம் / அலுவலர்களுக்கு காசோலையாக அளிக்கும் நடைமுறை உள்ளது. அதன் அடிப்படையில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா நடைபெற்றதை முன்னிட்டு மாதிரி அம்மா உணவகம் அமைக்க தேவையான செலவினம் மேற்கொள்ள முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு

மேற்படி ஒய்வு பெற்ற கூடுதல் மாநகர நல அலுவலர் திரு. கோ.த.தங்கராஜ் அவர்களுக்கு மண்டல நல அலுவலர் (புள்ளி விவரம்) (பொறுப்பு) என்ற நிலையில் பணிபுரிந்த மற்றும் தற்போது மருத்துவ சேவை துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். ராணி பாண்டியன் அவர்களினால் காசோலையில் ஒப்பமிட்டு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஒய்வு பெற்ற கூடுதல் மாநகர நல அலுவலர் திரு. கோ.த.தங்கராஜ் அவர்கள் இறந்து விட்ட காரணத்தினாலும் மற்றும் மண்டல நல அலுவலர் (புள்ளி விவரம்) (பொறுப்பு) என்ற நிலையில் பணிபுரிந்த மற்றும் தற்போது மருத்துவ சேவை துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். ராணி பாண்டியன் அவர்கள் நவம்பர் 2025 மாதம் ஓய்வு பெற உள்ளதாலும் மேற்படி முன்பணத்தொகையினை பட்டி நேர் செய்ய வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாணை எண் 751, நிதி (B .G.III) துறை நாள் 08.10.1991 யில்"*If a Government Servant against whom disciplinary action is pending or is contemplated in respect of audit objections evolving financial losses or other irregularities dies before final orders are passed in the matter, the audit objections pending against the deceased employees shall be deemed to have been settled on the date of his death and disciplinary proceedings pending or contemplated shall on the date of his death be deemed to have been dropped. In such cases, Death-Cum-Retirement Gratuity and other retirement benefits due to the family of the deceased Government servant shall not withheld,*" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா நடைபெற்றதை முன்னிட்டு மாதிரி அம்மா உணவகம் அமைக்க செலவினங்கள் மேற்கொள்ள பெற்ற முன்பணத் தொகை ரூ 5,00,000/- யில் செலவினம் செய்த மற்றும் கரூவூலத்தில் செலுத்திய தொகை ரூ.3,76,591/- போக மீதத் தொகையான ரூ.1,23,409/- ஐ ஒய்வு பெற்ற கூடுதல் மாநகர நல அலுவலர் திரு. கோ. த. தங்கராஜ் அவர்கள் கடந்த 11.09.2023 அன்று இறந்து விட்ட காரணத்தினால் அரசாணை எண் 751, நிதி (B .G.III) துறை நாள் 08.10.1991 இல் தெரிவித்துள்ளபடி தள்ளுபடி (WRITE OFF) செய்யவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா நடைபெற்றதை முன்னிட்டு மாதிரி அம்மா உணவகம் அமைக்க செலவினங்கள் மேற்கொள்ள பெற்ற மொத்த முன்பணத் தொகை ரூ 5,00,000/- யினை பட்டி நேர் செய்யவும் ஆணையர் அவர்களின் அனுமதி கோரி சமர்ப்பித்த கோப்பு குறித்து மாநகர நல அலுவலர் அவர்களின் 16.10.2025 நாளிட்ட அறிவுறுத்தலின்படி விவாதிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், அரசாணை எண் 751, நிதி (B .G.III) துறை நாள் 08.10.1991 யின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா நடைபெற்றதை முன்னிட்டு மாதிரி அம்மா உணவகம் அமைக்க செலவினங்கள் மேற்கொள்ள பெற்ற முன்பணத் தொகை ரூ 5,00,000/- யில் செலவினம் செய்த மற்றும் கரூவூலத்தில் செலுத்திய தொகை ரூ.3,76,591/- போக மீதத்

தொகையான ரூ.1,23,409/- ஐ ஒய்வு பெற்ற கூடுதல் மாநகர நல அலுவலர் திரு. கோ. த. தங்கராஜ் அவர்கள் கடந்த 11.09.2023 அன்று இறந்து விட்ட காரணத்தினால் தள்ளுபடி (WRITE OFF) செய்ய இயலுமா என பொதுத்துறையின் கருத்துரு கோரப்பட்டது.

உதவி ஆணையர் (பொ .நி .ம.ப) அவர்கள் அளித்த 31.10.2025 நாளிட்ட கடிதத்தில், நிலுவையில் உள்ள முன்பணத தொகை நேர் செய்வது தொடர்பானது என்பதால் நிதி ஆலோசகர் மூலம் நிலைக்குழு (கணக்கு) அவர்களுக்கு குறிப்பு சமர்ப்பித்து மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கருத்துரு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா நடைபெற்றதை முன்னிட்டு மாதிரி அம்மா உணவகம் அமைக்க செலவினங்கள் மேற்கொள்ள பெற்ற முன்பணத் தொகை ரூ 5,00,000/- யில் செலவினம் செய்த மற்றும் களுவூலத்தில் செலுத்திய தொகை ரூ.3,76,591/- போக மீதத் தொகையான ரூ.1,23,409/- ஐ ஒய்வு பெற்ற கூடுதல் மாநகர நல அலுவலர் திரு. கோ. த. தங்கராஜ் அவர்கள் கடந்த 11.09.2023 அன்று இறந்து விட்ட காரணத்தினால் அரசாணை எண் 751, நிதி (B .G.III) துறை நாள் 08.10.1991 இல் தெரிவித்துள்ளபடி தள்ளுபடி (WRITE OFF) செய்யவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தில் பொங்கல் விழா நடைபெற்றதை முன்னிட்டு மாதிரி அம்மா உணவகம் அமைக்க செலவினங்கள் மேற்கொள்ள பெற்ற மொத்த முன்பணத் தொகை ரூ 5,00,000/- யினை பட்டி நேர் செய்யவும், நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை)வின் கூட்டம் 16.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.06/2025ன்படி நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.2.ந.க.எண். இ1/644879/2025

ஆணையர் அவர்களின் 18.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1267/2025 **பொருள் எண்.115**

பெருநகர சென்னை மாநகராட்சி - மதிப்பீடு - மண்டலம்-2, வார்டு – 20க்குட்பட்ட மணலி ஏரியில் கூடுதல் மேம்படுத்தும் பணி - 2025-2026 ஆம் ஆண்டிற்கான மூலதன நிதியின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

கீழ் குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது

வ.எண்	வார்டு எண்	பணியின் பெயர்	பணித்தொகை	மதிப்பீட்டு தொகை (கோடி) ரூ
1	20	பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2, பகுதி-5, வார்டு எண்-20 க்குட்பட்ட மணலி ஏரியில் கூடுதல் மேம்படுத்தும் பணி	3,71,54,839.52	4,55,00,000/-
		மொத்தம்		ரூ 4,55,00,000.00

1	பரிந்துரை செய்தவரின் விவரம்	தலைமை பொறியாளர் (ம.நீ.வ.து)
2	எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம்	மண்டலம்- 2
3	சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி	மண்டலம்- 2
4	தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் மற்றும் தேதி	தலைமைபொறியாளர் (ம.நீ.வ.து)3619/2025, நாள். 21.08.2025
5	மதிப்பீடு எந்த வருடத்தில் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது	2025-2026
6	மதிப்பீடு தொகை	ரூ. 4,55,00,000.00
	அ) பணியின் செலவினம்	ரூ. 3,71,54,839.52
	ஆ) மேலான மேற்பார்வை செலவினம்	ரூ. ----------
	இ) சிறு செலவு மேற்பார்வை	ரூ. ---------
	ஈ) தரக்காட்டுபாடு செலவு	ரூ. 371548.40
	உ) சரக்கு (ம) சேவை வரி ஜி.எஸ்.டி.	ரூ. 668787.11
	ஊ) மற்ற எதிர்பாரா செலவு	ரூ.914192.57

	எ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரிய நிதி	ரூ.371548. 4
	மொத்தம்	ரூ. *4,55,00,000/-*
7	மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும்	----------
8	ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	----------
9	வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா?	----------
10	மதிப்பீட்டில் ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் நாள்	----------
11	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	----------
12	நிதியின் மூலத்தன்மை அ) வரவு செலவு ஒதுக்கீடு ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி இ) மீதமுள்ள நிதி (அ – ஆ) ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	மூலதன நிதி *412 403 000 Miscellanous work* ரூ. *4,55,00,000/-*

எனவே,

1) மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 4,55,00,000/- (ரூபாய் நான்கு கோடியே ஐம்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி ஒப்புதல் வேண்டியும்,

2) இப்பணிக்கு 2025-26 ஆம் நிதி ஆண்டில் மூலதன நிதி கணக்கு குறிப்பு எண் 202107 கணக்கு தலைப்பு எண் 412 403 000 *(Miscellanous work)* கீழ் நிதி ஆலேசகர் மூலம் நிதி ஒதுக்கீடு பெற ஒப்புதல் வேண்டியும்,

3) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2, பகுதி-5, வார்டு எண்-*20* க்குட்பட்ட மணலி ஏரியில் கூடுதல் மேம்படுத்தும் பணிக்கு மின்னணு ஒப்பம் கோர ஒப்புதல் வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.660/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி)வின்அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் கூட்டம் 17.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.611/2025ன்படி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

******

TVKNGR/UNIT17/9/2025

ஆணையர் அவர்களின் 18.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1268/2025 **பொருள் எண்.116**

பெருநகர சென்னை மாநகராட்சி-மண்டலம்-6, கோட்டம்-75, Proposed construction of Football Court, Admin Block, Toilet Block, Plumbing & Electrical Work at Ooteri Link Road, Thiru. Vi. Ka. Nagar அமைக்கும் பணிக்கு 2024 25ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-75, Proposed construction of Football Court, Admin Block, Toilet Block, Plumbing & Electrical Work at Ooteri Link Road, Thiru. Vi. Ka. Nagar அமைக்கும் பணிக்கு கீழ்கண்டவாறு அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	கோட்டம் எண்.	பணி/சாலையின் பெயர்	பணியின்விவரம்	மதிப்பீடுதொகை (ரூ)
1.	75	Ooteri Link Road, Thiru. Vi. Ka. Nagar	Proposed construction of Football Court, Admin Block, Toilet Block, Plumbing & Electrical Work	ரூ.1,35,00,000.00
மொத்தம்				**ரூ.1,35,00,000.00**

2	பரிந்துரை செய்தவரின் விவரம்	:	செயற்பொறியாளர்/மண்டலம்-6
3	எந்ததுறைக்காக செயலாக்கம்	:	மண்டலம்-6
4	சமந்தப்பட்ட துறையால் அனுமதி	:	ஆம்
5	தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த செயல்முறை ஆணை எண் மற்றும் நாள்	:	தலைமை பொறியாளர் (பொது) அவர்களின் T.S.No. /2025, நாள்-
6	மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைபட்டியல் முன்வைத்து தயாரிக்கபட்டது.	:	2024-25ஆம் ஆண்டின் அலுவலக விலைபட்டியலின்படி தயாரிக்கபட்டது
7	மதிப்பீட்டு தொகை	:	ரூ.1,35,00,000.00
(அ)	பணி செலவீனம் மட்டும்	:	ரூ.1,09,41,315.16
(ஆ)	சரக்கு மற்றும் சேவை வரி18%	:	ரூ. 19,69,436.91
(இ)	தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொது நல வாரிய நிதி 1%	:	ரூ. 1,09,413.16
(ஈ)	Preparation of Plan and Estimates 2.5%	:	ரூ. 2,73,632.90
(உ)	மற்ற எதிர்பாராசெலவு 2.5%	:	ரூ. 2,06,300.87
(ஊ)	மதிப்பீட்டின்மொத்ததொகை	:	ரூ.1,35,00,000.00

8	மழைநீர்வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியாஅல்லதுசாலைப்பகுதியாஅதன் அளவு குறிப்பிடவும்	:	இல்லை
9	ஒரு சதுரமீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு	:	பொருந்தாது
10	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	:	ஆம்
11	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண் மற்றும் தேதி	:	வார்டுகுழு மண்டலம்-6ன் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது
12	ஏற்கனவேஎப்போதுசெய்யப்பட்டது	:	புதியதாகஅமைக்கப்படஉள்ளது
13	களஆய்வுசெய்யப்பட்டுள்ளதா? அதன் ஆய்வு விவரம் குறிப்பிடுக	:	ஆம்
14	நிதியின்மூலதன்மை	:	மூலதன நிதி *20-21-07/*
(அ)	வரவுசெலவுஒதுக்கீடு	:	ரூ.
(ஆ)	மதிப்பீடுகளுக்குஇதுவரைஒதுக்கபட்ட நிதி	:	ரூ.
(இ)	மீதமுள்ளநிதி	:	ரூ.
	இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி	:	ரூ.1,35,00,000.00

எனவே,

1. **மேற்கண்ட மண்டலம்**-6, **பகுதி**-17, **கோட்டம்**-75, Proposed construction of Football Court, Admin Block, Toilet Block, Plumbing & Electrical Work at Ooteri Link Road, Thiru. Vi. Ka. Nagar **அமைக்கும் பணிக்காக மதிப்பீட்டு தொகை ரூ.**1,35,00,000/-**க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்**,
2. **மேற்கண்ட பணிக்கு** 2025-26**ஆம் ஆண்டின் கணக்கு எண்**.20-21-07/ 412-40-11-00 - STORM WATER DRAINS AND CULVERTS **என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்**,
3. **மேற்கண்ட பணிக்கான நிதியினை நிதி நிர்வாக பிரிவின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியும்**,

மேற்கண்ட 1 **முதல்** 3 **வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.**

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."

****

மி.து.நு.க.எண்.மே2/பி 10/1713,1714,1715,1716/2025

ஆணையர் அவர்களின் 18.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1269/2025 **பொருள் எண்.117**

பெருநகர சென்னை மாநகராட்சி - மின்துறை - மண்டலம்-1 முதல் 15 வரை உத்திரவாதம் முடிவுப்பெற்ற 40-50W, 90-120W & 150-165W LED தெரு விளக்கு பிட்டிங்குகள் பதிலாக மாற்றி புதிய 48W, 120W & 150W LED தெரு விளக்கு பிட்டிங்குகள் இரண்டு வருட உத்திரவாதத்துடன் கொள்முதல் செய்யும் பணிக்கு (முதற்கட்டமாக) -- பணி ஆணை வழங்கப்பட்டு LED விளக்குகள் வழங்கப்பட்டது - தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதி 14(9)ன்படி முந்தைய LED தெருமின்விளக்கு பிட்டிங்களின் 25% மிகாமல் கூடுதல் தெரு மின் விளக்கு பிட்டிங் கொள்முதல் செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறையின் முக்கிய பணியான பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பயணத்திற்கான பாதுகாப்பிற்கும் தெரு விளக்குகள் அமைக்க வேண்டியது அவசியமானதாகும். அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறையால் மண்டலம் 1 முதல் 15 வரை 3,01,234 எண்ணிக்கையில் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தெருவிளக்குகள் அனைத்தும் ஆற்றல் சேமிப்பு கொண்ட LED விளக்குகள் ஆகும். பெருநகர சென்னை மாநகராட்சி 2011-2012 ஆம் ஆண்டில் முதன் முதலில் LED விளக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட போது புதிய பகுதிகளில் LED விளக்குகள் நிறுவப்பட்டன.

மண்டலங்கள் 1 முதல் 15 வரை கீழ்காணும் 1,04,452 எண்ணிக்கையில் 40 -50W LED, 26,640 எண்ணிக்கையில் 90-120W LED மற்றும் 17,703எண்ணிக்கையில் 150-160W LED தெரு விளக்கு பிட்டிங்குகள் 10 வருட காலத்தை கடந்ததால் மங்கிய மற்றும் மஞ்சள் நிற வெளிச்சம் தருகிறது. இதற்கான விபரம் மண்டலங்கள் 1 முதல் 15 வரை கீழே உள்ள அட்டவணை 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை – 1

மண்டலம்	Total no of Fitting Required		
	40-50W	90-120W	150-165
1	3,174	215	603
2	4,420	566	1660
3	5,339	267	459
4	8,109	726	1073
5	4,571	1106	1351
வடக்கு பகுதி	25,613	2,880	5,146
7	7035	1844	780
8	4630	1190	1457
9	5971	2132	2527
10	5827	2426	838
மையம் பகுதி	23,463	7,592	5,602

11	12504	2937	688
12	6414	3640	1115
13	8053	2143	2096
14	10257	4129	1055
15	9968	2538	499
தெற்கு பகுதி	47,196	15,387	5,453
மண்டலம் 6	8,180	781	1,502
மொத்தம்	1,04,452	26,640	17,703

இவற்றை LED STRIP மாற்றுவதன் மூலம் சரிசெய்யலாம். 7 வருடங்கள் கடந்த பிறகு , மாற்ற உத்திரவாதம் இல்லாததால், உற்பத்தியாளர்களிடம் இருந்து LED STRIP கிடைக்க வாய்ப்பில்லை. பழுது நீக்க முடியாத நிலையில் உள்ள, மங்கிய மற்றும் மஞ்சள் நிற LED தெருவிளக்கு பிட்டிங்குகளை மாற்ற வேண்டியது அவசியமாகிறது. முதற்கட்டமாக 40,668 எண்ணிக்கையிலான LED தெருமின்விளக்கு பிட்டிங்குகளை கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பங்கள் கோரப்பட்டு, (-) 2.11% குறைந்த ஒப்பத்தொகைக்கு பணி ஆணை வழங்கப்பட்டு LED விளக்குகள் வழங்கப்பட்டுள்ளது .

இப்பணியின் முதற்கட்டமாக (Phase-I) 1,48,795 எண்ணிக்கையிலான பழுதடைந்த LED தெருமின்விளக்கு பிட்டிங்களின் 40,688 எண்ணிக்கையிலான LED தெரு மின்விளக்கு பிட்டிங்குகள் மாற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,08,107 எண்ணிக்கையிலான LED தெரு மின்விளக்கு பிட்டிங்குகள் மாற்ற வேண்டிய தருவாயில் உள்ளது.

மேலும், தற்சமயம் முதற்கட்டமாக பெறப்பட்ட LED விளக்குகள் மாற்றும் பணிகள் மின்துறை மூலம் நடைப்பெற்று வருகிறது. இப்பணிகள் 90% முடிவுற்றது. தற்போது பல உட்புற சாலைகளில் உள்ள தெரு விளக்குகள் உத்திரவாத காலம் முடிவுபெறப்பட்டுள்ளதால், அடிக்கடி எரியாமல் உள்ளன என்பன புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே, உடனடியாக உட்புற சாலைகளில் உள்ள 48w LED தெருவிளக்குகளை இரண்டாம் கட்டமாக மாற்றம் செய்வது அவசியமாகிறது. எனவே, பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி ஏற்கனவே மின்துறை மூலம் LED தெருவிளக்கு பிட்டிகங்கள் கொள்முதல் செய்வதற்காக வழங்கப்பட்ட நான்கு பணிஆணைகளில் 48W LED விளக்குகள் மட்டும் 25% கூடுதல் எண்ணிக்கை (25% மீகாமல்) கொள்முதல் செய்ய தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதி 14(9)ன்படி பெறுவதற்கு வாய்ப்புள்ளது. அதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

அட்டவணை - 2

எண்	கோப்பு எண்	பணியின் பெயர்	ஒப்பந்ததாரரின் பெயர்	Item	தற்போது வழங்கப்பட்டுள்ள பணி ஆணையின் விவரம்				25% மிகாமல் கூடுதல் ஆணையின் விவரம்			மொத்தம் [A + B] நிர்வாக அனுமதி வழங்கப்பட் வேண்டிய தொகை (ரூ)
					Qty	Unit rate incl. GST (in Rs.)	Amount per type of fitting (in Rs.)	Amount (in Rs.) [A]	Qty	Unit rate incl. GST (in Rs.)	Amount (in Rs.) [B]	
1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13
1	மி.து.ந.க.எண்.மே2/பி 10/1714/2025	வடக்கு வட்டாரம் - மண்டலம்-1 முதல் 5 வரை 10,937 எண்ணிக்கையில் LED தெரு விளக்கு பிட்டிங்குகள் இரண்டு வருட உத்திரவாதத்துடன் கொள்முதல் மேற்கொள்ளும் பணி (முதற்கட்டமாக)	M/s Murugan Electrical Traders	48W	8965	6,025.08	54014842.20	9,30,62,793.32	1,148 (12.80%)	6,025.08	69,16,791.84	9,99,79,585.16
				120W	634	16,958.96	10751980.64		-	-	-	
				150W	1338	21,147.96	28295970.48		-	-	-	
2	மி.து.ந.க.எண்.மே2/பி 10/1715/2025	மத்திய வட்டாரம் - மண்டலம் 7 முதல் 10 வரை 9,353 எண்ணிக்கையில் LED தெரு விளக்கு பிட்டிங்குகள் இரண்டு வருட உத்திரவாதத்துடன் கொள்முதல் செய்யும் பணி (முதற்கட்டமாக)	M/s Sabhari Electricals	48W	6334	6,025.08	38162856.72	9,40,53,636.96	982 (15.50%)	6,025.08	59,16,628.56	9,99,70,265.52
				120W	1899	16,958.96	32205065.04		-	-	-	
				150W	1120	21,147.96	23685715.20		-	-	-	
3	மி.து.ந.க.எண்.மே2/பி 10/1716/2025	தெற்கு வட்டாரம் - மண்டலம்-11 முதல் 15 வரை 9,935 எண்ணிக்கையில் LED தெரு விளக்கு பிட்டிங்குகள் இரண்டு வருட உத்திரவாதத்துடன் கொள்முதல் செய்யும் பணி (முதற்கட்டமாக)	M/s Sabhari Electricals	48W	7080	6,025.08	42657566.40	9,33,62,591.20	1,097 (15.50%)	6,025.08	66,09,512.76	9,99,72,103.96
				120W	2309	16,958.96	39158238.64		-	-	-	
				150W	546	21,147.96	11546786.16		-	-	-	

4	மி.து.ந.க.எண்.மே2/பி10/1713/2025	மண்டலம்-6 - வார்டு 64 முதல் 78 வரை 10,463 எண்ணிக்கையில் LED தெரு விளக்கு பிட்டிங்குகள் இரண்டு வருட உத்திரவாதத்துடன் கொள்முதல் செய்யும் பணி (முதற்கட்டமாக)	M/s Murugan Electrical Traders	48W	8180	6,025.08	49285154.40	9,42,94,338.08	941 (11.50%)	6,025.08	56,69,600.28	9,99,63,938.36
				120W	781	16,958.96	1324947.76		-	-	-	
				150W	1502	21,147.96	3176235.92		-	-	-	
Total									4,168		2,51,12,533.44	

மண்டலம் 6க்கு வழங்கப்பட்ட பணிஆணையில், (அட்டவணை 2ல் வரிசை எண் 4) உத்திரவாதக்காலம் முடிவுபெற்ற அனைத்து 48W LED விளக்குகளும் மாற்றப்பட்டது. எனவே இவ்வாணையில் 25% கூடுதலாக பெறப்படும் 48W LED விளக்குகள் (941 எண்ணிக்கை) மண்டலம் 1 முதல் 15 வரை (மண்டலம் 6 தவிர்த்து) பயன்படுத்தி கொள்ளப்படும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலே அட்டவணை 2ல் குறிப்பிட்டுள்ளபடி முந்தைய கொள்முதல் கோப்பில் 48W LED தெருமின்விளக்கு பிட்டிங்குகள் 25% கூடுதல் எண்ணிக்கையாக மொத்தம் 4,168 எண்ணிக்கை பிட்டிங் கொள்முதல் செய்ய ரூ.2,51,12,533.44 செலவாகும்.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-1 முதல் 15 வரை உள்ள உத்திரவாதம் முடிவுபெற்ற 40-50W, 90-120W & 150-165W LED தெரு விளக்கு பிட்டிங்குகள் பதிலாக மாற்றி புதிய 48W, 120W & 150W LED தெரு விளக்கு பிட்டிங்குகள் இரண்டு வருட உத்திரவாதத்துடன் கொள்முதல் செய்யும் பணிக்கு (முதற்கட்டமாக) அட்டவணை 2ல் குறிப்பிட்டுள்ளபடி வழங்கப்பட்ட 4 தனித்தனி பணிஆணையில் 48W LED விளக்குகள் மட்டும் கீழ் கண்டவாறு :

வ.எண்	கோப்பு எண்	Item	25% மிகாமல் கூடுதல் ஆணையின் விவரம்			
			%	Qty	Unit rate incl. GST (in Rs.)	Amount (in Rs.)
1	மி.து.ந.க.எண்.மே2/பி10/1714/2025	48W	12.80	1,148	6,025.08	69,16,791.84
2	மி.து.ந.க.எண்.மே2/பி10/1715/2025	48W	15.50	982	6,025.08	59,16,628.56
3	மி.து.ந.க.எண்.மே2/பி10/1716/2025	48W	15.50	1,097	6,025.08	66,09,512.76
4	மி.து.ந.க.எண்.மே2/பி10/1713/2025	48W	11.50	941	6,025.08	56,69,600.28

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதி 14(9)ன்படி 25% கூடுதல் எண்ணிக்கை (25% மிகாமல்) கொள்முதல் செய்வதற்கு அனுமதி வழங்கவும்,

2) அட்டவணை 2ல் வரிசை எண் 1 முதல் 4 பணி ஆணைகளில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு தனித்தனியாக நிர்வாக அனுமதி வழங்கவும், இதற்கான கூடுதல் நிதியினை நிதிக்குழுமம் மூலம் வழங்கவும்.

3) இந்த செலவீனம் 2025-26 நிதியாண்டிற்கான மின் துறையின் மூலதன நிதியின் தலைப்பு எண் 20-24-02 , கணக்கு குறியீடு எண் 412-401-303 மூலம் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.658/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.3 .ந.க.எண்: 8291/2025

ஆணையர் அவர்களின் 17.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1270/2025 **பொருள் எண்.118**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 3, வார்டு 33, ஆசிரியர் காலனி 7வது பிரதான தெருவில் உள்ள பழைய கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 (மாதவரம்), பகுதி-8, வார்டு-33-க்கு உட்பட்ட ஆசிரியர் காலனி 7வது பிரதான சாலையில் 1975-ம் ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்ட 3வது மனைப்பிரிவு வரைபடம் (3rd Layout) எண். ம.ப.வீ.வ/து.ந.இஎண்.1/75ல் [சர்வே எண்.1485/part] பொதுப்பயன்பாட்டிற்காக இடம் ஒதுக்கப்பட்டு, முன்னாள் மாதவரம் நகரியத்தின் செயல் அலுவலரால் குறிப்பிட்ட இடமானது நூலகத்திற்காக குறிக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் முன்னாள் மாதவரம் நகராட்சியால் 1985-86-ம் ஆண்டில் 39.20ச.மீ பரப்பளவு கட்டிடம் கட்டப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட போது அக்கட்டிடம் கோட்ட அலுவலகமாக பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது 40 ஆண்டுகள் பழமையாக இருப்பதாலும், தற்போது மிகவும் பழுதடைந்து (Dilapidated Condition) பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள இக்கட்டிடத்தினை இடிக்க வேண்டியுள்ளது.

மேற்கண்ட பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பீடு ரூ. 46312.14 ஆகும்.

வ. எண்	கட்டிடத்தின் விவரம்	குறிப்பு
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	ஆசிரியர் காலனி 7வது பிரதான தெருவில் உள்ள பழைய கோட்ட அலுவலக கட்டிடம்
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	1985 - 1986 ஆம் ஆண்டுகளில் முன்னாள் மாதவரம் நகராட்சியால் கட்டப்பட்டது.
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு?	39.20 . ச.மீ
4	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு?	ரூ. 46312.14 /-
5	அந்த கட்டிம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	தற்போது பயன்பாட்டில் இல்லை
6	அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	புதிய அறிவு மையம் (Knowledge Centre) கட்டப்பட உள்ளது
7	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது.

8	கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்?	உதவி ஆணையர் (மு.நி)/ம-3 மற்றும் செயற்பொறியாளர்/ம-3
9	வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள்	பின்னர் பெறப்படும்

எனவே, மண்டலம்-3 (மாதவரம்), பகுதி-8, வார்டு-33-க்கு உட்பட்ட ஆசிரியர் காலனி 7வது பிரதான சாலையில் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள பழைய கோட்ட அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.657/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

****

ம.அ.3 .ந.க.எண்: 8290/2025

ஆணையர் அவர்களின் 17.12.2025 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்: 1271/2025 **பொருள் எண்.119**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 3, வார்டு 33, பாரதியார் தெருவில் உள்ள சென்னை மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் முன்னாள் மாதவரம் நகராட்சியால் கட்டப்பட்ட பழைய வகுப்பறை கட்டிடத்தை இடித்து அகற்றுவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 (மாதவரம்), பகுதி-8, வார்டு-33-க்கு உட்பட்ட பாரதியார் தெருவில் சென்னை மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் முன்னாள் மாதவரம் நகராட்சியால் 1984-1985ம் ஆண்டுகளில் 50.96 ச. மீ பரப்பளவு கொண்ட வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடம் 40 ஆண்டுகள் பழமையாக இருப்பதால் தற்போது பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. மேலும், இக்கட்டிடமானது பழுதடைந்து பாழடைந்த நிலையில் (Dilapidated condition) உள்ளதால் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு கருதி இவ்வகுப்பறை கட்டிடத்தை இடிக்க வேண்டியுள்ளது.

மேற்கண்ட பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பீடு ரூ.49199.83 ஆகும்.

வ. எண்	கட்டிடத்தின் விவரம்	குறிப்பு
1	இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்	மண்டலம்-3, பகுதி-8, வார்டு-33-ல் பாரதியார் தெருவில் சென்னை மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் உள்ள பழைய வகுப்பறை கட்டிடம்.
2	அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது?	1985 - 1986 ஆம் ஆண்டுகளில் முன்னாள் மாதவரம் நகராட்சியால் கட்டப்பட்டது.
3	அந்த கட்டிடத்தின் பரப்பளவு?	50.96 . ச.மீ
4	கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு?	ரூ. 49199.83 /-
5	அந்த கட்டிம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா?	தற்போது பயன்பாட்டில் இல்லை
6	அந்த கட்டிடம் இடித்தப்பிறகு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது?	விளையாட்டு திடலாக பயன்படுத்தப்பட உள்ளது.
7	கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்	பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது

8	கட்டிடத்தை இடிப்பதற்கான பரிந்துரை செய்தது யார்?	உதவி ஆணையர் (மு.நி)/ம-3 மற்றும் செயற்பொறியாளர்/ம-3
9	வார்டுக்குழு தீர்மான எண் மற்றும் நாள்	*Ward Committee/Zone-3 Resoltion No.2655; Dated: 17.11.2025.*

எனவே மண்டலம்-3 (மாதவரம்), பகுதி-8, வார்டு-33-க்கு உட்பட்ட பாரதியார் தெருவில் சென்னை மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பழுதடைந்த இடிந்து விழும் நிலையில் உள்ள பழைய வகுப்பறை கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டம் 12.12.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 18.12.2025 அன்று தீர்மான எண்.659/2025ன்படி நிலைக்குழு (பணிகள்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******